தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 112

# ★ சரபேந்திர ★
# வைத்ய முறைகள்

(சூலை, குஷ்டம், மூலம், பித்தம்
முதலான ரோகங்களுக்கு
மருந்துகள்)

★

— தஞ்சை —
மகாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால் நூல்நிலையம்

உக்கடை ஸ்ரீ அம்பாள் பிரஸ், தஞ்சை.

சகம்: 1887. — கி. பி.: 1965.

தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 112

# சரபேந்திர வைத்ய முறைகள்

## (சூலை, மூல, குஷ்ட, பித்த ரோக முறைகள்)

★

பதிப்பாசிரியர் :

Dr. S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)

வைத்ய ஆராய்ச்சியாளர்,

ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

தஞ்சை மகாராஜா சரபோஜி ஸரஸ்வதி மஹால்

நூல் நிலையத்திற்காகக்

கௌரவக் காரியதரிசி

ஸ்ரீ O. A. நாராயணஸ்வாமி, B. A., B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

★

அச்சகம் :

உக்கடை ஸ்ரீ அம்பாள் பிரஸ், தஞ்சாவூர்.

சகம் : 1887. A. D. : 1965.

விலை ரூ. 6—25.

# முன்னுரை

அழியாப் புகழ்பெற்று விளங்கும் சரபோஜி மன்னன் சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில் அரும்பாடுபட்டு சேகரித்து வைத்துள்ள கைகண்ட சரபேந்திர வைத்ய முறைகள் ஏற்கனவே அச்சுப்பிரதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த சுவடிகள் தொகுப்பையும் இத்துடன் வெளியிடுகிறோம். இவற்றையும், இன்னும் இந்நூல் நிலையத்திலுள்ள சுமார் 2,000க்கு மேற்பட்ட வைத்ய நூல்களையும் ஆராய்ந்து, மக்களுக்குப் பயன்படும் நோக்குடன் அச்சிட்டு வெளியிடவும், மத்திய அரசினர் அமைத்துள்ள வைத்திய ஆராய்ச்சிக் குழுவும் பணியாற்றிவருகிறது.

இந்நூல் வைத்தியர்கட்கும், அல்லற்படும் மக்கட்கும் சிறந்த முறைகளை பயன்படுத்தும் வாய்ப்பளிக்குமென நம்புகிறோம்

இதை அச்சிட்டு வெளியிட உதவியுள்ள சென்னை அரசினருக்கு நூல்நிலையக் குழுவினர் நன்றி உரியதாகும்.

தஞ்சாவூர்,
27—9—'65.

**O. A. நாராயணஸ்வாமி,**
Hony. Secretary,
T. M. S. S. M. Library.

★

# நான்முகம்

"சரபேந்திர வைத்ய முறைகள்" என்ற இந்நூல் தஞ்சை சரபோசி மன்னர் II (1802 – 1832) அவர்கள் ஆதரவில், ஆஸ்தானத் தமிழ்ப் பண்டிதர்களைக்கொண்டு. தன்வந்திரி மஹாலில் இயற்றப்பட்ட வைத்தியத் தொகுதியின் கடைசிப் பதிப்பாகும். இதில் சூலை (Gout, Rheumatism), மூலம் (Piles), குஷ்டம் (Leprosy), பித்தம் (Bile Disorders) முதலான நோய்களுக்கான மருந்து முறைகள் அடங்கியுள்ளன

இம்முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| சுவடி நெ. | 59 | (சூலை) | செய்யுட்கள் | 114 |
| ,, | 50 | (குஷ்டம்) | ,, | 29 |
| ,, | 56 | (மூலம்) | ,, | 84 |
| ,, | 49 | (பித்தம்) | ,, | 234 |

இவைகளிலிருந்து சேகரிக்கப்பட்டவை. ஏனெனில் ஷை சுவடிகளில் ஒரே வியாதிக்கான மருந்துகள் முன் சுவடிகளைப்போலத் தனித்தனியாகக் கூறப்படவில்லை. இவைகளுள் 59 நெ. சுவடியில் காசம், க்ஷயம், இருமல், ஈளை முதலான ரோகங்களுக்கும், சுவடி 49-ல் பித்த ரோக மருந்து முறைகளுடன் சுரம், சன்னி, பாண்டு, க்ஷயம் முதலான நோய்களுக்கும் கொடுக்கக்கூடிய மருந்துகள் இடம் பெறுகின்றன. இவ்விருநூல்களையும் இயற்றியவர்

காரைகுறிச்சி வேலாயுத உபாத்தியாயர் ஆவர். சுவடி நெ. 50-ல் வாயு, பெரும்பாடு, பிரமியம், காமாலை, மகோதரம், சோகை, வலிப்பு, கவுசை முதலான நோய்களுக்கான மருந்துகளும், சுவடி நெ. 56-ல் உளமாந்தை, க்ஷயம், இளைப்பு முதலான நோய்களுக்கான மருந்துகளும் காணப்படுகின்றன. இச்சுவடிகள் கொட்டையூர் சிவக்கொழுந்துப் பண்டாரம் என்ற தமிழ்ப் பண்டிதரால் இயற்றப்பட்டவை. இச்சுவடிகளில் காணப்படும் மற்ற மருந்துகள் ஏற்கனவே அந்தந்த ரோக சிகித்ஸைக்கான மருந்துகளுடன் அச்சிடப்பட்டுள்ளன.

ஆகவே, சரபேந்திர வைத்ய முறைகள் என்று, தஞ்சைக்கே தனிப்பெருமை தேடித்தருகின்ற 18 சுவடிகளுடன் கூடிய வைத்தியத் தொகுதி இறைவனருளால் இப்பதிப்புடன் முடிவுறுகின்றது. சென்ற 20 ஆண்டுகளாக இந்தத் தொகுதிகளைப் பதிப்பிக்கும் வாய்ப்பையளித்த முன்னாள் கௌரவக் காரியதரிசி ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L., அவர்களுக்கும், ஸ்ரீ வாஸுதேவ சாஸ்திரிகள், B. A., அவர்களுக்கும், தொடர்ந்து காரியங்களைச் செவ்வனே செய்ய ஊக்குவிக்கும் தற்காலக் காரியதரிசி ஸ்ரீ O. A. நாராயணஸ்வாமி, B. A., B. L., அவர்களுக்கும் எனது உள்ளங்கலந்த நன்றியைக் கூறுவது மிகையாகாது. ஏனைய புத்தகங்களின் முகவுரையில் கூறப்பட்டுள்ளபடி, இந்தப் பதிப்பிலும், வியாதிகளின் குணகுணங்களை "யூகிமுனி வைத்ய சிந்தாமணி" என்ற புத்தகத்திலிருந்து எடுத்துக் கூறியுள்ளேன்.

மேலும், நமது இந்திய அரசாங்கமும் (Central Counsel of Ayurvedic Reseaıeh) தற்போது இம்

மாதிரியான இந்திய வைத்ய முறைகளை ஆராய்ந்து பல பாஷைகளிலும் பதிப்பிக்கவேண்டிய முயற்சிகளைச்செய்ய வேண்டி, இச்சரஸ்வதி மஹாலில் வைத்ய ஆராய்ச்சிக் குழுவினரை (Literary Research Unit) ஏற்படுத்தி யிருக்கின்றனர். அதில் சரபேந்திர வைத்ய ரத்னாவளி என்ற புத்தகம் முதலிடம் பெறுகின்றது. அதன் ஸம்ஸ்க்ருதம், ஆங்கில, ஹிந்திப் பதிப்புகள் விரைவில் வெளிவரும். இதையன்றி, நம் தமிழ்நாட்டில் கிடைக்கும் சரக்குகளுக்கு ஸம்ஸ்க்ருத, தமிழ், லத்தீன், ஆங்கிலச் சொற்கள் அடங்கிய அகராதியும் அச்சாகவிருக்கின்றது. இதையன்றி, சித்தர் நூல்களான காயகல்ப முறைகள், மற்றும் பல திரட்டுநூல்கள், தேரையர் நூல்கள் போன்ற இதுவரை வெளியிடப்படாத நூல்களும் விரைவில் பதிப்பிக்கப்பெறும்.

ஆகவே, வைத்தியர்களும் ஏனையோர்களும் முற் பதிப்புக்களைப்போல் இதனையும், மற்ற நூல்களையும் வாங்கி, மருந்துகளைத் தயாரித்து நோய்களைத் தீர்ப்பதுடன், எங்களுக்கும் தெரிவித்தால் நாங்கள் மிக்கக்கடமைப்பட்டவர் களாக ஆவோம்.

வாழிய நலனே ! வாழிய நலனே !!

சரஸ்வதி மஹால்,<br>
தஞ்சாவூர்,<br>
20 — 9 — '65.

**Dr. S. வெங்கட்டராஜன்,** L. I. M. (Rg.)<br>
*வைத்ய ஆராய்ச்சியாளர்.*



# சரபேந்திர வைத்ய முறைகள்

சூலை, மூல, குஷ்டம், பிந்நம் முதலான

வியாதிகளுக்குக் கொடுக்கக்கூடிய

## மருந்துகளின் விஷய அட்டவணை.

### 1. சூரண வகைகள்.

பக்கம்


அவிபத்திச் சூரணம் (சூலைக்கு) .... 13

இங்குவாதிச் சூரணம் ,, .... 9

கெந்தகச் சூரணம் ,, .... 63

நிம்பபஞ்சகச் சூரணம் (முடக்கு சூலைக்கு) 75

பஞ்சாக்கினிச் சூரணம் (சூலைக்கு) .... 38

பறங்கிப்பட்டைச் சூரணம்
(சூலை கடுப்பு, இடுப்பு வலிக்கு) 82

(பொடுதலையாதிச்) சூரணம் (சூலைக்கடுப்பிற்கு) 41

ஹரீதகிச் சூரணம் (சூலை, குன்மம், யோனிச்சூலைக்கு) 72

ஹிங்க்வாதிச் சூரணம் (குன்மம், சூலைக்கு) 48

ஏலாதிச் சூரணம்
(மூலவாயு, உஷ்ணவாயு, வெட்டைக்கு) 146

(சூரணம் தொடர்ச்சி) பக்கம்

கருணைக்கிழங்குச் சூரணம் (மூலத்திற்கு) ... 120
கருணைச் சூரணம் ,, .... 104
கொடிவேலிச் சூரணம்
(உள்மூலம், புறமூலம் இவைகளுக்கு) 94
சுண்ட்யாதிச் சூரணம் (மூல வியாதிக்கு) ... 119
(திரிகடுச் சூரணம்) முதலியன (மூலக் கடுப்பிற்கு) 151
நாயுருவிச் சூரணம் (மூல வியாதிக்கு) ... 126
புளிநரளைக் கிழங்கு சூரணமும், பூச்சு மருந்தும் 100
யோகராஜகுக்குளுச் சூரணம் .... 115
ஆவாரைப் பஞ்சாங்கச் சூரணம் .... 322
ஏலாதிச் சூரணம் (வாந்திக்கு) .... 222
ஏலாதிச் சூரணம் ,, .... 227
ஏலாதிச் சூரணம் (இரத்தபித்தம், பெரும்பாடுக்கு) 251
ஏலாதிச் சூரணம் (அரோசகத்திற்கு) ... 254
ஏலாதிச் சூரணம் ,, ... 265
ஏலாதிச் சூரணம் (மயக்கம், விக்கலுக்கு) ... 303
ஏலாதிச் சூரணம் (நீர்கட்டுக்கு) ... 327
ஏலாதிச் சூரணம் (வாந்தி, விக்கலுக்கு) .... 234
கரணைச் சூரணம் (பித்தம், வாயு இவைகளுக்கு) 215
கற்கடசிங்கிச் சூரணம் (விக்கலுக்கு) .... 236
சந்தனாதிச் சூரணம் (அரோசகத்திற்கு) ... 230
சந்தனாதிச் சூரணம் (இரத்த பித்தத்திற்கு) 246
சாதீபலாதிச் சூரணம் ,, ... 266
சிரிங்கிபேராதிச் சூரணம்
(பித்தம், காமாலை, வாந்தி, மார் வலிக்கு) 225
சீரகாதிச் சூரணம் (அரோசகம், வாந்திக்கு) 255

(சூரணம் தொடர்ச்சி) பக்கம்

சுண்டிச் சூரணம் (பித்தத்திற்கு) ... 211
டங்கணாதிச் சூரணம் (விக்கலுக்கு) .... 245
திராக்ஷாதிச் சூரணம் (க்ஷயம், தாகம், காமாலைக்கு) 198
திராக்ஷாதிச் சூரணம்
(பித்தம், பிரமேகம், சயம் முதலானவைகளுக்கு) 212
திரிகடுகாதிச் சூரணம் பித்தம், உளமாந்தைக்கு) 199
நாககேஸராதிச் சூரணம்
(கைகாலெரிவு, பிரமேகத்திற்கு) 264
நெல்லிப்பருப்புச் சூரணம் (நீரடைப்பிற்கு) 333
பருத்திவிதைச் சூரணமும், கஷாயமும்
(வாந்தி, ஓக்காளத்திற்கு) 243
பாவனஹரீதகி ... 214
மான்கொம்புச் சூரணம்
(சிறுநீரில் இரத்தம் விழுவது நிற்க) ... 302
முட்டையோட்டுச் சூரணம் (நீர்க்கடுப்பிற்கு) 332
வில்வாதிச் சூரணம் (வாந்தி, விக்கலுக்கு) 242

## 2. எண்ணெய், தைல வகைகள்.

உள்ளியாமணக்கெண்ணெய் (குன்ம சூலைக்கு) 43
கெந்தித் தைலம் (சூலை, கடுப்பிற்கு) ... 32
கெந்தகாதித் தைலம் ,, ... 41
சவுட்டுமண் எண்ணெய் (ருது சூலைக்கு) ... 81

(எண்ணெய், தைல தொடர்ச்சி) பக்கம்

பலாகுடுசித் தைலம் (கர்ண சூலை, முகவாதத்திற்கு) 53
பாவட்டை யெண்ணெய் (மூலம், குன்மத்திற்கு) 47
புங்கெண்ணெய்த் தைலம் (சூலைக்கு) ... 16
(முடிகொண்டான்) எண்ணெய் (ஸர்வ சூலைக்கும்) 23
லசுன ஏரண்டத் தைலம் (சூலைக்கு) .... 14
வீழித் தைலம் ,, ... 18
அம்மான் பச்சரிசி எண்ணெய் (மூலத்திற்கு) 86
பிராய் எண்ணெய் ,, ... 128
(மிளகறணை) எண்ணெய் முதலியன ,, ... 95
(ஊமத்தை) எண்ணெய் (பெருநோய்க்குப்பூச) 153
குழித்தைலம் (குஷ்டத்திற்கு) ... 160
ஆதண்டைத் தைலம் (பித்தத்திற்கு) .... 206
ஆமலகத் தைலம் (பித்தம் தீர) .... 197
இளநீர்த் தைலம் (காசம், பித்தம், தலைவலிக்கு) 218
கருப்பஞ்சாறெண்ணெய் (வெண்கடுப்பிற்கு) 338
சந்தனாதித் தைலம் (பித்தத்திற்கு மூழ்க) ... 177
சந்தனாதித் தைலம் (பித்தத்திற்கு) .... 204
பிருங்காமலகத் தைலம் (பித்தச் சூட்டிற்கு) 174
பிருங்காமலகத் தைலம் (பித்தத்திற்கு) .... 217
பொன்னாங்காணி எண்ணெய்
(மருட்கொண்ட பித்தத்திற்கு) 259
முசுமுசுக்கைத் தைலம்
(தலைச்சுற்றல், பித்தத்திற்கு) 203
முடக்கித்தான் எண்ணெய் (நீரடைப்பிற்கு) 336
மொச்சைக் கொழுந்து எண்ணெய்
(மூத்திர கிரிச்சத்திற்கு) 295

பக்கம்

## 3. நெய், கிருத வகைகள்.


குக்கில் நெய் (சூலைக்கு) .... 78

நெரிஞ்சில் நெய் .... 38

பாதரஸ நெய் (ருது சூலைக்கு) ... 80

முடக்கொத்தான் நெய் (நிதம்ப சூலைக்கு) 71

வேப்பம் நெய் (சூலை, அரிப்புக்கு) .... 76

(குலுத்தாதி) நெய் (உள்மூலத்திற்கு) ... 110

செந்நாயுருவி நெய் (மூலத்திற்கு) .... 142

திரிகடு நெய் ,, .... 92

நாயுருவி நெய் (இரத்த மூலம், சீழ் மூலத்திற்கு) 136

குக்குலு கிருதம்
(குஷ்டம், பவுத்திரமுட்பட பல வியாதிகட்கு) 165

புங்கம் நெய் (குஷ்டங்களுக்கு) .... 168

அவுரி நெய் (மூத்திரக் கிரிச்சத்திற்கு) .... 314

ஆடாதோடை நெய்
(சுவாசகாசம், ரத்த பித்தத்திற்கு) 231

ஆடாதோடை நெய் (இரத்த பித்தம் தீர) .... 275

எலும்புருக்கிக்கு நெய் (இரத்த பித்தத்திற்கும்) 247

ஏலாதிக் கிருதம் (பித்தத்திற்கு) .... 209

கூஷ்மாண்ட கிருதம் (பித்தம், காசத்திற்கு) 257

சதாவரிக் கிருதம் (பித்தத்திற்கு) .... 178

சதாவரிக் கிருதம் (மயக்கம், பித்தம், காசத்திற்கு) 185

சதாவரிக் கிருதம் (பித்தம், வாந்திக்கு) .... 191

சதாவரிக் கிருதம் (கைகாலெரிச்சல், மேகநோய்,
மூத்திரகிரிச்சம், சுக்லபிரமேகங்களுக்கு) 287

(நெய், கிருத தொடர்ச்சி) பக்கம்


சந்தனுதிக் கிருதம் (சீத பித்தத்திற்கு) .... 271
சந்தனுதிக் கிருதம் (காமாலைக்கு) .... 223
பேரீச்சம்பழ நெய் (மயக்கம், வெட்டைக்கு) 263
முக்கூட்டு நெய் (இரத்த பித்தத்திற்கு) .... 277
முசுமுசுக்கை நெய் (பித்தத்திற்கு) ... 208
வாழைக் கிழங்கு நெய்
(பாண்டு, எரிவு, மேகத்திற்கு) ?93


## 4. கஷாயம், குடிநீர் வகைகள்.


கலங்கொம்பாதிக் கஷாயம் (சூலைக்கு) ... 4
கோவைக் கஷாயம்
(வாத, சூலை, ஆறாப்புண், கட்டி, பிளவைகளுக்கு) 62
லசுனுதிக் கஷாயம் (சூலை, கடுப்பிற்கு) .... 12
அதிமதுரக் குடிநீர் (இரத்த மூலத்திற்கு) .... 138
அரீதகிக் கஷாயம் (மூல வியாதிக்கு) .... 108
அரீதகிக் கஷாயம் முதலியன (மூலத்திற்கு) 109
(அர்தக்யாதி) கஷாயம் (மூல வியாதிக்கு) .... 136
இலவங்கப்பட்டைக் குடிநீர் (இரத்த மூலத்திற்கு) 133
திரிகடுகாதிப் பழுதயம் (தீபனத்திற்கு) .... 88
முருங்கைப் பட்டையாதிக் கஷாயம் (மூலத்திற்கு) 104
உதும்பராதிக் கஷாயம் (சிகதாமேகத்திற்கு) 274
கீழாநெல்லிக் கஷாயம் (நீர்க் கடுப்பிற்கு) ... 318

(கஷாயம், குடிநீர் தொடர்ச்சி) பக்கம்


கொன்றைக் கஷாயம் (பித்தாதிக்கத்தாலேற்பட்ட மூத்திர கிரிசத்திற்கு) 310
கொன்றை வேராதிக் கஷாயம் (மூத்திர கிரிச்சத்திற்கு) 286
சாரணையாதிக் கஷாயம் (நீரடைப்பிற்கு) .... 309
சீத கஷாயம் (இரத்த பித்தத்திற்கு) .... 280
சீரகக் கறுக்கு (பித்தத்திற்கு) .... 206
சீரகாதிக்கஷாயம் (வாய்க்கசப்பு, தலைக்கிறுகிறுப்பு) 283
சீரகாதிக் கஷாயம் (அரோசகத்திற்கு) .... 274
தாடிமாயதிக் கஷாயம் (இரத்த பித்தத்திற்கு) 252
தாமரைக்கிழங்காதிக் கஷாயமும், மருந்தும் 256
திராக்ஷாதிக் கஷாயம் (காமாலை, மூர்ச்சை, சுரத்திற்கு) 267
நீர்வள்ளிக் கஷாயம் (துர்மாமிஸம், வயிற்றுப் புண்கள், நீரடைப்பிற்கு) 337
பேய்ப்புடல் கஷாயம் (நீர்க்கடுப்பிற்கு) .... 331
மல்லிக் குடிநீர் (வாந்தி, வயிற்றுப்போக்கிற்கு) 235
முசுமுசுக்கைக் கஷாயம் (பித்தம், துர்பித்தத்திற்கு) 261
முசுமுசுக்கைக் கஷாயம் (நீரடைப்பிற்கு) ... 334
முருங்கைத்தண்டுக் கஷாயம் (நீர்சுருக்குக்கு) 301
முன்னையிலைக் கஷாயம் (வாந்தி, கிறுகிறுப்பிற்கு) 273
வில்வாதிச் சீதகஷாயம் (பித்தத்திற்கு) .... 173
வாழைச் சாம்பல் குடிநீர் (கல்லடைப்பிற்கு) 299
விளாவேர்க் கஷாயம் (வெள்ளோக்காளம், விக்கலுக்கு) 279
வெள்ளெரிக் கஷாயம் (நீரடைப்பிற்கு) .... 385
வெள்ளறுகாதிக் கஷாயம் ,, .... 342

பக்கம்

## 5. லேகியம், ரஸாயன வகைகள்.


கொம்மட்டி லேகியம் (சூலைக்கு) .... 18

லசுனபிஷ்டி லேகியம் (சூலை முதலியவைகளுக்கு) 5

பல்லாதகீ லேகியம் (மூலரோகத்திற்கு) .... 107

ராஜலேகியம் .... 106

கெந்தக ரஸாயனம் (குஷ்டத்திற்கு) .... 163

வல்லாதகீ ரஸாயனம் .... 158

அச்வகந்தாதி லேகியம் (பித்தத்திற்கு) .... 180

கூஷ்மாண்ட ரஸாயனம் (திரிசுரம், உள்வெட்டை, தாது நஷ்டம், மூத்திரச்சுருக்கு இவைகளுக்கு) 284

சந்தனாதி லேகியம் (பித்தம், சீத ஜ்வரம், உன்மாதத்திற்கு) 249

திரிபலாதி லேகியம் (கப, வாத, பித்தத்திற்கு) 269

தேவதாரு லேகியம் (சுவாசகாசம், சயம் முதலானவைகளுக்கு) 189

மரிசாதி லேகியம் (வாந்தி அரோசகத்திற்கு) 268

மஹாவில்வாதி லேகியம் .... 187

வாஸாகண்டகாரி லேகியம் (க்ஷயம், இருமலுக்கு) 237

வில்வாதி லேகியம் (பித்தத்திற்கு) .... 201

வில்வாதி லேகியம் (குன்மம், பாண்டு, வயிற்றுவலிக்கு) 220

வில்வாதி லேகியம் (வாந்தி, விக்கலுக்கு) .... 241

பக்கம்

## 6. உருண்டை, வடகம் முதலிய வகைகள்.


| | | | |
|---|---|---|---|
| இங்குவாதி உருண்டை | (சூலைக்கு) | .... | 11 |
| சிஞ்சாக்ஷார வடகம் | ,, | .... | 25 |
| கருணைக்கிழங்கு வடகம் | (மூல ரோகத்திற்கு) | | 128 |
| காங்காயனக் குளிகை | | .... | 113 |
| காட்டுக் கறணை வடகம் | (மூலத்திற்கு) | .... | 111 |
| காட்டுக் கறணை வடகம் | (உள்மூலம், பிறமூலத்திற்கு) | | 139 |
| மாணிபத்ர வடகம் | | .... | 112 |
| வெள்ளைச்சாறணை உருண்டை | (மூலத்திற்கு) | | 115 |
| அயஜம்பீர வடகம் | (பாண்டு, பித்தத்திற்கு) | | 240 |
| சந்தனாதி உருண்டை | (சலக்கட்டிற்கு) | .... | 329 |


## 7. உப்பு, மாவு, அடை, பணியாரம், பிட்டு முதலியன.


| | | | |
|---|---|---|---|
| உளுத்தமாவு மருந்து | (சூலைக்கட்டிற்கு) | .... | 73 |
| கெந்தகாதி யுப்பு | (பக்கச்சூலைக்கு) | .... | 68 |
| ரஸப்பொடி | (சூலைக்கு) | .... | 30 |
| ரஸ மாவு | ,, | .... | 33 |
| எருக்கம்பழுப்புப் பிட்டு | (மூலம், வலி, கடுப்பிற்கு) | | 101 |

(உப்பு, மாவு, அடை முதலியன தொடர்ச்சி) பக்கம்

கல்யாண லவணம் (மூலத்திற்கு) .... 97
கவிழ்துமபை அடை ,, .... 150
களி மூலநோய்க்கு .... 99
காட்டுக் கறணைக்கிழங்குப் பிட்டு (மூலத்திற்கு) 105
சாரடைமோர் ,, .... 87
சிறுவழுதுணைக் களி ,, .... 145
மருளங் கிழங்கு அடை ,, .... 149
மோர் தீபனம் ,, .... 87
வெங்காய வதக்கல் (மூல வாயுவிற்கு) .... 85
கருப்புட்டி மருந்து
(நீர்பாய்ச்சல், மூத்திரப்பாழ் இவைகளுக்கு) 286
(சிறுபூளையிலைப்) பிட்டு (மூத்திர கிரிச்சத்திற்கு) 300
தாளியிலை வெண்ணெய் முதலியன
(கல்லடைப்பிற்கு) 321
நல்லெண்ணெய் மருந்தும், பொன்னாங்காணி
மருந்தும் ... 316
பேயம்பழப் பொங்கல்
(பித்தத்திற்கு, மயக்கத்திற்கு) 278
வெற்றிலை மோர் (வெள்ளோக்காளம், விக்கலுக்கு) 212


## 8. சாறு, கடுகு, பச்சிலை மருந்துகள், கல்கம் வகைகள்.


உள்ளிக் கடுகு (சூலைக்கு) ... 66
(ஓமக்) கல்கம் (பக்க சூலைக்கு) .... 65

(சாறு, கடுகு, பச்சிலை, கல்கம் தொடர்ச்சி) பக்கம்

காய மருந்து (கபச் சூலைக்கு) .... 69
கொன்றை மருந்து (கபச்சூலைக்கு) .... 70
பச்சிலைவேர் மருந்து (சூலைக்கு) .... 20
(மிளகு) மருந்து (யோனிச்சூலை, மகோதரத்திற்கு) 71
இலந்தையிலை பேதிமருந்து (மூலத்திற்கு) .... 101
(குருந்தை)யிலை மருந்துகள் (உள்மூலத்திற்கு) 150
கொட்டைச்சாறு மருந்து (உள்மூலத்திற்கு) 96
சாதிக்காய் மருந்து (இரத்த மூலத்திற்கு) .... 135
சீந்தில் கல்கம் (சீழ் மூலத்திற்கு) .... 152
சுக்காதிப் பூச்சு மருந்து (மூலத்திற்கு) ... 123
(நாகப்பட்டை) மருந்துகள் முதலியன (புறப்பட்ட மூலம் செத்துவிழ) 130
நாகமல்லிகை வேர் மருந்து (வெளிமூலத்திற்கு) 127
நொச்சிக் கடுகு (மூல வியாதிக்கு) ... 145
மாதளைப்பிஞ்சு மருந்துகள் (மூல எரிச்சலுக்கு) 132
வேப்பம் பட்டைக் கடுகு (மூலக்கிராணிக்கு) 148
(கடலைக்) கல்கம் (குஷ்டத்திற்கு) .... 171
தகரை லேபம் ,, .... 159
கெந்தக மருந்து ,, .... 156
தேத்தான் மருந்து (கருங்குஷ்டம், வெண்குஷ்டம் முதலானவைகளுக்கு) 171
(வேப்பம்பட்டைக்) கல்கம் (விப்புருதி, பெருவியாதி, புண், கிரந்திக்கு) 154
அம்மான் பச்சரிசிக் கல்கம் (நீரடைப்பிற்கு) 307
இளநீர் மருந்து (நீரடைப்பிற்கும், கல்லடைப்பிற்கும்) 298

(சாறு, கடுகு, பச்சிலை, கல்கம் தொடர்ச்சி) பக்கம்

இளநீர் மருந்து (கல்லடைப்பிற்கு) .... 340
ஏலாதிக் கல்கம் (வாந்தி, விக்கலுக்கு) .... 244
ஓரிலைத் தாமரைக் கல்கம் (நீர்க்கட்டுட்கு) .... 330
(கற்பூரவல்லிச்) சாறு மருந்துகள் (நீரடைப்பிற்கு) 305
கற்றாழைச் சோறு மருந்து (நீர் கடுப்பிற்கு) 315
காவிக்கல் கற்கம் (இரத்த பித்தத்திற்கு) ... 250
கோவைக் கல்கம் (பித்தம், எரிச்சலுக்கு) .... 210
சங்கம் வேர் கல்கம் (இரத்த பித்தத்திற்கு) 282
சிறுகீரை வேர்க் கல்கம் முதலான மருந்துகள் (இரத்த பித்தம் குணமாக) 253
திப்பிலிக் கல்கம் (அரோசகங்கள் தீர) .... 281
திராக்ஷாதி மருந்துகள் (நீரடைப்பிற்கு) .... 324
துத்திவேர் மருந்துகள் (நீர்க்கட்டிற்கு) .... 325
தேற்றாங்கொட்டை மருந்துகள் (இரத்த பித்தத்திற்கு) 252
தேற்றான் கல்கம் (பித்தத்திற்கு) .... 281
தேற்றான் கல்கம் (நீரடைப்பிற்கு) ... 307
நீர்முள்ளி விழுதும், கொத்தமல்லி கஷாயமும் (நீர்கட்டுக்கு) 313
புன்னைவேர் மருந்துகள் (கல்லடைப்பிற்கு) 319
பூனைக்காலி வேர்மருந்து (கல்லடைப்பிற்கு) 341
பெருங்காயக் கல்கம் (விக்கலுக்கு) .... 239
பேய்ப் புடல் மருந்து (பயித்தியத்திற்கு) .... 224
பொரிக்கார மருந்துகள் (நீரடைப்பிற்கு) .... 342
பொன்னாங்காணிக் கல்கம் ,, .... 308
முன்னைவேர் மருந்தும், இளநீரும் ,, .... 305

(சாறு, கடுகு, பச்சிலை, கல்கம் வகைகள்) பக்கம்

வாழைக் கிழங்குச் சாறு மருந்து (நீரடைப்பு, கல்லடைப்பிற்கு) 312
வில்வாதி மருந்துகள் (கல்லடைப்பிற்கு) .... 321
வெங்கார மருந்து முதலியன (கல்லடைப்பு, நீர்கடுப்பிற்கு) .... 316
வெங்கார மருந்து (நீர்க்கடுப்பிற்கு) .... 317
வெள்ளரிக்காய்ச் சாறு மருந்து (நீர்க்கடுப்பு, கல்லுக்கு) 320
வெள்ளரிக்காய்ச் சாறு மருந்து (நீரடைப்பிற்கு) 311
வெள்ளரிச் சாறு மருந்து (கல்லடைப்பிற்கு) 298

## 9. பற்ப வகைகள்.

இரஸ பற்பம் (சூலைக்கு) ... 22
சாதிலிங்க பற்பம் (சூலைக் கட்டிற்கு) .... 25
வெண்பொடி (நயனத்தில் 18 வித காசம், நசல் பலவகைகளுக்கும்) 83
சிலாஜித் பற்பம் (மூல ரோகத்திற்கு) .... 89
பற்பம் (மூல நோய்க்கு) .... 102
கெந்தகப் பற்பம் .... 168
நாகபற்பம் (குஷ்டம் முதலானதற்கு) .... 156
கோவைப்பொடி (அரோசகத்திற்கு) .... 261

பக்கம்

சிலாசத்துப் பற்பம் (மூத்திர கிரிச்சத்திற்கு) 300
தாமிர பற்பம் (கல்லடைப்பு, ,, ) .... 291

## 10. செந்தூர முறைகள்.

அரிதாரச் செந்தூரம் (சூலைக்கு) .... 10
செந்தூரம் (சேத்தும, வாத, பித்தத்திற்கு) 272
வெள்ளீயச் செந்தூரம் (நீர்க்கட்டிற்கு) .... 328

## 11. மாத்திரைகளும், குளிகைகளும்.

சாதிலிங்கக் குளிகை (சூலைக்கு) .. 21
இரஸக் குளிகை (பித்தத்திற்கு) .... 190
கஸ்தூர்யாதி மாத்திரை (பித்தத்திற்கு) .... 183

## 12. பற்படி (உருக்கு மருந்துகள்)

பற்படி (சூலை, வாயுவிற்கு) .... 74

பக்கம்

## 13. புகை மருந்துகள்.

அரிதாரப் புகை (கபாலச்சூலை, பிடரிகனத்திற்கு) 49
இரஸவங்கப் புகை (சூலைக்கட்டிற்கு) .... 29
இரஸாதிப் புகை (வாத சூலைக்கு) ... 59
நாபிப் புகை (வெண்குஷ்டம், புண்ணுக்கு) 55
பாஷாணாதிப் புகை (சூலைக்கட்டிற்கு) .... 2
ஆட்டெருப் புகை (மூலத்திற்கு) ... 90
வன்னியிலைப் புகை (மூலரோகத்திற்கு) .... 111
குங்கிலியப் புகை ஆக்ராணம் (வாந்திக்கு) 233

## 14. வேது மருந்துகள்.

அடப்பம் வேது (சூலைகளுக்கு) .... 60
எட்டியிலை வேது (மூல நோய்க்கு) .... 121
கருஞ்செம்பை வேது (புதுமூலத்திற்கு) ... 133

## 15. எச்ச மருந்துகள், மாம்ஸம் சேர்ந்த மருந்துகள்.

குபோத எச்ச மருந்த (சிரச்சூலை, தலைகனப்புவலி, பிடரிவலி, சளி, நீர்விழுதல் முதலானவைகளுக்கு) 50
கருங்கோழி மருந்து (மூலத்திற்கு) ... 198

பக்கம்

கருங்கோழிக் கடுகு (மூலத்திற்கு) .... 124
அஜமாம்ஸ ரஸாயனம் (மூலக்கடுப்பிற்கு) ... 131
ஆட்டுப்புழுக்கை மருந்து (பித்தம் தீர) ... 207

## 16. பால் மருந்து.

ஆட்டுப்பால் மருந்துகள்
(நீரடைப்பிற்கும், கல்லடைப்பிற்கும்) 296
ஆட்டுப்பால் மருந்துகள் (மூத்திரக் கல்லுக்கு) 297
கடுக்காய்ப் பால் (நீர்கட்டிற்கு) .... 334

## 17. இடி மருந்துகள்.

இடி மருந்து (சூலைக்கு) ... 36
இடிவல்லாதிச் சூரணம் (அஸாத்ய மூலத்திற்கு) 91

## 18. நஸ்ய வகைகள்.

ஈருள்ளி நஸ்யம் ... 51

## 19. நோய் குறிகள்.

மூலத்தின் குணமும், மருந்தும் .... 141
சாத்தியா சாத்தியம் (மூலத்திற்கு) ... 122

# நோய்க் குறிப்புகள்

## யூகிமுனி வைத்ய சிந்தாமணியிலிருந்து எடுக்கப்பட்டவை

## சூலை ரோக நிதானம்

**(15 வகைப்படும்)**

★

**1. மேகச் சூலை**

கைகால் நடுக்கம், வலி, மலச்சிக்கல், கை கால் வியர்வை, உடலில் சிலுசிலுப்பு, தேகத்தில் எரிச்சல், இளைப்பு, சுரம், தாகம், மயக்கம் முதலானவைகள் உண்டாகும்.

**2. முதிரிச் சூலை**

ஆண் குறியின் அடிப்புறம், கீழ் வயிறு, முதுகு முதலான இடங்களில் வலியேற்படும். அபான வாயுப் பிரகோபத்தால் குடலை இழுத்துப் பிடித்து வலி யுண்

டாகும். தொப்புள் நடுபாகம் சுழன்று இழுக்கும். தலை வலி, சுரம் இவைகள் ஏற்படும். கண்கள் சிவந்து, நீர் ததும்பும்.

### 3. வாதச் சூலை

கை கால் உளைச்சல், மதமதப்பு இவைகளுடன் தூக்கம் மிகும். உடலில் குளிருண்டாகும். உடலில் பளபளப்பும், முகம் சோர்வையுமடையும் சிறுநீர் சிவந்து வீழும். உடலில் குத்துவலி யுண்டாகும்.

### 4. பித்தச் சூலை

உடல் இளைக்கும், வலியெடுக்கும், கைகால்களில் உளைச்சலுண்டாகும். தாது க்ஷீணமடையும். உடலில் உள்ள வனப்பு மாறும். தெளிவு இராது. மயக்கம், பலக்குறைவு இவைகளும் அடிக்கடியுண்டாகும்.

### 5. சேத்துமச் சூலை

நெஞ்சில் கோழைகட்டும். அடிவயிற்றில் வலியேற்படும். தேகம் முழுவதும் புண்போல் வலிக்கும். எரிச்சலும் உண்டாகும். உடலில் வியர்வை தோன்றும். உடல் வெளுக்கும். நகக்கண்களில் இரத்தம் சுத்தமாக இராமல் வெளுத்துப்போம். உடல் பஞ்சைப்போல் லேசாகி, வாயின் நீர் ஊறும்.

### 6. ஆமச் சூலை

அசீரணம் ஏற்படும். அதிகமாகத் தண்ணீர்

பருகுவான். புளிப்பு, கசப்பு, தித்திப்பு இவைகளை அதிகமாக உண்பவராயிருப்பான். உபவாசம் பண்ணி ஞலும் ஆமத்தோடு, சீதமும் சேர்ந்து வயிறு, விலாப் பக்கங்கள் முதலான இடங்களில் வேதனையைக் கொடுக்கும்.

## 7. உத்தாரச் சூலை

விலாப்புறங்கள், முதுகு, நெஞ்சு, எலும்பு, வயிறு முதலான இடங்களில் குத்துவலியேற்படும். குதத்தில் துர்மாமிஸங்களும் வளரும். மேலும், பருக்கைக் கற்களைப்போல் சலத்துவாரத்தையடைந்து மூத்திரச் சுருக்கை யுண்டாக்கும். உடலில் வலியேற்பட்டு மனம் பேதலிக்கும். மயக்கம் ஏற்படும்.

## 8. குன்மச் சூலை

மூத்திரம், மலம் முதலானவை சரிவரப்போகாது. வயிற்றுப்பொருமல் உண்டாகி, வாந்தி, இரைச்சல், மூர்ச்சை முதலானவைகளுண்டாகும். வயிற்றுவலி யுண்டாகும். வாயில் உமிழ்நீர் அதிகரிக்கும். ஏப்பம் உண்டாகும். சாப்பாடு குறைவடையும். அழற்சியுண் டாகும். உடல் வற்றும். அரோசகம் ஏற்படும்.

## 9. உலத்திச் சூலை

உஷ்ணத்திஞலும், பித்தத்திஞலும் உடல் வறண்டு போய் வலி எடுக்கும். வீக்கம் உண்டாகும். வயிற்றில்

வலியேற்படும்.

**10. நிதம்பச் சூலை** (ஸ்திரீகளுக்கு ஏற்படும்)

பிள்ளை பெற்றதனால் பெண் குறியின்வாய் அகன்று உள்ளடங்கி தேங்காயைப்போல் கருப்பை நழுவி அடைத்துக்கொள்ளும். அது அசையும்போது சிறுநீர் வெளியாகும். சரீரம் இளைக்கும், வெளுத்துப்போம்.

**11. கரச் சூலை**

இரத்தம் கெட்டு தோலைப்பற்றி கையில் ஒரு வளையத்தைப்போல் திரண்டு, கீழ் முதுகுவரை வலியைத் தரும்.

**12. சுரச் சூலை**

மேலும், விலாப்புறங்களில் வலியேற்பட்டு, லேசான ஜ்வரம் அடிக்கும். வாயிலிருந்து இரத்தம் வீழும். வயிற்றில் வேதனை யுண்டாகும். சாப்பாடு சீரணியாமல் நெஞ்சைக் கரித்து, வாயில் நீர் ஊறி வாந்தியும் ஏற்படும்.

**13. பக்கச் சூலை**

அண்டத்தில் பொருமலுடன், வலியுண்டாகும். லேசாகச் சுரமடிக்கும். தேகத்திலும் உளைச்சலதிகரிக்கும். உடம்பு கனம், தலைவலி, பக்கங்களில் (விலா)

குத்துவலி முதலானவை யுண்டாகும். கைகால் ஓய்ச்சலாகும். கண் புகைச்சலேற்படும். மனது சஞ்சல மடையும்.

## 14. கெர்ப்பச் சூலை.

மருந்தீட்டினாலும், வஞ்சனை, பில்லி, சூன்யப் பிரயோகம் இவைகளினாலும், மிகுந்த ஆசையினாலும் பிரஸவத்திற்குப்பின் உதிரம் அதிகமாய் படுவதினாலும் அல்லது இரத்தம் சிக்கி வீழ்ந்தாலும் இந்நோ யுண்டாகும். மேலும் கெர்ப்பத்தைப்போல் அடி வயற்றில் கட்டியுண்டாகி வலி, மயக்கம் இவைகளும் ஏற்படும்.

## 15. தூரச் சூலை

ஆகாரம் செல்லாது. வாயில் நீர் ஊறும். சாப் பிட்ட ஆகாரமும் ஜீரணிக்காது. வயிற்றில் பந்துபோல் புரளும் சிற்சில சமயங்களில் வடிந்துவிடும். கீழ் வயிற்றில் உப்பிசம் ஏற்படும். மலச்சிக்கல் உண்டாகும்.

ஆகச் சூலை நோய்கள் 15. அதில் முதிரிச் சூலை உத்தாரச் சூலை, சேத்மச் சூலை, ஆமச் சூலை, நிதம்பச் சூலை, குன்மச் சூலை இவை ஸாத்யம். மற்ற 9-ம் அசாத்யங்களாகும்.

# 2. குஷ்ட ரோக நிதானம்

(18 வகைப்படும்)

★

### புண்டரீக குஷ்டம்

தாமரையின் பூவிதழ்போல் குவிந்து கறுப்பு, வெளுப்பு, சிவப்பு இவைகளுடன் கூடி, சர்மத்தில் இரணம் உண்டாகும். அரிப்பு இருக்கும். சொரிந்தால் சுனைநீர்போல் துர்நீர்கசியும், வேதனையுண்டாகும். சரீரம், காது, முகம் இவைகளில் உண்டாகும்.

### விஸ்போட குஷ்டம்

சரீரத்தில் அரிப்பு ஏற்பட்டு, சருமத்தில் வெடிப்புகள் ஏற்படும். தீச்சுட்டாப்போன்ற எரிச்சலைக் கொடுக்கும் சிற்சிலவிடங்களில் நல்ல பாம்பின் படம் போல் தடித்து வெண்மையாகும். சிவப்பு நிறமான துர்நீர் கசியும். தூக்கமும், அதிகமான வேதனையையும் தரும். தோலும் தடிக்கும்.

### பரம குஷ்டம்

அரிப்பு உண்டாகிச் சருமம் வெளுப்பாகும், சீழ் வடியும், தேகம் குன்றும், சரீரத்தில் எரிச்சலும் எடுக்கும். தாமரைக்குடைப்போன்று மேலே எழும்பிச்

சொறியும் உண்டாகும். பாம்பின் தோலைப்போன்றும் வீங்கும். கால் கைகள் குறைவடையும்.

### கேச்சர்ம குஷ்டம்

தோல் கறுநிறமாகி உரியும். உரிந்த இடம் சிவப்பாகும். பின்ன "வற வற" என்று அந்த இடம் இழுக்கும் நாளாவட்டத்தில் வெடிப்புகள் காணும். அரிப்பு உண்டாகும். கால் கை விரல்கள் கடினமாகி எரிச்சலைத்தரும். தேகத்தில் வலியும் ஏற்படும்.

### கரண குஷ்டம்

சர்மம் வெடிக்கும். உடல் வேதனை மிகுதியாகும். தேகம் வீங்கி, மதமதப்பு உண்டாகும். மர்மஸ்தானம் காக்கணத்தின் பூவைப்போல் வெண்ணிறத்தையோ நீல நிறத்தையோ அடையும், வீக்கமும் ஏற்படும். மனக்லேசமும் அதிகரிக்கும்.

### சிகுர குஷ்டம்

உடல் பொதுவாக வெண்ணிறத்தையோ அல்லது பசுமை நிறத்தையோ அடையும். சிவப்பும், கறுப்புமான தடிப்புகள் உண்டாகித் தாங்கமுடியாத அரிப்பு உண்டாகும். தடிப்புகளிலிருந்து சிற்சிலசமயம் சீழ் ஒழுகும். தசை, வயிறு, பின்புறம் முதலான இடங்களில் நமைச்சலுண்டாகும். தேகத்தில் மதமதப்பு தோன்றும், தசையிற்குள் எரிச்சலேற்படும். வயிற்றினடியில் தடிப்பு உண்டாகும்.

## கிருஷ்ண குஷ்டம்

தேகம் கறுத்துப்போம். சிவந்த தடிப்புகள் உண்டாகி, தொட்டால் தெரியாமல் மதமதப்பு உண்டாகும். நாற்றம் எடுக்கும். உஷ்ணம் தாக்கும் உடம்பில் வலியெடுக்கும். புறங்கால், தலை முதலான இடங்களிலும் வலி அதிகமிருக்கும்.

## அவுதும்பர குஷ்டம்

தேகத்தில் அத்திக் காயையொத்த கறணைகள் உண்டாகும். நாளாவட்டத்தில் அது பெருக்கும். உடம்பில் தோல் கறணையின் பாரம் தாங்காமல் திரைந்து தொங்கும். மதமதப்பும் ஏற்படும், அரிப்பு ஏற்பட்டுச் சொறிந்தால் செந்நிறமான துர்நீர் கசியும். மயக்கம் ஏற்படும்.

## மண்டல குஷ்டம்

உடம்பு, சிரஸ் முதலான இடங்களில் பச்சைவர்ண மாகவும், சிவப்பு வர்ணமாகவும் தடிப்புகள் ஏற்படும். சிற்சில இடங்களில் தேகத்தில் கறுநிறமான படைகளும் ஏற்படும். அரிப்புண்டாகும் சொரிந்தால் சிவப்பு நிறமான நிணநீர் பெருகும்.

## அபரபாச குஷ்டம்

தேகத்தில் தாங்கமுடியாத வலியுண்டாகி இரத்தம் கறுநிறத்தையடையும். மனக்கிலேசம் அதிகரிக்கும்.

தேகத்தில் வாயு அதிகரிக்கும், வீக்கத்துடன் உடலில் வெடிப்புகள் ஏற்படும்.

### விசர்ச்சிகா குஷ்டம்

வாத பித்தக் கோளாறினால் உடலில் வெண்ணிற மான தடிப்புகள் ஏற்படும். தொட்டால் "வழவழ" என்று எண்ணெய் தடவியதைப் போலாகும். எரிச்சல் அரிப்பு முதலானவைகளும் உண்டாகும். சிற்சில இடங்கள் செந்நிறமாகத் தடிக்கும். நாவறட்சியுண் டாகும், வயிறு உப்பிசம், எரிச்சல், சலசலப்பு முதலான குறிகளும் காணும்,

### வையாதி குஷ்டம்

கப பித்தங்கள் கோபித்து உடம்பில் வெடிப்புகளை யுண்டாக்கும். தாங்கமுடியாத வலி, அழற்சி முதலிய வைகளை யுண்டாக்கும். மேலும் கண், காது, தொண்டை, விரை முதலான இடங்களில் புண்களுண்டாகும். பாம்பின் உடலைப்போன்ற நிறைத்தையடையும். கை கால் சந்துகள் கறுநிறமடையும்.

### கிடிப குஷ்டம்

சரீரம் பசுமை நிறமடைந்து யானைத்தோலைப் போன்று தோல் கடினமாகும். அதிகமான அரிப்பு ஏற்படும். அடிக்கடி மூத்திரம் இறங்கும். உடல் நாறும், வீக்கமுண்டாகும்.

### தத்ரு குஷ்டம்

தேகத்தில் சிவப்பு நிறமாகவும், வட்டமாகவும் பற்பல தழும்புகள் ஏற்படும். உடல் வெளுக்கும். வலியேற்படும். மயிர் சுருண்டுபோய் உருண்டையாகச் சடையாகும். பித்த கபம் அதிகரிக்கும்

### சர்தேவ(சர்மதல) குஷ்டம்

உடம்பு வலியேற்படும். கீற்றுகீற்றாக தேகத்தில் வெடிப்புகள் உண்டாகி வலியைத் தரும். தொட்டால் அதிக வேதனையைத்தரும். சிவப்பு நிறமாகும். மயக்கம் அசதி, வயிற்றுவலி இவைகளும் காணும்.

### ஸித்ம குஷ்டம்

வாத பித்தம் அதிகரித்துத் தேகத்தில் சுரைப் பூவைப்போன்ற நிறமுள்ள தடிப்புகள் ஏற்பட்டு, மத மதப்புடன் வட்டமாக ஆகும். சிவப்பு நிறமான நீர்க் கசிவும் உண்டாகும். தேகத்தையும் அசைக்கமுடியாது. மறதி அதிகமாகும்.

### சாதாரு குஷ்டம்

ரத்த நிறமான தடிப்புகளும், செழும் பச்சை, வெள்ளை இவைகளோடு கூடிய தடிப்புகளும் காணும். எரிச்சல், அரிப்பு முதலியவை மிகும். கபமும், வாதமும் அதிகரித்துக் கரடுகட்டிப் புண்ணாகும். பாம்பின்

தோலைப்போன்று தடிக்கும். மூக்கு, காது, கன்னம் முதலான இடங்கள் தடிக்கும்.

**சுவேத குஷ்டம்**

உடல் பூராவும் வெளுத்துப்போம். மயிர் வெளுத்தால் அது அசாத்யமாகும். உள்ளங்கை, குதம், குய்யம் முதலான இடங்கள் நெருப்புச் சுட்டாப்போல் எரியும். சிவந்துபோம். அதுவும் அஸாத்யம். உடலும் வீங்கும்.

# 3. மூல ரோக நிதானம்

**( 21 வகைப்படும் )**

★

**1. நீர் மூலம்**

தொப்புளைச் சுற்றி வலியேற்பட்டு, கீழ் வயறு பொருமலாகி, அதிக வேதனையைத் தரும். மலச்சிக்கலேற்பட்டு வாயில் நீர் ஊறும். வாயுப்பரியும்போது நுரைத்துச் சிறிது மலம்விழும். அடிக்கடி மலம் போக வேண்டும் என்ற உணர்ச்சி யுண்டாகும். அடிக்கடி மூத்திரமும் இறங்கும்.

## 2 செண்டு மூலம்

கருணைக்கிழங்கு முளையைப்போல் ஆஸனத்தில் கட்டிகள் ஏற்பட்டு, 3 நாட்கள் அதிகமான குத்துவலியைத்தரும். காரம்வைத்துக் கட்டினால் அது உடைந்து இரத்தத்துடன் ஊன் தண்ணீர் வடியும், மலச்சிக்கலுண்டாகும். வயிற்றில் இரைச்சலுண்டாகும் ஆசனம் சுருங்கும்.

## 3. முளை மூலம்

ஆசனத்தில் கடுப்பு உண்டாகித் திரண்டு தடிப்புண்டாகும். அடிவயிறு கல்லைப்போலாகும். ஆசனம் சுருங்கி, அரிப்புண்டாகும். சிறுநீர் சிவப்பாக இறங்கும். ஏப்பம் அதிகரிக்கும். ஆஸனத்துவாரத்தில் மஞ்சள் முளையையொத்த முளை கிளம்பும். மலச்சிக்கலுண்டாகும்.

## 4. சிற்று மூலம்

உடம்பில் எரிச்சல், மயக்கம், வயிற்றில் பளபளப்பு குத்துவலி இவைகளுண்டாகும். வயிற்றில் "குர், குர்" என்று இரைச்சல்மிகும். பொருமலும் உண்டாகும். பல சிறியசிறிய முளைகள் ஆசனத்தைச் சுற்றிலும் ஏற்படும். தேகம் வெளுத்துப்போம். பசியிராது.

## 5. வரண் மூலம்

மலச்சிக்கலுண்டாகும். ஆசனத்திலிருந்து இரத்தம்

துளித்துளியாக வீழும். தேகம் வறண்டு, அழகு குன்றும். அனாவசியமாக வீராப்புபேசி பிறரைச் சண்டைக்கிழுப்பான் ஆஸனத்தில் சிறு முளைகள் தோன்றும். அதனைப் பிறருக்குத் தெரிவிக்கமாட்டான். நாளாவட்டத்தில் தேகபலம் குறையும்.

## 6. இரத்த மூலம்

தொப்புளில் வலியேற்பட்டு, மலம் போகையில் இரத்தமும் ஒரே சீராக வீழும். உடல் வெளுத்து வற்றிப்போம். கை கால்கள் அசந்து சோகை நோய்க்குக் காரணமாகும். மார்வலி, தலைவலி, மயக்கம், கண்களில் மஞ்சள் நிறம் முதலான நோய்க் குறிகளும் காணும்.

## 7. சீழ் மூலம்

ஆஸனத்தில் கடுப்புவலியேற்பட்டு, எரிச்சலும் மிகும். சீழும் தண்ணீருமாக வெளியாகும். தேகம் இளைத்து வெளுத்துப்போம். வாயில் நீர் ஊறும். அதிகமாக நடக்க இயலாது. சிறுநீர் மஞ்சளாக இறங்கும்.

## 8. ஆழி மூலம்

ஆஸனத்திற்கருகில் தண்ணீர்விட்டான் கிழங்கைப் போல ஒரே முளையாகக்காணும். துர் நீர்க்கசிவுடன், சீழ் இரத்தம் இவைகளும் வெளியாகும். மலச்சிக்கலேற்படும். தேகம் பலஹீனமாகும்.

## 9. தமரக மூலம்

ஆஸனவாய்க்கருகில் உலக்கைப்பூண் போலும், தாமரைப் பூப்போலவும் மூலமுளையேற்படும். மலம் தீய்ந்து வெளியாகும். அதனுடன் இரத்தமும் வெளியாகும். அரிப்பு, எரிச்சல் இவைகளும் அதிகரிக்கும் சிற்சில சமயங்களில் வயிறு இரைந்து, நீராக மலம் வெளியாகும். பசியிராது, மந்தம் அதிகரிக்கும். மேல்மூச்சு, அசதி இவைகளும் ஏற்படும்.

## 10. வாத மூலம்

ஆஸனம் கோவைப் பழம்போல் சிவந்துகாணும். அடப்பம்பூப்போன்ற முளைகள் ஏற்படும். கறுப்பாகவும், மிருதுவாகவும் அவை இருக்கும். கடுப்புடன், அரிப்பு, குத்தல்வலி, மதமதப்பு இவையேற்படும். அங்கு மயிர் முளைக்கும். மலச்சிக்கலும் ஏற்படும். வயிற்றுவலி ஏற்படும்.

## 11. பித்த மூலம்

தலைவலியேற்படும். பருத்திக்கொட்டையோ அல்லது நெல்லைப்போன்றோ முளையேற்படும். ஆஸனத்தில் குத்துவலியுண்டாகும். மலம்சிக்கி மாவுண்டையைப் போலத் திரித்திரியாக விழும். அதனுடன் ரத்தமும் சீழும் கலந்திருக்கும். ஆஸன எரிச்சலுண்டாகி, தாகம் அதிகமான வியர்வை இவைகள் அதிகரிக்கும். தலைவலி, மயக்கம், கோபம் இவைகள் ஏற்படும்.

## 12. சிலேத்ம மூலம்

வெள்ளையாக ஆஸனத்தில் முளையுண்டாகும். எப்பொழுதும் அரிப்பெடுக்கும். எரிச்சலும் மிகும். கடுப்புடன் சீழும் தண்ணீரும் வெளியாகும் மலச்சிக்கலுண்டாகும். மூத்திரம் எரிச்சலுடன் இறக்கும். அடிக்கடி பிதற்றுவான். தாது நஷ்டம் உண்டாகும். பாண்டு, அரோசகம் இவை அதிகரிக்கும்.

## 13. தொந்த மூலம்

ஆஸனம் சுருங்கிப்போம். கோழியின் கொண்டையைப் போன்ற மாம்ஸ வளர்ச்சு சிவப்பாக இருக்கும். நடக்கமுடியாது. வயிற்றுப் பொருமல் உண்டாகும். வியர்வை, நடுக்கம், தாங்கமுடியாத தாகம், வயிறுபேதி முதலானவை ஏற்படும். தேகம் இளைக்கும்.

## 14. வினை மூலம்

சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்காது. பசியும் இராது. புளித்தேப்பம் உண்டாகும். அடிவயிற்றில் குத்துவலி, மலச்சிக்கல, கைகால் ஓய்ச்சல், வயிறுகனத்து எரிச்சலுண்டாதல், நரம்பு இசிவு, மூலக்கடுப்பு முதலானவைகளேற்படும்.

## 15. மேக மூலம்

வெள்ளை ஊற்றும், குதத்தின் வழியாக இரத்தம் வெளியாகும். சிலசமயம் சத்தத்துடன் கழிச்சலுண்டாகும். சிறுநீர் எரிச்சலேற்படும். தலைவலியும் உண்டாகும். உடம்பில் பாரத்துடன், மதமதப்பும்

உண்டாகும். சிறுநீரில் சர்க்கரை வெளியாகும். (மதுமேகம்)

## 16. பவுத்திர மூலம்

பவுத்திரத்தில் கட்டியேற்பட்டு, மூத்திரம் அடிக்கடி இறங்கும் உணர்ச்சி உண்டாகும். கை கால் எரிச்சல் ஏற்படும். ஆஸனத்தில் பார உணர்ச்சி உண்டாகிச் சேவல் கொண்டையைப்போன்ற மாமிஸ முளைகளேற்படும். கோவைப்பழம் போன்று சிவப்பாக இருக்கும். காரம் வைத்துக்கட்டினுல் குணமேற்படும்.

## 17. கிரந்தி மூலம்

ஆண் குறியில் புண்களுண்டாகும். உடம்பு, கை கால்களில் வலியேற்படும். ஆஸன வாய்க்குள் விரணமுண்டாகும். கொடிக்கொடியாக மூலமுளைகள் உண்டாகும். சீழும் இரத்தமும், துர்நீரும் வெளியாகும். நெருப்புச் சுட்டாற்போன்ற எரிச்சலும், கடுப்பும் உண்டாகும். மலம் வரட்சியாகி புழுக்கை புழுக்கையாக வெளிவரும்.

## 18. குத மூலம்

ஆஸனத்தில் மூங்கில் குருத்துப்போல் முளை வெளிவரும். உள்ளே தள்ளிவிட்டால் போய்விடும். இரத்தமும் சீழும் வெளியாகும். வயிறு கனத்துப் போம். கைகால்கள் வீங்கும். நாவறட்சியேற்பட்டு தண்ணீர்த்தாகம் ஏற்படும். கால்களிலுள்ள ஆடுதசையில் வலி உண்டாகும். காரணமில்லாமல் கோபம் உண்டாகும்.

## 19. புற மூலம்

எண்ணெயைப்போலவும், தண்ணீரைப்போலவும் கடுத்து ஆஸனத்திலிருந்து சீழ்வடியும், அரிப்பு உண்டாகும். மதமதப்புத் தோன்றும். உடல் முழுவதும் சொறி சிரங்குள் உண்டாகும். ஆஸனத்தைப் பிளப்பதைப்போன்ற வலியேற்பட்டுப் படுக்கக்கூட முடியாத நிலையேற்படும். முகவாட்டம் உண்டாகும். முகமும் வெளுக்கும்.

## 20. சுறுக்கு மூலம்

ஆஸனத்தைச் சுறுக்கிப் பெருங்குடலில் வலியையும் பொருமலையும் உண்டாக்கும். மேலும் அவ்விடத்தில் தடிப்பையுண்டாக்கி இரத்தம், நிணநீர் இவைகளை வெளியாக்கும். அனலை இட்டாற்போன்ற எரிச்சலுண்டாகும். தேகத்தை அசைக்கமுடியாது.

## 21. சவ்வு மூலம்

முதுகுத் தண்டில் இந்நோய் ஏற்பட்டு, தொப்புளில் தாமரைப்பூப்போல் மலர்ந்து, அடிவயிற்றில் குத்துவலியேற்படும். ஆஸனத்தில் சவ்வைப்போல் அடைக்கும். சீயும், தண்ணீரும் எப்போதும் வெளியாகும்.

# பித்த ரோக நிதானம்

**(இவை யூகிமுனி வைத்ய சிந்தாமணிப்படி**
**42 வகைப்படும்)**

★

## 1. ஆவுரு(த) பித்த குணம்

சரீரத்தில் எரிச்சல் மிகும். தாகம், சளி, இளைப்பு, கடுப்பு, அழற்சி முதலானவை உண்டாகும். வாயில் புளிப்புச் சுவையும், உரைப்புச் சுவையும் அதிகரிக்கும். மலம் சலம் இவைகள் மஞ்சள் நிறமாகும் தன்னை யறியமால் கூற்றுடிக் கொக்கரிப்பான். அடிக்கடி எழுந்து எழுந்து விழுவான்.

## 2. ஆமில பித்தம்

உடல் கருநிறமடையும், தலையை ஆவேசம்வந்தவன் போல் இங்குமங்கும் ஆட்டுவான். சாப்பிட்ட ஆகாரத்தை மறுநாள் செரியாமல் வாந்திசெய்வான். வாயில் புளிப்பு, கசப்பு முதலான சுவைகள் மிகும். கைகால் அசதியுறும். விக்கல் வயிறு உப்பிசம் இவை அதிகரிக்கும்.

## 3. உன்மத்த பித்தம்

உடல் மதமதப்பு ஏற்படும். பசியதிகரிக்கும்,

தலைகனக்கும். ஒருவரிடம் பேசாமல் ஊமையைப்போல ஓரிடத்திலே இருப்பான். தூக்கம் வாராது. வாயிலிருந்து நீர் ஊறும் சித்தம் கலங்கும்.

## 4. மந்த பித்தம்

கள் குடித்தவன்போல் மறதியதிகரிக்கும். சரீரம் அதிகமாகப் பெருத்துப்போம். நாக்கின் அடியில் காணும் நரம்புகள் மஞ்சளாகும். எத்தனை தடவை கூப்பிட்டாலும் பிணம்போல பேசாமலிருப்பான். தாகம் அதிகரிக்கும். ஆகாரம் அதிகமாக சாப்பிடுவான்.

## 5. வாத பித்தக் குறிகள்

கண்களின் பார்வை குறையும். வயிறு இரைச்சலும், புகைச்சலும் உண்டாகும். கண்கள் சுழன்று, நீர் ததும்பி நிற்கும். உடம்பில் வியர்வையதிகரிக்கும். மயக்கம், வாந்தி இவைகளுடன் ஆகாரம் உட்செல்லாது.

## 6. வன்னி பித்தம்

வயிற்றில் உளைச்சல் அதிகரித்துச் சூடு கபாலத்தைத்தாக்கும். உடல் வாட்டமுறும். கருநிறத்தையும் அடையும். மங்கைகளை இச்சிப்பான். ஆகாரத்தில் விருப்பமிராது. வாயில் புண்களேற்பட்டுப் புளிப்புச்சுவை மேலிடும்.

## 7. சிலேத்ம பித்தம்

உடல் வெளுத்துப்போம். வலியும் உண்டாகும். கோபம் அதிகரிக்கும். மயங்கி, அறிவை இழந்து வருந்துவான். இருமலுண்டாகும். கண்களின் பிரகாசம் குறையும். பசியதிகரிக்கும். தும்மல், சுரம், இவைகளும் ஏற்படும்.

## 8. சுரோணித பித்தம்

இரத்தம்கெட்டுத் தேகத்தில் குத்துவலியுண்டாகும். அசதியும் ஏற்படும். உடலில் முள்ளைக்கொண்டு குத்துவதைப்போன்ற வலி, தீராத தாகம், தலைவலி இவைகளுண்டாகும். மனது தடுமாறும். வாந்தியொடு கோழையும் வெளிவரும்.

## 9 விகார பித்தம்

தூக்கம்வராது. வாய்கசந்துபோம். பிறர்பேச்சைக் கேட்கச் சகிக்கமாட்டான். கண்கள் சிவக்கும். கலக்கம் உண்டாகும். உடம்பு கடுத்து, வெண்மையாகிப் பின்னர் கருநிறமடையும். வாந்தி, மயக்கம் அதிகரிக்கும். மனது ஒரேநிலையில் இராது. வாயில் நீரூறும். பட்டினிகிடக்க விரும்புவான். வயிற்றில் பார உணர்ச்சி உண்டாகும்.

## 10. விரண பித்தம்

உடம்பில் மதமதப்பு ஏற்பட்டுப் பாரமும், அரிப்பும்,

உண்டாகும். இரணமும் ஏற்படும். நாக்கில் கசப்புச் சுவை உண்டாகும். நாடிகள் படபடக்கும் ஆண்குறி சிவந்துகாணும். திடீரென நித்திரையிலிருந்து எழுவான் வாயில் நீர் ஊறும்.

## 11. உரத்த பித்தம்

கோபம் அதிகமாக உண்டாகும் காரணமில்லாமல் சண்டையிடுவான். தன்னிஷ்டம்போல் உரக்கக் கத்துவான். அடிக்கடி பேதியாகும். நன்மை தீமை அறியமாட்டான். கண்கள் சிவந்துபோம். தூக்கம் இராது. உடம்பு பருக்கும்.

## 12. இரத்த பித்தம்

இருமல் அதிகரித்துக் கோழையில் இரத்தம் வீழும். சரீரம் மெலிந்து, அடிவயிறு சுறுங்கும். வாயில் கவிச்சி வாடையடிக்கும். தேகம் வாட்டமுறும். இடுப்பு வலியும் உண்டாகும்.

## 13. காச பித்தம்

இருமல், வயிற்றுப் புரட்டு, விக்கல், வாந்தி முதலானவைகளேற்படும். உடம்புவலி உண்டாகும். வாயில் அதிகமாக உமிழ்நீர் ஊறும். வாயில் தித்திப்புச் சுவை மிகும். மனக் கவலை உண்டாகும். நெஞ்சில் பார உணர்ச்சி ஏற்படும்.

## 14. சுவாச பித்தம்

மேல்மூச்சு வாங்கும். வயிறு கனத்துப் பொருமல் ஏற்படும். உடலில் வலியேற்படும். பிதற்றல், அறிவு தடுமாற்றம், கண் பார்வைக் குறைவு முதலான குறிகளும் காணும். மார்பில் வலியுடன் இருமலுண்டாகும். பசி மந்திக்கும்.

## 15. சேத்ம பித்தம்

செம்பில் உண்டாகும் களிம்பைப்போலப் பச்சைநிறமாக வாந்தி எடுக்கும். சிலசமயங்களில் சிவப்பாகவும் வெளியாகும். மயக்கம், வியர்வை சிவப்பாதல், தண்ணீர் தாகம் இவைகளுண்டாகும். தலையை அடிக்கடியசைப்பான். திடுக்கிட்டுப் பயப்படுவான். உடல் சிவக்கும்.

## 16. கரும் பித்தம்

மயக்கம் உண்டாகும். தலை, உடல் முதலான இடங்களில் வலியேற்பட்டு, நடுக்கம் உண்டாகும். தூக்கம் அதிகரிக்கும். கடைக்கண்கள் சிவந்து. கண்களில் மின்மினிப் பூச்சி பறப்பதைப் போன்று பிரமை காணும். தேகம் கனத்து வற்றிப்போம். நாக்கில் ருசியிராது. பசியும் மந்தமாகும். கருநிறத்துடன் வாந்தியாகும்.

## 17. கரப்பான் பித்தம்

சரீரத்தில்சொறியுண்டாகி, மனது கிலேசமடையும்.

உடலில் கட்டிகளும் ஏற்படும். அடிக்கடி வயிறு பேதி யாகும். இருமலுண்டாகி, வயிறு இழுத்துக்கொள்ளும் காலில் பலம் இராது. இடுப்பில் வலியும், மதமதப்பும் ஏற்படும். கரப்பான் புண்களும் உண்டாகும்.

### 18. அசீர்ண பித்தம்

பசி மந்திக்கும். உடலில் கடுப்பு வலியேற்பட்டு, உட்குளுரும் உண்டாகி மலச்சிக்கலேற்படும். வெள் விழி கறுத்துக் கண்ணீர்வடியும். தலைவலி அதிகமாகும். வயிற்றில் இரைச்சலுண்டாகும். வயிற்றில் பாரம் ஏற்படும். ஆகாரம் செல்லாது. கைகால் ஓய்ச்சல் ஏற்படும். புளித்தேப்பமும், வாயில் நீறும் ஊறும்.

### 19. அருசி பித்தம்

மனதுடைந்து குடல்புறட்டி வாந்தியேற்படும். வாயில் சுவையிராது. மயக்கம் தலைக்கேறி தலையை அடிக்கடி புறட்டுவான். அடிநாக்குத் தடித்துப்போம். நாக்கிலும் உணர்ச்சி இராது. தூக்கம் வாராது. ஆகாசத்தில் பறப்பதைப்போன்ற உணர்ச்சி உண் டாகும்

### 20. எரி பித்தம்

அடித்துடை, பாதங்கள், கண்கள், உள்ளங்

கால்கள், உள்ளங்கை முதலான இடங்களில் தாங்க முடியாத எரிச்சலுண்டாகும். காதுகள், மூக்கு முதலான இடங்கள் வறண்டுபோம். முழங்கை, முழங்கால்கள் மதமதப்பாகும்,

## 21. அழல் பித்தம்

வாலிபமாக இருக்கும்போதே அகாலநரை உண்டாகும். உடலும் வெளுத்துப்போம். கடைக் கண்கள் சிவக்கும் நல்ல அறிவாளியைப்போல் பேசுவான் சிலசமயம் அவதூறான வார்த்தைகளையும் உபயோகிப்பான். ஸ்திரீகளைப்பற்றியபேச்சு, பாட்டு, பலகலைகளையும் கற்றல் முதலானவைகளிலும் அதிகமாக ஈடுபடுவான்.

## 22 துடி பித்தம்

உடம்பில் துடிப்பு உண்டாகும். உடல் வெளுத்துப் போம். அரோசகம் உண்டாவதால் ஆகாரம் உட் செல்லாது. காரணமில்லாமல் அலைவான். ஸ்திரீகளிடம் இச்சையிராது. அடிக்கடி எல்லோரோடும் சண்டையிடுவான். எந்தக்காரியத்திலும் அவசரப் படுவான்.

## 23. விஷ பித்தம்

உடல் நிறம் மாறுபட்டு மயக்கம் உண்டாகும்.

எல்லோருடனும் தன்குறைகளைச் சொல்லுவான். உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை விஷம் ஏறிஏறி இறங்கும். தேகத்தில் குத்துவலியேற்பட்டு ஆகாரமும் உட்செல்லாது. இது அஸாத்யமாகும்.

## 24. அதிஸார பித்தம்

வயிற்றில் இரைச்சலேற்படும். நன்றாகப் பேதியாகும். பொருமலுந் தீராது. விலாப்பக்கத்தில் வலியும் உண்டாகும் ஈரலில் எரிச்சல்காணும். தாகம், மயக்கம் இவையுண்டாகும். அரோசகம் ஏற்பட்டு அடிக்கடி வாந்தியெடுக்கும்.

## 25. மூல பித்தம்

வயிற்றில் இரைச்சலுடன் பேதியாகும் சலிப்புடனே கோபம் ஏற்படுத் தடுமாறுவான். மூலத்தில் முளைகளேற்படும். காலின் ஆடுதசை, அடித்தொடை முதலான இடங்களில் கடுப்பு ஏற்படும். உடல் வெளுத்துப்போம். வீக்கமும் உண்டாகும். தூக்கம் அதிகரிக்கும். சோம்பல் மிகும். கண்கள் கரிக்கும்.

## 26. உதிர பித்தம்

அம்மைக் கொப்புளத்திலுண்டாகும் அரிப்பைப்

போல் உடல் முழுவதிலும் நமைச்சல் அதிகமாக இருக்கும். சொரிந்து சொரிந்து புண்களுண்டாகும். சரீரம்முழுவதும் புழுதியை அள்ளிப்பூசிக்கொண்டதைப் போல மஞ்சள் நிறத்தையடையும். மலசலம் கட்டும். தேகம் வாட்டமுறும். நாடியும் தளரும்.

## 27. கண்ட பித்தம்

குரலைக் கனைத்துக் கசப்பாக வாந்தி எடுக்கும். தொண்டையில் புண்கள்போல் வலியுண்டாகி ஆகாரத்தை விழுங்க இயலாது. நாக்கு வரண்டு வழவழப்பாகும். அடித்தொண்டையில் கனைப்பும் உண்டாகும். சமுத்திரத்தின் ஓசையைப்போல் காதுகளில் இரைச்சலுண்டாகும். மயிர் செம்பட்டையாகும். ஸ்திரீ சுகத்தில் ஈடுபடமுடியாது.

## 28. ஓடு பித்தம்

எங்கு பார்த்தாலும் ஓடுவான். பற்களை நறநற வென்று கடிப்பான். கண்கள் செந்நிறமாகும். அடிக்கடி சிமிட்டுவான். சம்பந்தம் இல்லாமல் கூச்சல் போடுவான். கொக்கரித்துக் கூத்தாடுவான். இங்குமங்கும் பார்ப்பான்.

## 29. மூடு பித்தம்

கண்களில் கண்ட தங்க நகைகளை அப்படியே

கண்ட இடத்தில் புதைத்துவிடுவான். மனிதர்களைக் கண்டால் உதாசீனமாகப் பேசுவான். தனக்குத் தானேயும் பேசிக்கொள்வான். கைகள் ஏதேனும் சேஷ்டை செய்துகொண்டேயிருக்கும். ஆகாரம் செல்லாது.

## 30. நடுக்கு பித்தம்

தலையோடு, சிரஸ், நெற்றி, பிடரி, முதுகுத்தண்டு, கழுத்து, கன்னம் முதலான இடங்களில் பாரஉணர்ச்சி உண்டாகி நடுக்கல் ஏற்படும். கசப்புச் சுவையுடன் வாந்தியெடுக்கும். சிணுக்கிருமவாக இருமும். தூக்கம் இராது. வாயில் நீர்ஊறி மார்பில் வழியும். நாக்குத் தடுமாறும்.

## 31. கபால பித்தம்

கபாலம், சிரஸ் முதலான இடங்களில் உள்ளே குளிர்ந்து, உடம்பு முழுவதும் வலியேற்படும். அம்பு தெரிப்பதைப்போல் சிரஸ்முழுவதும் வலி யேற்படும். உடல் மஞ்சள் நிறமாகும். மூக்கின் மேல்பாகத்தில் வலியுண்டாகும். முகம் வீங்கும். அடிக்கடி மூர்ச்சை யுண்டாகும். படுத்துப்படுத்து எழுந்திருப்பான்,

## 32. சத்தி பித்தம்

உடம்பில் பாரம் ஏற்பட்டு மதமதப்பு ஏற்படும்.

ஈரலுக்குள் வலியேற்படும். அதிகமான வாந்தி ஏற்படும். தலைமயக்கம் உண்டாகும். மிகுந்த பசியெடுக்கும். ஆனால் வாயில் ருசியிராது. ஆண்மையும் குன்றும். தண்ணீர் குடிக்கமாட்டான். சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்காது.

## 33. தாக பித்தம்

அடிவயிற்றில் எரிச்சலேற்பட்டு உடல் முழுவதிலும் அழன்று காணும். அதிகமாகத் தண்ணீர் குடிப்பான். குளிர்ச்சியான பதார்த்தத்தின்மேல் ஆசைப்படுவான். கழுத்தில் வியர்வையுண்டாகும். கழுத்தின் அடிப் பாகமும், நாக்கின் அடிப்பாகமும் இழுத்துக்கொள்ளும். புளிப்புச்சுவை சாப்பிடுவதில் அதிக இச்சையுண்டாகும்,

## 34. விக்கல் பித்தம்

அதிக விக்கல் உண்டாகும். சரீரம் சில்லிட்டுப் போம். தலையைப் புரட்டிப்புரட்டி கிடைகொள்ளாமல் தவிப்பான். பால்போல் வாயில் நுரைதள்ளும். சில சிலவேளைகளில் சுரமடிக்கும். உடல் தளர்ச்சியடையும். கைகால் ஓய்ச்சலும் உண்டாகும்.

## 35. சய பித்தம்

இருமல் அதிகரித்துத் தண்ணீர்த் தாகம் ஏற்படும். உடல் வெளுத்துப் பாண்டுநோய் சம்பவிக்கும். கண் களும் வெண்ணிறமடையும். நெஞ்சில் கோழைகட்டும்.

சளி கட்டியாக விழும். நெஞ்சில் எரிச்சலேற்படும். அதிக தூக்கமும் ஏற்படும்.

## 36. திமிர் பித்தம்

அதிக மயக்கம் உண்டாகும். வயிற்றில் முள்ளுக் குத்துவதைப்போன்றவலி, தினமும் காலை நேரங்களில் வாந்தி, தூக்கம், அசதி இவைகள் ஏற்படும். உடம்பில் பாரமும், மதமதப்பும் உண்டாகும். சரீரத்தில் தூசி படியும். வேகமாக நடக்கமுடியாது.

## 37. வலி பித்தம்

அடிவயிற்றில் இழுப்பேற்பட்டு வலி கொடுக்கும், நாவறட்சியுண்டாகும். தலைக்கனம் உண்டாகும். ஒவ்வொரு மூட்டிலும் வலியெடுக்கும். ஈரல் குலையிலும் வலிகொடுக்கும். மலம் சரியாக இறங்காது. உடம்பு படபடப்பு உண்டாகும். வயிற்றில் எரிச்சலேற்படும். நெஞ்சு அடைக்கும்.

## 38. சீத பித்தம்

உடம்பிலிருந்து துர்நீராய் வடியும், மயக்கம், தேக பாரம், பிடரிவலி, வயிற்றுப்பொருமல் முதலானவைகள் ஏற்படும். தேகம் பாரமாகும். இருமல் அதிகரித்து,

மனவேதனையைக் கொடுக்கும். வாயில் உப்பு சுவையும், காரச் சுவையுமாகும். மூத்திரம் சிவந்து வீழும்.

## 39. கிருமி பித்தம்

உடல் குளிர்ந்து அடிவயிற்றில் மதமதப்பு ஏற்படும். உடம்பில் அரிப்புடன் கடுப்புவலி, மலசலம் வற்றிப் போம். கைகால்கள் வாழைத்தண்டைப்போல் கனத்து வலிக்கும். மலத்தில் கிருமிகள் வீழும். துர்நாற்றமும் அதிகமாக இருக்கும்.

## 40. அசாத்திய பித்தம்

லாகிரி வஸ்துக்களை உபயோகித்தவனைப்போல், உடலில் உணர்ச்சியில்லாமல்போம். வஸ்திரம் கட்ட மாட்டான். உடலில் எரிச்சல் அதிகரித்துத்தவிப்பான். தாகம் அதிகமாக உண்டாகும். உடம்பு வாட்டமடையும். யாரைக்கண்டாலும் நிரம்பப் பேசுவான். கண்கள் சிவக்கும். நாவறட்சியேற்படும்.

## 41. மார்க்க பித்தம்

எல்லாம் அறிந்தவனைப்போல் பேசுவான். கண்ட இடத்தில் உட்கார்ந்து வஸ்திரத்தைக் கிழிப்பான். வாயில் வந்தபடியெல்லாம் புலம்பிப் பாட்டுக்கள் பாடு வான். சிரஸ், பிடரி இவைகளில் இசிவெடுக்கும்.

தேகம் வாட்டமடையும். சம்பந்தமில்லாமல் வேலைகளைச் செய்வான். பிறரைப் பழிப்பான்.

## 42. மருந்தீடு பித்தம்

ஒருவருடனும் பேசமாட்டான். உடம்பு ஊதிப் போம். நெஞ்சு வற்றி, அசதி அதிகமாகும். சரியான சாப்பாடு, தூக்கம் இவை இராது. எங்கும் திரிவான். திடுக்கிட்டு விழிப்பான். புத்தி பேதலிக்கும், ஸ்திரீகள் வயிற்றில் கட்டியுண்டாகி அதிகமான இரைச்சல் ஏற்படும்.



# சரபேந்திர வைத்ய முறைகள்

## சூலை ரோக சிகித்ஸை.

காப்பு.

வேலைசூழ்ந்தும் பூவரைப்பின் புகழாற்றுஞ்
　　சரபோசி வேந்தர் வேந்தன்
நூலைமுற்று மாய்ந்துதெளி புத்தியினற்
　　பற்பலவர் நோய்களுக்குள்
சூலையுற்ற வகைக்கெல்லாந் தீருமருந்
　　ததுசெய்யச் சொன்னதாலே
வாலைபெற்ற மும்மகன்றாள் வணங்குவே
　　லன்கவியால் வரைந்திட்டானே. (1)

இதன் பொருள்.

சமுத்திரம் சூழ்ந்த பூமண்டலத்தைப் புகழ்பட ஆளும் சரபோசி மஹாராஜா அவர்கள், பற்பல வைத்ய நூல்களையும் ஆராய்ந்து, பற்பல நோய்களையும் அறிவினல் அறிந்து, சூலை ரோகத்திற்குக் குணம் தரக் கூடிய மருந்து முறைகளை கூறுமாறு ஆஞாபித்ததாலே, பார்வதிபெற்ற விநாயகரை, வேலாயுதன் சிரத்தால் வணங்கிச் செய்யுட்களாகச் செய்கின்றான்.

# 1. சூலைக்கட்டுக்குப் புகை.

நாவிதொட்டி கௌரீவெண் பாடாண
மரிதார நவச்சாரந்தான்
மேவுமிவச் சாரமஞ்ச னக்கல்லுஞ்
சீனலிங்க மிருதார்சிங்கும்
பாவுகருங் குங்கிலியங் கார்வங்கம்
வங்காளப் பச்சைகாந்தந்
தீவிரசங் கெருடபச்சை யிதிலீயஞ்
சூதம்ரெண்டுந் தீர்சமன்தான் (I)

ஒருநிட்க மிட்டெருக்கின் பாலாலு
மீட்டியரைத் தொன்பான் கூறாய்
யெருக்கம்பாற் சேலையுஞ் சுருட்டியே
புளிச்சிரா யெரிநெருப்பிற்
றரும்புகைப் போட்டொருநா ளாறவிட்டு
மஞ்சாநாள் தான்முத்தெண்ணெ
யுருந்தலை முழுக்காகும் பழஞ்சோறும்
சுருவற்றலுட னேயத்தோலே (2)

கருவாடும் வெள்ளாட்டின் வத்தலுடன்
கூட்டியுணக் காணிதற்குக்
கருங்குட்ட மொட்டியபுண் திமிர்வாதஞ்
செவ்வட்டைக் கடிச்சீகட்டித்
தருசூலைச் சிரசூலை வெண்குட்டஞ்
சர்வாங்கத் தண்டவாதம்

வருநாளுக் கடிதண்டுப் பிளவையிது
திருமுறை மகிழ்ந்துசெய்யே. (3)

(இ-ள்.)

சுத்திசெய்த நாபி
,, தொட்டிப்பாஷாணம்
,, கௌரீபாஷாணம்
,, அரிதாரம்
,, நவச்சாரம்
,, வெள்ளைப்பாஷாணம்
எவச்சாரம் அஞ்சனக்கல்
பொரித்த சீனக்காரம்
சுத்திசெய்த ம்ருகார்சிங் லிங்கம்
கருங்குங்கிலியம் சுத்திசெய்த கருவங்கம்
வங்காளப்பச்சை சுத்திசெய்த காந்தம்
சுத்திசெய்த பாதரஸம்
,, ஈயம் கெருடப்பச்சைக்கல்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதனை 9 கூறுகளாகச் செய்து வைத்துக் கொண்டு, ஒரு வெள்ளைத் துணியை எருக்கம்பாலில் நனைத்து, (1 சாண் நீள அகலமுள்ள தாகக் கிழித்து) அதில் முன் சூரணத்தில் 1 கூறு எடுத்து விலா சமாகப் பரப்பி சுருட்டி வைத்துக்கொள்ள வும். வேண்டும்போது ஒரு திரியை யெடுத்துப் புளியஞ் சிராய் அனலில் போட்டுப் புகைக்கவும். அதை உட லில் பிடிக்கவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இம்மாதிரி புகை போடவும். ஐந்தாவதுள் ஆமணக்கெண்ணெய் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்யவும் பழயது, சுறுக்கருவாடு, வெள்ளாட்டு வற்றல் முதலானவைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் :

கருங் குஷ்டம், புண், திமிர் வாதம், செவ்வட்டைக் கடி, கடிச்சூலை, சிரச்சூலை, வெள்ளைக் குஷ்டம், சர்வாங்க வாதம், அண்ட வாதம், காணுக்கடி, தண்டுப் பிளவை முதலான நோய்கள் தீரும்.

## 2. சூலைக்குக் கலங்கொம்பாதிக் கடாயம்.

கலங்கொம்பும் பெருங்காயங் கரில்சங்கங்
குப்பியிலை காண்வெள் ளுள்ளி
நலஞ்சுக்குஞ் சமன்கொண்டு கடாயஞ்செய்
திதுங்கொள்ள னையுஞ்சூலை
வலியும்போ முருங்கைவேர் சுக்குமொரு
தலைப்பூண்டும் வசம்புடன்றிப்
பிலிமூலம் பாவட்டை வேர்சமமாய்க்
கடாயங்கொள் பிரிந்துபோமே. (4)

(இ-ள்.)

| | |
|---|---|
| சீவிய மான்கொம்பு | பெருங்காயம் |
| மிளகு | சங்கக்குப்பியிலை |
| வெள்ளைப்பூண்டு | சுக்கு |

இவைகளைச் சமமெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து, வடிக்கட்டி உட்கொள்ளவும். சூலை தீரும். வலிகளும் தீரும்.

| | |
|---|---|
| 2. முருங்கை வேர் | சுக்கு |
| பூண்டு | வசம்பு |

திப்பிலிமூலம் பாவட்டைவேர்

இவைகளைச் சமமெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்ருகும்வரை யெரித்து வடிக் கட்டி உட்கொள்ளவும். சூலைகள் தீரும்.

## 3. சூலை முதலானவைகளுக்கு "லசுனபிஷ்டி லேகியம்"

மாவிலங்கம் புரசகிற் பட்டைவில்வ
மூக்கரட்டை வகையின்வேராங்
தாவிலிரு பலம்நிறுத்து மிருபதாம்
படிதண்ணீர் தான்விட்டெடடொன்
ருவிதனை காய்ச்சிறுத்து வெள்ளையுள்ளி
பலமுப்பான் ருனுரித்து
மேவியநல் லெண்ணெய்குத்றி வறுத்தரை
கடாயத்துள் விட்டுங் காய்ச்சே (5)

காய்ச்சுகுழம் பாகவரும் போதுசுக்கி
ரண்டரையுங் காண்பலங்கள்
பாய்ச்சளவாய்த் திப்பிலியு மிளகரணைத்
திப்பிலிதான் பலமுமொன்ருய்
வாய்த்தகடுக் காய்நறுக்கு மூலம்வெள்ளைக்
காரமிது வகையொன்றுக்கு
பேய்ச்சறுவ ராகனெடை சித்கரத்தை
சதகுப்பைப் பேரிந்துப்பே (6)

இலவங்கப் பட்டைமர மஞ்சளிரு
சீரகமு மேலங் கிராம்பு

நலசினக் காரம்விழா லரிசிகற்
கடசிங்கி நவசாரந்திப்
பிலிமூலஞ் சிறுதேக்கு வாய்விளங்கங்
கூகையிநீர் பேணுமாஞ்சில்
வலசெவியந் தகரஞ்சி லாசத்துக்
களிப்பதிம துரந்தானே. (7)

மதுசெங்கத் தாரியின்றூற் கூளாத்தித்
தோல்கடுகு வளையலுப்பு
மெதுவுமிள கரணைத்தோ ஷயுருவி
விதைசாத்திர வேதிபோளம்
முதுசாதிப் பத்திரியுங் கடுரோணி
நோடிவேலி மூவத்தோனு
மிதுவகைக ளொன்றுக்கு நானுநிட்கஞ்
சூரணமாய் விட்டுக்கின்றே (8)

விட்டரைக்காற் படியெண்ணெய் கலந்திறக்கி
யெண்பலந்தேன் மேலுங்கூட்டித்
தொட்டந்திச் சந்திரெண்டு நிட்கமுண்ணப்
புளித்தேப்பஞ் சுவாசநெஞ்சில்
இட்டெரிப்புச் சூசிகுலம் மாரில்வலி
யுப்பிசங்க ளிரத்தவாய்வுக்
கட்டிதலை வலிமூர்ச்சை வாதகமஞ்
சூசுசுரங் கைகாற் குத்தே (9)

குடல்வாத மதிசார மூநிர்வீக்கமுஞ்
சூசிசந்நிக் கோள் மயக்கம்

அடல்வாத ரோகமல சலபந்தம்
வேருவைக ளழுன்றமேகங்
கடிதடச் சூலையுந்திச் சூலையுருத்
திரச்சூலைக் கபாலசூலை
யுடனுதிரா திச்சூலை விரணஇ
தீருமிது வுறுதி செய்யே. (10)

(இ-ள்.)

| | |
|---|---|
| மாவலிங்கம்பட்டை | புரசம்பட்டை |
| அகிற்பட்டை | வில்வவேர் |
| மூக்கிரட்டை | |

இவைகள் வகைக்கு 2 பலம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 20 படி சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேல் வைத்து அரைக்கால் பாகம் ஆகும் வரை வற்ற வைக்கவும். இதனை இறுத்து வெள்ளைப்பூண்டு 30 பலம் எடுத்துத் தோலை உரித்து விட்டு நல்லெண்ணெய் விட்டு வதக்கி அரைத்துக் கஷாயத்துடன் சேர்த்துக் குழம்பாக ஆகும்வரை மறுபடியும் காய்ச்சவும்.

பின்னர்,

| | |
|---|---|
| சுக்கு | 2½ பலம் |
| மிளகரணை | 1 ,, |
| திப்பிலி | 1 ,, |
| சித்தரத்தை | 4 வராகனெடை |
| சதகுப்பை | ,, |
| இந்துப்பு | ,, |
| ஏலக்காய் | ,, |
| கிராம்பு | ,, |
| விழலரிசி | ,, |
| நவச்சாரம் | ,, |

| | |
|---|---|
| சிறுதேக்கு | 4 வராகனெடை |
| கூகைநீர் | ,, |
| செவ்வியம் | ,, |
| சிலாசத்து | ,, |
| செங்கத்தாரிபட்டை | ,, |
| கடுகு | ,, |
| மிளகரணைத்தோல் | ,, |
| திப்பிலிமூலம் | 6 வராகனெடை |
| கடுக்காய்த்தோல் | ,, |
| வெங்காரம் | ,, |
| இலவங்கப்பட்டை | 4 வராகனெடை |
| மரமஞ்சள் | ,, |
| சீரகம் | ,, |
| கருஞ்சீரகம் | ,, |
| சீனக்காரம் | ,, |
| கற்கடசிங்கி | ,, |
| கண்டத்திப்பிலி | ,, |
| வாயுவிடங்கம் | ,, |
| ஜடாமாஞ்சில் | ,, |
| கிரந்திதகரம் | ,, |
| அதிமதுரம் | ,, |
| கூழலத்தித்தோல் | ,, |
| வளையலுப்பு | ,, |
| நாயுருவி விதை | ,, |
| சாஸ்திரவேதி | ,, |
| சாதிப்பத்திரி | ,, |
| கொடிவேலி வேர்ப்பட்டை | ,, |
| கரியபோளம் | ,, |
| கடுகரோகிணி | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து முன் கூறிய குழம்புடனே சேர்த்துக் கிளறி

நல்லெண்ணெய் ¼ படி விட்டு, சுத்தமான தேன் 8 பலமும் சேர்த்துக் குழப்பிவைத்துக் கொள்ளவும். இதனைக் காலையிலும் மாலையிலும் 1 வராகனெடை யளவு எடுத்து உட்கொண்டுவரப்

| | |
|---|---|
| புளித்தேப்பம் | சுவாசம் |
| நெஞ்செரிச்சல் | மாரில் குத்துவலி |
| உப்பிசம் | இரத்தம்விழுதல் |
| வாயுக்கட்டிகள் | தலைவலி |
| மூர்ச்சை | சுரங்கள் |
| கைகால்குத்து | குடல்வாதம் |
| அதிசாரம் | வீக்கம் |
| சூதிகாசந்நி | சூதிகாசுரம் |
| மயக்கம் | அடல்வாதம் |
| மலபந்தம் | நீர்ச்சுருக்கு |
| அழற்சிமேகம் | கடிதடச் சூலை |
| உந்திச்சூலை (வயிற்றுவலி) | |
| கபாலச் சூலை | உருத்திரச் சூலை |
| விரணங்கள் | உதிராதிச் சூலை |

முதலான ரோகங்கள் நீங்கும்.

## 4. ஸர்வ சூலைக்கும் “ இங்குவாதிச் சூரணம் ”

பெருங்காய மிந்துசிறு மூலகமு
மிவையொன்று பெருங்கழஞ்சு
அரிதகி விதைபோக்கி யிருகழஞ்சா
யிதுகூட்டி யதையிடித்து
மருவுசூ ரணஞ்செய்து மிளவெந்நீர்
தனிற்கொள்ள மட்டில்லாமற்

தருஞ்சூலை நோய்தீர்க்கச் சரபோசி
மகராசன் றந்ததாமே. (11)

(இ-ள்.)

பொரித்த பெருங்காயம்
திப்பிலி
இவை வகைக்கு 1¼ வராகனெடை
கடுக்காய்த்தோல் 2½ வராகனெடை

இவ்விரண்டையும் இடித்து, சூரணஞ்செய்து வெந்நீருடன் உட்கொள்ளவும். சூலை தீரும்.

## 5. சூலை முதலானவைகளுக்கு "அரிதாரச் செந்தூரம்"

அரிதாரம் பலமொன்றைப் புரசந்தோள்
கொண்டரைத்து மதைக்குகைச்செய்
துரவுள்ளா யிட்டுவைத்துக் குகைவாயை
மூடிடுமுன் புரைமருந்தால்
ஒருசட்டி தனிலிட்டு மேலுமதைக்
கொடுமூடி யுடைமண்செய்து
தெரியவடுப் பேத்திடுநாள் சாமெரித்து
திடவிதுசெந் தூரமாமே. (12)

ஆமிதனை யொருசிமிழி லடைத்துவைத்
தொருவேளைக் கருந்தக்கேளும்
பூமதுவி லனுபானம் பணவெடையொன்
றிட்டுக்கொள் புண்குடோரந்

தாமகனுங் குட்டமுதற் கடிவிடம்
பலசூலே தானேதீரும்
நாமகளும் பாராட்டும் புகழ்சரப
மன்னன்முறை நாட்டுந்தானே. (13)

(இ-ள்)

சுத்திசெய்த அரிதாரம் 1 பலம் எடுத்து, புரசம் பட்டையை நன்ருகவரைத்துக் குகையாகச் செய்து கொண்டு, அதனுள் வைத்து, மறுபடியும் புரசம் விழுதி ஞல் மூடவும். ஒரு சட்டியில் இம்மருந்தை வைத்து வேருெரு சட்டியிஞல்மூடிச் சீலேமண் செய்யவும். பின்னர் சட்டியை அடுப்பின் மேல்வைத்து 4 சாமங்கள் (1 பகல் முழுதும்) ஒரு சீராக எரிக்கவும். சட்டியைப் பிரித்து அரிதாரக் கட்டியை யெடுத்து நுணுக்கி வைத்துக்கொள்ளவும். செந்தூரமாகும். இதையொரு சிமிழில் பத்திரப்படுத்தி வேளேக்கு 3 குன்றியள வெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

புண், குஷ்டம், கடிவிஷங்கள், சூலே முதலான நோய்கள் அகலும்.

## 6. சூலேக்கு இங்குவாதி உருண்டை.

பெருங்காய மிந்துசுக்கு வசம்புமுத்தக்
காசுடன் பேர்வெள்ளுள்ளி
யுருங்கழற் கோடிவித்து மிளகிவையுஞ்
சமபாக மொக்கக்கூட்டி
முருகெலுமிச் சத்தண்ணீர் விட்டரைத்து
வோரளவாய் முன்னுருட்டி

யொருவுருண்டைய யுள்ளருந்தப் பலசூலை
நோய்தீரு முண்மை தானே. (14)

(இ-ள்)

| | |
|---|---|
| பெருங்காயம் | இந்துப்பு |
| சுக்கு | வசம்பு |
| கோரைக்கிழங்கு | பூண்டு |
| கழற்சிவிதை | மிளகு |

இவைகளைச் சரியளவெடுத்து இடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து, நன்றாக அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்து உட்கொள்ளவும். பற்பல சூலைகளும் தீரும்

## 7. சூலை, கடுப்பிற்கு லசுனாதிக்கஷாயம்.

வெள்ளையுள்ளி யாற்றிரத முருங்கையிலை
யோர்வகைநீர் விடுமாழாக்கி
லுள்ளிடுவாய் பெருங்காயம் நிட்கமுக்கா
லுங்கரைத்து வுட்கொடுக்க
மெள்ளவிளை கடுஞ்சூலை வலிதீருங்
கைகண்ட விபரந்தன்னை
வள்ளலெனுஞ் சரபோசி மகராச
னிம்முறையும் வகுத்ததாமே. (15)

(இ-ள்)

| | |
|---|---|
| பூண்டு | முருங்கையிலை |

இவ்விரண்டையும் 1 பலம் எடுத்து நசுக்கிப் பாத்திரத்தி லிட்டு 5சேர் தண்ணீர்விட்டு, எட்டிலொன்றாக வற்ற வைத்து, வடிகட்டிப் பெருங்காயம் 1 வராகனெடையும் சேர்த்துக் கொடுக்கவும்.

கடுமையான சூலை நோய் வலி முதலானவை தீரும். கைகண்டது.

## 8. சூலைக்கு அவிபத்திச் சூரணம்.

நெல்லிமுள்ளி வாய்விளங்கங் கடுக்காயுங்
கரில்சுக்கு நேருமேலஞ்
சொல்லுமில வங்கப்பத் திரிப்பட்டை
திப்பிலியுந் தூயகோரை
நல்லகிழங் கிவைசமமா மிதுக்குமூன்
றுபங்கு நவில்சிவதை
யொல்லிடித்துச் சூரணஞ்செய் திதிற்சமன்
சர்க்கரையை யொக்கக்கூட்டே. (16)

கூட்டியபின் பாத்திரத்துட் பதனஞ்செய்
தோரளவாய்க் கொதிவெந்நீருட்
பேட்டிதனை யுட்குடிக்கத் தீர்ந்திடுநோ
யதுகேளும் பொல்லாச்சூலை
மூட்டியவக் கினிமந்தம் வாதநோய்
பித்தமுடன் மூலநோய்கள்
சேட்டுமங்க ளணுகாது செங்கோலேந்
தியசரபச் செவ்விதாமே. (17)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிமுள்ளி | வாயுவிடங்கம் |
| கடுக்காய்த்தோல் | மிளகு |
| சுக்கு | ஏலக்காய் |
| இலவங்கப்பத்திரி | லவங்கப்பட்டை |
| திப்பிலி | கோரைக்கிழங்கு |

இவைகள் வகைக்கு 1 பலம்.

சுத்திசெய்த சிவதை வேர்ச் சூரணம் 3 மடங்கு சேர்த்து இடித்து, சரியளவு சீனிகூட்டிப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் 1 வராகனெடை யளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

சூலை, அக்கினி மாந்தம், வாதநோய், பித்த ரோகங்கள் முதலான நோய்கள் தீரும்.

## 9. சூலைக்கு லசுனதியேரண்டத்தைலம்.

வெள்ளையுள்ளி துலாமொன்று தோலுரித்து
 யிருமரக்கால் வெள்ளம் வார்த்து
வொள்ளெரியிற் காய்ச்சியதை நான்கிலொன்றும்
 பின்பு செம்பா லோங்கும்பாத்திரத்
துள்ளுமிட்டு முத்தினெண்ணெ யொருமரக்காற்
 கூடவிடுத் துவரிந்துப்பும்
விள்ளிதிரி கடுகோமம் திரிபலை
 வசம்புவாய் விளங்கந்தானே. (18)

விளங்கியபொன் முசுட்டைபெருங் காயந்தேவ
 தாருவெட் பாலை கோட்டங்

களங்கிலாக் கொடிவேலி சிறுதேக்கு
விடையமாங் கண்டத்திப்பிலி
தளம்புளியா மிலவேத சங்கவச்
சவலவணந் தானென்றுக்கு
மளந்ததொரு பலங்கொண்டு சிவதைவேர்
சுத்திபல மாறுங்கூட்டே. (19)

கூடியதெல் லாம்நேராய்ச் சூரணித்து
மெண்ணெயிலோ கொள்ளத்தூவி
யாட்டிமெது வாயெரித்துப் பக்குவமாய்க்
கண்டிறக்கி யாவிகாயத்
தாட்டிகத்தைப் பாத்திடுச்சூ லைகள்பா
ரிசச்சூலை தாரச்சூலை
கோடிவயிற் றுள்ரோகம் அரோசிக
மூலகுன்மங் குணமாய்ப் போமே. (20)

(இ-ள்)

தோலுரித்த வெள்ளைப்பூண்டு ஒரு துலாம் எடுத்து, 2 மரக்கால் தண்ணீர்விட்டுறவைத்து, அடுப்பின் மேலேற்றி எரித்து, ¼ மடங்காகும்வரை வற்றவைக்கவும். இக்கஷாயத்தை யொரு செப்புப் பாத்திரத்திலிட்டு, ஆமணக்கெண்ணெய் 1 மரக்காலும் சேர்த்து,

| | |
|---|---|
| இந்துப்பு | ஓமம் |
| தான்றித்தோல் | கடுக்காய்த்தோல் |
| சுக்கு | நெல்லிவற்றல் |
| மிளகு | திப்பிலி |
| வாயுவிடங்கம் | வசம்பு |
| பெருங்காயம் | பொன்முசுட்டைவேர் |

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | தேவதாரு |
| கொடிவேலி வேர் | கோஷ்டம் |
| அதிவிடயம் | சிறுதேக்கு |
| ஸௌவர்ச்சலவணம் | கண்டதிப்பிலி |
| கொடுக்காப்புளி | |

இவைகள் வகைக்கு ஒரு பலம்.

சுத்திசெய்த சிவதைவேர் 6 பலம்

இவைகளையிடித்துச் சூரணஞ்செய்து, மூன் எண்ணெயி லிட்டு, ஒரே சீராக எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயை தேகநிலமையையறிந்து, உட் கொள்ளச் சூலைகள், பாரிசச்சூலை, வயிற்றுவலி, அரோ சகம், மூலம், குன்மம் முதலான நோய்கள் குணமாகும்.

## 10. சூலை கடுப்பிற்குத் தைலம்.

புங்கினெண்ணெய் வெம்பினெண்ணெய் யெருக்
கொடிக்கள்ளி பொருந்துபாலும் [கம்பாற்
நங்குவேளை யுள்ளியின்பாற் றிருகுகள்
ளிப்பாலு நவிலொன்றுக்குப்
பங்கிடுகாற் படியாகக் கூட்டியொன்றாய்ச்
சலம்வத்தும் படியவெந்து
மங்கிரத மிளகுபா டாணமிந்து
சீரகமு மனோசிலாமே. (21)

அரிதார மிதுவகைக் கரைநிட்க
மெனுமிச்சை யதனீரீட்டும்

அரைத்தெடு மூன்றெருக்கி னிலைக்கிட்டும்
        தைலத்து ளதனைப்போட்டுக்
கருகவே யிலைவெந்தால் கிண்டியொரு
        கலசத்துட் காவல்செய்து
வருசூலை வாதவலிக் கதைக்காய்ச்சித்
        துவளையிடு வாங்கிப்போமே. (22)

(இ-ள்)

| | |
|---|---|
| புங்கெண்ணெய் | வேப்பெண்ணெய் |
| எருக்கம்பால் | சீரகம் |
| வெள்ளைப்பூண்டுச்சாறு | திருக்கள்ளிப்பால் |

இவைகளை வகைக்கு ¼ படிவீதமெடுத்து ஒன்றுகலந்து, அடுப்பின் மேலேற்றி, நீர்சுண்டும்வரை வற்றவைக்கவும். இதனுடன்

| | |
|---|---|
| மிளகு | வெள்ளைப்பாஷாணம் |
| இந்துப்பு | சீரகம் |
| மனோசிலை | தாளகம் |

இவைகளை வகைக்கு ½ வராகனெடையளவெடுத்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாகவரைத்து, மூன்று எருக்கினிலைகுள் வைத்துச் சுருட்டி, முன் தைலத்தில் போட்டு, மறுபடியும் அடுப்பிலேற்றி, இலை கருகும்வரை கொதிக்கவைத்து இறக்கி, கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

சூலை, வாதவலி இவைகளுக்கு இத்தைலத்தைச் சூடாக்கிப் பூசவும். வலி நிற்கும்.

## 11. சூலைக்கு வீழித்தைலம்.

குறுவீழி முதற்கொடு வந்துமிலை
தள்ளிக் கொண்டதெல்லாம்
நறுக்கிட்டு வொருபாண்டந் தன்னிலடை
தைலங்கள் நலமிறக்கிப்
பொரிமாவிற் பிசறிட்டு வெருகடிப்
பிரமாணம்புசித் துமெய்மேலும்
சிறுகப்பூ சியும்பிடி பசுந்தயி
ரன்னமைந் தினமுண்பாயே. (23)

(இ-ள்)

வீழி இலையை நீக்கி மற்ற குச்சிகளைத் துண்டு துண்டுகளாக நறுக்கி, ஒரு பாண்டத்திலிட்டுக் குழித் தைலம் இறக்கவும். இத்தைலத்தைப் பொரிமாவுடன் சேர்த்துப்பிசறி மூவிரல் கொள்ளுமளவு உட்கொள்ளவும். இத்தைலத்தையுடம்பிலும் தேய்த்துக்கொள்ளலாம். பசுந் தயிர்சேர்த்த சாதம் சாப்பிடவும்.

## 12. சூலைக்குக் கொமட்டி லேகியம்.

சீனியொரு பலங்கல்நா ரிவச்சார
நவச்சாரஞ் சீனக்காரம்
ஆனசத்திச் சாரம்வெள்ளைக் காரமிந்துங்
கல்லினுப்பு மன்னபேதி.
யூனவடி வளைசவுட்டுப் புப்புகழுங்
கல்மதமு மூசிக்காந்தம்

தானசுத்தி வாளவித்து மரப்பொடிநற்
சீரமிவை தனியொன் றுக்கே. (24)

ஒரு நிட்சம் பேய்க்கொமட்டிக் காயேழு
நாலுபடி யும்நீர்விட்டுச்
சரிதுவை வடிக்கட்டி மருந்தரைத்த
திலிட்டுச் சர்க்கரைதான்
கருப்புட்டிப் பலமொன்று வெல்லமுமவ்
வளவுவிட்டுக் காய்ச்சிக்கிண்டி
வருகுழம்பில் முத்தி னெண்ணெய் நாழிவிட்டும்
லேகியமாய் வைத்துக் கொள்ளே. (25)

கொள்ளுமொரு பாக்களவின் பிரமாண
மாமிதற்குக் கொடியசூலை
யுள்ளமகோ தரம்பாண்டு ரோகமுடன்
கவுசைகளுற்ற கெண்டை
விள்ளுமிது சகலம்போம் பத்தியமாய்
புளிப்புகையும் விளையுமுப்புந்
தள்ளியிரு மிம்முறையைக் கருத்துடனும்
பிசகாமற் றூன்செய்வாயே (26)

(இ-ள்)

| | |
|---|---|
| சீனி 1 பலம் | வெங்காரம் |
| எவச்சாரம் | கல்லுப்பு |
| சத்திச்சாரம் | வளையலுப்பு |
| இந்துப்பு | கல்மதம் |
| அன்னபேதி | சுத்திசெய்தவாளப்பருப்பு |
| ஊசிக்காந்தம் | ,, இரும்புத்தூள் |
| சீனக்காரம் | நற்சீரகம் |

சுத்திசெய்தகல்நார்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

இவைகளைச் சூரணித்து வைத்துக் கொள்ளவும்.

பேய்க் கொமட்டிக்காய் 7 கொண்டுவந்து இடித்து அதனுடன் 4 படி சுத்த ஜலம் சேர்த்து, முன் இடித்த தூளையும் அதனுடன் இட்டுச் சர்க்கரை, பனைவெல்லம், நாட்டுவெல்லம் இவைகள் வகைக்கு 1 பலம் சேர்த்துக் கிளறி அடுப்பின் மேலேற்றிக் குழம்பாகும் வரை யெரித்து, சுத்தமான ஆமணக்கெண்ணெய் 1 நாழியும் சேர்த்து லேகியபதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு பாக்களவெடுத்துத்தினம் 2 வேளை உட் கொண்டுவரச்

சூலைகள், மகோதரம், பாண்டு, கௌசை, கெண்டைநோய் முதலான பல ரோகங்களும் போம்.

பத்தியம் :–

புளி, புகையிலை, உப்பு முதலானவைகளை நீக்கவும்.

## 13. சூலைக்குப் பச்சிலைவேர் மருந்து.

சுகுதுரத்தி வடக்கினிற் போம்வேரை
வெட்டிவந்து தோலைவாங்கி
யிடுகொட்டைப் பாக்களவு பசுவின்பால்
வார்த்தரைத்து மேற்கவுண்டு
தொடுபுளி யுப்புடனும் புகையிலை
மற்றுமொன்றுந் துய்க்கலாகாக்

கொடுபசுமோ ரன்னமுஞ்சாப் பிடலாகுஞ்
சூலை முதற் குணமாந்தானே. (27)

(இ-ள்)

சுடுதுரத்தி (சுடுதொரட்டி) என்ற செடியின் வடக்கு நோக்கிப் போகும் வேரை யெடுத்துத் தோலையுரித்து, ஒரு கொட்டைப் பாக்களவரைத்துப் பசுவின் பாலில் குழப்பி உட்கொள்ளவும்.

பத்தியம் :-

புளி, உப்பு, புகையிலை இவைகளை நீக்கவும். பசுவின்மோர் விட்டுச்சாப்பிடவும் சூலைகள் தீரும்.

## 14. சூலைக்குச் "சாதிலிங்கக்குளிகை"

சாதிலிங்க மபினதி விடையம்பொன்
முசுட்டைவேர் தானுங்கோரை
யாதிவேர் மாசியின்கா யிலையாறு
மாதளை யி னடைச்சாறிட்டே
மோதியரைத் தொருபாசிப் பயற்றளவாய்த்
தயிரில்மூட் டில்லாட்டால்
மாதளையின் கடாயத்திற் கொடுத்திடச்
சூலைமுதல் வாங்கிப் போமே. (28)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த சாதிலிங்கம் | சுத்திசெய்த அபினி |
| அதிவிடையம் | பொன்முசுட்டைவேர் |
| கோரைக் கிழங்கு | மாசிக்காய் |

இவைகளைச் கல்வத்திலிட்டுச் சூரணித்து, மாதளையிலைச் சாறுவிட்டு நன்ருகவரைத்துப் பாசிப்பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். இதே மாத்திரையிலொன்றெடுத்துத் தயிரிலோ அல்லது மாதளைக் கஷாயத்திலோ உட்கொள்ளவும். சூலைகள் தீரும்.

## 15. சூலைக்கு இரஸபற்பம்.

பாதரதம் பத்துநிட்கங் கொடுவந்து
கொட்டையெனப் பகர்கரந்தை
யோதமிட்டுப் பதினைந்து நாழியரை
மெழுகுபோ லுருட்டிவைத்து
மோதுமிலை தன்னையரை யடைதட்டிக்
கவசஞ்செய் துடைமண்ணேழு
மீதுசெய்து கெஜபுடமா கவிட்டு
மாறியெடு மேலுங்கேளே. (29)

மேலுமொரு தினங்கொள்ளு மொருபண
வெடையாக வெல்லத்திட்டுச்
சீலமுட னேழுதின மிப்படியுட்
கொடுத்திட்டுத் தீரவேண்டில்
கோனுபத் தியங்கள்வைத்துப் புளியுப்புப்
புகையிலையுங் காட்டவேண்டாஞ்
சூலைமுத லானபல ரோகமெலா
மிம்முறையாற் றொலைந்துபோமே. (30)

(இ-ள்)

பாதரஸம் 10 வராகனெடையெடுத்துக் கல்வத்தி லிட்டுக் கொட்டைக்கரந்தைச் சாறுவிட்டு 15 நாழிகையளவரைக்கவும். மெழுகுபோலாகும். கொட்டைக்கரந்தையிலையை யரைத்து விழுதாக்கி அதனுள் முன்கூறிய மெழுகை வைத்து உருட்டிக்கொண்டு, ஒரு சராவத்தில் வைத்து 7 தடவை சீலைமண்செய்து உலர்த்தவும். பின்னர் இதனை கஜபுடத்திலிடவும். ஆறியபின் இதனை எடுத்துப் பற்பத்தை நுணுக்கிப் பத்திரப்படுத்தவும். இந்தபற்பத்தில் 3 குன்றியளவெடுத்து வெல்லத்திற்குள் வைத்து விழுங்கவும். இவ்வாறு 7 நாட்கள் செய்யவும்.

**பத்தியம் :-**

உப்பு, புளிப்பு, புகையிலை இவைகளை நீக்கிவிடவும். சூலை முதல் பற்பல ரோகங்களும் தீரும்.

## 16. சர்வ சூலைக்கு மருந்து.

முடிக்கொண்டா னிலைச்சாறுஞ் சிறுமுத்தி
னெண்ணெய்சம மூட்டிக்கொண்டு
கொடிக்கழ லுட்பருப்பும் பெருங்காயம்
வெள்ளையுள்ளி கூட்டிந்துப்புங்
கடிசுக்குத் திப்பிலியு மிளகுதிப்
பிலிமூலங் கடுகுதானுந்
துடிசெவ்வியம் வாய்விளங்க மிவையெல்லாஞ்
சமங்கொண்டு தூளாய்ச்செய்யே. (31)

தூளை யெல்லா முன்னுரைத்த வெண்ணெய்
காயவைத்துச் சூடுகண்ட [தனைக்
வேளையிலே தூவியதைக் கிண்டியிடு
கடுகாக வெம்பதத்திற்
தூளையிட்டு மிறக்கிவைத் துக்கடுகை
யுள்ளருந்தச் சூலையெல்லா
மீளவும்போ மிம்முறையைச் சரபோசி
மஹாராஜன் விதித்தமாமே. (32)

(இ.ள்)

| | |
|---|---|
| முடிகொண்டான் இலைச்சாறு | 1 படி |
| ஆமணக்கெண்ணெய் | ,, |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| கழற்சிப்பருப்பு | பெருங்காயம் |
| பூண்டு | இந்துப்பு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | திப்பிலிமூலம் |
| கடுகு | வாயுவிடங்கம் |
| செவ்வியம் | |

இவைகளைத் தூளாகச் செய்து முன் எண்ணெயை அடுப்பின் மேலேற்றிச் சூடாக்கி, அதிலிட்டுக் கொதிக்க வைத்து, மணல் பதமாக இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

மேலேபூசச் சூலைகள் தீரும்.

## 17. சூலைக்கட்டுக்கு சாதிலிங்கபற்பம்.

சாதிலிங்கம் பலம்நாலைத் திராவக
மிட்டரைத்தோர் சட்டிதன்னில்
மோதிவைத்து மறுசட்டி மேற்கவிழ்த்து
மடுப்பேத்தி முண்டகம்போல்
ஈதெரிப்பொன் பதுநாழி யேழுதிற
மிப்படியே யெரித்தெடுத்து
மோதியபுண் கிரந்திகட்குஞ் சூலைவலிக்
கிதுகொடுக்க வோடிப்போமே. (33)

(இ-ள்)

சாதிலிங்கம் 4 பலம் எடுத்துச் சுத்திசெய்து திராவகம் விட்டு நன்றாகவரைத்து, ஒரு சட்டியில் அடையாகத்தட்டி மேலே மற்றொரு சட்டி கவிழ்த்து மூடி, அடுப்பின் மேலேற்றி மெல்லிய தாமரை நூலிழைபோல் 9 நாழிகள் எரிக்கவும்.

புண், கிரந்தி, சூலைகள், வலி முதலானவை தீரும்.

## 18. சூலைக்குச் சிஞ்சாக்ஷார வடகம்.

புளிச்சிராய்ச் சாம்பல்சங்கு நீறுமெவச்
சாரமஞ்சு புகலுப்புத்தான்
அளிச்சத்திச் சாரமருள் கான்கரணை
பிரண்டைதா னனசூரணை

புளிநரளை விருகுமிவை மூலங்கள்
கொடிவேலி புரிவேர்ப்பட்டை
எளிதெல்லாங் கூட்டியெட்டுப் பலமிட்டு
முக்கடுகு மிங்குந்தானே. (34)

இங்கிவைக ளொருவகைக் கொருபலங்
கெந்தகமு மிரதநாவி
தங்குசங்கின் பற்பமிவை வகைக்கொரு
கழஞ்செல்லாஞ் சாரக்கூட்டிப்
பங்கெலுமிச் சம்பழச்சா றிட்டரைத்
திலந்தைவிதைப் பருமஞ்க
நங்குளிகை செய்துலர்த்திப் பஞ்சகெவ்விய
கிருதத்தி னவிலொன் றிட்டே. (35)

கொள்ளுதய காலத்திற் சகலபுண்
சூலைவல்லை கூடசீர்ணம்
உள்ளகுலை பீலிகைநீர்க் கோவைசலக்
கிருச்சங்க ளுற்றடைப்புந்
தள்ளுபெற் றுயரொணு மூலமுதல்
நோயெல்லாந் தானேதீரும்
வெள்ளையுள்ளி பரங்கித்தோல் அமுக்கிராக்
கிழங்கோம மிதுசமந்தான் (36)

சமங்கூட்டிக் கடாயஞ்செய் ததிலுமனு
பானமதாய்த் தானருந்தி
யமரவே பத்தியங்கேழ் பசுவின்பால்
நெய்யுடனு மாட்டின் பாலுந்

தமதிலும் வெள்ளையுள்ளி யொன்றிட்டுக்
காய்ச்சியபின் னரனைக்கூட்டக்
குமரன்போ லவேலுந் துஞ்சரபோ
சிமன்னன் கொடுத்ததாமே. (37)

(இ-ள்)

| | |
|---|---|
| புளிச்சிராய் சுட்டசாம்பல் | சங்குபற்பம் |
| எவச்சாரம் | கல்லுப்பு |
| இந்துப்பு | வளையலுப்பு |
| சோத்துப்பு | உவர்மண் |
| சத்திச்சாரம் | காட்டுக்கரணைக் கிழங்கு |
| பிரண்டை | நாட்டுக்கருணைக் கிழங்கு |
| புளிநரளைக்கிழங்கு | விருகங்கிழங்கு |
| கொடிவேலி வேர்பட்டை | |

இவைகளெல்லாம் வகைக்கு ½ பலம் வீதமெடுத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| சுத்திசெய்த கெந்தகம் | சங்குபற்பமம் |
| ,, பாதரஸம் | |

இவைகள் வகைக்கு 40 குன்றிநிறை

இவைகளெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக வரைத்து எலந்தைக் கொட்டைப்பிரமாணமுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொண்டு, பஞ்சகவ்யகிருதத்துடன் உட்கொள்ளவும். அதிகாலையில் உட்கொள்ளவும்.

புண்கள், சூலை,
அசீர்ணம், அருசை,
பீலிகை, நீர்கோர்வை,
மூத்திரகிரிச்சம், மூத்திரவடைப்பு,
தாங்கமுடியாத வலியைத்
தரும் மூலம்

முதலான ரோகங்கள் தீரும்.

(2) வெள்ளைப்பூண்டு பரங்கிப்பட்டை
அமுக்கிராக்கிழங்கு ஓமம்

இவைகளைச் சமனெடுத்து இடித்து கஷாயம்செய்து அனுபானமாகவும் அருந்தவும்.

பத்தியம் :-

பசுவின்பால், நெய், ஆட்டுப்பால், இவைகளில் பூண்டு 1 பல் போட்டுக் காய்ச்சி உபயோகிக்கவும்.

சூலைகள் தீரும்.

## 19. சூலைக்கட்டுப் புகை.

சுத்திசெய்த பாதரஸம் பணவெடை
நாற்பதிலும் சோர்கார்வங்கம்
அத்திலிடு முப்பது பணவெடையோர்
யோர்கரண்டி யதிலுருக்கி
வித்துமுன்னை யிரதத்தைக் கூட்டியெடுத்
தரிதாரம் வெண்பாடாணந்
துத்தமுடன் கெந்தகமு மிவையொன்றுக்
கொருகிட்கந் தூக்கிடாயே. (38)

இடுமிளகு குங்கிலியங் கடுகொன்றுக்
கிருநிட்க மெருக்கம்பாலுங்
தொடுபத்து நிட்கமெலாங் கொள்பருத்தி
யிலைச்சாற்றிற் றுவளவாட்டி
யெடுவொன்பா னுருண்டைசெய் தொருபோதைக்
கொருகுளிகை யிட்டுத்தூபங்
கொடுபுளிச் சிராயனலிற் புறம்புகை
போகாமற் கொள்ளழுடே. (39)

மூடிமனுப் பலனறிந்தே மொன்பான்
புகைக்குமுன் மோருஞ்சோறும்
போடவும்வாய் வேகாம லுடைமடித்து
நனைத்திட்டுப் புகல்கண்மூக்குங்
கட்டவும்வா யதுக்கட்டிக் கொண்டிட்டாற்
சூலைவலிக் கொடுமைதீருந்
தேடறிய முறையிதனைச் சரபோசி
மஹராசன் செய்விப்பாமே. (40)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 40 | பணவெடை |
| ,, கருவங்கம் | 30 | ,, |

இவ்விரண்டையும் ஒரு கரண்டியிலிட்டு இரண்டையும் உருக்கித் தொந்தித்துக் கொள்ளவும்.

இதனுடன்

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த தாளகம் | 1 | வராகனெடை |
| ,, கெந்தகம் | | ,, |
| மிளகு | 2 | ,, |
| குங்கிலியம் | 2 | ,, |

கடுகு 2 வராகனெடை
எருக்கம்பால் 10 ,,

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பருத்தியிலைச் சாறு விட்டு நன்றாக அரைத்துவைத்துக்கொள்ளவும். இதனை 9 உருண்டைகளாகச் செய்துவைத்துக் கொள்ளவும்.

புளியஞ்சிராய் அனல் உண்டாக்கி, அதில் ஒரு குளிகையை இட்டுப்புகைத்து, புகைவெளியேபோகாமல் ஒரு துப்பட்டியினால் மூடி பிடிக்கவும். நோயாளி மோர் சாதம் உட்கொண்டபின்னர் புகைபோடவும். கண், மூக்கு, வாய் முதலான உறுப்புக்களை நன்கு கட்டிக் கொள்ளவும். இவ்வாறு 9 உருண்டைகளையும உபயோகிக்கவும். வாய் வெந்துபோகாமல் பார்த்துக்கொள்ளவும். சூலை, வலிகள் தீரும்.

குறிப்பு :

பணவெடை — $3\frac{1}{3}$ குன்றிமணி.

## 20. நிலைக்கு ரஸப்பொடி.

இருகழஞ் சிரதத்தைவெற் றிலைபிரால்
முறித்துமிதை யுழக்குக்
குருவைநெல் லரிசிதனை முன்சாற்றி
லிராவூறிக் குளிருலத்திப்
பெரியமு விலைமுன்னைக் கூட்டாமல்
மற்றமுன்னைப் பேணிக்கூட்டி
யொருபிடிவெற் றிலையுமுச ழுதக்கை
யொருபிடியு முலரப் போடே. (41)

போட்டரிசி தனிலிட்டு மிடித்துமா
வானபின்பு ரைக்குத்தகைக்
கூட்டியொரு சாமமட்டு மிரண்டுலக்கை
யோயாமற் குழறிடித்து
மூட்டிடொரு புதுச்சட்டி தனிலிட்டு
நிழலுலர்த்தி மொழிநாளொன்றுக்
கீட்டுமழுஞ் சொன்றுபசு வின்றயிரின்
மூவிருண்டை யெழுநாளுண்ணே. (42)

உண்டயிருஞ் சோறுமல்லா மற்றொன்று
வருந்தாதே வுதரந்தன்னில்
மண்டிரத வெக்கையினற் கடுப்புதிரங்
கண்டாக்கால் வகைத்தயிர்க்கு
ளுண்டைவெல்லங் கரைத்திட்டுச் சாப்பிடவு
மிருபதினெ ருநாட்சென்று
விண்டபுளிப் புகையுப்புக் கொள்ளநன்னீர்
முத்தினெண்ணெய் மேல்முழுக்கே. (43)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம் 2½ வராகனெடை யள வெடுத்துக் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாறுவிட்டு நன்றாகவரைத்து, அதனுடன் குறுவை நெல்லரிசிமாவு ஒரு உழக்குப்போட்டு, ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும். மறுநாள் மாவை உலர்த்தவும். முன்னை யிலை ஒருபிடி, வெற்றிலை, முசுமுசுக்கை இவைகளை வகைக்கு ஒருபிடி அளவு எடுத்து நிழலில் உலரவைக் கவும். இவைகளையும் முன்சொன்னமாவுடன் சேர்த்து இடித்துக்கொள்ளவும். மறுபடியும் இதனை 2 உலக்கை

களினால் கையோயாமல் 2 ஜாமம்வரை நன்றாக இடிக்கவும். பின்னர் இந்த மாவை யொரு புதுச்சட்டி யிலிட்டு நிழலில் உலர்த்தவும். வேளைக்கு ஒரு கழஞ்சு யள வெடுத்துப் பசுவின் தயிர்சேர்த்து, உருட்டி நாளைக்கு 6 உருண்டைகள்வீதம் 7 நாட்கள் உண்ணவும், வேண்டிய அளவு தயிர்சாதம் சாப்பிடவும். பாதரஸ உபயோகத் தால் உஷ்ணம் அதிகரித்து வயிற்றுக்கடுப்பு, ரத்தக் கழிச்சல் இவைகளேற்பட்டால் உருண்டைவெல்லத்தைக் கரைத்துப்பருகவும். 21 நாட்கள் சென்றபின் புளி, புகையிலை, உப்பு இவைகளைக் கூட்டலாம். ஆமணக் கெண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யவும்.

சூலைகள் தீரும்.

## 21. சூலை, கடுப்பிற்கு கெந்தித் தைலம்.

சுத்திசெய்த கெந்தகமும் பத்துநிட்கம்
பசுநெய்யாற் றெரட்டோர்சாம
மத்தியதை நற்புடவை மேற்றடவித்
திரியாக்கி வரைந்த நெய்யிற்
குத்திவிளக் கேத்திவிழுந் தைலத்தி
னுநிட்கங் கொடுசூதத்தைச்
சுத்திசெய்து மொருசாமஞ் சேர்த்தரைத்தோர்
சிமிழிலிட்டுத் துய்க்கக்கேழே. (44)

துயிலெழுங் காலையிலே தினமொன்று
காசினெடை தூக்கிக்கொண்டு
பயில்பத்து நாளதுதா னுண்டுவரப்
புளியுப்புப் பாருங்கைப்புத்

தைலங்கேள் தொடலாகா மதுராகா
ரம்பருகித் தானிருக்கில்
கையில்சூலைக் கட்டுமுதற் பலநோயுந்
தீருமிதைக் கருதிச்செய்யே. (45)

(இ-ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய்ச் செந்தகம் 10 வராக னெடை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பசுவின் நெய்விட்டு ஒரு சாமம் அரைத்து, ஒரு சுத்தமான புடவையில் தடவித் திரியாக்கிப் பசுநெய்விட்டு விளக்கேற்றவும். அதிலிருந்து விழும் சுடர்தைலத்தைப் பத்திரப்படுத் தவும். அதனுடன் 4 வராகனெடை சுத்திசெய்த பாதரஸத்தைக்கூட்டி நன்றாக அரைத்து மெழுகாக்கிக் கொள்ளவும்.

அதிகாலையில் இந்த மெழுகில் 1 வராகனெடை யெடுத்து உண்ணவும். இவ்வாறு 10 நாட்கள் சாப்பிட்டு உப்பு, புளிப்பு, கசப்புச்சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும். நல்லெண்ணெய் உதவாது. தித்திப்பு உள்ள ஆகாரம் உட்கொள்ளவும்.

கைச்சூலை முதலானவை தீரும்.

## 22. சூலைக்கு மருந்து.

ஒருகழஞ் சிரதத்தை வெற்றிலைச்சாற்
றல்முறித்து முடனென்மாவு
மருவுமுரல் தனிலிட்டு மிடித்தபின்
வெற்றிலைநீர் வளரும்வேலிப்

பருத்திநீ ரிதுவகைக் கோர்கழஞ்சு
கூட்டியொரு பாலிடித்துத்
தருமூன்று நான்கெலுமிச் சம்பழச்சா
றிட்டிடித்துத் தானெடுத்தே (46)

எடுநிழலு லத்திட்டு வைத்திருந்தா
லென்னளு மிதுகெடாது
கடுநோய்கள் தனைக்கண்டு நாலுதின
மிருபோதுங் கலந்துகொள்ளக்
கொடுமொரு வொருகடிப்பி ரமாணம்
பழந்தண்ணீர் கூட்டித்தாலும்
அடுமிது பத்தியமா யன்னம்வெந்நீ
ருணச்சூலை யகலப்போமே. (47)

அகலப்போஞ் சாணங்கை முடக்கிட்ட
சூலைமுத லாங்கடுப்பு
மிகுபுண்ணுந் திருமிந்த மருந்துண்டு
முகிந்தபின் மேலுநாலு
பகலாறப் போட்டுமுத்தி னெண்ணெய்தலை
முழுகலாம் பருப்புநீராற்
புகல்கோழி துவைத்தநீ ராதல்மஞ்ச
ளிருளியும் போடுப்பின்றி (48)

மிளகிட்டந் நீர்காய்ச்சிக் கூட்டிவர
மாதமொன்று விடுத்துப்புத்தான்
புளிகூட்டிக் கொண்டுண்ணுவாய் தனிமேலெசூ
லைகட்டிப் புண்பட்டாலுந்

துளவிலைக் கடாயமிட் டடிக்கடி
கொப்பளிக்கச் சூலைதீரும்
வெளிவேலுங் கருவேலு மெருக்கவேர்ப்
பட்டையிட்ட வெந்நீராமே. (49)

(இ-ள்)

பாதரஸம் 40 குன்றிநிறை யெடுத்து வெற்றிலைச் சாறுவிட்டு நன்றாகவரைத்து, அரிசிமாவு சேர்த்துச் கல்லுரலிட்டிடித்துக் கொள்ளவும். இதனுடன் வெற்றிலைச் சாறு, வேலிப்பருத்திச் சாறு இவ் விரண்டும் வகைக்கு 1 கழஞ்சுவீதம் சேர்த்து, ஒரு பகல் முழுவதும் இடித்துக்கொண்டு, பின்னர் 3 அல்லது 4 எலுமிச்சம்பழங்களைக் கொண்டுவந்து சாறெடுத்து, அதனையும் சேர்த்து இடித்து நிழலில் உலர்த்தவும்.

இந்த மாவைத்தினம் 2 வேளைகள்வீதம் 4 நாட்கள உட்கொள்ளவும். வேளைக்கு மூவிரல் கொள்ளுமளவு சாப்பிடவும். பழய தண்ணீர் பருகவும்.

பத்தியம் :-

வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

சூலைகள் தீரும். கை கால்களின் முடக்கு வாதம், கடுப்பு, புண்கள் முதலானவைகளுக்கும் குணம் தரும். மருந்து சாப்பிட்டு 4 நாட்கள் சென்றவுடன் ஆமணக் கெண்ணெய் தேய்த்து முழுகவும். கரும்பு ரஸம், கோழிக்கறி சூப்பை, மஞ்சளும், பூண்டும்சேர்த்து உப்பில்லாமல் பருகவும், 1 மாதம் உப்புச் சேர்க்காமல் மிளகுரஸம் சாப்பிடவும். புளிசேர்க்கலாம், வாய்பிடித் தால் துளசிக்கஷாயம்விட்டுக் கொப்பளிக்கவும்.

மூலைகள் தீரும். வெள்வேலம் பட்டை, கருவேலம் பட்டை, எருக்கம்வேர்ப் பட்டை சேர்ந்த கஷாயம் உட்கொள்ளவும்.

## 23. மூலைக்கு இடிமருந்து.

குலிசத்தின் பட்டைசெங்கத் தாரியின்றே
லிரண்டிற்கும் குப்பைமேனி
மலிநொச்சி கழற்கொடி தூளாங்கோழி
யவரையுடன மணித்தக்காளி
கலிசெருப் படியேழு வகையிலைச்
சாறுவிட்டுக் காணிடித்து
வலிசூதங் கழஞ்சொன்று கூடவிட்டு
மொன்றரை வாட்டிடித்தே (50)

இடித்திட்டுப் பதமான பின்னெடுத்து
மூவிருநா ளிருநேரந்தான்
பிடிநாலு பணவெடையுண் டேழாநாள்
முத்தினெண்ணெய் பிரியத்தேய்ந்து
வெடிபொருக்கு மண்ணிட்டு முழுகிடப்
பத்தியங்கேள் வெங்காயந்தான்
படியிரு னெய்த்தோலி முளைக்கீரை
முருங்கையிலைப் பசுவின்பாலே (51)

பாருமுள்ளிக் கருவாடுஞ் சுடுநீரா
மொருவாரம் பழக்கஞ்செய்து
சேரும்வெந்நீர் விட்டிடவும் புகையிலை
கைப்புடனே தீம்புளிப்பு

மிருமுப்புந் தள்ளிடவுஞ் சாணுங்கை
முடக்கங்கள் மிகுந்தபுண்ணுந்
தீருமிது சூலையெலாஞ் சுகமாகு
மிம்முறையைத் தேர்ந்துசெய்யே. (52)

(இ-ள்)

வன்னிமரப் பட்டை செங்கத்தாரிப்பட்டை
வகைக்கு 1 பலம். இவ்விரண்டுடன்,

குப்பைமேனி நொச்சியிலை
கழற்கொடியிலை துளசி
கோழியாவரை மணித்தக்காளி
செருப்படி

இவைகளின் சாறு வகைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராக னெடை யெடுத்து, சுத்திசெய்த பாதரஸம் $1\frac{1}{4}$ வராக னெடையுஞ்சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்துப் பதமான பின் நிழலில் காயவைக்கவும். 6 நாட்களுக்குத் தினம் 12 குன்றியிடையளவெடுத்துக் காலையிலும், மாலையிலும் உட்கொள்ளவும். 7-வது நாள் ஆமணக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும். உழமண் தேய்த்துக் குளிக்கவும்.

பத்தியம் :-

வெங்காயம், பசுநெய், முளைக்கீரை, முருங்கையிலை, பசுவின்பால், பூண்டு, கருவாடு, வெந்நீர் இவைகளை 1 வாரம் உட்கொள்ளவும்.

புகையிலை, புளி, கசப்புச்சுவையுள்ள பதார்த்தங்கள், உப்பு முதலானவைகளை நீக்கவும்.

கைகால் முடக்கு, புண்கள், சூலை முதலான நோய்கள் நீங்கும்.

## 24. சூலைக்குப் பஞ்சாக்கினிச் சூரணம்.

கொடிவேலி வேர்ப்பிரண்டைக் கிழங்குகா
ணக்கருணைக் கூர்கிழங்கும்
படிமரல் கிழங்கும் புளிநரளைக்
கிழங்கும் பார்சமந்தான்
கடிதுலர்த் திவிட்டு நலமிடித்
தப்பொடியைக் கலைவடித்துங்
குடிமோரில் முங்கழஞ்சு மருந்திட்டு
காலையிற்கொள் குணமதாமே (53)

(இ-ள்.)

கொடிவேலிவேர் பிரண்டைக்கிழங்கு
காட்டுக்கருணைக்கிழங்கு மருளங்கிழங்கு
புளிநரளைக்கிழங்கு

இவைகளைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் காய வைத்து, இடித்து, வஸ்திரகாயஞ்செய்து, பத்திரப் படுத்தவும். இச்சூரணம் ¼ பலம் எடுத்து மோரில் கலந்து, காலை வேளையில் பருகவும்.

சூலைகள் தீரும்.

## 25. சூலைக்கு நெருஞ்சில் நெய்.

நெருஞ்சில்வேர் தேட்கெடைவேர் சதாவரி
மூலமிவை நேருமூன்றுந்
தருவதைம் பலமாக விருதூணி
நீர்விடுத்து தனைநாலொன்றய்

மருகவே வடித்துக்கொள் கார்கோலி
சிராகோளி மாமேதைதான்
பருமேதைச் சர்க்கரையு மிலாமிச்சம்
வேரேலம் பகரொன்றுக்கே (54)

பகரொன்று நாலுகழஞ்சு கூடைநீ
ரதிமதுரம் பாருங்கற்க
டகசிங்கி யிலவங்க மஞ்சிட்டி
கடுநெல்லித் தான்றிசுக்கு
மிகவ்ழா லரிசிகார் போகரிசி
சிறுமூல மிகுதானும்
வகையிவைச் சாரமிவை யோரொன்று
முக்கழஞ்சாய் மாட்டிடாயே (55)

மாட்டிமுந்நீ ராலரைத்துக் கரைத்துநெய்
யஞ்ஞாழி வார்த்துப்பின்னுங்
கூட்டிளநீர் குறுணிதான் வடித்தாறி
யிருநாழி கொம்புத்தேனும்
யூட்டியிட்டு வைத்து நக்க
நெறிசூலை யோனிச்சூலை
வாட்டியித்திச் சூலைபுத்திச் சூலைமூத்
திரகாச மாறிப்போமே (56)

(இ-ள்)

நெருஞ்சில் வேர் தேட்கொடுக்கு வேர்
தண்ணீர்விட்டான் கிழங்கு

இவைகள் மூன்றும் வகைக்கு 5 பலம் வீதமெடுத்து நசுக்கியொரு பாத்திரத்திலிட்டு, 8 மரக்கால் சுத்த

ஜலம்விட்டு, அடுப்பின்மேலேற்றி, நாலிலொன்ருக வற்றவைக்கவும், இதனை வடிகட்டி,

| | |
|---|---|
| காகோலி | க்ஷீரகாகோலி |
| மேதா | மகாமேதா |
| இலாமிச்சம் வேர் | ஏலக்காய் |

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு,

| | |
|---|---|
| கூகைநீர் | அதிமதுரம் |
| கற்கடசிங்கி | கிராம்பு |
| மஞ்சிட்டி | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| சுக்கு | விழலரிசி |
| கார்போகவரிசி | திப்பிலி |
| எவச்சாரம் | |

முதலானவைகள் வகைக்கு 3 கழஞ்சு

இவைகளை யிடித்து, முன்சொன்ன கஷாயம் விட்டரைத்துப், (பசுவின்) நெய் 5 படி சேர்த்து, இளநீர் 1 மரக்காலும் விட்டு, எல்லாவற்றையும் ஒன்றுகலந்து, அடுப்பின்மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கி, ஆறியபின் கொம்புத்தேன் 2 படிவிட்டுக் குழப்பி வைத்துக்கொள்ளவும்.

இந்த நெய்யில் வேளைக்கு ½ பலம் எடுத்துத் தினம் 2 வேளை உட்கொண்டுவர நெறிச்சூலை, யோனிச்சூலை (ஸ்திரீகளுக்கு ஏற்படும் நோய்) அத்திச்சூலை, புத்திச் சூலை, மூத்திரரோகங்கள், காசம் முதலான நீங்கும்.

## 26. சூலைகடுப்புக்குச் சூரணம்.

பொடுதலை கருநொச்சி கழற்கொடி
கரிசாலை போத்தெருக்குங்
கொடுசிறுத்த செந்தொட்டி மேனியிவை
யிலைவகைதான் கொண்டிடித்துப்
பொடிசெய்து காலையந்தி யொன்பதுநாள்
உட்கொள்ளப் பொல்லாச்சூலை
விடுமுப்புப் புளிதள்ளிப் பத்தியமா
யிடுவெந்நீர் மேற்புழங்கே. (57)

(இ-ள்)

| | |
|---|---|
| பொடுதலை | கருநொச்சி |
| கழற்கொடி | கரிசாலை |
| எருக்கம்போத்து (குச்சி) | சிறுசெந்தொட்டி |
| குப்பைமேனி | |

இவைகளை ஸமூலமெடுத்து நிழலில் உலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ்செய்து, காலையிலும் மாலையிலும் குத்தளவெடுத்து, 9 நாட்கள் உட்கொள்ளவும்.

தீராத சூலைகள் தீரும். உப்பு, புளி, இவைகளை நீக்கிப் பத்தியமாக இருக்கவும். வெந்நீர் உபயோகிக்கவும்.

## 27. சூலை கடுப்பிற்குக் கெந்தகாதித் தைலம்.

முத்தினெண்ணெ யிருநாழி கல்லுப்பு
மவ்வளவாய் மொழியுஞ்சூதம்

வைத்தவரி தாரமுடன் கெந்தகமு
மிவையொன்று வகைகளஞ்சா
யித்தைமுத லுப்புடனே கலந்திட்டோர்
புதுச்சட்டி யிட்டுமேலு
மூத்துமொரு சட்டியினால் மூடியுமண்
சேலைசெய்து மெரித்திடாயே (58)

எரிகாய்ச்சிக் கரியாக்கி முன்னெண்ணெய்
தனைவார்த்து யிடுகொதித்துப்
பரிவிடித்துக் கொள்ளிதனிற் றினமொன்றுக்
காழாக்குப் பருகத்தீரும்
புரிசூலைக் கட்டுமுதற் கடுப்புக்கு
நலமாகும் புழுங்கும்வெந்நீர்
பரிமாறி வரவுடலங் குழித்திட்டிம்
முறைசெய்யப் பாங்குதானே. (59)

(இ-ள்)

சுத்திசெய்த தாளகம்
,, பாதரஸம்
,, கெந்தகம்

இவைகளை வகைக்கு 40 குன்றியளவெடுத்துக் கல்லுப்பு 2 படியுடன் சேர்த்து, ஒரு புதுச்சட்டியிலிட்டு, அதன் வாய்க்குச் சரியான வேறொரு சட்டியினால் மூடிச் சேலைமண்செய்து, அடுப்பின்மேல்வைத்து எரிக்கவும். கல்லுப்புபொரிந்து கரியாகும். பின்னர் சீலைமண்ணைப் பிரித்துச் சட்டியில் 2 படி ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் கொதிக்கவைக்கவும்.

இந்த எண்ணெய் 1 ஆழாக்கு எடுத்து உட்கொள்ளவும். சூலைக்கட்டு, சூலைக்கடுப்பு முதலானவை தீரும். வெந்நீர் உபயோகிக்கவும்.

## 28. குன்மசூலைக்கு மருந்து.

## (உள்ளியாமணக்கெண்ணெய்.)

உள்ளியாம ணக்கெண்ணெய் சிற்றாமணக்
கெண்ணெயொடு மொருமரக்கால்
விள்ளுபுன்னை பெருவாகை யுள்நரம்பு
சிற்றமல்லி விரிபேர்மல்லி
முள்நெரிஞ்சில் காற்றுளைப் பாதிரியும்
பெருங்குமிழ் மூக்கரட்டைத்
தள்ளுகண்டங் காரிசிறு விழுதிணை
சிவதைவேர் தானுமாமே (60)

ஆகுசில வாமணக் கின்கிழங்கு
பாலறுவாய் நாயிற்பட்டை
பாருபுங்கம் பட்டைமுடக் கொற்றானுங்
கொடிவேலி பருத்தவேருஞ்
சேகளரு வாயுமிந்த வகைக்கொருமுந்
நாழிநெல் சேர்ந்தெடைக்கு
நேகவெட்டித் தூளிடித்துக்கடுக்கா
யன்பதுதான் றிக்காய்க்கூட்டே (61)

கூட்டறிய நெல்லிமுள்ளி யிருகலந்தண்
ணீர்விட்டுக் கொள்கடாய
மூட்டியெறி யெட்டிலொன்ருய்க் காய்ச்சியெண்
தனிற்கலந்து முழுவெள்ளுள்ளிப் [ணெய்
பூட்டுரித்தா ணிப்பருப்பிற் பதிஞறு
மரக்காலீர் புகட்டிக்காய்ச்சி
வாட்டியொரு தூணியதாய்ச் சேலையிலுந்
தோயாமல் வடித்துக்கொள்ளே. (62)

கொள்ளுமுத லெண்ணெயுடன் கூட்டியொரு
குறுணிப்பாற் கூடவிட்டு
விள்ளுபெருங் காயமிந்து கடுரோணி
காசிலுப்பு மிவட்சாரந்தான்
உள்ளசவச் சார்லவணம் வகையொன்று
பலமொன்ருய் முத்தசெவ்வியந்
தெள்ளசம தாகமொடு முக்கடுகு
பேரரத்தைச் சித்தரத்தை (63)

திப்பிலியின் மூலமிவை யீரிரண்டு
காசினெடை சேரக்கூட்டி
நப்பசுப்பால் வார்த்தரைத்துக் கலந்தெண்ணெய்
பக்குவமாய் நலம்வடித்துச்
செப்பில்வைத்துக் கொள்ளுதின மொருநாலு
காசினெடை தேன்போல்நக்க
உப்பிசங்க ளுதரத்தில் விளைபலநோ
யதுதீரு முண்மைகேளே (64)

உண்மையெண்ணெ தனில்மருந்துங் கடாயமிட்டுக்
கொதிக்கும்போ துரவாய்மீட்டு
யெண்ணெயிரு நாழிதனி லோருழக்கு
வச்சிரப்பா லிட்டுக்காய்ச்சித்
தன்மையொரு காசெடையிற் பசுவின்பாலைக்
கூட்டிநக்க விரோசிக்குந்
திண்மையிது தனிற்மாற்று மோருஞ்சோ
றுமசனஞ்செய் திருமட்டாமே. (65)

மட்டிநில்லா தெடுத்தாலு நெல்லிமுள்ளி
மோரிலரை மருவிக்கொள்ளக்
கட்டினிற்கும் வாதகுன்மச் சூலைவல்லை
மகோதரங் கௌசையோடு
முட்டியநீர்க் கோர்வையுநீ ராமைக்குன்மம்
இவைகளு முதுநாமாலை
வட்டிவெறு வயின்குளுப்பை யாணுகம்
பெண்ணுகம் வாங்கிப்போமே. (66)

(இ-ள்)

| | |
|---|---|
| சிற்றாமணக்கெண்ணெய் | - 1 மரக்கால் |
| புன்னை | பெருவகைவேர் |
| சிற்றாமல்லி | பேராமல்லி |
| நெருஞ்சிமுள் | பாதிரி |
| பெருங்குமிழ்வேர் | மூக்கரட்டைவேர் |
| கண்டங்கத்திரிவேர் | சிறுவழுதலைவேர் |
| சிவதைவேர் | நிலவாமணக்கங் கிழங்கு |
| பாலொடுவி | |
| புங்கம்பட்டை | ஆயில்பட்டை |

கொடிவேலிவேர் முடக்கொற்றான்
உகாய்வேர்

முதலானவைகள் வகைக்கு 18 பலம் வீதம் எடுத்து வெட்டி, ஒன்றிரண்டாக இடித்து,

| | | |
|---|---|---|
| கடுக்காய் | 50 | (எண்ணிக்கையில்) |
| தான்றிக்காய் | 50 | ,, |
| நெல்லிமுள்ளி | 50 | ,, |

சேர்த்து 24 மரக்கால் சுத்த ஜலம்விட்டு அடுப்பின்மே லேற்றி எரித்து ¼ ஆக வற்றவைத்து, எண்ணெயுடன் குழப்பி, அதனுடன்

உரித்த வெள்ளைப்பூண்டு 4 மரக்காலுடன் 16 மரக்கால் சுத்தஜலம்விட்டு 4 மரக்காலாக வற்றவைத்து துணியில் வடிகட்டி இக்கஷாயத்தையும் சேர்த்துக் கொள்ளவும். பசுவின்பால் 1 மரக்காலும் சேர்க்கவும்.

பெருங்காயம் இந்துப்பு
கடுகரோகிணி காய்ச்சுப்பு
எவட்சாரம் சவர்க்காரம்

இவைகள் ஒரு பலம்,

கோரைக்கிழங்கு செவ்வியம்
ஓமம் சுக்கு
திப்பிலி மிளகு
பேரரத்தை சித்தரத்தை
திப்பிலிமூலம்

இவைகள் வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து, இடித்துப் பசுவின் பால்விட்டு நன்றாகவரைத்து முன் கஷாயத்துடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் எடுத்து வடிக்கட்டவும்.

இந்த எண்ணெயில் தினம் நாலுகாசெடை வீத மெடுத்துத் தேனைப்போல் உட்கொள்ளவும்.

வயிறு உப்பிசம், வயிற்று நோய்கள் பலவுந்தீரும்.

இந்த எண்ணெய் 2 படிக்கு 1 உழக்கு கள்ளிப்பால் சேர்த்து, பக்குவப்படுத்தி வைத்துக்கொள்ளவும். இந்த எண்ணெய் 1 காசெடையுடன் பசுவின்பால் சேர்த்து உட்கொள்ள நன்ருக வயிறு பேதியாகும். பேதி அதிகமானல் மோர்சாதம் சாப்பிடவும் வாந்தி யெடுத்தால் நெல்லிமுள்ளியை மோரில் அரைத்து உட்கொள்ளவும்.

இதனுல் தீரும் நோய்கள் :

| | |
|---|---|
| வாதகுன்மம், | சூலே, |
| வல்லேரோகம், | மகோதரம், |
| கௌசை, | நீர்க்கோர்வை, |
| நீராமை, | குன்மம், |
| காமாலே, | வயிற்றுக்குளுப்பை |

வயிற்றுப்பொருமல் முதலியன.

## 29. மூலம், குன்மத்திற்குப் பாவட்டை யெண்ணெய்.

பாவட்டை யிருகழஞ்சு வேரரைத்து
யிருநாழி பருமுத்தெண்ணெய்
மேவிடவும் பாவட்டை வெள்ளேயுள்ளி
வசுவாசி வீழுங்கொத்தான்
பாவுகொட்டைக் கரந்தைகழற் கொடியிவையோ
ரொன்றுக்குப் பங்குச்சாறு
தூவிடொரு நாழியுரியாய்ப் புகட்டிக்
காய்ச்சிநக்கச் சூலேபோமே. (67)

(இ-ள்)

பாவட்டைவேர் 2 கழஞ்சளவெடுத்து நன்றாக அம்மியின்மேல் வைத்தரைத்து, ஆமணக்கெண்ணெய் 2 படி சேர்த்துக்கொள்ளவும். அதனுடன்

| | |
|---|---|
| பாவட்டைவேர் | பூண்டு |
| இலவங்கப்பத்திரி | கொத்தான் |
| கொட்டைக்கரந்தை | கழற்சிக்கொடி |

இவற்றின் சாறுகள் வகைக்கு 1 படி எடுத்து எல்லாவற்றையும் ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கிவைத்துக்கொள்ளவும். இதில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

சூலைகள் தீரும்.

## 30. குன்மம் சூலைக்கு ஹிங்க்வாதிச் சூரணம்.

ஒருபங்கு பெருங்காய மிருபங்கு
　　வசம்புநான் கொடிவேலியஞ்சாய்
தருமசம தாநமறு பங்குகடுக்
　　காயேழு சந்தத்திப்பிலி
வருமெட்டுக் கோட்டமொன்பான் மிளகுபத்துச்
　　சிவதைவேர் வகைபங்கெல்லாம்
பெருசோட்டில் வெதுப்பிட்டுப் பொடிசெய்து
　　சேலைவடிப் பிடுவதாமே (68)

இடுவதா மொருவேளை தனக்கொரு
　　வெறுகடியா யிதனைக்காலை

தொடுமந்தி யிருவேளை பசுவினெய்
தனியாதல் சுடுநீராதல்
கொடுகொள்ள விடபாண்டு மந்தாக்கினி
விரேசனமுங் குன்மஞ்சூலை
யொடுமூச்சிற் காசமிந்த வகைகளும்போய்
நலமாகு முண்மைதானே. (69)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | 1 | பலம் |
| வசம்பு | 2 | ,, |
| ஓமம் | 4 | ,, |
| கடுக்காய்த்தோல் | 6 | ,, |
| திப்பிலி | 7 | ,, |
| கோஷ்டம் | 8 | ,, |
| மிளகு | 9 | ,, |
| சுத்திசெய்த சிவதை வேர் | 10 | ,, |

இவை நன்றாயிடித்து ஒரு சட்டிதனிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்து, இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவும். வேளைக்கு மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலையிலும் மாலையிலும் பசுவின் நெய்யிலோ, வெந்நீரிலோ உட்கொள்ள விஷபாண்டு, மந்தாக்கினி, குன்மம், சூலை, மேல்சுவாசத்துடன் கூடிய காசம் முதலான நோய்கள் தீரும். நன்கு பேதியாகும்.

## 31. கபாலச்சூலை, பிடரிக்கனத்துக்கு அரிதாரப்புகை.

அரிதாரஞ் சுக்குமஞ்ச ளிலுப்பைப்புண்
ணாக்குடனே யதைப்பொடிச்செய்

தரிவேலிப் பருத்திச்சா றிதனைச்சேலை
தனிலூட்டித் தானிழற்குள்
விரியவுலத் திச்சேலை சரியாகக்
கடுதாசு மேலுமிந்தப்
பரிபொடியூட் டித்திரிந்துப் புகைத்திடச்
சிரச்சூலை பறக்குந்தானே. (70)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த தாளகம் | சுக்கு |
| இலுப்பைப்புண்ணாக்கு | மஞ்சள் |

இவைகளைத் தூள்செய்து, வேலிப்பருத்திச்சாறு ஊட்டிய துணியில் பரப்பிவைத்துப், பின்னர் ஒரு கடுதாசியில் இந்த வத்தியைச் சுற்றித் திரித்துப் புகைக்கவும். புகையை முகரவும்.

தலைவலி தீரும், தலைக்கனம், மூக்கடைப்பு, மூக்கு நீர்ப்பாய்ச்சல் முதலானவை நீங்கும்.

## 32. சிரச்சூலை, தலைகனப்புவலி, பிடரிவலி, சளி, நீர்விழுதல் முதலானவைகளுக்குக் கபோத எச்சமருந்து.

பறக்குமே தலையின்வலித் தலைக்கனப்பு
நாசிபந் தந்தடைப்புந்
தீர்த்தண்ணீர் விழுவதுமெல் லாந்தீரு
மிம்முறையைச் செய்யநன்றும்

ஒருத்தலை வலியென்னில் கபோதத்தி
னெச்சமதை யுதிர்த்துத்தேய்க்கத்
திரிகடு கரைத்தெண்ணெய் தனிற்குழப்பித்
தேய்க்கவலி தீருந்தானே. (71)

(இ-ள்)

ஒருத்தலைவலிக்கு

| | |
|---|---|
| புருவின்எச்சம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

இவைகளை நல்லெண்ணெயில் கலந்து, தலையில் தேய்த்துக்கொள்ளவும்.

தலைவலி, பிடரிவலி, சளி, நீர்விழுதல் முதலானவைகளும் தீரும்.

## 33. ஈருள்ளி நசியம்.

ஈருளியு மிருப்பையுட் புண்ணாக்கு
முலைப்பாலு மிதைக்கரிப்பா
னீரினல் நறுக்கிட்டு முதனளி
நசியஞ்செய் நேர்மத்தானள்
பாரரிதா ரங்காசி னெடைகொடு
வந்துமதை வேலிப்பருத்தி
நீரிமுறித் ததைநன்றாய்ப் பொடிதூளாய்
செய்துபின்னுஞ் சாம்பலாக்கே (72)

ஆக்கிய பின்னுலுவிற்ற சேலையிலு
மூட்டியபின் னதைத்திரித்துத்
தேக்குபுதுச் சட்டியில்வைத் துழக்குநல்
லெண்ணெய்கொண்டு சேர்துவட்டித்
தீக்கொழுத்தி மீதியெண்ணெய் திரியிற்கை
மாறுமற் செலுத்திவிட்டுப்
போக்கியசாம் பலுமீதி யெண்ணெயிலே
மத்தித்துப் பொருத்திக்கொண்டே. (73)

கொண்டொதொரு துட்டினெடை தைலத்தி
லிருநாசி கொள்நிறுத்திக்
கண்டதொரு மூன்றுதின மிப்படியே
நிறைந்திட்டாற் கடியசூலை
மண்டைவலி மூக்கடைப்புச் சலதோடம்
பிடரிவலி மலிநீர்ப்பாய்ச்சல்
விண்டதலைக் கனந்தீரு முருங்கையிலை
காயாகும் வெந்நீர்சோறே. (74)

(இ-ள்)

உரித்த பூண்டு
இலுப்பைப் புண்ணாக்கு

இவ்விரண்டையும் மூலைப்பால், கையாந்தகரைச்சாறு இவைகளைச் சேர்த்து ஒரு வெள்ளைத்துணியில் முடிந்து, இரு மூக்கிலும் நசியமிடவும். மறுநாள் சுத்திசெய்த தாளகம் ஒரு வராகனெடை கொண்டுவந்து சிறிது சூடாக்கி, வேலிப்பருத்திச் சாறுவிடவும். அது சாம்பலாகும். ஒரு சாண் நீள அகலமுள்ள சீலையில் இந்த அரிதாரத்தூளை ஒரே சீராகப்பரப்பித் திரியாகச்செய்து

வைத்துக்கொள்ளவும். திரியை நல்லெண்ணெயில் தேய்த்துக் கொளுத்தி, ஒரு உழக்கு நல்லெண்ணெயைச் சிறிதுசிறிதாக அதிலிட்டுச் சுடர்த்தைலம்வாங்கவும். பின்னர், அந்த எண்ணெயிலேயே அத்திரிச் சாம்பலையும் இட்டு மத்தித்துக்கொள்ளவும்.

இத்தைலத்தில் ஒரு துட்டளவெடுத்து இரு நாசிகளிலும் நஸ்யமிடவும். 3 தினங்கள் இவ்வாறு செய்யவும்.

சூலை, மண்டைவலி, மூக்கடைப்பு, சலதோஷம், பிடரிவலி, நீர்ப்பாய்ச்சல், தலைக்கனம் முதலானவை தீரும்.

முருங்கையிலை, முருங்கைக்காய், வெந்நீர் சாதம் இவைகளையுட்கொள்ளவும்.

## 34. கர்ணசூலை, முகவாதத்திற்குப் பலாகுடூசித்தைலம்.

சீந்திசிற்ரு மட்டியொரு வகைக்கைம்பான்
பலமிட்டுத் தண்ணீர்தானு
போந்திடிரு தூணிவிட்டுப் பதக்காகக்
காய்ச்சியெண்ணெய் புகநாழிக்
காய்ந்தபசும் பாலுமவ்வ ளவிட்டுக்
கலந்தேலங் கச்சோலந்தான்
சேர்ந்தமுத்தக் காசுகடு ரோகிணிபச்
சிலைசெவியஞ் செண்பகப்பூ (75)

சிறுமூல மிலவங்கஞ் சதகுப்பை
யிருவேரி செவ்வல்லிதான்

நறும்பிசின் சந்தணமு மிலாமிச்சுந்
    தகரநன் ளுரிவேரும்
உறுமாஞ்சில் மஞ்சிட்டி கோட்டமதி
    மதுரமுமா முற்பலத்தின்
பெறுமூலந் தாமரையின் வளையமிவ்
    வகையொன்று பேசக்கேளே (76)

பேசிடுநாற் கழஞ்சாகச் சேர்த்தரைத்துக்
    கரைத்தெரித்துப் பின்பதத்தில்
மாசகல வடித்துக்கொள் தலைக்கிட்டுக்
    கட்டமுக வாதஞ்சூலை
கூடசுகர்ணச் சூலைகபா லச்சூலை
    காதுமந்தங் குத்தல்சீயுங்
காசங்கள் சிரத்திலுள தோடமெலாந்
    தீருங்கை கண்டதாமே. (77)

(இ-ள்)

சீந்தில்கொடி சிற்றாமுட்டிவேர்

இவ்விரண்டும் வகைக்கு 50 பலம் எடுத்து, ஒன்றிரண்டாகவிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி 2 மரக்காலாகும்வரை வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்துடன்

| | | |
|---|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | 4 | படியும், |
| ,, பசுவின் பால் | 4 | ,, |

சேர்த்து,

ஏலக்காய் கச்சோலம்
கோரைக்கிழங்கு கடுகரோகிணி

பச்சிலை
செண்பகப்பூ
கிராம்பு
வெட்டிவேர்
நறும்பிசின்
இலாமிச்சைவேர்
நன்னாரிவேர்
மஞ்சிஷ்டி
அதிமதுரம்
தாமரையிலைச்சுருள்
செவ்வியம்
திப்பிலி
சதகுப்பை
செவ்வல்லிக்கிழங்கு
சந்தனத்தூள்
தகரம்
சடாமாஞ்சில்
கோஷ்டம்
அல்லிக்கிழங்கு

இவ்வகைச் சரக்குகள் வகைக்கு ½ பலம் வீத மெடுத்து, முற்கூறிய கஷாயத்தை விட்டு, நன்றாக வரைத்துக் கஷாயஞ்சேர்ந்த எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையிலிட்டுத் தேய்த்துக் குளிக்கவும். முகவாதம், சூலை, கர்ணச்சூலை, கபாலச்சூலை, காதுமந்தம், குத்தல், சீழ்வருதல், நேத்திர காசநோய் மற்றும் சிரோ வியாதிகள் பலவுந்தீரும். கைகண்டது.

## 35. வெண்குஷ்டம், புண்கள் முதலியவைகளுக்கு நாபிப்புகை.

நாவிவெள்ளைப் பாடாணங் கௌரிபலங்
காலாக நாட்டுந்தொட்டித்
திலிங்க மரிதாரங் காந்தமிவச்
சாரமொடு சீனக்கார

மேருநலச் சாரமஞ்ச னக்கல்லும்
கெருடப்பச்சை யிவைகளொன்றும்
தாவுவங்கா ளப்பச்சை யிவைகளொன்றும்
பலமரையாய்த் தாக்கிடாயே. (78)

தாக்குகருங் குங்கிலியம் பலமொன்றுங்
காரீயந் தரும்பலமூன்
றுக்குமணக் கெண்ணெய்குத்தி யொருநிட்கஞ்
சூதமிட்டு மதையுருக்கிச்
சாய்க்கிறது புவிமீது முன்மருந்து
டன்கூட்டித் தடவெருக்கின்
றெருக்குப்பா லிட்டரைத்து மொன்பதுகூ
றுக்கிடொரு துண்யிற்றுனே. (79)

எருக்கம்பா லூட்டியதி லொன்பதுபங்
காய்முடிந்து மிதைப்புகைக்க
வருமூன்று நாளாறு பொழுதுபுளித்
தழல்புகைக்க மறுநாளாறிக்
கருதஞ்சா நாள்முத்தி னெண்ணெய்தலை
முழுகிட்டுக் கரில்புளிப்புந்
தருமுப்பு மாகாதா றினசோறும்
வெங்காயந் தண்ணீராமே. (80)

ஆகுநெய்த தோற்கரு வாடுசுறுவத்தல்
வெள்ளையெனு மாட்டின்கண்டம்
பாகமிது பத்தியஞ்செய் திருநேர
முழுகிவரப் பகருஞ்சூலை

மேகவெடி யொட்டியபுண் டிமிர்வாதம்
விரைவாதம் வெள்ளைக்குட்டம்
சேகருங்குட் டமண்டைச் சூலைதின
வுளகடிள் சிரங்குந்தானே. (81)

புளவைசெவ் வட்டைக்கடி சீழ்க்கட்டி
யதுதண்டுப் பிளவைவாத
முளசூலை யிவையெலாந் தீர்ந்துவிடும்
புகையுமட்டி லுற்றப்பாலு
மளவுபச்சைப் பயிறிட்டுக் கஞ்சிகுடித்
திடப்பின்னும் மட்டினலு
மிளநறுவ ளிக்கொழுந்த ரைத்தெருமைத்
தயிரிலுமி ணக்கிக்கொள்ளே. (82)

கொண்டுமுன்னைப் புகைமாற வத்திபின்பிஞ்
சதைவெக்கக் கொளும்பிசைந்து
விண்டநீரு ழக்கிஞ்சிச் சாறுழக்குந்
தலைமுழுக்கு மேற்குடிக்க
மண்டிரதம் விழும்பின்பு முத்தினெண்ணெ
யால்முழுகி வாழைப்பூவைக்
கண்டுதுவைத் க்குநீர் துழகுடித்தபின்
முத்தினெண்ணெய் தம்முழுக்கே. (83)

(இ-ள்)

சுத்திசெய்த நாபி
,, வெள்ளைப் பாஷாணம்
,, கௌரீபாஷணம்

இவைகள் வகைக்கு ¼ பலம்,

சுத்திசெய்த தொட்டிப் பாஷாணம்
,, தாளகம்
,, எவச்சாரம்
,, நவச்சாரம்
,, கெருடப்பச்சை
,, வங்காளப்பச்சை
,, லிங்கம்
பொரித்த சீனக்காரம்
சுத்திசெய்த அஞ்சனக்கல்
,, மிருதார்சிங்கி

இவைகள் வகைக்கு ½ பலம்

கருங்குங்கிலியம் — 1 பலம்
சுத்திசெய்த காரீயம் — 3 ,,

எடுத்து, ஆமணக்கெண்ணெய்விட்டு, 1 வராகனெடை பாதரஸம் விட்டு உருக்கிச்சாய்க்கவும். இதனை முன் சரக்குகளுடன் கூட்டிக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாகவரைத்து 9 கூறுகளாகச்செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு சுத்தமான வெள்ளைத் துணியைக் கொண்டுவந்து எருக்கம்பாலில் நனைத்து, உலர வைக்கவும். இதை 9 பங்குகளாகக் கிழித்து அதில் முன்சொன்ன சூரணத்தை 9 கூறுகளாக்கி, ஒவ்வொரு கூறாக முடிந்துகொள்ளவும். தினம் ஒரு முடிச்சுவீதம், 3 நாட்கள் 6 பொழுது புளியம்பிராணித் தணலில் போட்டுப் புகைத்து உடலில் பிடிக்கவும். பின்னர் ஒரு நாள் விட்டுவிடவும். 5-வது நாளன்று ஆமணக்கெண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.

மிளகு புளிப்புப்பதார்த்தங்கள், உப்பு முதலானவைகள் கூடாது.

ஆறின சாதம், வெங்காயம், பசுநெய், கருவாடு, சுரு வற்றல், மாட்டு உப்புக்கண்டம் முதலியவைகளைக் கூட்டிக்கொள்ளவும்.

சூலை, மேகவெடி, புண்கள், நிமிர்வாதம், விதை வாதம், வெள்ளைக்குஷ்டம், கருங்குஷ்டம் மண்டைச் சூலை, தினவு, கடி, சிறங்கு, பிளவை, செவ்வட்டைக்கடி, சீழ்க்கட்டி, தண்டுப்பிளவை, வாதசூலை முதலான நோய்கள் நீங்கும்.

தலைமுழுகிய பின்னரும் பச்சைப்பயறுக் கஞ்சி குடித்துவரவும். நறுவிளிக் கொழுந்தை எருமைத் தயிரில் அரைத்துக் குழப்பிச் சாப்பிடலாம்.

புகையின் வேகம் தணிய

| | |
|---|---|
| அத்திப்பிச்சை யிடித்தசாறு | 1 உழக்கு |
| இஞ்சிச்சாறு | 1 ,, |

இவ்விரண்டையும் கலந்து பருகவும். இரத்தம் வெளிப் படில் மறுபடியும் ஆமணக்கெண்ணெய் தேய்த்துக் குளிக்கவும், வாழைப்பூவை நசுக்கிச் சாறுபிழிந்து குடிக்கவும்.

## 36. வாதசூலைக்கு இரதாதிப்புகை.

இரதம்வெள்ளைப் பாஷாணம் வகையொன்று
பலமொன்று யிடுகீழ்நெல்லி
தருவேருங் களிப்பாக்கு மதுரங்கள்
சமன்கூட்டித் தானரைத்து

மருகேழு குளிகைசெய் புளிச்சிரா
யனலிட்டு வருமூன்றுநா
ளிருபோதும் புகைகாட்டச் சூலைமுத
நோய்பலவு மேகுந்தானே. (84)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, வெள்ளைப்பாஷாணம்

வகைக்கு — 1 பலம் அரைத்து,

கீழாநெல்லி வேர் களிப்பாக்கு
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் இடித்துச் சேர்த்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு நன்றாக வரைத்து 7 குளிகைகளாகச் செய்யவும். இம் மாத்திரையில் ஒன்றெடுத்து, புளியஞ்சிராய் அனலி லிட்டு 3 நாட்கள், தினம் 2 வேளைகள் புகை காட்டவும்.

சூலை முதலான நோய்கள் தீரும்.

## 37. சூலைகளுக்கு அடப்பம் வேது.

அடப்பின்றோல் வெள்ளறுகு பிரப்பின்மூ
லமிருப்பை யதனிற்பட்டைச்
சடசங்கம் வேரழிஞ்சில் வேர்முதியார்
கூந்தல்கோவைத் தண்டுதானும்

மடமாவ லிங்கதின்றேல் ஒன்பதுவுஞ்
சமன்கொண்டு மறுநிடித்து
மிடுபானைக் குட்பதக்கு நீர்சொரிந்து
காய்ச்சியும்வே றிடுவதாமே. (85)

இடும்வேது பிடிக்கச்சூ டாறிப்போ
தொருசெங்க லெரியிற்காய்ச்சிச்
சுடவந்த பானையிலு மிடக்காட்டி
வேதுசெய்யத் துலையுநோய்கேள்
அடுவாத கரப்பானு மிகுவாத
சூலைகளு மசையாச்சூலைக்
கடுப்பிரத்தச் சூலைகளுந் தீருமெனச்
சரபேந்திரன் கணித்ததாமே. (86)

(இ-ள்.)

| | |
|---|---|
| அடம்பின்பட்டை | வெள்ளறுகு |
| பிரப்பம்வேர் | இலுப்பைப் பட்டை |
| சங்கம்வேர் | அழிஞ்சில்வேர் |
| முதியார்கூந்தல் | கோவைக்கொடி |
| மாவலிங்கப்பட்டை | |

இவைகளைச் சமயெடையெடுத்து நசுக்கிக் கல்லுரலி லிட்டிடித்து, ஒரு பானையிலிட்டு, 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டுக்காய்ச்சி, அதிலிருந்து எழும் ஆவியைப்பிடிக்கவும். கஷாயத்தின் சூடாறிப்போனால் ஒரு செங்கலைப் பழுக்கக்காய்ச்சிப் பானையில் நனைக்க ஆவி எழும். அதனைப்பிடிக்கவும்.

வாதகரப்பான், வாதசூலை, கடுப்பு, இரத்தச்சூலை முதலானவைகள் தீரும்.

## 38. வாதசூலை, ஆருப்புண், கடி, பிளவைகளுக்கு கோவைக் கஷாயம்.

சலக்கோவை தன்னையரைத் தொருபாக்கி
னளவாகத் தான்வெள்ளாட்டி
ரலக்கோமி யத்திலிட்டு யெரிக்காய்ச்சி
யொருநாள்விட் டொருநாள்கொள்ளுந்
துலக்குசிலந் தோலையுலர்த் திடுவடிக்கட்
டியந்தச் சூரணத்தைப்
புலக்கொருவெ ருகடிகொள் நான்காநாள்
சூலைபுண்போம் புளியைத்தள்ளே. (87)

(இ-ள்)

கோவைத் தண்டைக் கொண்டுவந்து, ஒரு பாக்களவெடுத்து வெள்ளாட்டு மூத்திரம் ½ படியுடன் அரைத்துக் குழப்பி, அடுப்பின்மேல் வைத்துக் கஷாயமாக்கி ஒன்று விட்டொருநாள் உட்கொள்ளவும்

4-வது தினம் உசிலம்பட்டையைக் கொண்டுவந்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து, மூவிரல் கொள்ளுமளவு உட்கொள்ளவும்.

சூலை, புண்கள் முதலானவை தீரும்.

**பத்தியம் :-**

புளி நீக்கிச் சாப்பிடவும்.

## 39. சூலைக்குக் கெந்தகச் சூரணம்.

கெந்தகத்தைச் சுத்திசெய்து மூன்றுபலத்
துடன்சுக்குங் கிராம்புதானு
முந்துசிறு நாகப்பூ வாய்விளங்கஞ்
சிறுதேக்கு முத்தமேலம்
வந்தசெவி யஞ்சித்திர மூலமிள
கோமமில வங்கப்பத்திரி
தந்திடுதிப் பிலிமூலஞ் சித்தரத்தை
சாதிக்காய் சாதிப்பத்திரி (88)

தாளிசபத் திரிதேவ தாரமில
வங்கப்பட்டைச் சாறுங்கோட்ட
மிளவிது வகைக்கோர்ப லஞ்செங்கத்
தாரிசிவன் வேம்புஞ்சங்குந்
தானசுவ கெந்திவெள்ளை யறுகூசி
மல்லிசத்திச் சாரணைதானுஞ்
சூரணுமிள கரணைபொன் முசுட்டைபிரம்
பின்கிழங்கு தொடியதாமே (89)

பதின்பல மாப்பறங்கிப் பட்டையெலாந்
தூளிடித்துப் படர்வடிக்கொள்
இதிலொரு வெருகடி யாகவருந்
திருநேர மேகுநோய்கேள்
அதிவாத சூலைவெடி சூலைக்கபா
லச்சூலை யழியுங்குட்டம்
விதிமேகச் சூலைபிர மேகமும்புண்
வண்டுகடி விஷங்கள்போமே. (90)

சொறியுநீர் கிரிச்சங்க ளிரதவேரி
ரசமுறிவுஞ் சூதக்கட்டுந்
தறியாது விலைவயெல்லாம் பத்தியங்கேள்
முளைக்கீரை சார்பருப்புங்
கரிலுள்ளிப் பசுவின்நெய் வெள்ளாயதின்
பாலுடனே கருதிக்கூட்டு
முரிவாழை யிலைபூக்கா யிலுப்பைநெய்
கட்டியும்பூவுட் கொளுதே (91)

(இ-ள்)

கெந்தகத்தைச் சுத்திசெய்து 3 பலம் எடுத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| சுக்கு | கிராம்பு |
| சிறுநாகப்பூ | வாயுவிடங்கம் |
| சிறுதேக்கு | கோரைக்கிழங்கு |
| ஏலக்காய் | செவ்வியம் |
| சித்திரமூலம் | மிளகு |
| ஓமம் | இலவங்கப்பத்திரி |
| கண்டத்திப்பிலி | சித்தரத்தை |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| தாளீசபத்திரி | தேவதாரம் |
| இலவங்கப்பட்டை | கோஷ்டம் |

முதலான சரக்குகள் வகைக்கு — 1 பலம்.

| | |
|---|---|
| செங்கதாரிப்பட்டை | சிவனார்வேம்பு |
| சங்கம்வேர் | அமுக்கிராக் கிழங்கு |
| வெள்ளறுகு | ஊசிமல்லிகை |
| சத்திச்சாறணை | மிளகரணைவேர் |
| பொன்முசுட்டைவேர் | பிரப்பங்கிழங்கு |

இவைகள் வகைக்கு — 1 வராகனெடை.

பறங்கிப்பட்டை — 10 பலம்

இவைகளை நன்ருகக் காயவைத்துச் சூரணித்து, வஸ்திர காயஞ் செய்துகொள்ளவும், இதில் மூவிரல்கொள்ளும் அளவுள்ள தூள் எடுத்துத் தினம் 2 வேளை வெந்நீருடன் உட்கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :**

வாதச்சூலே — வெடிச்சூலே
கபாலச்சூலே — குஷ்டநோய்
மேகச்சூலே — பிரமேகம்
புண்கள் — வண்டுகடி
விஷங்கள் — சொறி
மூத்திரக்கிரிச்சம் — இரஸத்திஞல்ஏற்
ஸ்திரீகளுக்கேற்படும் சூதகக்கட்டு — பட்ட வேக்காடு என்பன.

**பந்தியம் :—**

முளைக்கீரை, துவரம்பருப்பு, மிளகு, பூண்டு, பசுவின்நெய், வெள்ளாட்டுப்பால் இவைகளைக்கூட்டவும்.

வாழையிலே, வாழைக்காய், இலுப்பைப் புண்ணுக்கு அரப்பு, இவைகளைச் சேர்க்கக்கூடாது.

## 40. பக்கச்சூலேக்கு மருந்து.

அசமோதங் கழுஞ்சதைச் சீரகமுஞ்
சாறுவேளை யதனில்வேரும்
வசம்புள்ளி கண்டங்கா ரியினில்வே
ரிவையரைத்து மதைவெந்நீரில்

நசியவே கரைத்திட்டுக் குடித்திட்டால்
 பக்கத்தி ணண்ணுச்சூலைக்
கசடெல்லாந் தீருமிந்த முறைதன்னைச்
 சரபேந்திரன் கணித்தவாறே. (92)

(இ-ள்)

ஓமம் — ஒரு கழஞ்சுடன்
சீரகம் — சாறுவேளை வேர்
வசம்பு — பூண்டு
கண்டங்கத்திரிவேர்

இவைகளையும் கூட்டி நன்றாக வெந்நீர்விட்டரைத்துக் கரைத்துப் பருகவும். பக்க சூலைகள் தீரும்.

## 41. சூலைக்கு உள்ளிக்கடுகு.

வெள்ளையுள்ளி நூறுபலம் பெருங்காயந்
 திப்பிலியு மிளகுசுக்கு
முள்ளகழற் பருப்புந்திப் பிலிமூலஞ்
 சதகுப்பை யோமங்கோரை
வில்லரிசி சாதிக்காய் பஞ்சலவ
 ணங்கடுகு மிவட்சாரந்தான்
கள்ளசத்திச் சாரமிவை வகையொன்று
 பலமொன்றுங் கண்டுதூக்கே. (93)

தூக்கியெள்ளு வோருழக்குங் கூட்டியெல்லாம்
 பொடிசெய்து சொல்வெள்ளுள்ளி
நோக்கியரைத் துக்கலந்து மெண்ணெயுரி
 பசுனெய்யு ரிக்கலந்து

ஆக்கிதனைக் கடுகாகக் கின்றிவைத்து
முதயத்தி லலகென்னுமோர்
பாக்குனள வாகவெந்நீர் தனிற்சொள்ளச்
சூலையெலாம் பறந்தபோமே. (94)

(இ-ள்)

வெள்ளைப்பூண்டு உரித்தது — 100 பலம்

| | |
|---|---|
| பெருங்காயம் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| கழற்சிப்பருப்பு | கண்டத்திப்பிலி |
| சுதகுப்பை | ஓமம் |
| கோரைக்கிழங்கு | விழலரிசி |
| சாதிக்காய் | இந்துப்பு |
| அட்டுப்பு | கறியுப்பு |
| சோத்துப்பு | வளையலுப்பு |
| கடுகு | எவச்சாரம் |
| சத்திச்சாரம் | |

இவைகளை வகைக்கு — 1 பலம்

எள்ளு — 1 உழக்கு

இவைகளை எல்லாம் தூள்செய்து வைத்துக்கொள்ளவும். முதலில் பூண்டைத் தண்ணீர்விட்டு நன்றாக வரைத்து விழுதாக்கி

நல்லெண்ணெய் — ½ படி (2½ சேர்)

பசுவின்நெய் — ,, ,,

சேர்த்து, முன் சூரணத்தையும் இட்டு, அடுப்பின்மேலேற்றிக் கிளறிக் கடுகு பதமாகச்செய்து வைத்துக்

கொள்ளவும். இதில் ஒரு பாக்களவு எடுத்து வெந் நீருடன் உட்கொள்ளவும்.

சூலைகள் தீரும்.

## 42. பக்கச் சூலைக்குக் கெந்தகாதியுப்பு.

கெந்தியரைப் பலநல்ல வுப்பிரட்டி
கூட்டியொன்றாய்க் கின்றித்தூட்செய்
தேந்துகரண் டியிலிட்டு முக்காயக்
கம்பியினு லிதமாய்க்கிண்டிச்
சேந்தபின்னே கல்வத்திற் பொடிசெய்து
மரைநிட்கஞ் சேரோர்நேரம்
போந்தபசு மோரிலுண்ணப் பக்கசூலை
கள்வாயும் போக்குந்தானே. (95)

(இ-ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் ½ பலம்
உப்பு 1 பலம்

இவ்விரண்டையும் ஒரு சட்டியிலிட்டு அடுப்பின்மே லேற்றி எரித்துக் கம்பியினல் கிண்டிக்கொண்டு, ஒன்று சேர்ந்தபின் இறக்கித் தூள்செய்து வைத்துக்கொள் ளவும். இதில் வேளைக்கு ½ வராகனெடை (16 குன்றி) யெடுத்துப் பசுவின்மோருடன் சாப்பிடவும்.

பக்க சூலை, வாயு முதலானவைகள் தீரும்.

## 43. கபச் சூலைக்குக் காயமருந்து.

காயம்விழா லரிசிகூவ ளமஞ்சட்
கொடிவேலி கடுக்காயாயில்
தூயசுக்குத் திப்புலியும் பலமுள்ளோர்க்
கோர்கழஞ்சு தூக்கில்லோக்கு
நேயமரைக் கழஞ்சுறக் கொண்டரைத்
துக்கரைத்து நெய்காச்சு
வாயதுண்ணக் கபசூலை தீருமுறை
சரபேந்திரன் வரைந்ததாமே. (96)

(இ-ள்)

| | |
|---|---|
| பெருங்காயம் | விழலரிசி |
| வில்வவேர் | மஞ்சள் |
| கொடிவேலிவேர் | கடுக்காய்த்தோல் |
| ஆயில்யப்பட்டை | சுக்கு |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 40 குன்றி நிறை எடுத்து, நன்றாக அரைத்துப் பசுநெய் கூட்டிக் காய்ச்சி இறக்கவும்.

நல்ல பலமுள்ளவர்களுக்கு இந்த நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளக் கபாலசூலைகள் தீரும்.

பலம் குறைந்தவர்களுக்கோ மருந்துச் சரக்குகளை 20 குன்றி நிறை எடுத்து அரைத்து நெய் தயாரிக்கவும்.

## 44. கபச்சூலைக்குக் கொன்றை மருந்து.

கொன்றைவில்வங் கொடிவேலி யாயிலுடன்
சாரணையுங் கூட்டுமஞ்சாய்
நின்றபலம் பின்கடுக்காய் திப்பிலியு
மிளகுசுக்கு நேர்வாளந்தான்
ஒன்றுகடு ரோணியிந்தும் பலமிரண்
டுள்ளிபல முறுமூன்றுகு
நன்றுமுத்தி னெண்ணெயிலும் வடிமஞ்சட்
பொடிதூவி நக்கப்போமே. (97)

(இ-ள்.)

| | |
|---|---|
| கொன்றைப்பட்டை | வில்வவேர் |
| கொடிவேலிவேர் | ஆயில்யப்பட்டை |
| சாறணைவேர் | |

இவைகள் வகைக்கு — 5 பலம்

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| சுத்திசெய்த நேர்வாளம் | |

இவைகள் வகைக்கு — 1 பலம்

| | | |
|---|---|---|
| கடுகரோகிணி | — | 2 பலம் |
| இந்துப்பு | — | 2 ,, |
| பூண்டு | — | 3 ,, |

இவைகளைச் சூரணித்து, ஆமணக்கெண்ணெய் 5 சேருடன் குழப்பி, அடுப்பின்மேல் வைத்து எரித்துப் பதத்தில் காய்ச்சி, மஞ்சள்பொடி தூவி பத்திரப்படுத்தவும். இதில் ஒருஸ்பூன் எடுத்து உட்கொண்டுவரவும்.

## 45 யோனிச்சூலை, மகோதரத்திற்கு மருந்து.

கரிலேழுஞ் சத்துநெய்யு முப்பிதுமூன்
றுங்கூட்டிக் காலையுண்டுங்
கருங்காலிப் பொடிநாழி வெள்ளரியின்
பழநீருங் காணநாழி
யொருநாழி தண்ணீருங் கூட்டியெட்டி
லொன்றாக உரவாய்க்காய்ச்சி
நெரிவடித்துட் கொள்ளமகோ தரம்யோனிச்
சூலைவலி நிலையாதாமே. (98)

(இ-ள்.)

மிளகு நெய்
உப்பு

இம்மூன்றையும் கூட்டிக் காலையில் உட்கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| (2) | கருங்காலிச் சூரணம் | — | 1 படி |
| | வெள்ளெரிச்சாறு | — | ,, |

இவ்விரண்டையும் அடுப்பின்மேல்வைத்துக் காய்ச்சி எட்டிலொன்றாக்கி வடிக்கட்டிப் பருகவும்.

மகோதரம், யோனிச்சூலை முதலானவை தீரும்.

## 46. நிதம்ப யோனிக்கு முடக்கொத்தான் நெய்.

முடக்கொத்தான் சாறுரியும் நல்லெண்ணெ
யுரிகொண்டு முதுவேர்க்கொம்புங்

கடுகிந்து பெருங்காயஞ் சதகுப்பை
குந்துருக்கஞ் சன்னசாலை
முடிதேவ தாரமுள்ளி வசம்பரைக்
கழஞ்சரைத்து முன்னெண்ணெய்க்குள்
விடுமெழுநாம் பதத்தில்வடி நிதம்பச்
சூலைகெட மிக்கநக்கே. (99)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| முடக்கொத்தான் சாறு | — | ½ படி |
| நல்லெண்ணெய் | — | ,, |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து

| | |
|---|---|
| சுக்கு | கடுகு |
| இந்துப்பு | பெருங்காயம் |
| சதகுப்பை | பூனைக்கண்குங்கிலியம் |
| தேவதாரம் | உள்ளிப்பூண்டு |
| வசம்பு | வெண்கடுகு |

இவைகளை வகைக்கு 20 குன்றி யெடுத்துச் சாறு விட்டு நன்ருகவரைத்துச் சாறுகலந்த எண்ணெயுடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும். நிதம்பச்சூலை (பின்பாகத்தில் ஏற்படும் வலி) தீரும்.

## 47. சூலை, குன்மம், யோனிச்சூலைக்கு ஹரீதகீச் சூரணம்.

கடுக்காயெண் கழஞ்சுநற் சீரகமிரு
கழஞ்சுநா கரங்கழஞ்சு

நெடுகிந்தோர் பணவெடைநாற் கழஞ்சுதிப்
பிலியுநிறுத் துத்தூட்செய்
திருகுத்துப் பொடிமோரிற் கொடுயோனிச்
சூலைகுன்ம மெடுத்தவிக்கல்
குடல்வாதம் பிடரிவலி பொருமலும்போம்
புளிகைப்புக் கூட்டொண்ணுதே. (100)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| கடுக்காய்த்தோல் | — | 8 கழஞ்சு நிறை |
| சீரகம் | — | 2 ,, |
| சுக்கு | — | 1 ,, |
| இந்துப்பு | — | $3\frac{1}{3}$ குன்றி நிறை |
| திப்பிலி | — | 4 கழஞ்சு நிறை |

இவைகளை இடித்துக் தூள்செய்து வைத்துக்கொள்ளவும் இதில் ஒரு குத்தளவு எடுத்துப் பசுவின்மோரில் போட்டு உட்கொள்ளவும்.

யோனிச்சூலை, குன்மம், விக்கல், குடல்வாதம் பிடரிவலி, பொருமல் இவை தீரும்.

பத்தியம் :-

புளி, கசப்பு இவை கூடாது.

## 48. சூலைக்கட்டு "உளுத்த மாவு" மருந்து.

உளுந்துமா நிலப்பனையின் கிழங்குஞ்சர்க்
கரையுமுற் ருவின்பாலுங்
கலந்துட்கு டிக்கச்சூ லைவலிக்கட்
டுகளுமு டல்கைகாலு

மொளிகட்டும் வாயுவெல்லாந் தீருமிச்சாப்
பத்தியமா முறையைத்தானே
சிளேசுத்துஞ் சாந்தவருக் குறுகிழலாஞ்
சரபேந்திரன் கணித்ததாமே. (101)

(இ-ள்)

உளுந்துமா கிலப்பனைக்கிழங்கு
சர்க்கரை

இவற்றை வகைக்கு 2 குத்தளவெடுத்துப் பசுவின் பாலில் குழப்பி உட்கொள்ளவும்.

சூலை, வலிக்கட்டு, உடல் கைகால் இவைகளி லுண்டாகும் வலி, வாயு முதலானவை தீரும்.

பத்தியம்:

இச்சாபத்தியம் இருக்கவும்.

## 49, சூலை, வாயுவிற்குப் பற்பொடி.

ஐந்துகிட்கங் கெந்தகத்தை யுருகச்செய்
சூதகிட்க மதில்மூன் றிட்டு
உந்துகுப்பை மேனிச்சாறு நாலுதுளி
விடுவேம்பி னுட்கம்பாலே
முந்துகடைந் தாவிலையிற் சாய்ந்தெடுத்துப்
பொடிசெய்து முறைவிசேடந்
தந்தனுபா னங்கடனிற் கொடுசூலை
வாயுவெலாஞ் சாடிப்போமே. (102)

(இ-ள்)

சுத்திசெய்த கெந்தகம் 5 வராகனெடையெடுத்து உருக்கி, அதனுடன் சுத்திசெய்த பாதரஸம் 3 வராகனெடை கூட்டிக் குப்பைமேனிச்சாறு 4 துளிவிட்டு, வேப்பங்குச்சியினால் கலக்கியொன்ருக்கவும். பின்னர் இம்மருந்தை ஒரு வாழைக்குறுத்திலேயில்சாய்த்து இறுக வைக்கவும். இதைப் பொடிசெய்து பத்திரப்படுத்தித் தக்க அனுபானங்களில் கொடுக்கச் சூலே, வாயு முதலானவை நீங்கும்.

## 50. முடக்குச் சூலேக்கு நிம்பபஞ்சகச் சூரணம்.

நல்லநிம்பங் கருவேம்பி னிலேசிவனார்
 வேம்புடனே நாகவேம்பும்
நல்லநில வேம்புவகைக் காறுபலங்
 காயவைத்து மறுகிடித்துச்
சொல்லவடிக் கட்டியதை யோருவெரு
 கடிமட்டாய்ச் சூரணத்தை
மெல்லவெந்நீ ரதுகுடித்தி ருபதுநாட்
 புகைபுளியும் விடுவதாமே. (103)

(இ-ள்)

நல்லவேம்பு கருவேம்பு
சிவனார்வேம்பு நாகவேம்பு (மலேவேம்பு)
நிலவேம்பு

இவைகளே வகைக்கு 6 பலம் வீதமெடுத்துக் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொண்டு வெந்நீர் பருகவும் 20 நாட்கள் புளி, புகையிலை நீக்கவும்.

முடக்குச் சூலைகள் நீங்கும்.

## 51. சூலை, அரிப்புக்கு வேப்பம் நெய்.

நெடுநாள்வேம் பதின்றேற் பலமிருப
தாகவெட்டி நேர்பஞ்சைப்போ
லிடிமூன்று மரக்காநீர் கூட்டியஞ்சு
நாளிரவு யெதிர்புடத்திற்
கொடுபிசைந்து நாலிலொன்றாய்க் காய்ச்சிவடி
யிருநாழி கோநெய்கூட்டப்
படுநாழி வேம்பினெண்ணெய் முடக்கொற்றான்
வெற்றிலையிற் பச்சைதானே. (104)

நொச்சிமணித் தக்காளி மேனியும்வே
லிப்பருத்தி நுவள்ளைவேளை
யிச்சலங்கள் வகைகுமரி யிடுநொச்சி
காட்டுமல்லி யிறையோன்வேம்பு
மெச்சுசுறு குறிஞ்சாத்தை வேளைதுளாய்
நாரத்தை மேனியோடே.

.... .... .... .... .... .... ....
.. .... ... .... .... (105)

செருப்படிவே லிப்பருத்தி பெருமருந்து
சாரணையுஞ் செங்கத்தாரி

பருத்தழிஞ்சிற் றூதுவேளை முடக்கொத்தான்
வேர்கழுஞ்சாம் பாலைவார்த்தும்
அரைத்தோமஞ் சதகுப்பைக் குங்கிலியம்
வெள்ளையுள்ளி யதுவெண்காரங்
கருச்சீர கங்குடசப் பாலைசினக்
காரமதி மதுரமுமாமே. (106)

(இ-ள்)

நாட்பட்ட வேப்பமரத்தின் பட்டை 20 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டுப் பஞ்சுபோலிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 3 மரக்கால் சுத்த ஜலம்விட்டு 5 நாட்கள் வெயிலில் வைக்கவும், பின்னர் அடுப்பின்மேலேற்றி $\frac{1}{4}$ ஆக வற்றவைத்து, வடிகட்டி, 2 படி பசுவின் நெய் சேர்த்து, வேப்பெண்ணெய் ஒரு படியும் சேர்க்கவும். பின்னர்

| | |
|---|---|
| முடக்கொத்தான் | வெற்றிலை |
| நொச்சி | மணித்தக்காளி |
| குப்பைமேனி | வேலிப்பருத்தி |
| தைவேளை | |

இவைகளின் சாறுவகைகள் வகைக்கு $\frac{1}{2}$ படியும் சேர்த்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| நொச்சிவேர் | சிவனார்வேர் |
| சிறுகுறிஞ்சா | சிற்றரத்தை |
| தூதுவேளை | துளசி |
| நாரத்தைவேர் | குப்பைமேனி |
| செருப்படி | வேலிப்பருத்தி |
| பெருமருந்து | சாரணை |
| செங்கத்தாரி | அழிஞ்சில் |
| முடக்கொத்தான் | |

இவைகளின் வேர் 40 குன்றிநிறை எடுத்துப் பசுவின் பால்விட்டரைத்து வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| ஓமம் | சதகுப்பை |
| குங்கிலியம் | பூண்டு |
| வெங்காரம் | கருஞ்சீரகம் |
| குடசப்பாலை | சீனைக்காரம் |
| அதிமதுரம் | |

இவைகளையும் முன்போல் எடுத்து அரைத்து முன் சொன்ன சாறுவகை கலந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

பத்தியம் :

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும்.

சூலை, அரிப்பு இவை தீரும்.

## 52 நாலைந்து குக்கில் நெய்.

தனிக்காசுக் கட்டிசெண் பகவரும்பு
    மொன்றுக்கொன் றரையாநிட்கம்
இனிகளிப்பாக் கும்பத்துச் சேர்த்தெழுமிச்
    சம்பழநீ ரிட்டரைத்து
நனிநெய்யி லெரியிட்டு மாறியபின்
    சுத்திசெய்த நல்லகுக்கில்
தொனியைந்து கழஞ்சாகுஞ் சூதமிரு
    கழஞ்சுதுரி சொருகழஞ்சே (107)

கௌரிகாற் கழஞ்சாகு மிருகழஞ்சு
　　கெந்தகமுங் கேழ்சம்பீரத்
துவளநீ ரிட்டுமைப்போ லரைத்துமுன்
　　னெய்யதனிற் றேயச்சேர்த்துத்
திவசமூன்று கழித்துமிரு நேரமண்
　　டலங்கள் தின்னக்கைப்புத்
தவிறுப்புப் புளியெண்ணெய் தன்பறங்கிச்
　　சூலைப்புண்கள் சாராதாமே. (108)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| காசுக்கட்டி | | செண்பகமொட்டு | |
| இவைகள் வகைக்கு | — | ½ வராகனெடை | |
| களிப்பாக்கு | — | 10 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, எலிமிச்சம்பழச்சாறு விட்டு, நெய் 5 சேருடன் கலக்கி, எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனுடன்

| | | | | |
|---|---|---|---|---|
| சுத்திசெய்த குக்கில் | | — | ½ | பலம் |
| ,, | பாதரஸம் | — | 80 | குன்றிநிறை |
| ,, | துருசு | — | 40 | ,, |
| ,, | கௌரீபாஷாணம் | — | 10 | ,, |
| ,, | கெந்தகம் | — | 80 | ,, |

இவைகளை யொன்றுகலந்து கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு, நன்ருகவரைத்து முன் சித்தம்செய்யப்பட்ட நெய்யுடன் கலக்கிவைத்துக்கொள்ளவும். 3 நாட்கள் அப்படியே வைத்துவிடவும்.

பின்னர், தினம் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காலை யிலும், மாலையிலும் உட்கொள்ளவும். இவ்வாறு 40 நாட்கள் உபயோகிக்கவும்.

பத்தியம் :

கைப்புச்சுவையுள்ள பண்டங்களையும், உப்பு புளி, எண்ணெய் முதலியவைகளையும் நீக்கவும்.

சூலை, பறங்கிப்புண்கள் முதலான நோய்கள் தீரும்.

## 53. ருது சூலைக்குப் பாதரஸ நெய்.

பாதரத மோர்கழஞ்சு கெந்தகமு
நாற்கழஞ்சு பகருங்கட்டிச்
சாதிலிங்க மிருகழஞ்சு யிதுமூன்றுங்
கல்வத்திற் றூள்பொடித்து
மீதுபசு நெய்நாழி சிறுகவிட்ட
ரைத்தெடுத்து மிருநாளாறி
வேதுடம்பி லிட்டனலில் வெதுப்புவே
ரெடுத்தபின்வெந் நீர்குளித்தே (109)

(இ-ள்.)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | — | 40 | குன்றிநிறை |
| ,, கெந்தகம் | — | 160 | ,, |
| ,, லிங்கம் | — | 80 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்துக் கஜ்ஜலியாகச்செய்து

பசுவின்நெய் $1\frac{1}{4}$ சேருடன் குழப்பி நன்றாக அரைத்து வைத்துக்கொள்ளவும். இதனையப்படியே

2 நாட்கள் வைத்திருந்த பின், வேண்டும்போது அனலில் சுடவைத்து உடம்பில் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

ருது சூலை, (மாதாந்திர தீட்டின்போது ஏற்படும் வலி) நிற்கும்.

## 54. ருது சூலைக்குச் சவுட்டுமண் எண்ணெய்.

சவுட்டுமண் படியொன்ரோர் சட்டியினி
லிடுதண்ணீர் தனிற்கரைத்து
நவிறுமேற் றெளிவெல்லாம் வேறிறுத்துக்
கொடுவைத்து நடத்தக்கேளு
புவியோர்கா செடைகாயஞ் சுண்ணமொ
ருவெள்ளைப் பூண்டிலுப்பை
துவைத்து யவ்வளவாய்க் கரைத்திட்டு
மொட்டடையுஞ் சொற்படிக்கே (110)

ஊறியமோர் தெளிவிறுத் ததிலிட்டு
நல்லெண்ணெய் யூவாசிநற்
தேதியிறு வகைக்கோர்காற் சேர்கலந்திற்
புறம்பான தெரிவைமார்க்குக்
கூஷியமுத் தினங்கொள்ளப் புழுச்செத்துச்
சூல்தரித்துக் குழந்தையுண்டாம்
ஆரமணி யும்சிவகி ருபையுறுசர
போசிமன்ன னரைந்ததாமே. (111)

(இ-ள்)

சவுட்டு மண் 1 படியெடுத்து சட்டியிலிட்டுத் தண்ணீர்
11

விட்டுக் கரைத்துக்கொள்ளவும். அதன்மேல் தெளிவை மற்றொரு சட்டியிலிறுத்துக்கொண்டு,

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | — | 1 வராகனெடை |
| சுண்ணும்பு | — | ,, |
| வெள்ளைப்பூண்டு | — | ,, |
| உப்பு | — | ,, |
| ஒட்டடை | — | ,, |

இவைகளை அரைத்து அதிலிட்டுக்கலக்கி, நல்லெண்ணெய் ¼ சேரும்விட்டு, அடுப்பின் மேலேற்றி, நன்ருக எரித்து இறக்கிவைத்துக்கொள்ளவும்.

இந்த எண்ணெயில் வேளைக்கு 1 ஸ்பூனளவெடுத்து உட்கொண்டுவரவும். மலட்டுப்புழு செத்துக் கர்ப்பம் தரிக்கும்.

## 55. சூலை, கடுப்பு, இடுப்பு வலிக்குப் பறங்கிப்பட்டைச் சூரணம்.

பறங்கிப்பட் டைதனைச்சூ ரணஞ்செய்
தவ்விறைக்குச் சரியாஞ்சுக்கு
மார்மிளகு திப்பிலியுந் தும்பிராட்டந்
திப்பிலிமூ லஞ்சமன்தான்
சூர்ணஞ்செய் துங்கலந்து காலையிற்றே
னந்திக்குச் சுரபிநெய்யிற்
சேரிடுப்பு வலிசூலைக் கடுப்பிடுப்புக்
கடுப்பெல்லாந் தெறித்துப் போமே. (112)

(இ-ள்)

பறங்கிப் பட்டையைப் பாலில் வேகவைத்தெடுத்து உலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதற்குச் சரிநிறை

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | பேராத்தை |
| கண்டத்திப்பிலி | |

இவைகளையும் இடித்து வஸ்திரகாயஞ்செய்து சேர்த்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலையில் தேனிலும், சாயங்காலம் பசுவின் நெய்யிலும் உட்கொண்டுவர

இடுப்புவலி, சூலை, இடுப்புக்கடுப்பு முதலானவை நீங்கும்.

## 56. நயனத்தில் 18 வித காசம், நசல் பலவகைகளுக்கும் வெண்பொடி.

துரிசிரண்டு நிட்கம்வெண் காக்கணம்வே
ராணிதள்ளித் துணிவேர்ப்பட்டை
வரிசிறுகீ ரையின்வேரோ ரிலைத்தாம
ரைவேரும் வகையொன்றுக்கு
யிருநிட்க மிவையெல்லாம் நீரிலரைத்
தொருசட்டி யிட்டைப்போ
லுருவப்பி மறுசட்டி கொடுமூடி
யடுப்பில்வைத் தொருசாமந்தான். (113)

எரியிட்டுப் பின்னெடுக்கத் திருநீறாய்
வெண்மையுண்டா மிதைச்சிமிழ்க்குள்
மருவக்கொண் டிமைப்பிறட்டி யிடந்தனதைப்
பூப்படல மணிவிழுங்கி
முரியாணி சதைகுந்தம் பாலாடைக்
காசங்கள் மூவாறென்னும்
வருகாசம் விழிரோகந் தீருமுறை
சரபேந்திரன் வகுத்ததாமே. (114)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| துரிசு | — | 2 வராகனெடை |
| பொரித்தவெங்காரம் | — | ,, |
| ஆணிநீக்கிய காக்கணம்வேர் | | ,, |
| சிறுகீரை வேர் | — | ,, |
| ஒரிலைத் தாமரைவேர் | — | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாகவரைத்து ஒரு சட்டியில் அடையைப்போலத்தட்டி, மேலொரு சட்டி கொண்டுமூடி அடுப்பில்வைத்து, ஒருசாமம் எரிக்கவும். பின்னர் இதனைத்திறந்து பார்க்க விபூதிபோன்று வெண்மையான பற்பம்கிடைக்கும் இதனையொருசிமிழில் பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது இமையைப் புறட்டி அங்கு இதில் ஒரு சிறு கரண்டி இடவும்.

கண்களிலுண்டாகும் பூ, மணிவிழுங்கி ஆணி, சதை, குந்தம், பாலாடைபோன்ற சவ்வுவளர்ச்சி, 18 விதமான நேத்திர காசங்கள், விழிநோய்கள் முதலானவை நீங்கும்.

நூலேரோக சிகித்சை முற்றும்.

# சரபேந்திர வைத்ய முறைகள்
## (மூல ரோக சிகித்ஸை)

### மூலவாயுவுக்கு வெங்காய வதக்கல்.

கூறுகின்ற வெங்காயம் நாலுபடி யெடுத்துக்
குறுகவே யறிந்துகொண்டு நீர்சுண்டவறுத்துத்
தேறிடுநற் பசுவுநெய் விட்டுப் பின்னுஞ்
சிவக்கவறுத் ததன்பின்பு சீனிபலமூன்று
வீறுதருஞ் சுக்குத்திப் பிலிமிளகு மூன்றின்
மெல்லியசூ ரணமொவ்வோர் பலமெல்லாங்கூட்டி
மாறிலா வொருகடியின் பிரமாணங் கொள்ள
மாறிப்போம் புறமூல வாயுத்தானே. (1)

(இ-ள்)

வெங்காயம் 4 படி எடுத்துத் தோலையுரித்துச் சிறுக நறுக்கி அடுப்பின் மேலேற்றி நீர் சுண்டும்வரை வதக்கவும். பின்னர் பசுவின் நெய்விட்டுச் சிவக்க வறுக்கவும். இதனுடன் சீனி 3 பலம் சேர்த்து வைத்துச் சுக்கு, திப்பிலி, மிளகு இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் வீதம் சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு வேளைக்கு மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும்.

புறமூலம், மூலவாயு முதலானவைகள் தீரும்.

## மூலத்திற்கு அம்மான் பச்சரிசி எண்ணெய்.

பாலுள்ள வம்மான்பச் சரிசிச்சாறு
பகர்சிற்று மணக்கெண்ணெய் காணூர்வாழைச்
சாற்றெவ்வோர் படியொவ்வோன் றதின்மிளகு
பலமொன்
றோமமரைப் பலத்திலேடு சீரகமோர் பலந்தான்
மேலினிய கிராம்பொரு வராகனெடை யெல்லா
மெல்லியதாய் பொடித்திட்டுக் காய்ச்சிவடித்
மூலநோ யத்திசுரம் பித்த ரோக [தருந்தில்
முதிரிரும லுட்டணம்போ முயன்று செய்யே (2)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| பாலுள்ள அம்மான் பச்சரிசிச்சாறு | — | 1 படி |
| சிற்றாமணக்கெண்ணெய் | — | ,, |
| காணூர் வாழைச்சாறு | — | ,, |

இவைகளை யொன்றுகலந்து,

| | | |
|---|---|---|
| மிளகு | — | 1 பலம் |
| ஓமம் | — | ,, |
| சீரகம் | | ,, |
| கிராம்பு | — | 1 வராகனெடை |

இவைகளைச் சூரணித்துப்போட்டு, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும், இந்த எண்

ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்துப் பாலுடன் தினம் 2 வேளை யுட்கொள்ளவும்.

மூலநோய்கள், அஸ்திகாங்கை, பித்தரோகம், இருமல், உஷ்ணம் முதலானவை தீரும்.

## மூலத்திற்கு மோர் தீபனம்.

தண்ணீர் பழமோர் சரிமிளகு மஞ்சளுடன்
நண்ணுகொத்த மல்லியுட னற்கடுகு—நண்ணும்
கூற்றக் கரைந்துக் காய்ச்சிக்குடிக்கத் தீபனமாஞ்
சேற்றுமமும் போமே திடம். (3)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்தத் தண்ணீர் | — | 1 படி |
| பழ (நாட்பட்ட) மோர் | — | ,, |
| மிளகு | | கடுகு |
| மஞ்சள் | | கொத்தமல்லி |

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து மோர்விட் டரைத்து அதில் குழப்பி, அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சிக் குழம்பாக்கிக்கொண்டு தினம் உட்கொள்ள லாம்

பசி எடுக்கும், கபமும் நீங்கும்.

## மூலத்திற்குச் சாறடை மோர்.

சாறடைவேர் சுக்குத் தருமோ தகங்கடு
காறு மிளகு கழஞ்சரைத்துப்—பேறு

நன்மோர் கரைத்துக் காய்ச்சியுண்ண மூலம்
பகந்தரமாற் றிடுந்தீபன மாம். (4)

(இ-ள்.)

| | |
|---|---|
| சாறடைவேர் | சுக்கு |
| ஓமம் | கடுகு |
| மிளகு | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீத மெடுத்து, மோர்விட்டரைத்து, அதிலேயே குழப்பிக் கொதிக்கவைத்து உட்கொள்ளவும்.

மூலம், பவுத்திரம் முதலானவை தீரும். பசியும் உண்டாகும்.

## தீபனத்திற்குத் திருகடுகாதிப் பழுதயம்.

கடுகாதிப் பழுதயக்தா னுதரத்துற்ற
கண்ணோய்போய் தீபனமுங் கடுகவுண்டாம்
றடைவான சுக்குடனே யிந்துப்பூவு
மசமோதகந் திப்பிலியுமிளகுங் கூட்டித்
திடமாக வரைத்திதனைக் காய்ச்சிக் கொள்ளத்
தீர்ந்திடுமே யன்னஞ்செப்ப மாகமும்மூள்
விடமேவும் விழியாளே! சொன்னே மிந்த
மேதினியி லுள்ளவர்க்கு மேன்மைதானே (5)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | இந்துப்பு |
| ஓமம் | திப்பிலி |
| மிளகு | |

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு எட்டு மடங்கு நீர்சேர்த்து எட்டிலொன்றாக வற்றவைத்து, வடிகட்டிப் பருகவும்.

அன்னத்வேஷம் நீங்கி, பசியைத் தூண்டும்.

பழுதயம் = கஷாயம்,

## மூலரோகத்திற்குச் சிலாஜித் பற்பம்.

சீனக்கார மிந்துப்புப் பொட்டிலுப்புத்
திறமான வெங்காரம் விராகனெடையொவ்வொன்
றீனமிலாக் கர்ப்பூரச் சிலாசத்துத் தானு
மிரண்டுவரா கனெடையிவை யெல்லாங் கூட்டி
மானமுறப் பொடிசெய்து குகைவைத்துச் சேலை
மண்செய்திட் டிருப தமுட்டைதன்னி
லானதழ லிடைப்புடம்போட் டெடுத்தாற்றிநன்
றூர்க்கவே பொடிசெய்து வைத்துக்கொள்ளே (6)

வைத்ததனில் வராகனெடை யரைத் தெடுத்துத்
தேனின்மத் தித்துமுன் னிரண்டுபொழுதுநொள்
சித்தமதாய்ப் பின்முக்கா லோர்வராகனெடையுந் [ஞ
தினங்கொளவா மெட்டுநாட் கொண்டா யாகில்
உத்தமனே மூலநோய் கிரிச்சனங்க ளெல்லா
மோட்டமெடுத் திடுங்கைப்புப் புளிப்பாகாது
பத்தியந்தா னுப்பாவி னெய்பாலாந் துவரம்
பருப்புக்கத் திரிமுருங்கைப் பிஞ்சுமாமே. (7)

(இ-ள்)

சீனக்காரம் இந்துப்பு
பொட்டிலுப்பு வெங்காரம்

இவ்வகள் வகைக்கு — 32 குன்றிநிறை

கர்ப்பூரசிலாசித்து — 64 ,,

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடியாக்கி, ஒரு குகையிலிட்டுச் சீலமண்செய்து, 20 எருமுட்டையில் புடமிடவும். தணல் ஆறியபின் இவைகளையெடுத்துப் பொடியாகச்செய்துகொள்ளவும்.

இந்த பற்பத்தில் 32 குன்றிநிறை யெடுத்துத் தேனில் குழைத்து 2 வேளை உட்கொள்ளவும்.

மூலம், மூத்திரகிருச்சிரம் (சொட்டுமூத்திரம்) முதலானவை தீரும்.

பத்தியம் :-

கசப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும். பசுவின் பால், பசுவின் நெய், துவரம் பருப்பு, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு முதலானவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

---

## மூலத்திற்கு ஆட்டெருப் புகை.

ஆட்டெரு வதன்பற் குன்றிபலமிறை யோமங்குப்பை
மூட்டிய விலுப்பைக்கட்டி வெள்ளுரு மீருளித்தோல்
கூட்டுக்குங் கிலியஞ்சிய் குருபிசின் கம்பிளிக்குள்
காட்டிடுப் புகையாய்மூலங் கடுப்புமண் டையில்நோய்
போமே. (8)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆட்டெரு (ஆட்டுப் புழுக்கை) | குன்றிமணி |
| சோழி | ஹோமம் |
| சதகுப்பை | அரப்பு |
| வெள்ளைப்பூண்டுத் தோல் | குங்கிலியம் |
| | கம்பிளி |
| முருங்கைப்பிசின் | ஆட்டுப்பால் |

இவைகளை இடித்துச் சூரணித்து, வேண்டும்போது அனலிலிட்டுப் புகைத்து மூலத்தில் பிடிக்கவும். கடுப்பு, மூலம், மண்டைவலி இவை தீரும்.

## அசாத்ய மூலத்திற்கு இடிவல்லாதிச் சூரணம்.

செப்புகின்ற மூலவசாத்திய நோய்க்கு மிளகு
சீரகந்தானரை யரைவரா கனெடையதை
திப்பிலிதிப் பிலிமூல மிரண்டிரண்டு வராகன்
றிகழுகிறை திப்பிலியோர் வராகனெடைகடுக்காய்
தப்பாதல் வராகனெடை யைந்தொடுசேங் கொட்டை
சாற்றுமெட்டு வராகனெடை சூரணஞ்செய்தித
கேர்ப்பவே நாடன்சர்க்கரை கலந்து மோரி [னுக்
லோர்கொட்டைப் பாக்களவு கரைத்தருந்தத் தீரும்

(இ-ள்)

| | |
|---|---|
| மிளகு | சீரகம் |
| இவைகள் வகைக்கு | — ½ வராகனெடை |
| திப்பிலி | திப்பிலி மூலம் |
| இவைகள் வகைக்கு | — 2 வராகனெடை |

யானைத்திப்பிலி — 1 வராகனெடை
கடுக்காய்த்தோல் - 5 ,,
சுத்திசெய்த சேங்கொட்டை 8 ,,

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து இதற்குச் சரியளவு நாட்டுச் சர்க்கரை சேர்த்து வைத்துப் பத்திரப்படுத்தவும். இந்த மருந்தில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து மோருடன் உட்கொள்ளவும்.

மூலநோய்கள் தீரும்.

## மூலத்திற்குத் திரிகடு நெய்.

திரிகடுகு கிராம்புபெருங் காயமேலஞ்
செப்புமதி மதுரமதி விடைய மிந்துப்
பிருசீர கஞ்சிறுகாஞ் சொறிகச்சோல
மிலவங்கங் கருணைசார ணைவேர்தன்னோ
டருமைபெரு கண்டங்கத் திரிவெங்காரமமுக்கி
ராக் கிழங்கெல்லாஞ் சமமாய்க்கொண்டே
பிரியமோடு பொடிசெய்து கடுக்காய்த்தூளும்
பிசகாத வரப்பொடியு மிரட்டிக்கூட்டே. (10)

கூட்டியதில் மறல்கிழங்கின் சாறுநல்ல
கொடிப்பிரண்டை சாறுபுளி நறளைச்சாறு
தோட்டமுறு பிரமிதா தச்சாறூடா
தொடைச்சாறு தூதுவிளையின் பழச்சாறெ
மீட்டமுற வுரியளவு விட்டாவினெய்தா [ல்லா
னிலங்கவொரு நாழிகருப்பஞ் சாறுநாழி
யூட்டியே வேவித்துக் காலைகொள்ளி
னோடிப்போ மூலநோய் வாய்நோ யெல்லாம்.

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கிராம்பு |
| பெருங்காயம் | ஏலக்காய் |
| அதிமதுரம் | அதிவிடயம் |
| இந்துப்பு | சீரகம் |
| கருஞ்சீரகம் | சிறுகாஞ்சோறி |
| கச்சோலம் (பூலாங்கிழங்கு) | கிராம்பு |
| | சாறணைவேர் |
| கருணைக்கிழங்கு | வெங்காரம் |
| பெருங்கண்டங்கத்திரி வேர் | அமுக்கிராக்கிழங்கு |

இவைகளைச் சரியளவெடுத்து இடித்துத் தூளாக்கவும். இதற்கு இருமடங்கு கடுக்காய்ச் சூரணமும், சுத்திசெய்த அரப்பொடியும் கூட்டவும். இதனுடன்

மருளங்கிழங்குச்சாறு
பிரண்டைக்கொடிச்சாறு
புளிநறளைச்சாறு
பிரமிச்சாறு (வல்லாரை)
ஆடாதோடைச்சாறு
தூதுவளம்பழச்சாறு

| | | |
|---|---|---|
| இவைகள் வகைக்கு | — | ½ படி |
| பசுவின் நெய் | — | 1 படி |
| கருப்பஞ்சாறு | — | ,, |

இவைகளைச் சேர்த்து, அடுப்பின்மேலேற்றிக் காய்ச்சிக் கடுகுப்பதத்தில் இறக்கிவைத்துக்கொள்ளவும். இந்த மருந்தில் சுண்டைக்காயளவெடுத்துக் காலையில் உட்கொள்ளவும்.

மூலநோய், மூலவாயு இவைகள் தீரும்.

# உள்மூலம், புறமூலம் இவைகளுக்குக் கொடிவேலிச் சூரணம்.

கொடிவேலி யெள்ளின்வேர் நேர்வாளம்
கொண்டுசம மாயரைத்து விழுங்கினாலுங்
கடிதலிலாப் புளியறணைக் காட்டரணைக்காட்டுக்
மரணையொடுகரணை களின்கிழங்கு கொடிவேலி
யடிதடுவேர் பிரண்டைசமங் கொண்டுலர்த்திப்
பொடித்ததனைத் தேனின்மந்திந் தருந்தினாலுட்
பொடுதலையி னிலைதனை தனியருந்திலும்
போய்விடுமே யுள்மூலம் புறமூலமெல்லாம் (12)

(இ-ள்.)

கொடிவேலி வேர் எள்ளின் வேர்
சுத்திசெய்த நேர்வாளம்

இவைகளைச் சரியளவெடுத்து, (வகைக்கு ½ குன்றி யளவு) எடுத்து அரைத்து விழுங்கவும்

(2) புளியரணைக்கிழங்கு கொடிவேலி வேர்
காட்டுக்கரணைக்கிழங்கு பிரண்டைவேர்
கரணைக்கிழங்கு

இவைகளைச் சமமெடுத்து, உலர்த்தி, நன்றாக இடித்து வஸ்திரகாயஞ்செய்து, வேண்டும்போது மூவிரல் கொள்ளுமளவு இத்தூளையெடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொள்ளவும்.

(3) பொடுதலையை பச்சையாக அரைத்து (ஒரு சுண்டைக்காயளவு) உட்கொள்ளவும்.

மேற்கூறிய முறைகள் உள்மூலம், வெளிமூலம் இவைகளை நீக்கவல்லது.

## மூலத்திற்கு மருந்துகள்.

மிளகரணைப் பழமுமிதன் வேருங்கூட்டி
 வேப்பெண்ணெய் தனிற்கலந்து குடித்திட்டாலும்
புளியிலைகை யாந்தகரை நொச்சியிலை யுலர்த்திப்
 பொடிசெய்து தேனின்மத்தித் தருந்திடினுங்
கிளர்மூல நோய்தீரு மின்பமுற்று வாழ்வர்
 கீர்த்திபெறு தஞ்சைநகர் சரபோசிமன்னர்
வளர்க்கருணை மதிவதனங் கண்டோர்போல
 மகிழ்ச்சியு மேலணைந்திடுவா மதிவல்லோரே (13)

(இ ள்.)

மிளகறணைப் பழம்
மிளகறணை வேர்

இவ்விரண்டையும் வகைக்கு ½ வராகனெடை யெடுத்து அரைத்து, வேப்பெண்ணெயுடன் கலந்து குடிக்கவும். மூலநோய்கள் நீங்கும்.

(2) புளியிலை கையாந்தகரையிலை
நொச்சியிலை

இம்மூன்றையும் சரியெடை யெடுத்து உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இப்பொடியைத் தேனில் குழைத்து உட்கொண்டாலும் மூலநோய் தீரும்.

மறல்கிழங்கு பிரண்டைவேர் கோப்பிரண்டை
கிழங்குவனக் கரணைக்கி ழங்குடனே
தயன்றன் வேரும் .... .... .... .... .... ....
... ... ... ... ... ... ... ..
விரித்துலர்த்திப் பொடிசெய்து வடிக்கட்டி நெய்தேன்
வெந்நீரொன் றிற்பாக்கி னளவுட்கொண்டா
லிரத்தமூல முள்மூல வெளிமூல மெல்லா
மேகிவிடு மினியிருக்கக் கூடாதென்றே. (14)

(இ-ள்.)

| | |
|---|---|
| மருள்கிழங்கு | பிரண்டைவேர் |
| கோப்பிரண்டை | காட்டுக்கருணைக்கிழங்கு |

இவைகளைக் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொள்ளவும். இதில் ஒரு பாக்களவெடுத்து, நெய் அல்லது தேன் அல்லது வெந்நீரிலோ உட்கொள்ளவும்.

இரத்தமூலம், உள்மூலம் முதலானநோய்கள் தீரும்.

## மூலத்திற்குக் கோட்டைச்சாறு மருந்து.

கொட்டைநறுந் தழைதன்னைத் துவைத்தந்தச்சாற்றிற்
குறுஞ்சொன்னற் சோளத்தை யூறவைத்துத்
திட்டமாய்ப் பிசைந்தந்தச் சாற்றைவடிக் கட்டிச்
சேரிரண்டுந் தப்பாமல் மூன்றுநாளைக்
கிட்டமுட னிருபொழுதுங் குடிப்பதன்றி
யேற்றிடுக் குடக்குஞ்சின் சாறுசெய்து

மட்டாகக் குடித்தந்தக் கறியுஞ்சோறு
மல்வகையாக வுண்டுவந்தால் மூலந்தீரும் (15)

(இ-ள்.)

ஆமணக்கம் இலையை இடித்துப் பிழிந்த சாற்றில் சோளத்தையூரவைக்கவும். சோளம் நன்றாக ஊறிய பின் பிசைந்து வடிகட்டி 2 சேர் காலையிலும் மாலையிலும் 3 நாட்களுக்கு உட்கொள்ளவும். கோழிக்குஞ்சை ரஸம் செய்து சாதத்தில் விட்டுச்சாப்பிடவும்.

மூலநோய்கள் தீரும்.

## 13. மூலவியாதிக்குக் கல்யாண லவணம்.

நெல்லிக்காய் தான்றிக்கடுக் காய்சேங்கொட்டை
நெடியகொடி வேலிவேர்ப்பட்டைச் சமனாகக்கொண்
டெல்லாஞ்சேர்ந் திதற்கிரட்டி யிந்துப்புக்கூட்
டியயையொரு சட்டிதனில் வைத்துமூடி
நல்லெருவி னிடைவைத்துப் புடம்போட்டெடுத்து
நயமாகப் பொடிசெய்து வைத்துக்கொண்டு
கல்லியாண லவணவிரா கனெடை நெய்யிற்
கலந்தருந்தின் மூலநோய் காணாதோடும் (16)

(இ-ள்.)

நெல்லிக்காய்த்தோல் தான்றிக்காய்த்தோல்
கடுக்காய்த்தோல் சேங்கொட்டை
கொடிவேலிவேர்ப்பட்டை (சுத்தியானது)

இவைகளைச் சமனளவெடுத்து, இடித்து இதற்கு இருமடங்கு இந்துப்பைச் சேர்த்து ஒரு சட்டியில்வைத்து

இன்னொரு வாணாயினால் மூடிச் சீலைமண்செய்து, எரு முட்டையடுக்கிப் புடம் இடவும். பின்னர், இதனைப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இதன் பெயர் கல்யாண லவணம் ஆகும். இதில் ஒரு வராகனெடையள வெடுத்து நெய்யுடன் குழைத்து உட்கொள்ளவும்.

மூலநோய்கள் தீரும்.

## 14. மூலவியாதிக்குக் கருங்கோழி மருந்து.

கருங்கோழிப் பெட்டைநத்தைக் கிளிஞ்சிற்றசைக்
கருவாடு வகையொன்றுக் குரியாக்கொண்டு
நெருங்கிடவே குறுகவரிந் தாயிற்பட்டைச்சாறு
நேராக வார்த்தரைத்துக் கொதிக்கவைத்து
வரும்பதிற் கொண்டு தின்னுன் மூலத்தோடு
மற்றுமுள்ள வியாதியெல்லா மூர்விட்டோடும்
மருந்திவையெல் லாஞ்சட்டிக் காயவைத் தெண்ணெய்
வார்த்துத்தா ளித்துவைத்துத் தினமுக்கொள்ளே.

(இ-ள்.)

பெட்டைக்கருங்கோழி மாம்ஸம்
நத்தை கிளிஞ்சிற்றசை

இவைகளின் காய்ந்த மாம்ஸம். வகைக்கு ½ படி எடுத்துச் சிறுகநறுக்கி, ஆயில்பட்டைச்சாறு விட்டுக் கொதிக்கவைத்து, வெந்து இறக்கி உட்கொள்ளவும்.

மூலநோய்கள் தீரும்.

எண்ணெய் சேர்த்துத் தாளித்தும் உபயோகிக்கலாம்.

## 15. மூலநோய்க்குக் களி.

அழிஞ்சில்வேர்ப் பட்டையொரு பாக்கினள வாத்தை
வெந்நீர்த னிற்கரைத்துக் குடித்திட்டாலும் [தனை
புழுங்கலெனு மரிசிசெங்கற் பொடிபிரண்டை மூன்றும்
நிடவேசமன் கொண்டுவெவ்வேராயரைத்து [பொருந்
மொழிந்திடெண்ணெ யில்வேவித் துக்காலீபதத்தில்
முறுகாத வெல்லமிட்டுக் களறிநாள் மூன்று
விழுங்கிடினுஞ் செருந்தியிலை யெண்ணெயில் முன்னாள்
விழுங்கிடினு மூலம்போ மூலத்தொட்டே. (18)

(இ-ள்)

அழிஞ்சில் வேர்ப்பட்டை ஒரு பாக்களவெடுத்து வெந்நீருடன் கரைத்துக் குடிக்கவும்.

(2) புழுங்கலரிசி பிரண்டைத்தூள்
செங்கல்பொடி

இம்மூன்றையும் தனித்தனியே சரியெடையெடுத்து, நன்கு அரைத்து எண்ணெய்லிட்டுக் கிளறி வெல்லம் சேர்த்துக் களியாக்கி பிண்டி 3 நாட்கள் உட்கொண்டாலும்.

(3) செருந்தியிலையை எண்ணெயில் (வதக்கி) 3 நாட்கள் உட்கொண்டாலும் மூலநோய்கள் நீங்கும்.

# 16. மூலத்திற்கு மருந்துகள்.

புளிநறளைக் கிழங்குங்கொடி வேலிவேரும்
பொடித்துமோ ரினிற்குடித்தாற் றீரும்மூலம்
வளர்சேவற் சூடறுத்திட் டதனிரத்தந் தன்னை
மன்னுமொரு கறண்டிகொண்டு விளக்கிற் காய்ச்சி
கிளறியொரு சிமிள்வைத்து மூலத்தைச் சுற்றிக்
கிளரிருநாள் பூசினலி ரத்தமாய்வீழு
மெளிதாகக் குணமாகும் பத்தியமா வின்பாலினிய
நெய்யினெடு வேண்டுகறி களுமாய்பின்னும் (19)

(இ-ள்)

புளிநரளைக்கிழங்கு கொடிவேலிவேர்

இவ்விரண்டையும் நிழலில் உலர்த்தி இடித்து, வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும். இதனை மோருடன் குடிக்கவும். மூலம் தீரும்.

(2) சேவலின் கொண்டையையறுத்து அந்த இரத்தத்தை ஒரு கரண்டியில் பிடித்து விளக்கில் சூடாக்கி வைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தி, மூலத்தைச் சுற்றிலும் 2 நாட்களுக்குப் பூசவும். இரத்தம் கசிதல் நிற்கும்.

பத்தியம்:-

பசுவின் பால், நெய், முதலானவைகளுடன் வேண்டிய கறிவகைகளையும் உட்கொள்ளவும்.

## 17. மூலம், வலி, கடுப்பிற்கு

பானையிநீர் விட்டெருக்கின் பழுப்புப் போட்டுப்
பணிக்காக வேடுகட்டி யடுப்பிலேற்றி
யீனமிலா தெரியிட்டுக் குறுநொய் மாலா
லிரண்டுபிட்டுச் சுட்டெடுத்து வைத்துக்கொண்டு
மானமுள மூன்றுநா ளருந்தில் மூலம்
வலிகடுப்புத் தீருமப்பா மயக்கமில்லை
நானிலத்து மனிதரெல்லாஞ் சுகமாய்த் தஞ்சை
நகர்மேவு சரபோசிமன்னர் முறையிதுவே. (20)

(இ-ள்)

ஒரு பானையில் தண்ணீர்விட்டு அதில் எருக்கம் பழுப்பு 4 அல்லது 5 அதிலிட்டு, அப்பானைக்கு வேடு கட்டி, ஊறவைத்த குறுநொய் அதன்மேல்வைத்து மூடி, நன்ருக எரிக்கவும் இவ்வாறு வெந்த குறுணையை 3 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

வலி, கடுப்பு முதலானவை தீரும்.

## 18. மூலத்திற்கு இலந்தையிலைப் பேதிமருந்து.

கருநியிடு மூலத்தின் குணமின்னங்கேள்
களகளென மடமடென வயிறிரைந்து பொருமிதனக்
கொருசிறங்கை யுமிதன்னைப் பொன்னிறமாய் வறுத்திடு
லர்ந்தவெரு முட்டையொருகை யிலந்தையிலை கொ
டிரவடுப்பி லொருபானை தனிலிட்டுநீர் வார்த் [ண்
தெரித்தவித்தன் னீரதனை யிறுத்துக்கொண்டு

மருவிலந்தை யிலைதன்னை யரைத்தந்த நீரில்
வகையாகக் கரைத்தருந்திற் பேதியாமே. (21)

(இ-ள்.)

உமியைச் சட்டியிலிட்டுப் பொன்னிறமாக வறுத்து, இதனுடன்

| | | |
|---|---|---|
| உலர்ந்த எருமுட்டை | — | ஒரு பிடி |
| இலந்தை இலை | — | „ |

இவைகளையும் சேர்த்து இடித்து ஒரு பாத்திரத்தி லிட்டு, 8 மடங்கு தண்ணீர்விட்டு எட்டிலொன்ருக வற்ற வைத்து வடிக்கட்டி, பின் இலந்தை இலையை அரைத்து அந்த கஷாயத்துடன் சேர்த்துப் பருகவும். நன்ருகப் பேதியாகி, மூலங்கள் தீரும்.

## 19. மூல நோய்க்குப் பற்பம்.

உடல்வெளுக்கு மிகவுலர்ந்து மிரத்ரதம் வீழும்
உள்ளூறவே காச்சலுறுஞ் சிலேட்டுமமெய்துந்
திடமுறவே மலஞ்சிக்கு மிதுதனக்கு
மருந்துசீ ஞக்காரந் துருசு சிவந்தகாரம்
வடியுற்ற நவச்சாரந் திப்பிலிவெங்காரம்
வசம்புமாங் சிசபேதி சேங்கொட்டையோடுநற்
கடசிங்கி பெருங்காயத் துடனே சீனக்
கருங்கிட்ட மிவையொவ்வோர் பலந்தான்
கொள்ளே. (22)

கொண்டினிதாய்ப் பொடிசெய்து சிற்றாமணக்கின்
றயிலத்தை யதனுள்விட்டு
விண்டலின்றிப் பிசறியதைப் புடம்போட்டுப்பின்னும்
வெள்ளாட்டுக் குடலதனிற் புடமிட்டுநன்றாய்க்
கண்டிதமாய்ப் பொடிசெய்து தினந்தேனில் மூன்று
காசெடையிட் டருந்திநல் மூலநோயிம்
மண்டலத்தில் வைகாது பறந்துபோக
மருவுமிந்த மருந்துகை கண்டதாமே. (23)

(இ-ள்.)

| | |
|---|---|
| சீனக்காரம் | துருசு |
| சிவப்புக்காரம் (வெங்காரம்) | நவச்சாரம் |
| எண்ணெய்வெங்காரம் | திப்பிலி |
| வசம்பு | மாங்கிஷபேதி |
| சேங்கொட்டை | கற்கடசிங்கி |
| கருங்கிட்டான் கல் | பெருங்காயம் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துத் தூள்செய்து, ஆமணக்கெண்ணெய்விட்டுப் பிசறவும். இதனை ஒரு அகலில் பரப்பி, மேலே மற்றொரு அகலினால் மூடிச் சீலைமண்செய்து, புடம்போடவும். மறுமுறை இம்மருந்துகளை யெடுத்து அரைத்து, வெள்ளாட்டுக் குடலுக்குள் அடைத்து, முன்போல அகலில்வைத்துச் சீலைமண்செய்து புடம் இடவும். புடம் நன்றாக ஆறிய பின் மருந்துகளையெடுத்துப் பொடிசெய்து வைத்துக் கொள்ளவும்

இம்மருந்தில் (3 வராகனெடை) கொள்ளுமளவெடுத்துத் தேனுடன் கொடுக்கவும். 40 நாட்களில் மூலநோய் தீரும். கைகண்டது.

## 20. மூலத்திற்குக் கறணைச் சூரணம்.

காட்டுக்கறணை கறிக்கறணை
காறும்பிரண்டை புளியறணை
தோட்டவெருகங் கிழங்குடனே
துவைத்துமிடித்துச் சூரணமாய்
மாட்டுப்பசுவினெய் வார்த்திழைத்து
மதித்தேயிருபது நாட்கொள்ள
நாட்டுமூல முள்ளதெள்ளாம்
நடுங்கிப்பயந்துபோய் விடுமே. (24)

(இ-ள்)

காட்டுக்கறணைக்கிழங்கு கறிக்கருணைக்கிழங்கு
பிரண்டைவேர் புளியறணைவேர்
வெருகங்கிழங்கு

இவைகளை நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்துவைத்துக்கொள்ளவும், இதில் மூவிரல் கொள்ளுமளவி எடுத்துப் பசுவின் நெய் விட்டுக் குழைத்து, 20 நாட்கள் சாப்பிடவும்.

மூலரோகங்கள் தீரும்.

## 21. மூலத்திற்கு முருங்கைப்பட்டையாதிக் கஷாயம்.

முருங்கைநறும் பட்டையதன் கிழங்குகொடி
வேலிவேர் முதிர்வெள்ளுள்ளி
நெருங்கிடுசிற் றாமணக்கின் வேர்வசம்போ
மருகமுஞ்சு நேராய்க்கொண்டே

யொருங்கிசைக்கு மிருநாழி தண்ணீர்மற்
றன்னத்தில்வி டுழக்காய்க்காய்ச்சிப்
பெருங்காய மரைக்கழஞ்சு சுக்கரைத்ததனிற்
குடித்திடப்போம் பெயர்ந்துமூலம் (25)

(இ-ள்)

முருங்கைப்பட்டை கொடிவேலிவேர்
பூண்டு சிற்றாமணக்கம் வேர்
வசம்பு

இவைகள் வகைக்கு 80 குன்றிநிறை எடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 படி சுத்தஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து வடிக்கட்டிச்

சுக்கு — 20 குன்றி
பெருங்காயம் — ,,

இவைகளையும் அரைத்து அதனுடன் குழப்பிப் பருகவும். மூலரோகங்கள் தீரும்.

## 22. மூலத்திற்குக் காட்டுக் கருணைக்கிழங்குப் பிட்டு.

வனக்கருணைக் கிழங்கெலுமிச் சங்காயி
னளவரிசி வைத்தரைத்துக்
கனப்பசுவி னெய்யினிற்சுட் டருந்தெட்டு
நாள்புளிப்புங் கசப்புந்தள்ளு
வினைத்துயர்மூ லம்போகு மினிவெளிச்சைப்
பிசினியெண்ணெய் வேகவைத்துத்
தனிப்படுமூ லத்திரவு தடவிவைத்து
முட்கொளவுஞ் சாற்றுநூலே. (26)

(இ-ள்.)

காட்டுக்கருணைக்கிழங்கு எலுமிச்சங்காயளவெடுத்து அதற்குச்சரிபச்சரிசிசேர்ந்து அரைத்துப்பசுவின்நெய் விட்டுச் சிவக்க வறுத்துக்கொள்ளவும்.

8 நாட்கள் இதனை உட்கொண்டு, புளிப்பு, கசப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

மூலநோய் தீரும்.

(2) வெளிச்சைப்பிசினை எண்ணெய்விட்டு வேக வைத்து மூலத்தின்மேல் இரவில் போட்டுவரவும். இம் மருந்தையும் உட்கொள்ளலாம்.

## 23. ராச லேகியம்.

தான்றிக்காய் நெல்லிமுள்ளி யிரண்டினுக்குங்
 குக்குளுமேற் சமனாகச் சேர்த்துத்
தேன்றனைப் பின்காய்ச்சி யந்தச்சூ
 ரணத்தையத்தே னிற்சேர்த்திட்டுண்டை
தோன்றிடச் செய்யிராச லேகிய
 மாகுமீதருந்திற் சூலைமூல
மென்றவரோ சிதம்வீக்கும் காசரோ
 கந்தீருமின் னுங்கேளே. (27)

பேளுதர நோய்தடிப்பு வாதகுன்மம்
 பிரமேகங் கிராணிகுஷ்டம்
நீளமுறு வாதசோ ணிதஞ்சுவாச
 ரோகமொடு நிகழ்த்துகின்ற

நாளும்லிங்க ரோகம்யோனி
ரோகமிங்கு நவிலுநோயும்
வாளுறுலியிசெஞ் சுடர்கண்ட விருள்போல
நீங்கிவிடும் வைகிடாதே. (28)

(இ-ள்)

| | |
|---|---|
| தான்றிக்காய் | நெல்லிமுள்ளி |
| இவைகள் வகைக்கு | 1 பலம். |
| குக்குளு | 2 பலம் |

இவ்விரண்டையும் தூளாக்கித் தேனைக் காய்ச்சி அந்த சூரணத்தைப் போட்டு லேகிய பதமாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

இதன் பெயர் ராசலேகியம் ஆகும்.

இதனை உட்கொள்ளச் சூலை, மூலம், அரோசகம், வீக்கம், காசரோகம் முதலானவைகளுடன் வயிற்று நோய்கள், தடிப்பு, வாதகுன்மம், பிரமேகம், கிராணி, குஷ்டம், வாதசோணிதம், சுவாசரோகம், லிங்கரோகம், யோனிரோகம் முதலானவைகளும் தீரும்.

## 24. மூலரோகத்திற்குப் "பல்லாதகி லேகியம்"

சேங்கொட்டை யெள்ளுத் திரள்கடுக்காய்ச் சர்க்கரை
யீங்கிவை நேராய்க் கொண் டிடித்துநித்தம்—வாங்கி
யிரண்டு வராக னெடை யருந்தில் மூலங்
கரைந்திடுமே நாளுங் கணம். (29)

(இ-ள்)

சுத்தி செய்த சேராங்கொட்டை
எள்ளு கடுக்காய்த்தோல்
சர்க்கரை

இவைகளைச் சமனெடுத்து நன்றாக இடித்து வைத்துக் கொள்ளவும். இம்மருந்தைத் தினம் 2 வராகனெடையளவெடுத்து உட்கொள்ளவும். மூல நோய்கள் தீரும்.

## 25. மூல வியாதிக்கு "அரீதகீ கஷாயம்"

கடுக்காய் சாறணைவேர் வரபுங்கம்
பட்டைவில்வ வேர்கருதி நாலோர்
டடுத்தபஞ்ச கோலமிவை சமங்கொண்டு
கடாயம் வைத் ததிலிந்துப்புப்
பொடித்தினது கலந்தருந்தில் மூலமொடு
கிராணி குன்மம் போவதன்றி
தடித்துவயிற் றிருக்கின்ற கட்டியும்போ
மிந்தமுறை தப்பிடாதே. (30)

(இ-ள்)

கடுக்காய்த்தோல் சாறணைவேர்
புங்கம்பட்டை வில்வவேர்
திப்பிலி திப்பிலிமூலம்
செவ்வியம் சித்திரமூலம்
சுக்கு

இவைகளைச் சமனெடுத்து இடித்து வைத்துக் கொள்ளவும். வேண்டும்போது 1 பலம் தூளெடுத்து

ஒரு பாத்திரத்தில் போட்டு 8 மடங்கு ஜலம் விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றக் காய்ச்சவும். பின்னர் வடிக்கட்டி இந்துப்புச் சேர்த்து உட்கொள்ளவும்.

மூலவாயு, கிராணிகள், குன்மம், வயிற்றுக் கட்டி முதலானவைகளும் தீரும்.

## 26. "மூலத்திற்கு" மருந்துகள்.

கடுக்காய்சித் திரமூலஞ் சுக்கிவைமூன்
றுஞ்சமமாய்க் கடாயம் வைத்துப்
பொடித்துநவச் சாரமிட்டுக் குடித்திடின்மூ
லம் போகும் புகழ்முள்ளங்கி
யடுத்திடுசா றுஞ்சிவப்பு போளமுநீர்
விட்டிடித்தே யதனைக் கொண்டு
குடித்திடுசக் கையைமூலத் தினமற்றடுவு
பத்தியந்தா கோவினெய்பால். (31)

(இ-ள்)

கடுக்காய்த்தோல் சித்திரமூலம்
சுக்கு

இம்மூன்றையும் சமமெடுத்து இடித்து 8 மடங்கு தண்ணீர்விட்டு எட்டிலொன்றாக வற்றவைத்து வடிக் கட்டி, நவசாரம் சேர்த்துப் பருகவும். மூலம் தீரும்.

(2) முள்ளங்கியை யிடித்துச் சாறுபிழிந்து, சிவப்பு போளத்தைச் சேர்த்துக் கரைத்து; சக்கையைப்

பிழிந்து மூலத்தில் போட்டு, சாரை உள்ளே பருகவும். மூலத்தில் உண்டாகும் அரிப்பு தீரும்.

பசுவின் நெய், பால் இவைகளைக் கூட்டவும்.

## 27. உள் மூலத்திற்கு "நெய்"

கொள்ளூறப் பட்டதண்ணீர் பிரண்டைநாறுஞ்
சாறுடனே கோவினெய் பால்
வெள்ளருக்க மலர்ச்சாற்றில் விருசேர்கொன்
றைச்சாறு விடுசேரொன்று
தெள்ளுவச் சாரந்நா ளொன்றேகால்
வராகனெடை சேர்த்த சாற்றி
ளொல்லழலி னெரித்தொருமண் டலங்குடிக்க
வுண்முளையற் றோடிப் போமால். (32)

(இ-ள்)

| | |
|---|---|
| கொள்ளை ஊறவைத்தெடுத்த நீர் | 2 சேர் |
| பிரண்டைச்சாறு | 2 சேர் |
| பசுவின் நெய் | 2 சேர் |
| பசுவின் பால் | 2 சேர் |
| வெள்ளெருக்கம் பூ சாறு | 2 சேர் |
| கொன்றைப் பட்டைச்சாறு | 1 சேர் |

இவைகளை அடுப்பின் மேலேற்றி கொதிக்கவைத்து நவச்சாரம் $1\frac{1}{4}$ வராகனெடையும் போட்டுப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் 2

வேளைகள் வீதம் 40 நாட்கள் குடிக்கவும். உள் மூலம் தீரும்

## 28. மூலரோகத்திற்கு "வன்னியிலைப் புகை"

வன்னியிலை பாம்பின் மருவுசட்டைப் பூனைத்தோல்
சென்னிமயி ரெருக்கின் றேறியவேர்–பன்னிடுநெய்
இங்கிலிட் டாசனத்தில் புகைகாட்டி லங்கே
தங்கிடு மோமூலமது தான். (33)

(இ-ள்)

| | |
|---|---|
| வன்னியிலை | பாம்பின் சட்டை |
| பூனைத்தோல் | தலைமயிர் |
| எருக்கம்வேர் | |

இவைகளைப் பன்னி நெய்யுடன் கலந்து, நெருப்பி லிட்டுப் புகைத்து ஆசனத்தில் இருக்கும் மூலத்தில் படும் படி பிடிக்கவும். மூலநோய் தீரும்.

## 29. மூலத்திற்கு "காட்டுக்கறணை வடகம்"

மிளகொரு வராகனெடை திப்பிலிதா
னிரண்டுகொடி வேலிநான்கு
வளமுறுசுக் கொறுமூன்று வனக்கருணைக்
கிழங்கினிறை வளர்நானைங்கு
வெளிதருமிவ் வராகனெடை பொடித்திவற்றி
னிரட்டி வெல்லம் விரவச்சேர்த்துக்

குளிர்நெல்லிக் காயளவு தின்றுவரின்
மூலம்போங் கொடுந்துப் பாரே. (34)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | 1 | வராகனெடை |
| திப்பிலி | 2 | ,, |
| கொடிவேலிவேர் | 4 | ,, |
| சுக்கு | 3 | ,, |
| காட்டுக் கறணைக்கிழங்கு | 16 | ,, |

இவைகளை இடித்துச் சூரணித்து 2 பங்கு வெல்லம் சேர்த்து இடித்து வைத்துக்கொண்டு தினம் ஒரு நெல்லிக்காயளவெடுத்து உட்கொண்டு வரவும். மூலநோய் தீரும்.

## 30. மாணிபத்ரவடகம்.

வாய்விளங்கம் கடுக்காய்நெல் லிப்பருப்புப்
பலமொன்று வகையொன்றிற்கு
வெய்தரிசி வதைத்தால் முப்பலமீ
ராறுபலம் வெல்லம்சேர்த்தா
லாயவுறு மாணிபத்ர வடகமாகு
மறுபதுண்டை யாக்கிவை
கோய்வின்றி யோருண்டை களின்மூலஞ்
சயங்குட்ட மோடுமன்றே (35)

(இ-ள்.)

வாய்விடங்கம் கடுக்காய்த்தோல்
நெல்லிப்பருப்பு

இவைகள் வகைக்கு — 1 பலம்

சுத்திசெய்த சிவதைவேர் சூரணம் – 3 பலம்
வெல்லம் – 12 ,,

இவைகளை இடித்து லேகியம்போல் செய்து 60 உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

தினந்தோறும் ஒரு உருண்டை வீதம் உட்கொள்ளவும். மூலம், க்ஷயரோகம், குஷ்டம் முதலானவை நீங்கும்.

இதன்பெயர் மாணிபத்ர வடகம் ஆகும்.

## 31. காங்காயனக் குளிகை.

முன்புகாங் காயனென்று முனியுரைத்த
குளிகையொன்று மொழியக்கேளா
யின்புதிப் பிலிமிளகு சீரகமொவ்
வோர்பலமா மேலெவச்சாரம்
வன்புற்றுதிப் பிலிமூல மிருபலமும்
பலஞ்செவ்வியம் வையகத்து
ளன்புபடு கொடிவேலி நான்குபலங்
கடுக்காய்சுக் கைவைந்தானும் (36)

எண்பலஞ்சேங் கொட்டையொடு நற்கரணைக்
கிழங்கிவற்றுக் கிரட்டிவெல்லம்
பண்புறச்சேர்த் தோரிரண்டு வராகனெடை
நிறையுண்டப் படுத்திச் சோற

12

ரெண்புனலி னுருண்டை கரைத்தருந்தின்
மூலநோ யொடுங்கிப்போகும்
வன்புவியன் மூலத்தை யறுக்காமற்
சுடாமலிது வகுத்திட்டாரே. (37)

(இ-ள்.)

திப்பிலி மிளகு
சீரகம்

இவை வகைக்கு — 1 பலம்

எவச்சாரம் திப்பிலிமூலம்

இவை வகைக்கு — 2 பலம்

| | | |
|---|---|---|
| கொடிவேலிவேர் | — 4 | ,, |
| கடுக்காய்த்தோல் | — 5 | ,, |
| சுக்கு | — 5 | ,, |
| சுத்திசெய்த சேங்கொட்டை | 8 | ,, |
| கருணைக்கிழங்கு | — 8 | ,, |

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணமாக்கி இவைகளின் எடைக்கு 2 பங்கு வெல்லம் சேர்த்து நன்றாக இடித்து வைத்துக்கொள்ளவும். 2 வராகனெடை நிறையுள்ள மாத்திரைகளாக் உருட்டி வைத்துக்கொள்ளவும். ஒரு உருண்டையைத் தண் ணீரிலே கரைத்துப் பருகவும்.

மூலநோய்கள் தீரும். மூலரோகத்தை அறுக்கவும் வேண்டாம். தீயினால் சுடவும் தேவையில்லை.

## 32. மூலந்திற்கு வெள்ளைச் சாறணை உருண்டை.

வெள்ளைநெடுஞ் சாரணைவே ரினைப்பசுவின்
பாலதனில் வேகவைத்து
விள்ளதனை யுலர்த்திச்சூ ரணஞ்செய்திட்
டிந்தனிவி ளங்கிந்துப்புத்
தெள்ளியிட்டிங் கிவையிரண்டின் நிறைவெல்லஞ்
சேர்த்துண்டை செய்துகொண்டால்
கள்ளமுறு மூலகுன்மத் தொடுவயிற்றுக்
கட்டியுந்தான் கலங்கியோடும். (38)

(இ-ள்.)

வெள்ளைச்சாறணைவேரைப் பசுவின்பாலுடன் வேகவைத்து, உலரவைக்கவும். நன்றாகக் காய்ந்தபின் இடித்து வஸ்திரகாயஞ்செய்து, இந்துப்பும் சேர்த்து, இவற்றிற்குச் சரியளவு வெல்லம்சேர்த்து இடித்து, உருண்டைகள் செய்துவைத்துக்கொள்ளவும்.

இதனையுட்கொள்ள மூலம், குன்மம், வயிற்றுக் கட்டிகள் முதலாவை தீரும்.

## 33. யோகராஜ குக்குலுச் சூரணம்.

கொடிவேலி யோர்பலந் தன்னில்சிறு மட்டியறக்
கோரைக்கி ழங்குசங்கு
கோரைநற் சாறணை பிரண்டைநொச் சில்புங்கு
கூர்பெரு மருந்து பின்பு

கூடுசதி ரக்கள்ளி காவலையு மாளவி
குறித்தவெண் சாறடையின்வேர்
கோலநில வேம்புச மூலமும ணந்தாளக்
கிழங்குகை யாந்தககரைவேர்
திடமாக வேரொன் றரைப்பலங் கொண்டுபின்
சிவதைவேர் மூன்றுபங்கு
திறப்பொடிச் செய்தபின் கற்கமுஞ் செப்புவேன்
சிறுமூலம் வாய்விளங்கஞ்
செவ்வியங் கற்கட சிங்கிகெச திப்பிலித்
திரிபலை வசம்புள்ளியுந்
திரிகடுக ரேணுகங் கொத்தமல்லி யோமமிரு
சீரகஞ் சிறுதேக்கதி
விடையமோ டாயில்மர மஞ்சள்மஞ் சள்ளிந்து
வெண்கார மெவட்சாரமும்
வீராங்கு ராசனி குந்துருக் கங்கோட்ட
மிக்கேல மிலவங்கமு
மிண்டுநேர் வாளமும் வளையிலுப் பிளவுப்பு
மிக்கசத் திவட்சாரமு
மேலான கல்லுப்பு முந்திரிகை பேரீச்சு
மிருநாக மலரிளுருவும்
இடிசித்த ரத்தைக்காட் டாத்திமலர் பெருமயிவை
யோரொன் றோர்பலமதாய்
எடுகடுகு ரோகிணி முப்பலங் குக்குளு
ஈரஞ்சோ டஞ்சுபலமும்
எண்பலங் கெந்தகஞ் சுவன்னபற் பஞ்சிலை
யிலிங்கமும் ரசபற்பமும்

இவையோட னரங் கழஞ்சாறு மாவிலோக
பற்பெண் கழஞ் சேருமா
மேவுடன் காகமாட் சிகமதேழ் கழஞ்சொரு
மாவும்மூறு காரந்தவெள்
ளிபற்ப மொருமாவு முக்களஞ் சேகிருஷ்ண
வப்பிரகமுஞ் சிவேதாப்பிரகம்
ஒரொன்று பலமிரண்டு மிவையெல்லாஞ் சுத்திசெய்
துறப்பொடிசெய் மூவகையுமே
ஒன்றான பின்தேனி லிருபோது காசெடை
கொள்ளுற்று நற்பத்தியமு
மேகும்யோகராசக் குக்குளுச் சூரணந்
தனைக்கொள் ளவதற்
கேகுரோக மும்வாயு சோகையதி சாரமுங்
கொடுவிரண புண்பிரமேகங்
குணமாகு மென்றுதன் வந்தரி கொடுத்தன்ன
குவலையத் தோர்வாழ்கவே. (39)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| கொடிவேலிவேர் | — | 1 பலம் |
| சிற்றாமுட்டி | | கோரைக்கிழங்கு |
| சங்கம்வேர் | | சாரணைவேர் |
| பிரண்டைவேர் | | நொச்சிவேர் |
| புங்கம்வேர் | | பெருமருந்துவேர் |
| சதுரக்கள்ளிவேர் | | காய்வேளைவேர் |
| வெள்ளைச்சாறணைவேர் | | நிலவேம்பு |
| கிலப்பனங்கிழங்கு | | கையாந்தரைவேர் |

இவைகள் வகைக்கு — ½ பலம்

சுத்திசெய்த சிவதைவேர் 3 ,,

இவைகளை நிழலில் உலர்த்தி, இடித்துச் சூரணஞ் செய்துகொள்ளவும்.

| | |
|---|---|
| திப்பிலி | வாயுவிடங்கம் |
| செவ்வியம் | கற்கடசிங்கி |
| யானைத்திப்பிலி | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| வசம்பு | பூண்டு |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | காட்டுமிளகு |
| கொத்தமல்லிவிதை | ஓமம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சிறுதேக்கு | அதிவிடயம் |
| ஆயில்யமரப்பட்டை | மரமஞ்சள் |
| மஞ்சள் | இந்துப்பு |
| வெங்காரம் | எவச்சாரம் |
| குராசானி ஓமம் | பூனைக்கண்குங்கிலியம் |
| கோஷ்டம் | ஏலக்காய் |
| கிராம்பு | சுத்திசெய்த நேர்வாளம் |
| விளையலுப்பு | கல்லுப்பு |
| சத்திச்சாரம் | எவச்சாரம் |
| கல்லுப்பு | திராக்ஷை |
| பேரீச்சங்காய் | சிறுநாகப்பூ |
| சித்தரத்தை | காட்டத்திப்பூ |

முதலான சரக்குகள் வகைக்கு — 1 பலம்

| | | |
|---|---|---|
| கடுகரோகிணி | — | 3 பலம் |
| சுத்திசெய்த குக்குலு | | 15 ,, |
| ,, கெந்தகம் | | 8 ,, |

சுவர்ண பற்பம்
லிங்கச்செந்தூரம்
ரஸபற்பம்
} வகைக்கு 12 குன்றிஎடை

இவைகள்

| | | | |
|---|---|---|---|
| லோகபற்பம் | — | 16 | குன்றிநிறை |
| சுவர்ணமாக்ஷிகபற்பம் | | 14 | ,, |
| வெள்ளியற்பம் | — | 6 | ,, |
| கிருஷ்ணப்பிரகம் | — | 2 | பலம் |
| வெள்ளை அப்பிரகம் | | | ,, |

ஆகிய இச்சரக்குகளை நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இடித்து வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தில் 1 வராகனெடை (32 குன்றி) தூள் எடுத்துக்கொண்டு தேனில் தினந்தோறும் 2 வேளை உட்கொள்ளவும்.

பத்தியமாக இருக்கவும்,

**தீரும் நோய்கள்:**

வாயு, சோகை, அதிஸாரம், விரணங்கள், புண், பிரமேகம் முதலானவை.

## 34 மூல வியாதிக்குச் சுண்ட்யாதிச் சூரணம்.

சுக்கொடுதிப் பிலிகடு கெள்ளிவை சமனகச்
சூரணித்த தூள்கொல்லன்கோ
வைக்கிழங் குடனரைத் துப்பசுவின் வெண்ணெய்த
னிற்கூட்டி வாய்க்கொண்டாலும்
மிக்குறுசிற் றுமணக் கெண்ணெயிற் றிப்பிலி
வுடனேமி ளகரைத்துத்
தக்கவகை யருந்திடினு மேழுவகை மூலமு
மோடுந்த ரித்திடாதே. (40)

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| கடுகு | எள்ளு |

இவைகளைச் சூரணஞ்செய்து, கொல்லன்கோவைக் கிழங்குடனரைத்துப் பசுவெண்ணெயுடன் குழைத்து உட்கொள்ளவும்.

மூல நோய் தீரும்.

(2) சிற்றாமணக்கெண்ணெயுடன் திப்பிலி, மிளகு, இவைகளைச் சூரணித்துப்போட்டு, உட்கொண்டாலும் 7 வகை மூல ரோகங்களும் தீரும்.

## 35. மூலத்திற்குக் கருணைக்கிழங்குச் சூரணம்.

வனக்கருணை கறிக்கருணைக் கிழங்குகொட்டைப்
பாசியொடு மருள்கிழங்குப்
புனத்துருநற் புளிநரளைக் கிழங்குகொடி
வேலிவேர் பொடியாய்ச்செய்து
தனித்திடுபேய்ச் சுரைக்குடுக்கை தனிலடைத்து
வெருகடிநேர் தான்கைக்கொண்டே
யினித்திடுதேன் றனிலருந்தி லடித்தொட்டு
மூலமதை யிதுதான்பாரே. (41)

பார்ப்பதனுக் கின்னுமொன்று செயவேண்டு
மன்னதுநீ பகரக்கேட்டி
யார்க்கமிள குழக்குவறுத் துப்பொடித்து
நல்லெண்ணெ யதில்நேர்விட்டு

சேர்த்தொருகுக் குடமுட்டைச் சிவந்தகருப்
பனவெல்லஞ் சேர்த்திராவிற்
பேர்த்தெழுநாள் குடித்தபின் மூலருந்து
கரப்பானின் பிடிப்புறுதே. (42)

(இ-ள்)

| | |
|---|---|
| காட்டுக்கருணைக்கிழங்கு | கருணைக்கிழங்கு |
| கொட்டைப்பாசி | மருளங்கிழங்கு |
| புளிநரளைக்கிழங்கு | கொடிவேலிவேர் |

இவைகளை நிழலில் உலர்த்தி, இடித்து, வஸ்திர காயஞ் செய்து, பேய்ச்சுரைக் குடுக்கைக்குள் பத்திரப் படுத்தவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து தேனில் குழைத்து, உட்கொள்ளவும்.

மூலநோய் தீரும்.

(2) மிளகு ஒரு உழக்கு எடுத்து வறுத்துப் பொடி செய்து, நல்லெண்ணெய்விட்டுக் குழைத்து, ஒரு கோழி முட்டையின் வெள்ளைக்கருவையும் சேர்த்து, சிவந்த பனைவெல்லத்தையும் சேர்த்து, இரவில் மாத்திரமே 7 நாட்கள் உட்கொள்ளவும்.

கரப்பான் பதார்த்தங்களை நீக்கவும்.

## 36. மூல நோய்க்கு எட்டியிலை வேது.

எட்டியிலை யொருபானை தனிற்போட்டு
பதக்குநீ ரினிது விட்டோர்
சட்டிகொண்டு மூடியதிற் சீலைமண்செய்
தோர்துளைச் சட்டிதன்னில்

விட்டுநடு வதிற்சேலை யாலடைத்திட்
டடுப்பேற்றி யெரித்திறக்கி
வட்டமுறு துளையின்வரு புகையதனை
மூலத்தின் மருவக்காட்டே. (43)

காட்டிவரும் போதினியன் பர்க்கருந்து
மயக்கம்வருங் கலங்கிடாதே
தேட்டமுற மறுபடியு மருந்திந்தப்
படிமூன்று தினந்தானந்த
வாட்டமிலாப் புகைக்காட்டி னிப்மூல
மேயன்றி மறுவும்வான
நாட்டிலுறு மூலந்தா மோட்டமெடுத்
திடுமுண்மை நவின்றிட்டோமே. (44)

(இ-ள்.)

எட்டியிலையை ஒரு பெரும்பானையிலிட்டு 2 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, ஒரு சட்டியினால் மூடிச் சீலைமண் செய்யவும். மேல் சட்டியினடியில் துளையிருக்க வேண்டும். அதனை ஒரு துணியினால் அடைத்து அடுப்பின் மேல்வைத்து, நன்ருகக் கொதிக்கவைக்கவும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கித் துணியை யெடுத்தால் துவாரத்தின் வழியாக ஆவியெழும். இந்த ஆவியை மூலத்தில் பிடிக்கவும். அப்போது நோயாளிக்கு மயக்கம் வரும். பயப்படாதே இம்மாதிரி 3 நாட்கள் ஆவியைப் பிடிக்கவும் மூலம் இற்று விழும்.

## 37. மூலரோகத்தின் ஸாத்யாஸாத்யம்.

வாதபித்தச் சிலேட்டுமமென் றோர்மூன்று
வகையுளவே வாதந்தன்னி

வோதவுறு பித்தச்சிலேத் துமமுறினும்
பித்தத்தி லோங்குகின்ற
வாதசிலேத் துமமுறினுஞ் சிலேத்துமத்தில்
வாதபித்த மருவினுலு
மோதவுறு முயர்சந்நி பாதமீதே
சாத்தியமென் றேதலாமே. (45)

(இ-ள்)

| | |
|---|---|
| வாத மூலம் | வாதசிலேத்ம மூலம் |
| பித்த ,, | வாதபித்த ,, |
| சிலேத்ம மூலம் | சந்நிபாத ,, |
| பித்தசிலேத்ம மூலம் | |

இவற்றுள் சந்நிபாத மூலம் அஸாத்யம்.

## 38. மூலத்திற்குச் சுக்காதிப்பூச்சு மருந்து.

மருவுசுக்கு மிளகுகுதி ரைக்குளம்பிந்
துப்பிந்த வகையோர் நான்கு
திருவெனுமிச் சம்பழச்சாற் றேற்பதுவிட்
டரைத்துமுளை தன்னிற்பூசப்
பொருகழுதை விட்டைசுடு புகைகாட்டுப்
பேய்ப்பீர்க்கின் புகல்காய்சீவிக்
கருதிந்த மருந்தையிட்டு மூலத்தில்
வைத்திடது கரைந்துபோமால் (46)

(இ-ள்.)

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| குதிரைக்குளம்பு | இந்துப்பு |

இவைகளைச் சரியெடையெடுத்து எலுமிச்சம் பழச் சாறு வேண்டிய அளவுவிட்டு நன்றாக அரைத்துக் கொண்டு நீண்ட மாத்திரைகளாகச்செய்து பத்திரப் படுத்தவும். வேண்டும்போது எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து மூலமுளையின்மேல் பூசவும்.

உலர்ந்த கழுதைவிட்டையைத் தீயிலிட்டுப்புகைத்து அதனை மூலத்தில் பிடிக்கவும்.

பேய்ப்பீர்க்கங்காய் ஓட்டிற்குள் இந்த மருந்தை பத்திரப்படுத்தவும்.

## 39. மூலத்திற்குக் கருங்கோழிக் கடுகு.

மேனிச்சா றணையாடா தொடைபாவட்டை
வெதுப்படக்கிப் பிரண்டைச்சா றுங்கிநொச்சிக்
கானில்விழி தேட்கொடுக்கி புளிநரளைக் கருதுமணித்
தக்காளிநாயுநறளை யழிஞ்சி
லானவெருகி வற்றிலையின் சாறோடுவெங்காயந்
தாக்கியசா றிவைசிறுகச் சமமாகக்கொண் டோர்
மானமுறு கருங்கோழி யவித்துவித்த சாறும்
வளர்தசையும் விழுதாக வரைத்துக்கொள்ளே (47)

கொண்டரத்தை வெட்பாலை யரிசி சுக்குக்
கூகைநீ ரதனைத்திப் பிலிவெங்காரங்
கண்டிருசீ ரகஞ்சீனக் காரம்வெள் வெங்காயந்
திப்பிலி மிளகுபெருங் காயமிந்துப்
பொண்டருநற் படிக்காரஞ் சவுக்காரந் தன்னோ
டோதுகின்ற சீதாளத் தைலமிவையொவ்வொன்

றெண்டருமும் மூன்றுகா செடையதாய்க் கொண்
டிளவரையாய் வறுத்தெடுத்துப் பொடியாகச்செய்யே

செய்தந்த விலேச்சாறுங் கோழிவெந்த
செழுந்தசைமுன் னரைத்ததுவு மினியவெள்ளி
நெய்யதனில் நாழியும்விட் டுப்பிசைந்து பின்பு
நிகழுவெரித் துக்கிண்டி மெழுகு பதத்திறக்கிக்
கைதனிலோர் பாக்களவு கொண்டுதின மருந்திற்
காணும லோடிப்போ மூலந்தானு
மேயநின்ற பெருவயிறு வெப்புப் பாவை
யிரத்தமுறு கிராணிகளுங் கூடப்போமே. (49)

(இ-ள்)

| | |
|---|---|
| குப்பைமேனி | சாரணைவேர் |
| ஆடாதோடை | பாவட்டை |
| வெதுப்படக்கி | புளிநரளைக்கிழங்கு |
| மணத்தக்காளி | நாயடிநரளை |
| அழிஞ்சில் | வெருகன் இலை |

இவைகளின் சாறு — 1 சேர்

வெங்காயச்சாறு — ,,

ஒரு கருங்கோழியைத் தசையுடன் தண்ணீர்விட்டு நன்கு வேகவைத்து கஷாயத்துடன் அதனை நன்றாக அரைத்துக்கொள்ளவும்,

| | |
|---|---|
| சித்தரத்தை | வெட்பாலையரிசி |
| சுக்கு | கூகைநீர் |
| யானைத்திப்பிலி | வெங்காரம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சீனக்காரம் | பூண்டு |

திப்பிலி மிளகு
பெருங்காயம் இந்துப்பு
படிக்காரம் சவுக்காரம்
சிதாளத்தைலம் (கூந்தல்பனை)

இவைகளை வகைக்கு 3 காசெடைகள் வீதம் எடுத்து இளவறுப்பாக வறுத்துச் சூரணஞ்செய்து வைத்துக் கொள்ளவும். இதனை முன்சொன்ன சாறுவகைகள், மாமிசவிழுது இவைகளுடன் கலந்து, பசுவின் நெய் 1 சேரும் விட்டு, நன்றாகப்பிசைந்து, அடுப்பின்மே லேற்றி, நன்றாக எரித்து, மெழுகு பதத்தில் காந்தாமல் இறக்கி, பத்திரப்படுத்தவும். தினந்தோறும் ஒரு பாக்களவெடுத்து உட்கொள்ளவும்.

மூலம் பெருவயிறு, வெப்புப்பாவை, இரத்தக் கிராணி முதலானவை தீரும்.

## 40. மூலவியாதிக்கு நாயுருவிச் சூரணம்.

நாயுருவி வேர்ப்பிரண்டை வேரெருக்கின் வேர்
நயந்தகொடி வேலிவேர் கரணைவனக் கருணை
யாயிவற்றின் கிழங்கோ டிவையெல்லா முலர்த்தி
யம்மிதனில் பொடிசெய்து தேனிலருந் திடினும்
பேயுறுபீர்க் கின்விரையு மெருக்கம்பாலும்
பிசகாத பழம்புளியு மரைத்துமூலத்
தேய்த்தாலெ தடவிடினுந் தேய்ந்தறுமே தப்பா
திதுமெய்யோ பொய்யோவென் றியற்றிப்பார்
நீரே (50)

(இ-ள்.)

நாயுருவிவேர் பிரண்டைவேர்
எருக்கம்வேர் கொடிவேலிவேர்
கருணைக்கிழங்கு காட்டுக்கருணைக்கிழங்கு

இவைகளை நிழலில் நன்றாக உலர்த்தி, இடித்து, சூரணஞ்செய்துகொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

(2) பேய்ப்பீர்க்கம்விரை எருக்கம்பால்
பழம்புளி

இவைகளையரைத்து மூலத்தின்மேல் தடவவும். மூலம் கரையும்.

## 41. வெளிமூலத்திற்கு நாகமல்லிகைவேர் மருந்து.

நாகமல்லி கைவேர்நறுஞ் சாரணை வேரபின்
வேகமருவு கொடி வேலிவேர்—வாகாந்
தவசிமுருங்கை வேர் சம்பீரச் சாற்றி
லிவை யரைத்து மூலத்திடு. (51)

(இ-ள்)

நாகமல்லிகை வேர் சாரணைவேர்
அபின் கொடிவேலிவேர்
தவசுமுருங்கை வேர்

இவைகளை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக வரைத்து மூலத்தில்மேல் இடவும். அது இற்று விழும்.

## 42. மூலத்திற்குப் பிராய் எண்ணெய்.

வடக்கோடு பிராயின்வேர் முற்றினதாய்க்கொண்டு
வந்திருத் தோர்படிசிற் றாமணக்கெண்ணெய்தன்னி
வடுத்திடப் போட்டிரவி புடமாக வைத்தே
யதனிலொரு கரண்டியெண்ணெ யிரண்டுபோதுங்
குடித்திடுக நாலுநாள் வெந்நீருஞ் சோறு
மறுபத்தியத்திற் புளிப்புத்தான் கூட்
டெடுத்துரைத்தி டிவ்வாறு செய்து வந்தா
லிடுமூல நிர்மூல மாகிப்போமால். (52)

(இ-ள்.)

வடக்குநோக்கிப்போகும் பிரா மரத்தின் வேரை (முற்றினது)க் கொண்டுவந்து ஒரு படி சிற்றாமணக் கெண்ணெயில் தட்டிப்போட்டுச் சூரியபுடமாகவைத்துத் தினம் ஒரு கரண்டிவீதம் 2 வேளைகள் உட்கொள்ளவும். 4 நாட்களுக்கு வெந்நீர்விட்டுச் சாதம் சாப்பிடவும். பின்னர் புளிகூட்டிக் கொள்ளலாம்.

மூலநோய் நீங்கும்.

## 43. மூலரோகத்திற்குக் கருணைக்கிழங்கு வடகம்.

கடுக்காய்சித் திரமூலம் பலமைவைத்து
கறணையின்றன் கிழங்குபலம் பதினாறு
மெடுத்திடுசுக் கொருநான்கு பலஞ்சேங்கொட்டை
யெண்பலமே யிரண்டுபலஞ் சிவனார்வேம்பு

நடத்திலுறு மானைத்திப் பிலிமிளகு துளசி
நெல்விரையொவ் வோர்பலந்தா னிவையெல்லாம்
பொடித்திதற்குச் சரிநிறையே நல்லவெல்லம் [நன்ருய்
போட்டரைத்துப் பாக்களவா யுண்டையாக்கே (53)

ஆக்கிடந்த வுண்டையிலோ ருண்டை மோரி
லறவுரைத்து மூன்றுநா ளாறுபோது
நீக்கியின்றி குடித்திடின்மூ லக்கிராணி
நீடுபவுத் திரரோகம் பாண்டுரோகந்
தீர்க்கமுறு சோமரோ கத்திஞேடு
திகழ்கெர்ப்ப ரோகமுத லெவையுந் தீரும்
பார்க்கண்வளர் நகர்க்கெல்லா முயர்ந்த தஞ்சைப்
பதிமருவு சரபோசி மன்னர்முறை யிதுவே. (54)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கடுக்காய்த்தோல் சித்திரமூலம் | | |
| இவைகள் வகைக்கு | — 5 | பலம் |
| கறணைக்கிழங்கு | 16 | ,, |
| சுக்கு | 4 | ,, |
| சுத்திசெய்த சேங்கொட்டை | 8 | ,, |
| சிவனூர் வேம்பு | 2 | ,, |
| யானைத்திப்பிலி | 1 | ,, |
| மிளகு | 1 | ,, |
| துளசி விதை | 1 | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்ருக இடித்துச் சூரணஞ்செய்துகொண்டு, இதற்குச் சரியெடை நல்ல வெல்லம் சேர்த்து, இடித்துப் பாக்களவுள்ள உருண்டைகளாக உருட்டிவைத்துக்கொள்ளவும். வேளைக்கு ஒரு

உருண்டைவீதம் 3 நாட்களுக்கு 6 வேளைகள் மோருடன் உட்கொள்ளவும்.

மூலக்கிராணி, பவுத்திரரோகம், பாண்டுரோகம், சோமரோகம், கெர்ப்பரோகம் முதலானவை தீரும்.

## 44. புறப்பட்ட மூலஞ் செத்துவிழ மருந்துகள்.

குளிர்நாவற் பட்டையினை யரைத்தெருமைத் தயிரிற்
கூட்டியருந் திடில்மூலங் கரைந்து போகும்
தெளிவுறுநல் லெண்ணெய்பொடு தலைச்சா றேடு
திகழ்பிரண்டைச் சாறுவகைக் குழக்குக்கொண்டு
வளாறுறவே கூட்டியொரு மூன்றுவைக கல்
வளர்காலைப் போதருந்தி லுண்மூலந் தீரும்
முனையதன்மா விலங்குகள்ளி யெருக்கிலைகள்
முயன்றெடுத்துத் தழலினிட்டுப் புகைக்கப் போம்
மூலம். (55)

(இ-ள்)

(1) நாவற்பட்டையை யரைத்து எருமைத் தயிருடன் குழப்பி, உட்கொள்ளவும். மூலம் கரையும்.

| | | |
|---|---|---|
| (2) | நல்லெண்ணெய் | — 1 உழக்கு |
| | பொடுதலைச்சாறு | ,, |
| | பிரண்டைச்சாறு | ,, |

இவைகளைச் சேர்த்துக் காலை நேரத்தில் மாத்திரம் ௩ நாட்கள் உட்கொள்ளவும். மூலம் தீரும்.

(3) மாவலிங்கு கள்ளி இலை
எருக்கிலை

இவைகளைத் தீயிலிட்டுப் புகைத்து, அந்த புகையை மூலத்தில் பிடிக்கவும். அது இற்று விழும்.

## 45. மூலக்கடுப்பிற்கு அஜமாம்ஸ ரஸாயனம்.

கறிக்கறணைக் கிழங்குடனே வெள்ளாட்டுக் குட்டிக்
கதித்தசிறு குடல்சமமா யெடுத்துக்கொண்டு
நறுக்கியதை வேகவைத்துத் திரண்டுபோது
நயமுறவே தின்றிடினு முடம்புதன்னை
யறுத்துநன்றும் வேகவைத்தே யிரண்டுபொடி தூவி
யதன்பின்பு வெள்ளுள்ளி நல்லெண்ணெய் கூட்டி
யிறக்கிவைத்து மெழுகுபதத் தருந்திடினுஞ் சின்ன
ளிருந்தமூ லக்கடுப்புப் பறந்துவிடும் பாரே. (56)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| கறணைக்கிழங்கு | — | 1 பலம் |
| வெள்ளாட்டுக்குட்டியின் சிறுகுடல் | | ,, |

இவ்விரண்டையும் நறுக்கி, வேகவைத்து 2 வேளைகள் உட்கொள்ளவும்.

(2) வெள்ளாட்டுக் குட்டியின் மாம்ஸத்தை வேக வைத்து (மிளகு பொடி) தூவி பூண்டு, நல்லெண்ணெய் இரண்டையும் போட்டு அரைத்து மெழுகு பதத்தில் இறக்கி, உட்கொள்ளவும். மூலக்கடுப்புகள் நிற்கும்.

## 46. மூல எரிச்சலுக்குப் மாதளைப்பிஞ்சு மருந்துகள்.

மாதளையின் பிஞ்சுமிள நீர்முகிழு மரைத்து
மாதர்முலைப் பால்விட்டுப் பிசறிமூலத்
தேதமறக் கட்டிலெரி வுடனே நிற்கு
மின்னுமொன்று சிற்றும ணக்கின்விரை துருசு
பேதமிலா வெள்ளைக்கல் லிவைமூன்றும் பொடித்துப்
பெருமூலத் தேமுன்போல் கட்டினுவெருக்கு
லோதுதழ லிடைப்போட்டுப் புகைகாட்டினுலு
மோடிவிடு மூலத் தெரிவுதானே. (57)

(இ-ள்.)

மாதளப்பிஞ்சு இளநீர்முகிழ்
(தென்னங் குறும்பை)

இவ்விரண்டையும் முலைப்பால் விட்டுப்பிசறி அரைத்து, மூலத்தில் வைத்துக் கட்டவும். எரிச்சல் நிற்கும்.

(2) சிற்றுமணக்கம் விரை துருசு
வெள்ளைக்கல்

இவை மூன்றையும் அரைத்து, மூல முளையின்மேல் வைத்துக்கட்டவும்.

(3) எருக்கம் பழுப்புகளைத் தணலிலிட்டுப் புகையை மூலத்தில் காட்டினுலும் மூலம் தீரும்.

## 47. புறமூலத்திற்குக் கருஞ்செம்பை வேர்.

கருஞ்செம்பை யிலையினோடு புளியினிலை நீடு
கழற்கொடியி னிலைமூன்றுஞ் சமங்கூட்டியிடித்துப்
பொருந்துசிறு நீர்விட்டு வதக்கியொற்றி டினும்
புகலொதியம் பட்டையைச்செம் மறியாட்டுப் பாலிற்
றிருந்தவரைத் தொருமூன்று தினங்கொண்டாலுந்
தெரிந்திடுமே பிறமூல வலிகளெல்லா
மிருங்களத்தி லிராமன்பால் ராவணனின்
னெதிர்மூல தளங்கலெல்லா மிறந்ததென்னே (58)

(இ-ள்)

இலவங்கப்பட்டை இலாமிச்சம்வேர்
மரமஞ்சள்

இம்மூன்றும் சமமெடுத்து இடித்துச் சிறுகுழந்தை யின் சிறுநீர்விட்டு வதக்கி மூலத்தில் ஒற்றடம்போடவும்.

(2) ஒதியம்பட்டையைச் செம்மறியாட்டுப் பாலில் அரைத்து, 3 தினங்கள் உட்கொள்ளவும். உள்மூலம், புறமூலம் முதலியவைகளிலுண்டாகும் வலிகள் ராமரிடம் ராவணனின் மூலதளங்கள் தீர்ந்தனபோல் தீரும்.

## 48. இரத்தமூலத்திற்கு இலவங்கப்பட்டைக் குடிநீர்.

இலவங்கத் தின்பட்டைவிலா மிச்சம்வே ரோடின்
சத்தமர மஞ்சளோவ் வொன்றைந்துகா செடைகொண்

டிலகவிடத் திரண்டுபடி நீர்விட் டுழக்கா
யெரித்தருந்தி னுலுமதி மதுரநல்க
நிலவேம்பு சந்தனமிங் கிவற்றினேடே
நிலவுசிறு காஞ்சோறிக் கடாயம்கொண்டாலும்
வலிமையுறு கொண்டுவந்த விரத்த மூலம்
வழிபார்க்கு மறியாமல் வந்தோமென்றே (59)

வந்திடந்த விரத்தமூ லந்தனக்கு
மருவலுற்ற வெட்பாலை யரிசிப்பட்டை
முந்துகரு டப்பச்சைக் கடாயமிட்டு
மூன்றுநாள் கொடுத்திடினுஞ் செங்கழுநீர்க்கிழங்கு
சந்தனமெள் ளிலவினுறுப் பிசின்சுண்டி யைந்துஞ்
சமனுகக் கடாயமிட்டுக் கொடுத்திட்டாலுந்
தந்தினிப் போதுமென்று வாங்கிக்கொண்டு
தங்காம லோடிப்போ மிதுவும் பாரே (60)

(இ-ள்)

இலவங்கப்பட்டை இலாமிச்சம்வேர்
மாமஞ்சள்

இவைகள் வகைக்கு — 5 காசெடை

இவைகளையிடித்து 2 படி சுத்த ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து உட்கொள்ளவும்.

(2) அதிமதுரம் நிலவேம்பு
சந்தனத்தூள் சிறுகாஞ்சோறி வேர்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துக் கஷாயம்செய்து உட்கொள்ளவும்.

இரத்த மூலங்கள் தீரும்.

| | |
|---|---|
| (3) வெட்பாலைபட்டை | கருடப்பச்சை |

இவ்விரண்டையும் இடித்துக் கஷாயம்வைத்து 3 நாட்கள் உட்கொள்ளவும்.

| | |
|---|---|
| (4) செங்கழுநீர்க் கிழங்கு | சந்தனத்தூள் |
| வெள்ளிலவம்பிசின் | எள்ளு |
| சுக்கு | |

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்து, 8 மடங்கு சுத்தஜலம்விட்டு, $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து உட்கொண்டாலும், மூலநோய்கள் நீங்கும்.

## 49. இரத்த மூலக்கடுப்புக்குச் சாதிக்காய் மருந்து.

சர்க்கரை யோர்பலஞ் சாதியின் காயபின்
பிரித்திடு மரையரைப் பலங்கள் கொண்டுதா
னரைத்தரைக் காசெடை யருந்திற் போய்விடு
மிரத்தமூ லக்கடுப் பிரண்டு நாளிலே. (61)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சர்க்கரை | — | 1 பலம் |
| சாதிக்காய் | — | $\frac{1}{2}$ ,, |
| அபின் | — | $\frac{1}{2}$ ,, |

இவைகளை நன்றாக இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் வேளைக்கு $\frac{1}{2}$ காசெடை வீதம் உட்கொள்ளவும்.

இரத்தமூலம், கடுப்பு முதலானவை தீரும்.

## 50. மூலவியாதிக்குக் கஷாயம்.

கடுக்காய் சாறடைவேர் புங்கம்பட்டை
 வில்வவேர் கருதிங் நாலோர்
டடுத்தப்பஞ்ச கோலமிவை சமங்கொண்டு
 கடாயம்வைத் ததிலிந்துப்புப்
பொடித்தினிது கலந்தருந்தில் மூலமோடு
 கிராணிகுன்மம் போவதன்றித்
தடித்துவயிற் றிருக்கின்ற கட்டியும்போ
 மிந்தமுறை தப்பிடாதே. (62)

(இ-ள்.)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | சாறடைவேர் |
| புங்கம்பட்டை | வில்வவேர் |
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| சுக்கு | செவ்வியம் |
| சித்திரமூலவேர் | |

இவைகளையும் சமன்சேர்த்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாக வற்றவைத்து, அதனுடன் இந்துப்புச் சேர்த்துப் பருகவும்.

கிராணி, குன்மம், வயிற்றிலுண்டாகும்கட்டி முதலானவை தீரும்.

## 51. இரத்தமூலம், சீழ்மூலத்திற்கு நாயுருவி நெய்.

நாயுருவி வேர்பலமுப் பதுகொண்டு குறுக்க
 நறுக்கிநீர் பதக்குவிட்டுக் காய்ச்சியிருநாழி

யாய்ப்பின்ன ரிறுத்துக்கொண் டதில்வெட்பாலை
யரிசிபெருங் குறும்பையதி விடையமேலந்
தூயவட்டத் திரும்பிவே ரசமதாகஞ்
சுக்குத்திப் பிலிமிளகு கடுகரோகிணி
யேயபெரு மரப்பட்டை செவ்வியம்தன்னோ
டிசைந்திடுசித் திரமூலஞ் சிறுமூலமாமே (63)

வனசிறுதேக் குச்சீர கம்வசம்பி னுடனே
யணுகியவெண் சிறுகடுகு நாய்வேளை வேர்பின்
னினமிலாப் பெருங்காயங் கருஞ்சீர கந்தா
னிவையொவ்வொன் றொருமூன்று கழஞ்சுகொண்டு
மானமுறப் பொடிசெய்து போட்டுப்பின்பு
வளப்பசுவின் பானாழி நெய்நாழி யுழக்குத்
தானதில்விட் டெரித்தொரு வராகனெடை யருந்திற்
சாற்றிரத்த மூலஞ்சீ மூலமெல்லாந் தீரும். (64)

(இ-ள்.)

நாயுருவிவேர் 30 பலம் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு 2 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, $\frac{1}{4}$ படியாகும்வரை வற்றவைத்து வடிகட்டிக் கொள்ளவும். இதனுடன்

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | பெறுங்குறும்பை |
| அதிவிடயம் | ஏலக்காய் [(மருள்) |
| வட்டத்திருப்பிவேர் | ஓமம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுகரோகிணி |
| பெருமரப்பட்டை | செவ்வியம் |
| சித்திரமூலவேர்ப்பட்டை | திப்பிலி |

| | |
|---|---|
| சிறுதேக்கு | சீரகம் |
| வசம்பு | வெண்கடுகு |
| நாய்வேளைவேர் | அபின் |
| பெருங்காயம் | கருஞ்சீரகம் |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்து, வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு,

| | | |
|---|---|---|
| பசுவின் பால் | — | 5 சேர் |
| ,, நெய் | — | 5½ ,, |

இவைகளை ஒன்ருகக் கலந்து அடுப்பின்மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் ஒரு வராகனெடையெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

இரத்தமூலம், சீழ்மூலம் முதலானவை தீரும்.

## 52. இரத்த மூலத்திற்கு அதிமதுரக் குடிநீர்.

அதிமதுரம் நிலவேம்பு சந்தனத்தோ
டுத்தசிறு காஞ்சோறிவேர் சமமாய்க்கொண்டே
யிதமுறவே கடாயம்வைத்துக் குடித்திட் டாலு
மிலங்கொடுசுக் கதனேடு வெட்பாலைப்பட்டை
மிதமாகச் சமங்கொண்டு கடாயம்வைத்து
மேலிறுத்துக் கொடுத்தாலும் பசுவெண்ணெ
யதின்மூன்று காசெடைகால் பொருந்திட்
டரைத்தருந்தி ஞலும்போ மிரத்தமூலம் (65)

(இ-ள்)

அதிமதுரம் நிலவேப்பு
சந்தனத்தூள் சிறுகாஞ்சோறிவேர்

இவைகளைச் சமமெடுத்து இடித்து, 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து, எட்டிலொன்ருகக் காய்ச்சிப் பருகவும்.

(2) சுக்கு வெட்பாலைப்பட்டை

இவ்விரண்டையும் சமமாக எடுத்து இடித்துக் கஷாயம்செய்து பருகினாலும் இரத்தமூலங்கள் தீரும்.

---

## 53. உள்மூலம், பிறமூலத்திற்கு.

மிளகு கொடிவேலி வேர் பட்டைச்சுக்கு
 மிளகரணை வேர்ப்பட்டை கடுக்காய்தன்னோ
டுளமருவு திப்பிலிதிப் பிலிமூலங்க
 ளூற்றபல மொவ்வொன்றே யெவச்சாரந்தான்
கிளரிரண்டு பலமாஞ்செங் கழுநீருற்ற
 கிழங்கினோடு கோட்டமெட்டுப் பலங்களாகு
மளவுதரு மிவற்றினுக்குச் சமனாகக்காட்
 டுக்கரணைக் கிழங்குமறப் பொடித்துக்
 கொள்ளே (66)

பொடித்திருபத் தைந்துபல வெல்லப்பாகிற்
 போட்டுநன்றாய் கிளரியொரு தான்றிக்காய்போ
லெடுத்துருண்டை செய்ததனை நிழலினூடே
 யினிதுலர்த் திப்புதுக் கலசத்தில் வைத்தே

யடுத்தற்றி லோருருண்டைக் காலைப்போதி
லணுகிடுதேன் சர்க்கரையிங் கிவற்றிலொன் றிற்
கொடுத்திடின்மண் டலங்கைப்புப் புளிப்புத்தள்ளிக்
குடிபோகு முண்மூலம் பிறமூலங்கள். (67)

(இ-ள்)

மிளகு கொடிவேலிவேர்ப்பட்டை
சுக்கு மிளகரணைவேர்ப்பட்டை
கடுக்காய்த்தோல் திப்பிலி
திப்பிலிமூலம்

| | | |
|---|---|---|
| இவைகள் வகைக்கு | — 1 | பலம் |
| எவச்சாரம் | — 2 | ,, |
| செங்கழுநீர்க்கிழங்கு | — 8 | ,, |
| கோஷ்டம் | — 8 | ,, |

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இவைகளுக்குச் சமனெடை காட்டுக்கரணைக் கிழங்கை உலர்த்தி இடித்துத் தூள்செய்துகொண்டு, வெல்லம் 25 பலம் எடுத்து, அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கி, அதில் முன்சொன்ன சூரணங்களை இட்டுக் கிளறி, தான்றிக்காய்ப் பிரமாணமுள்ள உருண்டையாக உருட்டிவைத்துக்கொள்ளவும். பின்னர் இதனை நிழலில் உலர்த்துப் புதுப்பாண்டத்தில் பத்திரப்படுத்தவும்.

தினம் காலைவேளையில் ஒரு மாத்திரையைத் தேனிலோ அல்லது சர்க்கரையிலோ எடுத்து 1 மண்டலம் வரையுட்கொள்ளவும்.

**பத்தியம் :—**

கசப்பு, புளிப்பு, இனிப்புச் சுவைகளுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

உள்மூலம், வெளிமூலம் தீரும்.

# 54. மூலத்தின் குணமும், மருந்தும்.

வயிறதனிற் கடுப்புண்டாம் பின்னபா வாயிலெரி
'ஏற்றிடுமுட் குடலெரிந் துவலிக்கும்
பயமுறவே மலந்தீய்ந்து விழுந்தபின்பு
பருக்கவுதி ரம்வீழு மிருமூலத்தி
னியல்குணமா மிவைதாமிங் கிவற்றிற்காங்கே
யினிதான முத்தெருக்கஞ் செவியின்வேரும்
நயனுறவே லின்வேருஞ் சமனாகக் கொண்டிதற்கு
நாலிரெட்டிக் கருங்குறுவை யரிசிகூட்டே. (68)

அரிசியின்ற னளவேமா விலங்கை வேர்கொண்
டதனையுமி டித்துத்தூ ளாக்கித்தூளில்
விரவெனுமிச் சங்காயி னளவுகொண்டு
விளம்பிடுநல் லெண்ணெயினில் வேகவைத்து
வருமூன்று தினங்கொண்டா லம்மூலங்கள்
மாறிவிடும் பத்தியமுப்புப் புளிகைப்பாகா
காவலுறு பசுவின்பால் நெய்தன்னோடு
பன்றியிறைச் சியுமாகு மிதுவும்பாரே. (69)

(இ-ள்)

ஆரம்பத்தில் வயிற்றில் கடுப்பு உண்டாகும். பின்னர் ஆஸனவாயில் எரிச்சல் உண்டாகும். குடலும் காந்தும், வலியுண்டாகும். மலச்சிக்கலேற்படும். மலம் போனபின் இரத்தம் வீழும். இவைகள் மூலரோகத்தின் குணங்களாகும்.

இதற்கு மருந்தாவது :

முத்தெருக்கன்செவிப்பூண்டின் வேர்
வேலம்வேர்

இவ்விரண்டையுஞ் சமனெடுத்து இடித்து, 8 மடங்கு கருங்குருவையரிசிமாவு சேர்க்கவும். அரிசிக்குச் சமனிறை மாவிலங்கைவேர் எடுத்துத்தூளாக்கி அதனையும் சேர்த்துக்கொள்ளவும். இத்தூளில் எலுமிச்சங்காயளவெடுத்துத் தண்ணீர்சேர்த்து, நல்லெண்ணெயும்விட்டு வேகவைத்துக் களிசெய்து உட்கொள்ளவும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும்.

உள்மூலம், வெளிமூலங்கள் மாறும்.

பத்தியம் :-

உப்பு, புளிப்பு, கசப்புச்சுவையுள்ள பதார்த்தங்களை நீங்கிப் பசவின் பால், நெய், பன்றியிறைச்சி முதலியவைகளைக் கூட்டவும்.

## 55. மூலத்திற்குச் செந்நாயுருவி நெய்.

பரவிடுசெங் நாயுருவி சமூலம்நூறு
பலநிறைகொண் டிடித்தெட்டு மரக்காணிர்விட்
டொருகுறுணி யாய்க்காய்ச்சி வடிக்கட்டிக்கொண்
டொருபடிநெய் யோடுநாலு படிபால்விட்டுத்
திரிகடுகு திரிபலைபொன் முசுட்டைவேருஞ்
சிவதைவேர் காஞ்சிரம்வேர் கொல்லைப்பல்லிக்
கருதுசேங் கொட்டைநேர் வாளமிந்துப்புக்
கத்தூரி மஞ்சளொடு வெட்டிவேரும் (70)

புளிநரளைக் கிழங்கினொடு தான்றிப்பட்டை
புங்கினொடு பட்டையினோ டாயிற்பட்டை

வளர்பிரண்டைக் கிழங்குதான் சமனாகக்கூட்டி
வளனுதவு மாவின்பால் விட்டரைத்தே
யளவுபெரு நாலுநாள் காய்ச்சிப்பின்ன
ரைந்தாநாள் வடித்திரண்டு காசெடைநெய்
மொளிதருகா லைப்போதி லருந்திவந்தா
லுண்மூலம் புறமூல மெல்லாந்தீரும். (71)

(இ-ள்)

செங்காயுருவிச்சமூலம் 100 பலம் எடுத்து, இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்கால் ஆகும்வரை வற்ற வைத்து, வடிக்கட்டிக்கொள்ளவும். இக்கஷாயத்துடன்,

| | | |
|---|---|---|
| பசுவின் நெய் | — | 1 படி (5 சேர்) |
| ,, பால் | — | 4 படி (20 சேர்) |

விட்டு, ஒன்றுகலந்து

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| பொன்முசுட்டைவேர் | சிவதைவேர் |
| எட்டிமரவேர் | கொல்லைப்பல்லிப்பூண்டு |
| சுத்திசெய்த சேங்கொட்டை | இந்துப்பு |
| ,, நேர்வாளம் | கஸ்தூரிமஞ்சள் |
| வெட்டிவேர் | புளிநரளைக்கிழங்கு |
| தான்றிமரப்பட்டை | பிரண்டைக்கிழங்கு |
| ஆயில்பட்டை | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடையெடுத்து இடித்துப் பசுவின் பால்விட்டு நன்ருக அரைத்து, முன் சொன்ன கஷாயம் சேர்ந்த நெய்யுடனே குழப்பி

அடுப்பின் மேலேற்றிச் சிறுகச்சிறுக 4 நாட்கள் எரித்து 5-வது நாள் பக்குவப்படுத்தி இறக்கவும். இந்தநெய்யைக் காலை நேரத்தில் 2 காசெடைகள் உட்கொள்ளவும்.

உள்மூலம், புறமூலம் முதலானவை தீரும்.

## 56- உள்மூலத்திற்கு மருந்துகள்.

காவினுறு குருந்திலை தும்பையிலை யுலர்த்திக்
கண்டதூள் விளக்கெண்ணெய் தனிற்கொண்டாலு
மேவலுறு சங்கம்வேர் தனையரைத்துத் தேனில்
விழுங்கிடினும் வெண்காயந் தனைநெய்யிற் பொரித்து
நாவினிமை யிற்கொளினு பொரிமாவிற் பிரண்டை
நற்கிழங்கை யரைத்துச்சேர்த் தருந்தினலும்
ஆவின்பா லிற்கோவைக் கிழங்குதன்னை
யரைத்தருந் தினலுமுண்மூலந் தீரும் (72)

(இ-ள்)

காட்டுக்குருந்தையிலை தும்பையிலை

இவ்விரண்டையும் நிழலில் உலர்த்தி, இடித்து, வஸ்திரகாயஞ்செய்து, ஆமணக்கெண்ணெயுடன் குழப்பியுட்கொண்டாலும்,

(2) சங்கம்வேரையரைத்துத் தேனுடன் குழப்பிச் சாப்பிட்டாலும்,

(3) பெருங்காயத்தை நெய்யில் பொரித்து உட்கொண்டாலும்,

சான்றிடுகொன் றைப்பட்டை செம்புளிச்சஞ்
சேதனசெங்க தாரிப்பட்டை
போற்றுசது ரக்கள்ளிச் சிராய்வகைக்கு
பலமைந்தாய்ப் பொருந்தக்கொண்டு
கோற்றிரதம் பலமரைநெல் லிக்காய்கெந்
தகங்காயந் தொகுமொவ்வொன்று
பேற்றபல மிம்மூன்றுஞ் சம்பீரச்
சாற்றிலரைத் தெடுத்துக்கொள்ளே (13)

எடுத்ததனை யொருபெரிய பானையினி
லுள்ளெங்கு மிலங்கப்பூசித்
தொடிடிந்த வேரிஞெடு மருந்தெவையு
முள்ளிட்டுத் துலங்கமூடி
எடுத்திலகு சேலைமண்செய் தப்பானை
யடிதுளைத்திட் டவனிதன்னிற்
படுத்தவொரு குழிசெய்து நீர்விட்டோர்
கலசம்வைத்துப் பானைவையே (14)

வைத்தகல சத்தினுக்கும் பானைக்கு
முறச்சேலை மண்செய்திட்டு
மெத்தவெரு முட்டையொரு விறகுதன்
னுற்சாம மேலெரித்துச்
சுத்தமா யாறினபின் னெடுத்தோர்பாத்
திரத்துவைத் துத்தொடர்ந்து
நித்தமுய்த்துப் பணவெடை யருந்திமேற்பூசக்
குட்டமெல்லா மோடிப்போமால். (15)

(இ-ன்)

தகரைவிதை கார்போகவரிசி
எள்ளு சுத்திசெய்த சேங்கொட்டை
உளுந்து

இவைகள் வகைக்கு — ஒரு படி

வாலுளுவைவேர் தகரைவேர்
வெள்வேலம் புரணி தேக்கம் செதிள்
எருக்கம்வேர் புளியஞ்சிராய்
வெட்பாலைப்பட்டை மான்கொம்பு
துளசிவேர் சிறுகுறிஞ்சாவேர்
நெடுங்குறிஞ்சாவேர் கொன்றைப்பட்டை
செம்புளிச்சை செங்கதாரிப்பட்டை
சதுரக்கள்ளிச்சிராய்

இவைகள் வகைக்கு — 5 பலம்

சுத்திசெய்த பாதரஸம் — ½ பலம்
நெல்லிக்காய் கெந்தகம் 1 ,,
பொரித்த பெருங்காயம் — 1 ,

இவைகள் எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு, எலிமிச்சம்பழச்சாறுவிட்டு நன்ருகவரைத்து, ஒரு பெரிய பானையின் அடியில் ஒரு துவாரம் போட்டு, அதன் உட்பக்கத்தில் இக்கல்கத்தை நன்ருகப் பூசிவிடவும். பின்னர், முற்கூறிய வேர் விதை முதலானவைகளைச் சுமாராக இடித்துப் பானைக்குள் போடவும். பானை வாய்க்குச் சீலைமண்செய்து வைத்துக்கொள்ளவும்.

பூமியில் ஒரு குழிசெய்து, அதில் ஒரு கலசத்தை வைத்து அதன் மேல் மருந்துள்ளபானையின் துவாரம் நடுவில் வரும்படியாகப் பொருத்திச் சேலைமண்செய்யவும். பின்னர் மேல்பானையைச் சுற்றிலும் எருமுட்டை

களையோ அல்லது விறகையோ அடுக்கி ஒரு சாமம் எரிக்கவும் நன்ருக ஆறியபின் பானையை நீக்கிக் கலத்தில் விழுந்திருக்கும் குழித்தைலத்தை யெடுத்து பத்திரப்படுத்தவும்.

இந்தத் தைலத்தில் $3\frac{1}{3}$ குன்றிநிறை உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலும் பூசவும். குஷ்டங்கள் தீரும்.

## 8. குஷ்டத்திற்குக் கெந்தக ரஸாயனம்.

சுத்திசெய்த கெந்தகந்தான் பலமாறு
 திரிகடுகு தொடர்சேங்கொட்டை
மெய்த்திருவாய் விளங்கமொடு சன்னலவங்
 கப்பட்டை மேலதன்றன்
பத்திரிநற் றிருபலைவெங் கொடிவேலி
 யேலமொடு பாரிஞேர் சொல்
அத்தியெனுந் திப்பிலிப திமூன்றும்
 பலமொவ்வொன் றடர்தூள் செய்யே. (16)

செய்யதனில் வராகனெடை யொன்றிரண்டு
 மூன்றளவுந் தெரிந்துகொண்டு
மெய்யினது வலியறிந்து காலையினிற்
 றேனுதல் வெண்ணெயாதல்
நெய்யாத லிலகுசர்க் கரைவாழைப்
 பழத்திறு திகழ்சாருதல்
கையதிற்கொண் டதிலருந் திப்புளிப்புக்
 கடுகுமுதல் கடக்கத்துள்ளே. (17)

தள்ளிவிட்டு நியமமதாய்ப் பசுவின்பா
லுடனன்னந் தனித்துத்தானே
கொள்ளிடுவாழ் நாள்வளரும் வலிமையுறு
மழகெய்துங் கொடுமைநீங்கும்
கள்ளமுறு கிராணிகுட்ட மகோதரமக்
கினிமாந்தங் கனத்தமூல
முன்னிருக்கும் பித்தமிவை யாவுமொரு
மண்டலத்தி லோடிப்போமே. (18

(இ-ள்.)

சுத்திசெய்த கெந்தகம் — 6 பலம்

| | |
|---|---|
| சுக்கு | வாயுவிடங்கம் |
| திப்பிலி | சன்னலங்கப் |
| மிளகு | பட்டை |
| சுத்திசெய்தசேங்கொட்டை | லவங்கப்பத்திரி |
| நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| வெள்ளைக்கொடிவேலிவேர் | தான்றித்தோல் |
| யானைத்திப்பிலி | ஏலக்காய் |

இச்சரக்குகள் வகைக்கு — ஒரு பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்து, வைத்துக்கொள்ளவும். தேக பலத்திற்கு ஏற்றபடி 1 முதல் 3 வராகனெடை யளவு காலை நேரங்களில் தேனிலோ, வெண்ணெயிலோ அல்லது நெய்யிலோ, சர்க்கரையிலோ அல்லது வாழைப்பழச் சாற்றிலோ கொடுக்கவும்.

பத்தியம் :—

புளிப்புச்சுவை பதார்த்தங்கள், கடுகு இவைகளை நீக்கவும். பசுவின் பால் சாதம் சாப்பிடவும்.

நீடித்த ஆயுளும், நல்ல தேக அழகும், பலமும் தரும். கிராணி, குஷ்டம், மகோதரம், அக்கினிமாந்தம், மூலம், பித்தம் முதலானவை நீங்கும்.

45 நாட்கள் உட்கொள்ளவும்.

## 9. குட்டம், பவுத்திரமுட்பட்ட பலவியாதிக்குக் குக்குலுகிருதம்.

முதிர்வேப்பம் பட்டைபேய்ப் புடல்கண்டங்
    கத்திரிவேர் முதிர்ந்த சீந்தி
லதனுடனு டாதோடையொற்ற சிறியவழு
    துணையிவெற்றி னடியின்வேர்கள்
பதின்பலங்கொண் டிடித்தெட்டு மரக்காணீர்
    குறுணியதாய்ப் பட்டிக்காய்ச்சி
யிதமுற பசுவினெய்யோர் படியோரை
    தனிற்சே ரின்னுங்கேளே (19)

இன்னும்வாய் விடங்கமத்தித் திப்பிலிசத்
    திச்சார மெவச்சாரந்தான்
பொன்மூசுட்டை வேர்செவிய மிளகேலங்
    கொடிவேலி புகழுக்கோட்டம்
மன்னுவதிப் பிலிமூலந் திப்பிலிமஞ்
    சிட்டிமஞ்சள் வசம்புசுக்கு
நன்மைதரு கடுக்காய்சீ ரகம்விடய
    மோமமொரு நவில்வெட்பாலை (20)

பாவிலங்கு வீழிவேர்ப் பட்டைகடுகு
ரோகிணியின் பரிந்துகூற
மேலிலங்கு தேவதா ரம்வகைக்குக்
காசளவு விளம்புசுக்குச்
சாலவே சுத்திசெய்த தைந்துகா
சளவிதெல்லாந் தண்ணீர்விட்டு
மாலுறவே யரைத்தைந்து நாளெரியிட்
டாறுநாள் வடித்துக்கொள்ளே (21)

வடித்திடுநெய் தனிலேந்து காசெடைகுக்
குலுப்பொடித்து மருவச்சேர்த்துத்
தொடுத்திருகா செடையளவு காலையினி
லருந்துவந்தாற் றுலையாப்பாண்டு
கடுத்திடுமண் டைச்சூலைக் கயங்குட்டம்
வீக்கமொடு கண்டமாலை
படுத்திடுவிப் புருதிசுரோ ணிதவாதம்
வாந்திபுண்கள் பறக்கும் பாரே. (22)

(இ-ள்)

| | |
|---|---|
| முற்றியவேப்பம்பட்டை | பேய்ப்புடல் |
| கண்டங்கத்திரிவேர் | முற்றியசீந்தில்கொடி |
| ஆடாதோடைவேர் | சிறுவழுதுணைவேர் |

இவைகளை வகைக்கு 10 பலங்கள் வீதமெடுத்து இடித்து, ஒரு முடாவிலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாகும்வரை வற்றவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். இதனுடன் பசுவின் நெய் 1 படி சேர்த்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| வாயுவிடங்கம் | யானைத்திப்பிலி |

| | |
|---|---|
| சத்திச்சாரம் | எவச்சாரம் |
| பொன்முசுட்டைவேர் | செவ்வியம் |
| மிளகு | ஏலக்காய் |
| கொடிவேலிவேர் | கோஷ்டம் |
| திப்பிலிமூலம் | திப்பிலி |
| மஞ்சிட்டிக்கிழங்கு | மஞ்சள் |
| வசம்பு | சுக்கு |
| கடுக்காய்த்தோல் | சீரகம் |
| அதிவிடயம் | ஓமம் |
| வெட்பாலையரிசி | வீழிவேர்ப்பட்டை |
| கடுகரோகிணி | தேவதாரு |

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடையும்,

சுத்திசெய்த சுக்கு — 5 வராகனெடையும்

எடுத்து, இடித்துத் தண்ணீர்விட்டு நன்ருகவரைத்து, முன் கஷாயத்துடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி 5 நாட்கள் சிறுகச்சிறுக எரித்து, 6-வது நாளன்று பக்குவத்தில் இறக்கவும். இதனை வடிக்கட்டி ஒரு ஜாடியில் பத்திரப்படுதவும்.

இந்த நெய்யில் சுத்திசெய்த குங்கிலியம் 5 வராகனெடை யெடுத்து நுணுக்கிச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். தினம் காலையில் 2 வராகனெடை நெய் உட்கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :**

பாண்டு, மண்டைச்சூலை, க்ஷயம் குஷ்டம், வீக்கம், கண்டமாலை, விப்புருதி, ரத்தவாதம், வாந்தி, புண்கள் முதலியன.

## 10. கெந்தகபற்பம்.

சிறுசின்னி யிலைக்குகையிற் கெந்தகம்வைத்
ததின்மூடிச் சேலைமண்செய்
துறமேற்குக் குடம்போ டொருநெல்லி
னெடைதேனி லுற்றருந்திற்
றெறுவயிற்று வலிமேக ரோகம்வாத
ரோகங்கிரந்தி சில்விஷங்கள்
நிறைவீக்கம் பாண்டுகுட்டங் கர்ப்பரோ
கஞ்சூலை நில்லாதோடும். (23)

(இ-ள்)

சிறுசின்னியிலையை எடுத்துத் தண்ணீர்விட்டு, நன்ருக வரைத்துக் குகைசெய்துவைத்து, அதனுள் சுத்திசெய்தகெந்தகத்தை இட்டு மூடி, ஓட்டில்வைத்துச் சீலைமண்செய்து குக்குடப்புடம் இடவும். (ஒருசாண் நீள அகலமுள்ள புடம்). பின்னர், புடத்தைக் கலைத்து பற்பத்தைப் பத்திரப்படுத்தவும்.

ஒரு நெல்லெடையெடுத்துத் தேனில் கொடுக்கவும்.

**தீரும் நோய்கள் :**

வயிற்றுவலி, மேகரோகம், வாதரோகம், கிரந்தி, சில்விஷங்கள், வீக்கம், பாண்டு, குஷ்டம், கர்ப்பரோகம், சூலை, முதலான நோய்கள் நீங்கும்.

## 11. குஷ்டங்களுக்குப் புங்கம் நெய்.

புங்கினோடா யிற்பட்டை தேவதாரங்
கடுக்காய்புகல் சேங்கொட்டை

வன்கள்ளி வேம்புகொடி வேலிகச்
சோலம் தந்திவில்வம்
அன்புறுதிப் பிலிமூலஞ் சாரணைபுட்
கரமூல மாமிவ்வெல்ல
யின்புறவே வகையினுக்குப் பதின்பலந்தா
ணிப்புனலி னிலங்கப்போடே (24)

போட்டெரித்துக் குறுணியதாய்க் கொண்டுபருத்
திக்கொட்டை புகழ்நெல்கொள்
வாட்டமில்லாப் படியொவ்வொன் றீராறு
படிபுனலின் மருவப்போட்டுக்
காட்டிமதா லெரியிட்டுக் காலிலொன்றாய்
கொண்டிரண்டு கடாயமும்சேர்த்
தீட்டமுறு பசுவினெய் கலந்துதிரி
பலைநன்கி சைவசம்பு (25)

வசமுறுகம் பில்லகமேற் சிறுதேக்கு
வஞ்சியொடு வாய்விளங்க
மிசையுறு வாசனைப்புல் யானைத்திப்
பிலியுடன்சுக் கின்னவெல்லாம்
அசைவகைக்குப் பலத்தூள்போட் டெரியிட்டு
வடித்துக்கா சளவருந்திற்
பிசகாமற் சோணிதவாய் வுடன்மூலங்
கட்டிகுன்மம் பிரமேகம்போம். (26)

இ-ள்.)

| | |
|---|---|
| புங்கம்பட்டை | ஆயிற்பட்டை |
| தேவதாரு | கடுக்காய்த்தோல் |

சுத்திசெய்தசேங்கொட்டை கள்ளிவேர்

| | |
|---|---|
| வேப்பம்பட்டை | கொடிவேலிவேர் |
| கச்சோலம் | சுத்திசெய்தவாளம் |
| வில்வவேர் | கண்டத்திப்பிலி |
| சாறணைவேர் | புஷ்கரமூலம் |

இவைகளை வகைக்கு 10 பலம் எடுத்து வெட்டி, ஒரு முடாவிலிட்டு 4 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாகும்வரை வற்றவைக்கவும். பின்னர்

பருத்திக்கொட்டை
கொள்ளு

இவைகளை வகைக்கு 1 படி யெடுத்து இடித்து 12 படி சுத்த ஜலம்விட்டு, அடுப்பின்மேல்லேற்றி, 3 படியாகும்வரை வற்றக்காய்ச்சி, இரு கஷாயங்களையும் ஒன்றுசேர்த்துப் பசுவின் நெய் 3 படியும்விட்டு

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | வசம்பு |
| கம்பில்லம் (ஞாழல்) | சிறுதேக்கு |
| வஞ்சிப்பில் | வாய்விடங்கம் |
| வாசனைப்புல் | யானைத்திப்பிலி |
| சுக்கு | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து இடித்துச் சூரணம் செய்து கஷாயத்துடன் கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு கால்செடை வீதம் உட்கொண்டுவந்தால்

சோணிதவாதம், மூலம், கட்டி, குன்மம், பிரமேகம் முதலானவைபோம்.

## 12. குஷ்டத்திற்கு

துனிப்பச்சைக் கடலைதின்று வாலுழுவை
யரிசியினைத் தகவரைத்திட்
டினியபாலி னிற்குடித்து மேலினும்பூ
சிக்குளித்தே யிலங்குநீரும்
அனமுமாய்ப் பன்னிரண்டு நாளருந்தி
மேற்பாலோ டனஞ்சேர்த்துண்டு
தினமொருநா ளாறுகழித் தாற்குட்டமெனச்
சொல்வதெல்லாந் திசைகெட்டோடும். (27)

(இ-ள்)

கொத்துக்கடலையைப் பச்சையாகத்தின்று, வாலுவையரிசியைப் பசுவின்பால் விட்டரைத்துப் பாலில் குழப்பி அருந்தவும். இதனையே உடம்பின்மேல் தேய்த்து ஸ்நானம் செய்யவும். 12 நாட்களுக்கு வெந்நீர்சாதம் மாத்திரமே சாப்பிடவும். குஷ்டரோகம் தீரும்.

## 13. கருங்குஷ்டம், வெண்குஷ்டம் முதலானதிற்கு தேத்தான் மருந்து.

சாற்றிடுதேற் றம்பழத்தின் விதைபோக்கி
மற்றதனைத் தகவரைத்துப்
போற்றிடுதூ தளங்காயி னளவுருட்டி
நிழலுலர்த்திப் புகலீராரு
யேற்றிடுநா ளொவ்வொருண்டைப் பசுவின்பா
லினிற்கொள்ள வேகுங்குஷ்டம்

வேற்றொருண்டை பொடித்தெழுநாள் காடியினிற்
கரைத்தருந்தின் மிகுமூலம்போம். (28)

ஒருண்டை யதிற்பாதி யளவுடம்பி
னழுக்கது மொக்கச்சேர்த்து
றிருகாடி யின்மூன்று நாளருந்தின்
மருந்தீடு நீங்கிப்போகும்
பாரிலகு புளியம்விதை யூறவைத்துப்
புனலதனிற் பகரோருண்டை
சேரவரைத் துக்கொடுத்தால் சுவாசகா
சப்பிணிதான் றீருமன்றே. (29)

(இ-ள்)

தேத்தாம்பழத்தின் விதையை நீக்கிப் பழச்சதையை நன்றாகவரைத்து, தூதுவளங்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். தினம் ஒரு உருண்டைவீதம் 12 நாட்கள் பசுவின் பாலுடன் கூட்டியுட்கொள்ளவும்.

குஷ்டரோகம் தீரும்.

முன் போல் 7 நாட்கள் காடியில் உட்கொண்டால் மூலநோய் தீரும்.

முன் மாத்திரை ஒன்றும், உடம்பின் அழுக்கு ½ மாத்திரைப் பிரமாணமும் சேர்த்துக் காடியுடன் 3 நாட்கள் உட்கொள்ளவும். மருந்தீடுகள் தீரும்.

ஷை மாத்திரையை புளியங்கொட்டை விதையை ஊறவைத்த தண்ணீரில் அரைத்துக் கொடுக்கவும். சுவாசகாசப் பிணிகள் தீரும்.

குஷ்ட ரோக சிகித்சை முற்றும்.

# சரபேந்திர வைத்ய முறைகள்

## (பித்த ரோக சிகித்ஸை)

### 1. பித்தத்திற்கு வில்வாதிச் சீதகஷாயம்.

நன்னயஞ்சேர் வில்வவேர் நல்லவெல்லம்
நண்ணொருவ கைக்குமுப்ப தாம்பலந்தான்
பின்னந்த மூன்றுபலஞ் சுக்கவ்வத்தித்
பிலியிரண்டு பலஞ்செவியம் பலங்கூட்டொன்றே
சொன்னதொன்றே தாளிசபத் திரிபலந்தான்
சூழ்நாக கேஸரமொன் றரைப்பலஞ்சீர்
யின்னமுந்திப் பிலிமூலம் பலமிரண்டே
யிலவங்கப்பட் டைபத்திரி யெல்லாங்கேளே. (1)

ஏலமிந்த வொவ்வோரு வகைக்கேயப்பா
விட்டிடரைப் பலஞ்சரியா யெல்லாம்நன்ருய்
கோலமுடன் முறைதனிலே யூறவைத்துக்
கொண்டெடுத்துப் பிசைந்திறுத்துக் கொடுத்தால்
சாலவும்பொல் லாதபித்த ரோகந்தீருஞ் [காலை
சந்ததமுஞ் சிவபூஜை மகிமையாலே
சீலமதாய்ப் பலதேசம் மெச்சிவாழுஞ்
செல்வநிறை சரபேந்திரன் செப்பும்வாறே. (2)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வில்வவேர் | | வெல்லம் |
| இவைகள் வகைக்கு | — | 30 பலம் |
| சுக்கு | — | 3 ,, |
| யானைத்திப்பிலி | — | 2 ,, |
| செவ்வியம் | — | 1 ,, |
| தாளீசபத்திரி | — | 1 ,, |
| நாககேஸரம் | — | ½ ,, |
| திப்பிலிமூலம் | — | 2 ,, |
| லவங்கப்பட்டை | — | ½ ,, |
| ஏலக்காய் | — | ½ ,, |

இவைகளை இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, வேண்டிய அளவு சுத்தஜலம் விட்டுறவைத்துப் பிசைந்து இறுத்துக்கொடுக்கவும். இவ்வாறு ஒருவாரம் உட்கொள்ளப் பித்தரோகந் தீரும்.

## 2. பித்தச் சூட்டிற்குப் பிருங்காமலத் தைலம்

உல்லாச நெல்லிக்காய்ச் சாற்றின்னன்று
யுரியதுகை யாந்தகரைச் சாறவ்வாறே
சொல்லார்ந்த நல்லெண்ணெயோர் நாழியின்னஞ்
சுகமான பசுவின்பா லதுநாநாழி
சல்லாப மாயுரைத்த படியேயந்தச்
சட்டமுள்ள வகைநான்குந் தானேகூட்டி
யல்லாம லதிமதுரம் பலந்தானென்றே
யதைப்பாலி லரைத்தெடுத்தே யப்பாற்கேளே (3)

அப்பாலெல் லாங்கலந்து காய்ச்சிவைத்தே
யதனையுஷ்ண காலமதிற் சொல்லும்நீதி
தப்பாமல் நான்குநாளைக் கோர்முழுக்கே
தார்செய்தா லுத்தமசீ தளகாலத்தில்
ஒப்பாய்த்தா னெட்டுநாளைக் கோர்முழுக்கே
யுரைத்தபடி நடக்கில்பித்தச் சூடும்நன்றும்
யிப்பாரில் போசமகா ராசனேராய்
யிலங்குசர பேந்திரமா லியம்புவாரே. (4)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| நெல்லிக்காய்ச் சாறு | — | ½ படி |
| கையாந்தகரைச்சாறு | — | ½ ,, |
| நல்லெண்ணெய் | — | 1 ,, |
| பசுவின்பால் | — | 4 ,, |

இவைகளை ஒன்றுகலந்து, அதிமதுரம் 1 பலம் எடுத்துப் பசுவின் பால்விட்டு நன்றாகவரைத்துச் சாறு கலந்த எண்ணெயுடன் கலந்து அடுப்பின்மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

நான்கு நாட்களுக்கொருமுறை கோடை காலத்திலும், 8 நாட்களுக்கொருமுறை குளிர்காலத்திலும் தேய்த்து முழுகவும்.

பித்தச்சூடுகள் தீரும்.

## 3. பித்தத்திற்கு ஏலாதி லேகியம்.

ஏலமிலா மிச்சையின்வேர் வெட்டிவேரு
மொழில்பேரீச் சம்பழங்கி ராம்புசுக்கு

கோலமுந்தி ரிகைப்பழந்தான் றிக்காய்பொல்லாக்
கொடிவேலி வேர்கடுக்காய் வெள்ளைப்பூண்டு
சீலநெல்லிக் காயொடுதிப் பிலியின்மூலஞ்
சிறந்திடுகஸ் தூரிமஞ்சள் நெருஞ்சில்வேரும்
பாலணிகோ ரைக்கிழங்கு பருத்திக்கொட்டைப்
பகர்மிளகு பெருங்காயம் பாங்காய்க்கேளே (5)

பாங்காய்க்கேள் நெற்பொரியுஞ் சமதைகூட்டிப்
பக்குவம தாயநெல்லா மிடித்துக்கொண்டே
ஆங்காய்நல் சூரணத்தில் நெய்தேன்விட்டே
யதைப்பிசைந்து லேகியஞ்செய் துண்டேவந்
வாங்காத பித்தமெல்லாம் வாசியாகும் [தால்
வாமியபிராமி பலகாமி பாலில்
நீங்காத சங்கரனார் பாதபூசை
நேசமதி சரபேந்திர மால்சொல்வாரே. (6)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | இலாமிச்சம்வேர் |
| வெட்டிவேர் | பேரீச்சம்பழம் |
| கிராம்பு | சுக்கு |
| திராக்ஷைப்பழம் | தான்றிக்காய் |
| கொடிவேலிவேர் | கடுக்காய்த்தோல் |
| வெள்ளைப்பூண்டு | நெல்லிவற்றல் |
| திப்பிலிமூலம் | கஸ்தூரிமஞ்சள் |
| நெருஞ்சில்வேர் | கோரைக்கிழங்கு |
| பருத்திக்கொட்டை | மிளகு |
| பெருங்காயம் | நெற்பொரி |

இவைகளையெல்லாஞ் சமனெடுத்து, இடித்துச் சூரணம் செய்துகொண்டு நெய், தேன், இவைகளை

வேண்டிய அளவுவிட்டுப் பிசைந்து லேகியமாகச் செய்து உட்கொண்டுவந்தால், பித்தம் தீரும்.

## 4. பித்தத்திற்கு முழுகச் சந்தனாதித் தைலம்.

சந்தனம் விலாமிச்சை சீந்திற்றண்டு
சார்ந்தநெல்லிக் காயாறு பலம்வகைக்கே
அந்தநந்நீர் குறுணிவிட்டே நான்கோர்பங்கா
யாகவுந்தா னேகாய்ச்சி வடித்தெடுத்தே
கந்தநிறை புழுகுசட்ட மேலங்கோட்டங்
கற்பூரநாகப்பூ வொடுதக் கோலம்
பந்தமிரு வேலியில வங்கப்பட்டை
பச்சிலைநன் ஞரியகி லின்னங்கேளே. (7)

இன்னமதி மதுரசந்றசந் தனஞ்சாதிக்கா
யிலங்கியசெங் கழுநீரின் கிழங்குமல்லா
வன்னமிகு யீரவெங்கா யத்தோலவ்வோர்
வகைக்கோரு வராகனெடை யரைத்துக்கொ
சொன்னபடி நாழியுழக் கேநல்லெண்ணெய் [ண்டே
சுகமாக விட்டெரித்துத் தலையும்முழ்கி
அன்னதொரு கழஞ்சதுண்டாற் பித்தந்தானே
ஆதித்தன் முன்பனிபோ லகன்றுபோமே. (8)

(இ-ள்.)

| | |
|---|---|
| சந்தனத்தூள் | இலாமிச்சம்வேர் |
| சீந்திற்கொடி | நெல்லிக்காய் |

இவைகளை வகைக்கு 6 பலம் வீதமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் ஒரு மரக்கால்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, $\frac{1}{4}$ பாகமாக வற்ற வைத்துக்கொள்ளவும். பின்னர்,

| | |
|---|---|
| புனுகுசட்டம் | ஏலக்காய் |
| கோஷ்டம் | பச்சைக்கற்பூரம் |
| சிறுநாகப்பூ | தக்கோலம் |
| வெட்டிவேர் | இலவங்கப்பட்டை |
| பச்சிலை | நன்னாரிவேர் |
| அகில்கட்டை | அதிமதுரம் |
| சந்தனத்தூள் | சாதிக்காய் |
| செங்கழுநீர்க்கிழங்கு | பூண்டு |

இவைகளை வகைக்கு ஒவ்வொரு விராகனெடை யெடுத்து இடித்துக் கஷாயம்விட்டரைத்து நல்லெண் ணெய் 6 சேர் விட்டுக்கலந்து, எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு கழஞ்சு உள் ளுக்கும் கொடுத்துத் தலைமுழுகியும் வரவும்.

பித்தநோய்கள் தீரும்.

## 5. பித்தத்திற்குச் சதாவரிக்கிருதம்.

பாங்கான வெள்ளரியவ் விரைதான் திட்டம்
படியரைச் சதாவரிக் கிழங்கின் சாற்றில்
ஆங்காகும் படியேயரு கின்வேர் நான்காம்
பலம்விலாம் மிச்சைவே ரவ்வாறேதான்
நீங்காமல் சேர்த்திரண்டு மிடித்துக் கொண்டே
நீரதிலே நாலுபடி விட்டுக்காய்ச்சி

யேங்காம லரைப்படியாய் வடித்தேயப்பா
லேலம்நற் கிராம்புமல்லா லியம்பக்கேளே (9)

இயம்பக்கேள் சீரகஞ்சுக் குசாதிக்கா
யிலங்குகொத்த மல்லிபொற்ற ளீசபத்திரி
நயப்பூலாங் கிழங்கொடுவால் மிளகுசோம்பு
நாட்டொரு வராகனெடை வகையொன்றுக்கே
வியங்கொளரைப் பலம்பனங்கற் கண்டுநெய்தான்
விட்டரைப் படியதுபின் வளமாய்க்காய்ச்சி
நியமமுட னுண்டுவந்தால் பித்தமெல்லாம்
நில்லாது சொல்லாமல் நீங்கிப்போமே. (10)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| வெள்ளெரிவிதை | — | ½ படி |
| சதாவரிக்கிழங்குச்சாறு | — | ,, |

இவைகளுடன்,

| | | |
|---|---|---|
| அருகம்வேர் | — | 4 பலம் |
| இலாமிச்சம்வேர் | — | ,, |

இவ்விரண்டையும் இடித்து 4 படி சுத்த ஜலம்விட்டு ½ படியாக வற்றவைத்த கஷாயத்தையும் ஒன்றுகலந்து கொள்ளவும்.

| | |
|---|---|
| கிராம்பு | சீரகம் |
| சுக்கு | சாதிக்காய் |
| கொத்தமல்லி விதை | தாளீசபத்திரி |
| பூலாங்கிழங்கு | வால்மிளகு |
| சோம்பு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துக் கஷாயம் விட்டரைத்துக்கொள்ளவும். இதனுடன்

பனங்கற்கண்டு ½ பலமும், நெய் ½ படியும் விட்டு, அடுப்பின்மேல் வைத்துக்காய்ச்சி இறக்கவும். இந்த நெய்யைத் தினம் 2 வேளைகள் உட்கொண்டுவரப் பித்த நோய்கள் நிற்கும்,

## 6. பித்தத்திற்கு அசுவகெந்தாதி லேகியம்.

நல்லமுக்கி ராவேரோ மூன்றுபங்கும்
நன்னாரி வேர்நெருஞ்சில் வேருங்கோரை
சொல்லந்தக் கிழங்குடனே யாடாதோடைச்
சூரணநற் சாரணைவேர் தண்ணீர்விட்டான்
மெல்லணிக் கிழங்கதுநல் கடம்பின்மேய
வேர்கீழ்காய் நெல்லிவிலா மிச்சைவேரும்
வல்லமைசே ரிந்தவகைச் சமதைகூட்டி
வாய்விடங்க மதிவிடையம் வைத்தப்பாலே (11)

வைத்தப்பா லதிமதுரம் சிறுநாகப்பூ
வளமிளகு திப்பிலிகி ராம்புசுக்கு
மெத்தநறுஞ் சாதிப்பத்திரி யெல்லாமொப்பாய்
மேற்சேர்ந்த பலவகைக்குச் சரியாய்த்தானே
தித்திக்குஞ் சர்க்கரைதே னிட்டேநன்றாய்
திரட்டியலே கியத்தைநெய்யில் லுண்டேவந்தால்
பித்தமெல்லாம் வாசியதாம் மென்மேற்கீர்த்தி
பெற்றுவளர் சரபேந்திர மால்சொல்வாரே. (12)

(இ-ள்.)

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | 3 பலம் |
| நன்னாரிவேர் | 1 ,, |

| | | |
|---|---|---|
| நெருஞ்சில் வேர் | — | 1 பலம் |
| கோரைக்கிழங்கு | — | 1 ,, |
| ஆடாதோடை வேர் | — | 1 ,, |
| சாறணை வேர் | — | 1 ,, |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | | 1 ,, |
| நிலக்கடம்பு வேர் | — | 1 ,, |
| கீழாநெல்லி வேர் | — | 1 ,, |
| இலாமிச்சை வேர் | | 1 ,, |

இவைகளைக் காயவைத்துச் சரியளவெடுத்து இடித்துச் சூரணஞ்செய்து வைத்துக்கொள்ளவும். பின்னர்,

| | |
|---|---|
| வாயுவிடங்கம் | அதிவிடயம் |
| அதிமதுரம் | சிறுநாகப்பூ |
| மிளகு | திப்பிலி |
| கிராம்பு | சுக்கு |
| சாதிப்பத்திரி | |

முதலான கடைச்சரக்குகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து முன்சூரணத்துடன் கலந்து சரியளவு சர்க்கரை சேர்த்துத் தேன், நெய் இவைகளையும் சேர்த்து லேகியபதமாக இடித்துவைத்துக்கொள்ளவும். இதனை உட்கொண்டுவரப் பித்தங்கள் தீரும்

## 7. பித்தத்திற்கு வில்வாதி லேகியம்.

மூப்பதுப லஞ்சரியாய் வில்வவேரு
மொழிந்திடறு பதுபடிதண் ணீரைவிட்டுத்
தப்பின்றி யோரெட்டுப் படியாய்க் காய்ச்சித்
தானிறக்கி வில்வக்காய் பலமூவைந்தில்

அப்பதுமுப் பதுபடிவார்த் தெரித்துக்காய்ச்சி
யதைமூன்று படியாக்கி யிரண்டுங்கூட்டி
வெப்பமுள்ளி திப்பிலிப லந்தானாறு
வெல்லமுமுப் பதுபலம்பின் னோதலாமே. (13)

ஓதலாந் திப்பிலிமூ லம்பலந்தா
னேரிரண்டு மிளகுபலம் நான்கேயிஞ்சி
நீதமைந்து பலஞ்செவியம் பலந்தானாறு
நிறைதாளீசப் பத்திரியோர் பலமோரைந்தே
சீதளஞ்சேர் இலவங்கப் பத்திரியுந்தான்
செப்பியவ ராகனெடை யைந்தேயப்பால்
ஏதமில்லாச் சீரகம்ப லந்தானென்றே
யிவையெல்லாம் கணக்குடனே யிடித்துத்
தானே. (14)

இடித்தெடுத்து முன்னிருக ஷாயந்தன்னி
லிட்டெரித்துக் குழம்பாகும் பதத்தினன்றாய்
வடித்திருந்தே னூழிவிட்டுப் பிசறிக்கொண்டே
வைத்தொரு வராகனெடை யுண்டேவந்தால்
பிடித்தபயித் தியவாந்தி நெஞ்சினோயும்
பீடிக்குங் குன்மங்கா மாலைதீரும்
படித்தவற்குக் கொடுத்துதவும் பாக்கியசாலி
பண்புசர பேந்திரமால் பகரும்வாறே. (15)

(இ-ள்)

வில்வவேர் 30 பலம் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 60 படி தண்ணீர்விட்டு 8 படியாகும் வரை சுண்டக் காய்ச்சி வடிக்கட்டிக் கொள்ளவும்.

வில்வக்காய் 15 பலம் எடுத்து இடித்து, 30 படி சுத்தஜலம் சேர்த்து, அடுப்பின்மேலேற்றி 3 படியாக வற்றவைத்துக் கஷாயத்தையிறுத்து, முன்சொல்லிய வில்வவேர் கஷாயத்துடன் சேர்த்துக்கொள்ளவும்.

பூண்டு திப்பிலி

இவைகளை வகைக்கு 6 பலம் வீதம் எடுத்து,

| | | |
|---|---|---|
| வெல்லம் | — | 30 பலம் |
| கண்டத்திப்பிலி | — | 2 ,, |
| மிளகு | — | 4 ,, |
| இஞ்சி | — | 5 ,, |
| செவ்வியம் | — | 6 ,, |
| தாளீசபத்திரி | — | 5 ,, |
| லவங்கப்பத்திரி | — | 5 வராகனெடை (½ பலம்) |
| சீரகம் | — | 1 ,, |

இவைகளையும் சூரணித்து வைத்துக்கொள்ளவும். கஷாயத்தில் வெல்லத்தையிட்டு அடுப்பின்மேலேற்றிக் குழம்பாகும்வரை வற்றவைத்துப் பின்னர், சூரணத்தை யிட்டுக் கிண்டி லேகிய பதத்தில் இறக்கித் தேன் 1 படி சேர்த்துக் கொள்ளவும். இதில் ஒரு வராகனெடை யளவெடுத்து உட்கொண்டுவரவும்.

பித்தம், வாந்தி, நெஞ்சு நோய்கள், குன்மம், காமாலை முதலான ரோகங்கள் தீரும்.

## 8. பித்தத்திற்குக் கஸ்தூரியாதி மாத்திரை.

அதிமதுரந் தாளீசபத் திரிசாதிக்கா
யக்கிராக் காரமதி விடயங் கோஷ்டம்

துதிசெய்யுஞ் சடாமாஞ்சி லொடுகடுக்காய்த்
தோல்கடுகு ரோகணிபூ லாங்கிழங்கு
சதுருளம க்காச்சந் தனநல் லேலஞ்
சமுத்திராப் பச்சைவிலாம் மிச்சைவேரும்
புதியபொற்கோ ரோசனைநன் னாரியின்வேர்
புகழ்சாதிப் பத்திரிமேல் பொருந்தக்கேளே. (16)

பொருந்தியசிங் காரமிகும் தேவதாரம்
போட்டொருவ ராகனெடை வகையொன்றுக்கே
திருத்தவுங்கஸ் தூரிபண வெடையிரண்டே
திடமுளசெவ் விளநீர்விட் டெல்லாங்கூட்டி
வருந்தாமல் நாலுநா ளரைத்தெடுத்தே
வண்குளிகைக் குன்றிநிகர் செய்தேயப்பால்
அருந்திடச்சொல் லனுபானந் தெரிந்தேயீந்தால்
அக்கணமே பித்தமெல்லா மகன்று
போமே. (17)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | தாளீசபத்திரி |
| சாதிக்காய் | அக்கிராக்காரம் |
| அதிவிடயம் | கோஷ்டம் |
| சடாமாஞ்சில் | கடுக்காய்த்தோல் |
| கடுகரோகிணி | பூலாங்கிழங்கு |
| மலாக்காச்சந்தனம் | ஏலக்காய் |
| சமுத்திராப்பச்சை | விளாமிச்சைவேர் |
| கோரோசனை | நன்னாரிவேர் |
| சாதிப்பத்திரி | தேவதாரு |

இவைகளை வகைக்கு 1 விராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இத

னுடன் கஸ்தூரி 2 பணவெடையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுச் செவ்விளநீர் விட்டு, 4 நாட்கள் அரைக்கவும். பின்னர் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்து, பத்திரப்படுத்தவும். தக்க அனுபானத்தில் கொடுத்துவரப் பித்த நோய்கள் தீரும்.

## 9. மயக்கம், பித்தம், வாந்திக்குச் சதாவரீ கிருதம்.

பகருசதா வரிக்கிழங்கின் சாற்றிலெட்டுப்
படிபசுவின் பாலுமந்தப் படியேநெய்கேள்
அகலாம லிரண்டுபடி கூட்டிக்காய்ச்சி
யதிமதுரஞ் சந்நணங்கஸ் தூரிமஞ்சள்
புகழுமரோ ஹுசங்கோரைக் கிழங்குகோஷ்டம்
பொன்முசுட்டை திப்பிலிபூ லாங்கிழங்கு
சுகந்தமுந் திரிகைப்ப மும்விலாம்பிச்சை
வேர்சுக்குக் கொத்தமல்லி நெல்லிதானே (18)

முள்ளிஙிலக் குமிழேலந் தேவதார
மொய்த்திடுபே ரீச்சங்காய் சீந்திற்றண்டு
ஒள்ளியதா மரைக்கிழங்கு வகையொன்றுக்கே
ஒவ்வோரு பலஞ்சரியாய் சேர்த்தேநன்றாய்
தெள்ளியமாப் போலிடித்து நெய்யிற்போட்டுத்
திரும்பவுந்தா னேகாய்ச்சி யதிலேயந்த
வெள்ளியசர்க் கரைகலந்து சாப்பிட்டாக்கால்
விழியெரிச்ச லத்தணேவலியு மயக்கம்
பின்னே. (19)

மயக்கமொடு பயித்தியம்பொல் லாதவாந்தி
 மட்டடங்கா சுரரத்த பயித்தியந்தான்
தியக்கருபி ரமூர்ச்சை யெல்லாமப்பாற்
 தீர்ந்திடுமே சங்கரிப வானிசித்தி
கயல்கண்ணி பிரமிகெள மாரிவாணி
 கெளரிபங்கில் வாழீசர் பூசையாலே
நயக்கமல மடந்தைபுயத் தென்னுளும்
 நண்ணுசர பேந்திரமால் நவின்றவாறே (20)

(இ-ள்.)

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | — 8 படி |
| பசுவின் பால் | — 8 ,, |
| ,, நெய் | — 2 ,, |

இவைகளையடுப்பின்மேலேற்றிக் காய்ச்சவும்.

| | |
|---|---|
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| கஸ்தூரிமஞ்சள் | அரேணுகம் |
| கோரைக்கிழங்கு | கோஷ்டம் |
| பொன்முசுட்டை | திப்பிலி |
| பூலாங்கிழங்கு | திராக்ஷைப்பழம் |
| இலாமிச்சம்வேர் | சுக்கு |
| கொத்தமல்லி விதை | நெல்லிமுள்ளி |
| நிலக்குமிழ் | ஏலக்காய் |
| தேவதாரம் | பேரீங்சங்காய் |
| சீந்தில்கொடி | தாமரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, இடித்துச் சூரணித்து, நெய்யுடனே சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும் வேண்டியஅளவு வெள்ளைச் சர்க்கரை சேர்த்துக்கொள்ளவும்.

விழி எரிச்சல், வலி, மயக்கம், பித்தம், வாந்தி, சீராத ஜ்வரங்கள், ரத்த பித்தம், பிரமை, மூர்ச்சை முதலியன தீரும்.

## 10. மஹா வில்வாதி லேகியம்.

தக்கவில்வ வேருபல முப்பதேசிற்
றுமுட்டி வேர்பலம் பதினைந்தாகும்
சுகந்தசந்த னம்வெண்ப ருத்திக்கொட்டை
சொற்பெரிய சிரகங்கோ ரைக்கிழங்கு
மக்கலில்லா முந்திரிகைப் பழம்பொற்கொத்த
மல்லிநெல்லிப் பருப்பும்விலா மிச்சைமேரு
டொக்கவகை யொன்றினுக்குப் பலமிரண்டே
யுயர்பேரா முட்டியவ்வா ரோதக்கேளே. (21)

ஓதக்கேள் பதினாறு பலந்தான்கூட்டி
யுடனீர்முப் பத்திரண்டு மரக்கால்விட்டு
நீதமதை யெட்டிலொரு பங்காய்க் காய்ச்சி
நேர்த்தியுள்ள சர்க்கரையும் பலமும்போட்
டேதமில்லா திலங்குபச்சைப் பயத்தைக்காய்ச்சி
யிறுத்திடு கஷாயமதிற் பலமிரண்டே
சீதளமா யெலுமிச்சம் பழத்தின் சாற்றிற்
செப்புமொரு குறுணியப்பா லின்னந்தானே. (22)

இன்னும்வெள்ளை வெற்றிலையின் சாறுதானே
யெடுத்துவிடு வாய்குறுணி யிதுவல்லாமல்
சொன்னபடி யந்தவகை யெல்லாஞ் சேர்த்துச்
சுகமாகப் பாகுப்த மாய்த்தான்மெத்த

நன்னயமாய்க் காய்ச்சியொன்றாய் பிசறிக்கொண்டு
நண்ணிடுமி லேகியத்தை யுண்டேவந்தால்
முன்னமுறு பலனையும் பித்தமெல்லா
முறிந்தோடும் கற்றோர்முன் மூடர்போலே (23)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| வில்வவேர் | — | 30 | பலம் |
| சிற்றாமுட்டிவேர் | — | 15 | ,, |
| சந்தனக்கட்டை | — | 2 | ,, |
| பருத்திக்கொட்டை | — | 2 | ,, |
| பெருஞ்சீரகம் | — | 2 | ,, |
| கோரைக் கிழங்கு | — | 2 | ,, |
| திராக்ஷைப்பழம் | — | 2 | ,, |
| கொத்தமல்லி விதை | — | 2 | ,, |
| நெல்லிப்பருப்பு | — | 2 | ,, |
| இலாமிச்சைவேர் | — | 2 | ,, |
| பேராமுட்டிவேர் | — | 16 | ,, |

இவைகளை நறுக்கி, ஒன்றிரண்டாக இடித்து, 32 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து, $\frac{1}{8}$ பாகமாக வற்றவைத்து, பச்சைப்பயறுக் கஷாயம் 2 பலம் விட்டு, வேண்டிய அளவு சர்க்கரை சேர்த்துக்கொள்ளவும். பின்னர், இதனுடன்

| | | | |
|---|---|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | — | 1 | மரக்கால் |
| பசுவின் பால் | — | | ,, |
| வெள்ளைவெற்றிலைச்சாறு | — | | ,, |

இவைகளையுஞ் சேர்த்து, அடுப்பின்மேலேற்றி, எரித்துக் குழம்பு பதத்தில் பத்திரப்படுத்தவும்.

இந்த லேகியத்தை உட்கொண்டுவரப் பித்த நோய்கள் பலவுந் தீரும்.

## 11. சுவாசகாசம், சயம் முதலானதற்குத் தேவதாரு லேகியம்.

கோலமிகு பொற்றேவ தாரஞ்சுக்கு
கூறுமிள கோர்வகைக்குப் பலந்தானுன்கே
யேலமொடு கொத்தமல்லி சீரகம்பின்
னிலவங்கம் நாகபற்பம் வகையொன்றுக்கே
மேலமிரண் டேபலங்கோ ரைக்கிழங்கு
மெய்தாளீச பத்திரிதிப் பிலியின்மூலம்
சீலநற்சித் திரமூல மிதுதானன்றி
செப்பியதிப் பிலிவகைக்கோர் பலமதாமே (24)

பலந்தான்முன் சொல்மருந்துஞ் சேர்த்திடித்தே
பக்குவமா யிருசேர்செந் தேனைவார்த்து
கலந்ததை லேகியஞ்செய் தெடுத்துக்கொண்டே
கணக்குடனே யுண்டிடிற் சுவாசகாசம்
குலவுரத்தசயரோக மரோசிகப் பயித்தியம்
குன்மம்விடுந் தீபனமுண் டாகும்நன்றாய்
சலசமங்கை புசமதில்வாழ் நாகரீகன்
சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே. (25)

(இ-ள்.)

தேவதாரு சுக்கு
மிளகு

இவைகள் வகைக்கு — 4 பலம்

ஏலக்காய் கொத்தமல்லி

சிரகம் கிராம்பு
நாகபற்பம்

இவைகள் வகைக்கு — 2 பலம்

கோரைக்கிழங்கு தாலீசபத்ரி
திப்பிலி மூலம் சித்திரமூலவேர்ப்
திப்பிலி பட்டை

இவைகள் வகைக்கு — 1 பலம்

இவைகளைக் கல்லுரலிலிட்டித்து வஸ்திரகாயஞ் செய்து 2 சேர் தேன் சேர்த்து லேகியபதமாகக்குழப்பி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு சுண்டைக்காயளவெடுத்து உட்கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :**

சுவாசகாசம், ரத்தக்ஷயம், அரோசகம், பித்தம், குன்மம் முதலானவை. பசியும் உண்டாகும்.

## 12. பித்தத்திற்கு இரஸ குளிகை.

ஏலநற்றிப் பிலிமிளகோ டிரதஞ்சுக்கு
மிலவங்கங் கெந்தகமிவ் வகையொன்றுக்கே
மேலதொரு பணவெடைவைத் தெல்லாங் கூட்டி
மெல்லவுமு மத்தையிலைச் சாற்றைவிட்டே
கோலமுட னரைத்தெடுத்துக் குன்றிக்கொப்பாய்
குளிகைசெய்து முலைப்பாலி லீய்ந்தேவந்தால்

சாலவும் பொல்லாதபித்தம் வாசியாகும்
சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே. (26)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| கிராம்பு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துச் சூரணித்து,

சுத்திசெய்த பாதரஸம் — 1 வராகனெடை
,, கெந்தகம் — ,,

போட்டுக் கல்வத்திலிட்டு நன்ருகக் கருகிறமாகும்வரை யரைக்கவும். பின்னர், மற்ற சூரணங்களையும்போட்டு, ஊமத்தை யிலைச்சாறுவிட்டு ஒருநாள் முழுவதும் அரைத்துக் குன்றிமணி நிகருள்ள மாத்திரையாக உருட்டிவைத்துக்கொள்ளவும்.

முலைப்பாலில் ஒரு மாத்திரை கொடுக்கவும். பித்த நோய்கள் தீரும்

## 13. பித்தம், வாந்திக்குச் சதாவரீ கிருதம்.

பாங்கான சதாவரியின் கிழங்குச்சாறு
படியிரண்டு பசுவினுடபாலவ்வாறே
யாங்காகு மந்தநெய்யில் படிதானென்றே
யதிமதுரங் கொத்தமல்லி கோஷ்டஞ்சுக்கு

நீங்காததா மரைத்தாது நெல்லிமுள்ளி
நிலக்குமிழ ரேணுகம்வி லாமிச்சம்வேர்
பூங்காச் சந்தனமேலம் பேரீச்சங்காய்
பொன்முசுட்டை திப்பிலியோ டின்னந்
தானே. (27)

இன்னமுந்தி ரிகைப்பழம்பூ லாங்கிழங்கு
மெழில்சீந்தில் சர்க்கரைக்கோ ரைக்கிழங்கு
வன்னமுள்ள ஸரளதேவ தாரமொவ்வோர்
வகைக்கிரு வராகனெடை பலந்தானைந்தாம்
நன்னயசர்க் கரையினெல்லாங் கலந்துகொண்டே
நண்ணிடுபக் குவம்பிசகா வண்ணங்காய்ச்சிச்
சொன்னபடி மென்பொடிசர்க் கரையைப்போட்
சுகமான நெய்யதனை யுண்டாற்றுனே. [டுச்

உண்டாற்றுன் வாதபித்தத் தாலேமேன்மே
லோங்குதலை வலிதலைம யக்கந்தாகம்
பண்டார்ந்த கூர்வாந்தி வாசியாகும்
பலகோடி பூசுரர்க்கே யன்னதானம்
வுண்டார்போல் பூவதொப்பாய்ச் சொர்ணதான
வேண்டியபோர் பூஷணமுங் கொடுத்தேயெங்
கொண்டாடுந் தருமதுரை நல்லோர்சங்கங் [குங்
குலவு சரபேந்திரமால் கூறும்வாறே. (29)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | — | 2 படி |
| பசுவின் பால் | — | 2 ,, |
| பசுவின் நெய் | — | 1 ,, |

இவைகளையொன்றுகலந்து,

| | |
|---|---|
| அதிமதுரம் | கொத்தமல்லிவிதை |
| கோஷ்டம் | சுக்கு |
| தாமரைத்தாது | நெல்லிமுள்ளி |
| நிலக்குமிழ்வேர் | அரேணுகம் |
| இலாமிச்சைவேர் | சந்தனத்தூள் |
| ஏலக்காய் | பேரீச்சங்காய் |
| பொன்முசுட்டைவேர் | திப்பிலி |
| திராக்ஷைப்பழம் | பூலாங்கிழங்கு |
| சீந்தில்சர்க்கரை | கோரைக்கிழங்கு |
| ஸரளதேவதாரு | |

இவைகளை வகைக்கு 2 வராகனெடையளவெடுத்துச் சூரணித்துக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிக்கொண்டு, 5 பலம் சீனி சேர்த்து வைத்துக்கொள்ளவும்

இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொண்டு வர வாதம், பித்தம் இவைகளின் பிரகோபத்தாலுண்டாகும் தலைவலி, மயக்கம், தாகம், வாந்தி முதலானவை தீரும்.

## 14. மயக்கம், பித்தத்திற்கும், தேகபுஷ்டிக்கும் ஏலாதி லேகியம்.

ஏலமதி மதுரநற்செங் கழுநீர் கோஷ்டம்
இலவங்கப் பட்டைகொத்த மல்லிசுக்கு
சீலமிகு முந்திரிகைப் பழமும்நல்ல
சீரகமோ செண்பகப்பூ நெல்லிமுள்ளி

கோலமுள்ள சந்தணமிவ் வகையொன்றுக்கே
கூறியதொவ் வோர்பலஞ்சேர்த் திடித்துக்கொண்
சாலத்தா னேபிசறி பலந்தப்பாமல் [டே
சட்டமுடன் லேகியஞ்செய் தியம்பக்கேளே. (30)

இயம்பக்கேள் சர்க்கரைபோட் டந்திசந்தி
யிருபொழுது முண்டுவரப் பத்தியந்தான்
சுயமான பசுவின்நெய்பால் துவரைகூட்டிச்
சொல்லியகைப் பும்புளிப்பும் தள்ளிவிட்டால்
மயக்கமொடு தலைசுழற்றுத் தியக்கம்நீங்கி
மன்னுபசி யுண்டாகு முடலுந்தேறும்
செயமருவு துளசிமஹா ராசனீன்ற
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாறே. (31)

(இ-ள்.)

| | |
|---|---|
| ஏலக்காய் | அதிமதுரம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |
| இலவங்கப்பட்டை | கொத்தமல்லிவிதை |
| சுக்கு | திராக்ஷைப்பழம் |
| சீரகம் | செண்பகப்பூ |
| நெல்லிமுள்ளி | சந்தனத்தூள் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து, இடித்துச் சூரணித்து வைத்துக்கொண்டு வேண்டிய அளவு வெல்லப்பாகு தயார்செய்து வைத்துக்கொண்டு, அதிலிட்டுக் கிளறி லேகியமாக்கவும்.

இதனைத் தினம் ஒருபலம் இருவேளையிலும் உட்கொள்ளவும்.

பத்தியம் :—

பசுவின் நெய், பால், துவரை இவைகளைக் கூட்டிக்

கைப்பு, புளிப்பு முதவான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

மயக்கம், தலைசுற்றல், பிரமை முதலானவை நீங்கிப் பசியும் உண்டாகும், உடலும் தேறும்.

## 15. சத்தி குன்மம், அசீர்ணம், வாந்திக்கு வில்வாதி லேகியம்

சீலமுள வில்வவேர் மேற்சிராயைச்
சீவியமேற் பட்டைதனை யிடித்தெடுத்த
கோலமுயர் தூளிலிரு பதுபலத்திற்
குளிர்ந்தநன்னீர் தூணிவிட்டுக் கொண்டேகாய்ச்சி
மேலதனை யெட்டிலொன்ருய் வடித்தேயப்பால்
மேவுபனை வெல்லமுமுப் பதுபலத்தை
சாலவுந்தா னேகரைத்துக் குழம்பதாக்கிச்
சட்டமாய்க் காய்ச்சியபின் மருந்துதானே. (32)

மருந்துமேற் ஞேற்சீவிப் போட்டசுக்கு
மட்டொருப லம்செவியம் பலந்தான்பத்தே
திருந்தியதிப் பிலிமூலம் பலமோராறு
திப்பிலியு மைந்துபலம் பலமூன்றேலம்
பொருந்துபின் கொன்றையரைப் பலந்தானுலே
பூவுமரைப் பலமூன்று பலங்கிராம்போ
டருந்துநற்சீ ரகஞ்சரியாய் பலமீரைந்தே
யன்றிலவங் கப்பத்திரி யதனைக்கேளே. (33)

அதனைக்கேள் மூன்றுபலங் கொடிவேலிவேர்
ஆம்பலமொன் றேகருஞ்சீ ரகந்தான்பத்தே
பதரும்ல் தாளீசபத் திரியோரைந்து
பலமிவையெல் லாமுலர்த்தி யிடித்துத்தூளை
முதற்காய்ந்த குழம்பினிற்போட் டுத்துளாவி
மொழியிரண்டு கொதிவீவிரவிட் டிறக்கிவைத்தே
யிதமாக மறுநாளில் நாழித்தேன்விட்
டேகிளறி தான்றிக்கா யளவுகொள்ளே. (34)

கொள்ளப்பால் வாதபித்த மிருமல்சத்தி
குன்மமசீ ரணம்வாந்தி மேற்சுவாசம்
விண்ணந்தச் சுரமுமுதிர் சூலைகாசம்
விக்கலுஞ்சேட் டுமம்வாய்நீர்ப் பாய்ச்சல்மார்பில்
உள்ளவலி யிப்பலநோய் வாசியாகு
மூத்தமலிங் கேசரருள் கிருபையாலே
வள்ளலொப்பாய்க் கீர்த்திபெற்றத் தருமமூர்த்தி
வாய்மைசர பேந்திரமால் வழுத்தும்வாறே. (35)

(இ-ள்)

வில்வவேர் மேல் சிராயைச்சீவி இடித்த தூள் 20 பலம் எடுத்துக் குளிர்ந்த தண்ணீர் 4 மரக்கால்விட்டு, அடுப்பின்மேலேற்றி, எட்டிலொன்ருக வற்றவைக்கவும். இதனை இறுத்துப் பனைவெல்லம் 30 பலம் போட்டுப் பாகுசெய்து,

| | | |
|---|---|---|
| மேல்தோல் சீவிய சுக்கு | — 1 | பலம் |
| செவ்வியம் | — 10 | ,, |
| திப்பிலி மூலம் | — 6 | ,, |
| திப்பிலி | — 5 | ,, |

| | | |
|---|---|---|
| ஏலக்காய் | — 3 | பலம் |
| கொன்றைப்பிசின் | — 4 | ,, |
| கொன்றைப்பூ | — 3 | ,, |
| கிராம்பு | — 10 | ,, |
| சீரகம் | — 10 | ,, |
| லவங்கப்பத்திரி | — 3 | ,, |
| கொடிவேலிவேர் | — 1 | ,, |
| கருஞ்சீரகம் | — 10 | ,, |
| தாளீசபத்திரி | — 5 | ,, |

முதலான சரக்குகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்த தூளைப் பாகுடன் கலந்துப் பதத்தில் இறக்கவும். மறுநாள் தேன் 1 படி கூட்டிக்கொள்ளவும். தினம் தான்றிக்காயளவு உட்கொள்ள வாதபித்தம், இருமல், சத்தி. குன்மம், அசீரணம், வாந்தி, மேல்மூச்சு, உட்சுரம், சூலை, காசம், விக்கல், கபம், வாய்நீர்ப்பாய்ச்சல், மார்வலி முதலான பலநோய்கள் நீங்கும்.

## 16. பித்தந்தீர ஆமலகத் தைலம்.

நெல்லிக்காய்ச் சாறுகையாந் தகரைச்சாறு
நேர்த்தியுள்ள நல்லெண்ணெ யலாக்கே ளின்ன
சொல்லியதோ ரதிமதுரம் பலந்தானென்றே
சூட்சமுட னேயரைத்துப் பசுவின்பாலில்
வல்லியல்பாய் நாழிவிட் டேயெரித்துக்
காய்ச்சிவாய்த்த பதத்திறக்கி மூழ்கிவந்தால்
புல்லியபித் தந்தீரும் நல்லோர்வாழ்த்திப்
புகழ்செய்சர பேந்திரமால் புகன்றவாறே. (36)

(இ-ள்)

நெல்லிக்காய்ச்சாறு கையாந்தகரைச்சாறு
நல்லெண்ணெய் பசுவின்பால்

இவைகளை வகைக்கு 1 படி எடுத்து ஒன்றுகலந்து, அதிமதுரம் 1 பலத்தைப் பசுவின்பால் விட்டரைத்துக் குழப்பி, அடுப்பின்மேல் வைத்தெரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையிலிட்டு முழுகிவரப் பித்தங்கள் தீரும்.

## 17. க்ஷயம், தாகம், காமாலைக்குத் திராக்ஷாதிச் சூரணம்

மூந்திரிகைப் பழம்பேரீச் சங்காயேலம்
மூங்கிலுப்பு நெற்பொரிகோ ரைக்கிழங்கு
சந்தனத்திப் பிலிசிறுநா கப்பூநல்ல
சாதிக்காய் கொத்தமல்லி நெல்லிமுள்ளி
அந்தமேநன் னாரிவிலா மிச்சையவ்வே
ரதிமதுரஞ் செங்கழுநீர்க் கிழங்கிதல்லால்
கந்தமிகு சந்நலவங் கத்தின்பட்டை
கனலவங்கப் பத்திரிதக் கோலந்தானே 37)

*கோலம்வங்கக் கரைப்பலஞ்சேர்த் திடித்துக்கொண்டு
குலவுமொன்ப தரைப்பலஞ்சர்க் கரையைக்கூட்ட

* இச்செய்யுளில் ஒரு அடி காணப்படவில்லை.

சாலவுந்தா னிருபொழுதுந் தேனிலீந்நால்
சயமிரத்தச் சயந்தாகம் பாண்டுமாலை
மேலடர்ம கோதரமி ரத்தம் மோகஞ்
செலுத்தாத மங்கையர்போல் சிதறிப்போமே. (38)

(இ-ள்.)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | பேரீச்சங்காய் |
| ஏலக்காய் | மூங்கிலுப்பு |
| நெற்பொறி | கோரைக்கிழங்கு |
| சந்தனத்தூள் | திப்பிலி |
| சிறுநாகப்பூ | சாதிக்காய் |
| கொத்துமல்லி | நெல்லிமுள்ளி |
| நன்னாரிவேர் | இலாமிச்சைவேர் |
| அதிமதுரம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| சந்நலவங்கப்பட்டை | லவங்கப்பத்திரி |
| தக்கோலம் | |

| | | |
|---|---|---|
| இவைகள் வகைக்கு | — | ½ பலம் |
| சர்க்கரை | — | 9½ ,, |

இவைகளை இடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல்கொள்ளுமளவெடுத்துத் தினம் 2 வேளை காலையிலும் மாலையிலும் தேனுடன் உட்கொள்ளவும்.

க்ஷயம், இரத்த க்ஷயம், தாகம், பாண்டு, காமாலை, மகோதரம் முதலான நோய்கள் தீரும்.

## 18. பித்தம், உளமாந்தைக்குத் திரிகடுகாதிச் சூரணம்.

திரிகடுகு திரிபலைசிற் றரத்தையல்லாற்
தேவதா ரங்கோரைக் கிழங்குநல்ல

பரிமளத்தா மரைத்தாது வாய்விளங்கம்
பகருமதி மதுரம்விலா மிச்சையின்வேர்
பிரியமுள்ள சந்தனமிவ் வகைகளெல்லாம்
பிசகாமல் சமபாகஞ் சேர்த்துக்கொண்டே
வரிசையுட னிடித்தெடுத்தத் தூளுக்கொப்பாய்
வளமான சர்க்கரைபோட் டெல்லாந்தானே. (39)

எல்லாந்தான் சொன்னபடி கலந்தேநன்றாய்
யிலங்குகின்ற சூரணத்தில் நித்தம்நித்தம்
உல்லாச மாமுதைய வேளைதன்னி
லுண்டிடவு மீந்திடுநி தானமாகப்
பொல்லாத பித்தமுள மாந்தைசூலை
பொருதிமிரஞ் சயங்களிவை வாசியாகும்
சல்லாபச் சரசமதியரசர் மெச்சுஞ்
சதுரசர பேந்திரமால் சாற்றும்வாறெ. (40)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தேவதாரு |
| சிற்றரத்தை | தாமரைத்தாது |
| கோரைக்கிழங்கு | அதிமதுரம் |
| வாயுவிடங்கம் | சந்தனத்தூள் |
| இலாமிச்சைவேர் | |

இவைகளைச் சமனெடையெடுத்து, இடித்துச் சூரணஞ் செய்துகொள்ளவும். இத்தூளிற்குச் சமன் சர்க்கரை சேர்த்துக்கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமள வெடுத்துத் தினம் விடியற்காலை வேளையில் மாத்திரம் உட்கொள்ளவும்.

பித்தம், உளமாந்தை, சூலை, திமிரம், சயம் முதலானவை தீரும்.

## 19. பித்தத்திற்கு வில்வாதி லேகியம்.

நல்லவில்வ வேரிலறு பதுபலத்தில்
நன்னியபன் னிருமரக்கால் தண்ணீர்விட்டு
சொல்லந்தப் படிநாலு படியாய்க்காய்ச்சிச்
சுண்டியக் கஷாயமதிற் பழசாயுள்ள
வெல்லமுமுப் பத்திரண்டு பலமேபோட்டு
விபரமதாய்க் கேளுசுக்குப் பலந்தான்நான்கே
அல்லதுதிப் பிலிநான்கு பலமாம்நன்று
யணிமிளகு பலமிரண்டே யேலந்தானே. (41)

ஏலம்நெல்லி முள்ளியில வங்கப்பட்டை
யெழில்நாகப் பூக்கடுக்காய் நற்கிராம்பு
சீலமுள்ள தான்றிக்காய் வகையொன்றுக்குச்
சேர்த்திடரைப் பலஞ்செவியம் பலந்தானென்றே
கோலமென்றிப் பிலிமூலம் பலமிரண்டே
குலவியதா ளீசபத் திரிதப்பாமல்
சாலவுமோர் பலமிலங்குஞ் சீரகந்தான்
சாற்றுமிந்த பலவகையின் சட்டங்கேளே. (42)

சட்டமா யிடித்துவடிக் கட்டியப்பால்
சாரமுயர் சூரணத்தை வெல்லப்பாகில்
திட்டமுட னேகூட்டி யதிலேகொம்புத்
தேனிலரைப் படிவார்த்துப் பிசறிக்கொண்டே

இட்டமதாய்ச் செய்திடுமி லேகியத்தி
லீய்ந்துவந்தால் பித்தமெல்லாம் வாசியாகும்
மட்டலர்செங் தாமரைப்பொன் புயத்தில்நாளு
மருவுசர பேந்திரன்சொல் மார்க்கந்தானே (43)

(இ-ள்)

வில்வவேர் 60 பலம் எடுத்து நறுக்கி, 12 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி 4 மரக்காலாகும் வரை வற்றவைக்கவும். அதனுடன் பழய வெல்லம் 32 பலம் போட்டுக் கரைத்துக்கொண்டுப் பாகாக்கி,

| | | |
|---|---|---|
| சுக்கு | — | 4 பலம் |
| மிளகு | — | 2 ,, |
| திப்பிலி | — | 4 ,, |
| ஏலக்காய் | — | ½ ,, |
| நெல்லிமுள்ளி | — | 1 ,, |
| லவங்கப்பட்டை | — | ½ ,, |
| சிறுநாகப்பூ | — | 2 ,, |
| கடுக்காய்த்தோல் | — | ½ ,, |
| கிராம்பு | — | 2 ,, |
| தான்றித்தோல் | — | ½ ,, |
| செவ்வியம் | — | 1 ,, |
| திப்பிலி மூலம் | — | 2 ,, |
| தாளீசபத்திரி | — | 1 ,, |
| சீரகம் | — | 1 ,, |

இவைகளைச் சூரணித்துக் கலந்து, லேகியமாக்கி, அதனுடன் கொம்புத்தேன் சேர்த்துப் பிசறிக்கொள்ளவும்.

இதனை உட்கொள்ளப் பித்தங்கள் நீங்கும்.

## 20. தலைசுற்றல், பித்தத்திற்கு முசுமுசுக்கைத் தைலம்.

நன்னயமா முசுமுசுக்கை யிலைச்சாற்றின்சேர்
நான்கதுகற் ருழையின்சா றிரண்டுசேரு
சொன்னதொன்றே நல்லெண்ணெய்சேர் பேராமுட்டி
சூழ்காட்டுப் பயறுடுகாட் டுளுந்திதல்லால்
யின்னமுப் நன் ஞரியின்வேர் பாலைவேரு
மெழிற்சிற்ரு முட்டியதி மதுரமொவ்வோர்
அன்னதுவ ராகனெடை வகையொன் றுக்கே
அரைத்தெடுசந் தனம்போலே யப்பாற்கேளே (44)

அப்பாற்கேள் முன்புரைத்த சாற்றிற்போட்டே
யம்மருந்தைக் கரைத்துநன்ரு யடுப்பிலேற்றி
தப்பாமல் பக்குவமா யெரித்துக்காய்ச்சித்
தான்வடித்துக் கொண்டுதலை முழுகிவந்தால்
சப்பாத்த லைச்சுழற்றும் பிததந்தீரும்
சிவபூஜை மகிமையிஞல் பெரியோர்நல்லோர்
யெப்பாரி லுந்துதிசெய் கீர்த்திசாலி
யெங்கள்சர பேந்திரமா லியம்பும்வாரே. (45)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| முசுமுசுக்கையிலைச்சாறு | — | 4 சேர் |
| கற்ருழைச்சாறு | — | 2 ,, |
| நல்லெண்ணெய் | — | 1 ,, |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| பேராமுட்டி | காட்டுப்பயறு |
| காட்டு உளுந்து | நன்ஞரிவேர் |

பாலைவேர் சிற்றாமுட்டிவேர்

அதிமதுரம்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துச் சாறுவிட்டு சந்தனம்போல் அரைத்து, சாறுசேர்ந்த எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனால் தலைமுழுகிவரத் தலைச்சுற்றல், பித்தம் முதலானவை நீங்கும்.

## 21. பித்தத்திற்கு சந்தனாதித் தைலம்.

சந்தனங்கற் றாழைமடல் நெல்லிக்காய்பின்
சார்ந்தமுசு முசுக்கைபனிப் பயறுகோவை
அந்தநற்ப டோலம்சதா வரிவெவ்வேறே
அவ்விலையின் சாற்றிலொவ்வோர் நாழிகூட்டித்
தந்தமிகு செங்கழுநீர்க் கிழங்குகோஷ்டம்
கடுகரோ கிணியோடு விலாமிச்சம்வேர்
நந்தலிலாச் சந்தணங்குங் குமந்தண்ணேலம்
நன்னாரி வேருமதி மதுரந்தானே. (46)

மதுரமில வங்கநற்றோ லல்லாமற்று
மரைவளையஞ் செண்பகப்பூ விருவேலிவேர்
யிதுவகைக்கோர் நாற்கழஞ்சு சேர்த்தரைத்தே
யெண்ணெயொரு நாழிவிட்டுப் பதமாய்க்காய்ச்சி

அதுதான்தேய்த் தேதலையு மூழ்கிவந்தால்
லடுத்தபித்தம் வாசியதாம் பெரியோர்நல்லோர்
சதுரர்புகழ் கீர்த்திமன்னர் போற்றுந்தஞ்சைச்
சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே. (47)

(இ-ள்)

| | |
|---|---|
| சந்தனக் கஷாயம் | — 1 படி |
| பற்றுழைச்சாறு | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |
| முசுமுசுக்கைச்சாறு | ,, |
| பயற்றங்கொடிச்சாறு | ,, |
| கோவைச்சாறு | ,, |
| பேய்ப்புடல் சாறு | ,, |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | ,, |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |
| கடுகரோகணி | இலாமிச்சம்வேர் |
| சந்தனத்தூள் | குங்குமப்பூ |
| ஏலக்காய் | நன்னாரிவேர் |
| அதிமதுரம் | கிராம்பு |
| தாமரையிலைச்சுருள் | செண்பகப்பூ |
| வெட்டிவேர் | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து இடித்து, ஏதேனும் ஒரு சாறுவிட்டு நன்றாகவரைத்துச் சாற்றுடன் குழப்பி, நல்லெண்ணெய் 1 படியும்விட்டு, அடுப்பின்மேலேற்றிப் பதத்தில் எரித்து வடிக் கட்டவும்.

இத்தைலத்தால் தலைமுழுகிவரவும். பித்தம் தீரும்.

## 22. பித்தத்திற்குச் சீரகக் கறுக்கு.

பத்ததுவ ராகனெடை சீரகந்தான்
பகரும்விளா விலையுமந்தப் படிவெவ்வேறே
மெத்தவுங்காந் திடவறுத்துப் பொடியதாக்கி
மீதுநெய்விட் டேபிசைந்து சிறிதாய்வில்லை
யத்தனையுஞ் செய்துலர்த்தி யிருபோதுந்தான்
யிதையீந்தால் பித்தமுந்தான் வாசியாகும்
முத்தமிழோர் மெச்சுமன்ன தாதாபுண்ய
மூர்த்திசர பேந்திரமால் மொழிந்தவாறே. (48)

(இ-ள்)

சீரகம் 1 பலம் எடுத்து, விளா இலையும் 1 பலம் எடுத்து இரண்டையும் தனித்தனியாகக் கறுகும்வரை வறுக்கவும். பின்னர், இதனைப் பொடித்து நெய்விட்டுப் பிசைந்து சிறுசிறு வில்லையாகத் தட்டி வைத்துக் கொண்டுத் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

பித்தந் தீரும்.

## 23. பித்தத்திற்கு ஆதண்டைத் தைலம்.

ஆதண்டை யிலைச்சாறு படியிற்பாதி
யடர்ந்தலைகையாந் தகரையிலைச் சாறுகேளாய்
நீதமொரு படிநல்லெண்ணெய் படிதானென்று
நெல்லிமுள்ளி காய்ச்சிய கஷாயந்தன்னில்

ஓதந்தப் படியுமொன்று பசுவின்பாலி
லொருபடிசேர்த் ததிமதுரம் பலமிரண்டப்
போதரைத்துப் போட்டரைத்துக் காய்ச்சிமுழ்கில்
பொல்லாத பித்தமெல்லாம் வாசியாமே. (49)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஆதண்டைச்சாறு | ½ | படி |
| கையாந்தகரையிலைச்சாறு — | 1 | ,, |
| நல்லெண்ணெய் — | 1 | ,, |
| நெல்லிமுள்ளிக் கஷாயம் — | 1 | ,, |
| பசுவின்பால் — | 1 | ,, |

இவைகளை யொன்றுகலந்து, அடுப்பின்மேலேற்றி எரித்து, அதிமதுரம் 2 பலத்தை ஏதேனும் ஒரு சாறு விட்டரைத்து, அதனுடன் குழப்பிப் பதத்தில் எரித்து இறக்கவும்.

இத்தைலத்தை தலையில் தேய்த்து முழுகிவரப் பித்தங்கள் தீரும்.

## 24. பித்தந்தீர ஆட்டுப் புழுக்கை மருந்து.

எருமைமாட் டினின்றயிரி லப்போதிட்டி
டெழில்வெள்ளாட் டுப்புழுக்கை முதலொன்ப
தொருமையுடன் மறுநாளோ மூன்றுநாளோ
விரைந்தேத யிரதனிற் கலந்தேயீவாய்

கருமையுள்ள புளியொடுசர்க் கரையுமன்றிக்
கருதெலுமிச் சம்பழத்தின் சாறுகூட்டி
அருமையதா யொருமாத மிவ்வாறீந்தால்
அகன்றோடும் பயித்தியங்க ளனைத்துந்தானே. (50)

(இ-ள்.)

எருமைமாட்டுத தயிரில் அப்போதிட்ட வெள்ளாட்டுப் புழுக்கையை ஊறப்போட்டு, மறுநாளோ அல்லது 3-வது நாளோ அத்தயிரிலேயே குழப்பிக் குடிக்கவும்.

பத்தியம் :

புளி, சர்க்கரை இவைகளை நீக்கி, எலுமிச்சம்பழச் சாறு கூட்டிக்கொள்ளவும்.

பித்தங்கள் தீரும்

## 25. பித்தத்திற்கு முசுமுசுக்கை நெய்.

அந்தமுசு முசுக்கைசமூ லத்தின்சாத்தி
லதுநாழி பசுவினெய்யும் நாழிகூட்டிச்
சந்தனஞ்சர்க் கரையிலுப்பைப் பூவுமல்லால்
சார்ந்திடநி மதுரம்நல்ல கூகைநீறு
பந்தமுள்ள முந்திரிகைப் பழமீதெல்லாம்
பாங்காக வேயரைத்து நெய்யிற்போட்டு
சுந்தரமாய்க் காய்ச்சியப்பா லீய்ந்தேவந்தால்
சொல்லுமெல்லாப் பத்தியமும் வாசியாமே (51)

(இ-ள்)

முசுமுசுக்கையைச் சமூலமாக இடித்துச் சாறுபிழிந்து, 1 படியெடுத்துப் பசுவின் நெய் 1 படியும் கூட்டி,

| | |
|---|---|
| சந்தனத்தூள் | சர்க்கரை |
| இலுப்பைப்பூ | அதிமதுரம் |
| கூகைநீர் | திராக்ஷைபழம் |

இவைகளையும் இடித்துச் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் எரித்து வடிக்கட்டிப் பத்திரப்படுத்தவும்.

இதனை உட்கொள்ளப் பித்தங்கள் தீரும்.

## 26. பித்தத்திற்கு ஏலாதிக் கிருதம்.

ஏலமில வங்கமதி மதுரம் வெல்லம்
எழிலாரை வேருபொன்னுங் காணிவேருஞ்
சீலநிறை சிறுகீரை வேருவாசச்
செண்பகப்பூ செங்கழுநீர் கோட்டங்காய்ந்த
நீலமென வேயரைத்துக் கரைத்தேயாவின்
னெய்யினில்விட் டுக்காய்ச்சி யுள்ளுக்கீய்ந்து
மேலதனைப் பூசுகைப்புப் புளிப்புத்தள்ளு
மெய்யார்ந்த பயித்தியமும் மெலிந்துபோமே. (52)

(இ-ள்.)

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| அதிமதுரம் | வெல்லம் |
| ஆரைவேர் | பொன்னுங்காணிவேர் |
| சிறுகீரைவேர் | செண்பகப்பூ |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்துத் தண்ணீர்விட்டு நன்றாகவரைத்துப் பசுவின் நெய் 5 சேருடன் கலந்து, எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த நெய்யை உள்ளுக்கும் கொடுத்து, மேலேயும் பூசவும். புளிப்பு, கசப்புச்சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

பித்தங்கள் தீரும்.

## 27. பித்தம், எரிச்சலுக்குக் கோவைக் கல்கம்.

செப்பியகோ வைக்கொடிவைத் தரைத்தெடுப்பாய்
சீரெலுமிச் சங்காயி னைப்பாயப்பால்
தப்பிலா தவ்வளவே வெண்ணெய் சேர்த்துத்
தான்கொடுத்த பின்பிரண்டு தேற்றாங்கொட்டை
கொப்பிலகு பருத்தியிலை யிரண்டுங்கூட்டிக்
கொண்டரைத்துப் பசுவினூடே மோரிலீந்தால்
வெப்பிசைந்தி டெரிவசதி மயக்கந்தாகம்
வேண்டியநீர் பிரிந்துபித்தம் விட்டுப்போமே. (53)

(இ-ள்.)

கோவைக் கொடியைக் கொண்டுவந்து நன்றாக வரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து, அதற்குச் சரியளவு வெண்ணெய் சேர்த்து உட்கொள்ளவும். பின்னர் தேற்றாங்கொட்டை 2, பருத்தியிலை சாறு இவ்விரண்டையும் பசுவின் மோர்விட்டரைத்து, அதில் குழம்பி உட்கொள்ளவும்.

எரிவு, அசதி, மயக்கம், தாகம், பித்தம் முதலானவைகள் நீங்கி, நீரும் இறங்கும்.

## 28. பித்தத்திற்குச் சுண்டிச் சூரணம்.

சிலநற்றிப் பிலிமிளகு சீரகந்தான்
செப்பும்வகைக் கோர்பலநெற் பொரியோடின்ன
மேலமிலவங் கப்பத்திரி பருத்திக்கொட்டை
யின்பருப்பிவ் வகைக்கரைப்ப லந்தான்சுக்கு
மேலந்தப் பலமிரண்டாய்ச் சேர்த்திடித்தே
மென்மையுள்ள சர்க்கரைபோட் டுண்டேவந்தால்
சாலவும்ப யித்தியந்தான் வாசியாகும்
சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே. (54)

(இ-ள்.)

| | |
|---|---|
| திப்பிலி | மிளகு |
| சீரகம் | |

இவைகள் வகைக்கு — 1 பலம்

| | |
|---|---|
| நெற்பொரி | ஏலக்காய் |
| லவங்கப்பத்திரி | பருத்திக்கொட்டைப் பருப்பு |

இவைகள் வகைக்கு — ½ பலம்

சுக்கு — 2 ,,

இவைகளை இடித்துச் சர்க்கரை சரியெடை சேர்த்துச் சூரணஞ்செய்து தினம் 2 வேளை உட்கொண்டுவரப் பித்தங்கள் தீரும்.

## 29. வெள்ளோக்காளம், விக்கலுக்கு வெற்றிலை மோர்.

சொன்னதந்த வெத்திலையை நறுக்கியப்பாற்
 சொல்லெருமை மோரதனிற் பிசைந்துகொள்க
நன்னயமாய்ப் பிழிந்ததிற்சர்க் கரையுங்கூட்டி
 நண்ணுழரி மோர்குடிக்கக் கொடுத்தேவந்தால்
பின்னடர்வெள் ளோக்காளஞ் சயமும்விக்கல்
 பேசாமல் வாசியதாம் வாழிப்பூவாழ்
பொன்னகலா மணிமார்பன் மன்னரெல்லாம்
 புகழ்செய்சர பேந்திரமால் புகன்றவாறே. (55)

(இ-ள்.)

15 வெற்றிலையைக் கொண்டுவந்து நறுக்கி, எருமை மோருடனே பிசைந்து, பிழிந்து எறிந்துவிட்டு, அதில் சர்க்கரைசேர்த்து, ½ படி மோர் குடிக்கவும்.

வெள்ளோக்காளம், சயம், விக்கல் முதலானவை தீரும்.

## 30. பித்தம், பிரமேகம் சயம், முதலானவற்றிற்குத் திராக்ஷாதிச் சூரணம்.

முத்திரிகைப் பழமரேணு கந்தான்றிக்காய்
 முத்தக்கா செல்லாம்வெட்டி வேர்கடுக்காய்
சந்தனந்திப் பிலிநெருஞ்சிற் சமூலம்பேரீச்
 சம்பழஞ்சுக் கதிமதுரம் மிளகுநெல்லி

அந்தநெய்தல் கிழங்கொடுகஸ் தூரிமஞ்ச
ளாய்ந்தநற்சீ ரகமுயர்செங் கழுநீர்கோஷ்டம்
பதமுள்ளசிற் ரூமுட்டி பேராமுட்டி
பாங்கான கொத்தமல்லி மஞ்சளாமே (56)

மஞ்சளன்றி நெற்பொரிகி ராம்புவாச
மன்னுகுங் குமப்பூவி லாமிச்சைவேர்
மிஞ்சியசிந் திற்கொடிபொற் கூகைநீரு
மேவும்வகை சமங்கூட்டி யிடித்ததூளுக்
குஞ்சரியாய்ச் சர்க்கரையும் நிறுத்துப்போட்டுக்
குணமாய்ச்செய் சூரணத்தைப் பசுவின்னெய்
நெஞ்சமகிழ்ந் தேதேனி லுண்டேவந்தால் [யில்
நீங்குகின்ற நோய்களெல்லா மியம்பக்
கேளே (57)

இயம்பக்கேள் பாண்டுபிர மேகமூர்ச்சை
யிடரான பயித்தியஞ் சுவாசகாசம்
சயமரோசி கம்வாந்தி சுரமிதெல்லார்
சஞ்சலஞ்செய் வயிற்றுவலி வாசியாகும்
புயலையொப்பாய் பூசுரர்க்கும் கவிகற்ரூற்கும்
பொன்மாரி பொழியும்நல்ல தருமமூர்த்தி
செயமருவு துளசேந்திர பூபனின்ற
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாறே. (58)

(இ-ள்.)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | காட்டுமிளகு |
| தான்றிக்காய்த்தோல் | கோரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | கடுக்காய்த்தோல் |

| | |
|---|---|
| சந்தனத்தூள் | திப்பிலி |
| நெருஞ்சில்சமூலம் | பேரீச்சம்பழம் |
| சுக்கு | அதிமதுரம் |
| மிளகு | நெல்லிமுள்ளி |
| நெய்தல்கிழங்கு | கஸ்தூரிமஞ்சள் |
| சீரகம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| கோஷ்டம் | சிற்றாமுட்டிவேர் |
| பேராமுட்டிவேர் | கொத்தமல்லிவிதை |
| மஞ்சள் | நெற்பொரி |
| கிராம்பு | குங்குமப்பூ |
| இலாமிச்சைவேர் | சீந்திற்கொடி |
| கூடைநீர் | |

இவைகளைச் சரியளவெடுத்து இடித்து, வஸ்திர காயஞ்செய்து, மொத்த அளவிற்குச் சமன் சீனி கலந்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது நெய்யிலோ, தேனிலோ உட்கொள்ளவும்.

பாண்டு, பிரமேகம், மூர்ச்சை, பித்தநோய்கள், சுவாக காசம், சயம், அரோசகம், கபம், வாந்தி, ஜ்வரம் வயிற்றுவலி முதலான நோய்கள் நீங்கும்.

## 31. பாவன ஹரீதகீ.

பண்பாய்க்கே ளாண்கடுக்காய்ப் பருப்பைநன்றாய்
பகர்ந்திடுகோ சலத்திலதை யொருநாள்போட்டு
நண்பாங்கை யாந்தகரைச் சாற்றின்மற்று
நாளூற வைத்தெனுமிச் சம்பழத்தின்

வண்பாக மாயொருநா ளூறப்போட்டு
வருநிலவி லேயுலர்த்தி மணடலந்தான்
உண்பாய்நற் சீரகமும் கலந்துகொண்டே
உஷ்ணமும்ப யித்தியம்போம் புளிப்பைதானே (59)

(இ-ள்)

முற்றிய கடுக்காய்க் குள்ளிருக்கும் பருப்பை நீக்கி விட்டுப் பசுவின் மூத்திரத்தில் ஒருநாள் ஊறப் போடவும். மறுநாள் கையாந்தகரைச் சாற்றிலும், பின்பு மற்றொருநாள் எலுமிச்சம்பழச்சாற்றிலும் ஊற வைத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, சீரகம் சேர்த்து 40 நாட்கள் உட்கொள்ளவும்.

உஷ்ணம், பித்தம் முதலானவை தீரும்.

பத்தியம்:

புளியை நீக்கவும்.

## 32. பித்தம், வாயு இவைகளுக்குக் கரணைச் சூரணம்.

திரிகடுகு பெருங்காய மோமமுப்பிற்
தேர்ந்தவகை யைந்துமல்லால் காரமைந்தில்
அரியசீ ஞக்கார மொன்றைத் தள்ளி
யரத்தைசங்கம் வேர்தான்றிக் காய்கடுக்காய்
கரியசீ ரகமொடுநற் சீரகந்தான்
கண்டங்கத் திரிநன்நெல் லிப்பருப்பு
பெரிதானைத் திப்பிலிசித் திரமென்மூலம்
பின்னுமந்தத் தூதுவளை யின்னங்கேளே (60)

இன்னமொவ்வோர் வகைக்குமரைப் பலந்தான்கூட்டி
யிடித்தெடுத்தச் சூரணத்தி னெடையிற்பாதி
சொன்னதொரு சிவதைபின்வேர் சேர்த்துக்கொண்டு
சூழ்ந்ததுகைக் குச்சரியாய்ப் பிசறிடாமல்
வன்னமுள்ள கரணைவேர்த் தூள்போட்டு
வண்மையுட னேகலந்தோர் கழஞ்சுதானே
நன்னயத்தே னிற்கொடுத்தால் பயித்தியம்வாயு
நாடாமற் வாசியதாம் நாளுந்தானே. (61)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |
| ஓமம் | இந்துப்பு |
| அட்டுப்பு | சோத்துப்பு |
| விளையலுப்பு | கல்லுப்பு |
| அப்பளக்காரம் | வெங்காரம் |
| சவர்க்காரம் | பொரிக்காரம் |
| சங்கம்வேர் | சித்தரத்தை |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| கருஞ்சீரகம் | கண்டங்கத்திரிவேர் |
| சீரகம் | யானைத்திப்பிலி |
| நெல்லிப்பருப்பு | தூதுவேளைவேர் |
| சித்திரமூலவேர் | |

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து, இடித்துச் சூரணம் செய்து, மொத்த எடைக்குப் பாதி சுத்தி செய்த சிவதைவேர்ச் சூரணம் சேர்த்துப் பின்னர் கருணைக்கிழங்குச் சூரணம் சரியெடை சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

இத்தூளில் 1¼ வராகனெடை யெடுத்துத் தேனில் கொடுக்கவும்.

பித்தம், வாயு முதலானவை தீரும்.

## 33. பித்தத்திற்குப் பிருங்கமலத் தைலம்.

தகரச்சீ தேவிநற்செங் கழுநீர்சீந்திற்
றண்டுநெல்லிக் காயொடுகற் றாழையல்லால்
உகந்தகையாந் தகரையொவ்வோர் வகைக்குநன்
யொருநாழி பசுவின்பா லிரண்டுநாழி [ருய்
அகலாம லதிமதுரம் பலந்தானாலி
லாப்பாலை விட்டெரித்தெ ரித்துக்கொண்டே
பகர்ந்தபடி தலையுடம்பிற் பூசிமூழ்கிற்
பறந்துவிடுஞ் சகலபயித் தியமுந்தானே. (62)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| தகரைச்சாறு | — | 1 படி |
| சீதேவிச்செங்கழுநீர்ச்சாறு | — | ,, |
| சீந்திற்கொடிச்சாறு | — | ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | — | ,, |
| கற்றாழைச்சாறு | — | ,, |
| கையாந்தகரைச்சாறு | — | ,, |
| பசுவின்பால் | — | 2 படி |

இவைகளையொன்றுகலந்து,

அதிமதுரம் 4 பலம் எடுத்துப் பசுவின்பால் விட்டரைத்து, நல்லெண்ணெய் 2 படியும் சேர்த்து, எரித்துங்

பதந்தில் இறக்கவும். இதனுல் தலைமுழுகி வரவும்.

பித்தங்கள் தீரும்.

## 34. பிருங்காமலத் தைலம் (வேறு).

*நெல்லிக்காய். கற்ருழை சீந்திற்றண்டு
நேர்ந்திடுகை யாந்தகரை வகையொன்றுக்கே
சொல்லியசா றெருநாழி பலந்தானுலே
புகன்றிடதி மதுரமதை யரைத்துக்காய்ச்சி
நல்லியல்பாய் றலையுடம்பிற் பூசிமூழ்கிற்
நாடாதுச் சகலபயித் தியமுந்தானே. (63)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | கற்ருழைச்சாறு |
| சீந்திற்கொடிச்சாறு | கையாந்தகரைச்சாறு |

இவைகளின் சாறு வகைக்கு — 1 படி

அதிமதுரம் 4 பலம் எடுத்துச் சாறுவிட்டரைத்து, நல்லெண்ணெய் 2 படியும் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துத் தலைமுழுகிவரவும்.

பித்தங்கள் தீரும்.

## 35. காசம், பித்தம் தலைவலிக்கு இளநீர் தைலம்.

இளநீரு பசுவின்பா லெண்ணெய்மூன்று
(சரக்)கும்வகைக் கொருநாழி யேலங்கோஷ்டம்

*இச்செய்யுளில் ஒரு அடி காணப்படவில்லை.

வளையமத லதிமதுரங் குங்குமப்பூ
வாசநெய்தற் கிழக்குசந் தனங்கிராம்பு
விளம்புவிலா மிச்சையில வங்கம்நல்ல
வசுவாசி கடுகரோ கணிசா(திப்பூ)
உளமகிழு மிருவேலி நன்னாரிவே
ரற்றசடா மாஞ்சில்முத்தக் காசுதானே, (64)

காசவ்வாற் தண்ணீர்விட் டான்கிழங்கு
கர்ப்பூரம் புழுகுசெண் பகத்தரும்பு
நேசமுற வேதகரம் வகையொன்றுக்கே
நிறையொவ்வோர் கழஞ்சதிள நீரதன்னில்
மாசரச மாகவே காய்ச்சிக்கொண்டு
மலர்விழிக்குந் தலைக்குமிட்டு நசியஞ்செய்தால்
காசஞ்செய் பயித்தியமதுவுங் கண்ணோய்
கனத்தசிரோ வேதனையும் வாசியாமே. 64)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| இளநீர் | — | 1 படி |
| பசுவின் பால் | — | ,, |
| நல்லெண்ணெய் | — | ,, |

இவைகளையொன்றுசேர்த்து,

| | |
|---|---|
| ஏலக்காய் | கோஷ்டம் |
| அகில்கட்டை | அதிமதுரம் |
| குங்குமப்பூ | நெய்தல்கிழங்கு |
| சந்தனத்தூள் | கிராம்பு |
| இலாமிச்சைவேர் | லவங்கப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | கடுகரோகிணி |
| சாதிப்பூ | வெட்டிவேர் |

| | |
|---|---|
| கன்னாரிவேர் | சடாமாஞ்சில் |
| கோரைக்கிழங்கு | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| கர்ப்பூரம் | புனுகு |
| சண்பகமொட்டு | கிரந்திதகரம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இளநீர்விட்டரைத்து, பால் சேர்த்த எண்ணெயுடன் குழப்பி, எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு, கண்கள், தலைமுதலானவிடங்களில் தேய்த்துக் கொண்டு, நசியமும் இடவும்.

தலைவலி, காசம், பித்தம், கண்ணோய் முதலானவை நீங்கும்.

புனுகு, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ இவைகளைக் கடைசியில் முடிச்சாகக் கட்டிப்போடுவதே முறையாகும்.

## 36. குன்மம், பாண்டு வயிற்றுவலிக்கு வில்வாதி லேகியம்.

முப்பதுப லஞ்சரியாய் வில்வவேரும்
மொழிந்தபடி நான்குமறக் கால்நீர்விட்டு
யப்படியே யெட்டிலொன்றாய்க் காய்ச்சிப்பால்
லதிலொருமுப் பதுபலத்தைத் தண்ணீர்விட்டுக்
கைப்பதமாய்க் காய்ச்சிசுக்கு பலமாம்மூன்று
கார்மிளகு லோர்பலந்திப் பிலியின்மூலம்
திப்பிலியிவ் வகைக்கிரண்டு பலமேயொன்றுந்
தேர்ந்தபலங் கொடிவேலி யின்னங்கேளே (65)

இன்னமொரு பலஞ்செவியம் பலந்தானென்றே
யெழில்தாளி சபத்திரிநற் சிறுநாகப்பூ
சொன்னதரைப் பலம்நல்லில வங்கப்பட்டை
சூழ்ந்திடில வங்கபத்திரி மணக்குமேலம்
வன்னமுள்ள சீரகமின் னன்குந்தானே
வகைக்குக்காற் பலங்கூட்டி யிடித்துத்தூளை
பின்னந்தப் பாகினிற்போட் டுத்தேன்விட்டுப்
பிசறியுண்டாற் தீர்ந்திடும்நோய் மூலந்
தானே. (66)

மூலங்கா மாலைகுன்மம் பாண்டுவிக்கல்
முதிர்ந்திடுங்கி ராணிகண்ட ரோகம்வாந்தி
சாலவும்பீ னிசமிருமல் வயிற்றுக்கட்டி
சகியாத ருசிமார்பின் வலியுந்தீரும்
வேலணியுங் கந்தர் நந்தி முகனைப்பெற்ற
விமலியபி ராமிபல நாமிசக்திப்
பாலமைந்த சங்கரனார் பூசைதன்னில்
பண்புசர பேந்திரமால் பகருவாரே. (67)

(இ-ள்.)

மேல் தோலைச் சீவியபின் வில்வவேர் 30 பலம் எடுத்துச் சிறுசிறுதுண்டுகளாக நறுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 4 மரக்கால்விட்டு, அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து அதனுடன் 30 பலம் வெல்லம் சேர்த்துப் பாகுகாய்ச்சவும். பின்னர்

| | | |
|---|---|---|
| சுக்கு | — | 3 பலம் |
| மிளகு | — | 1 ,, |
| திப்பிலிமூலம் | — | 2 ,, |

| | | |
|---|---|---|
| திப்பிலி | — | 2 பலம் |
| கொடிவேலிவேர் | — | 1 ,, |
| செவ்வியம் | — | 1 ,, |
| தாளீசபத்திரி | — | ½ ,, |
| சிறுநாகப்பூ | — | ½ ,, |
| லவங்கப்பட்டை | — | ¼ ,, |
| லவங்கப்பத்திரி | — | ¼ ,, |
| ஏலக்காய் | — | ¼ ,, |
| சீரகம் | — | ¼ ,, |

இவைகளையிடித்துத் தூள்செய்து, பாகுடன் போட்டுக் கிளறித் தேன்விட்டுப்பிசறி உட்கொள்ளவும்.

மூலம், காமாலை, குன்மம், பாண்டு, விக்கல், கிராணி, கழுத்தைப்பற்றிய நோய்கள், வாந்தி, பீனிசம், இருமல், வயிற்றுக் கட்டி, அருசி, மார்புவலி முதலான நோய்கள் நீங்கும்,

## 37. வாந்திக்கு ஏலாதிச் சூரணம்.

ஏலமில வங்கப்பத்திரி சிறுநாகப்பூ
 மிலங்கைநற் பழத்தூள்நெற் பொரிமென்வா
காலமுள்ள சந்தனம்பச் சைக்கற்பூரஞ் [சங்
 கோரையின் கிழங்குசமன் சேர்த்திடித்தே
மேலந்தக் கபத்திறைற் செய்வாந்திக்கு
 மிவமாகத் தேனிலிடு வாதத்திற்குஞ்
சாலவும்பித் தத்தினுக்கு மினிப்பாமந்தச்
 சர்க்கரையி லேகொடுப்பாய் வாந்தி
போமே. (68)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | லவங்கப்பத்திரி |
| சிறுநாகப்பூ | இலந்தைப்பழத்தூள் |
| நெற்பொரி | சந்தனத்தூள் |
| பச்சைக்கற்பூரம் | கோரைக்கிழங்கு |

இவைகளையிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொள்ளவும். கபம் மேலிடுவதனாலேற்படும் வாந்திக்கு தேனிலும், வாதத்திலுண்டாவதற்கும், பித்தத்திற்கும் சர்க்கரையுடன் உட்கொள்ளவும்.

## 38. காமாலைக்குச் சந்தனாதிக் கிருதம்.

சந்தனமு மூன்றுபலங் காய்ச்சிக்கொண்டு
சர்க்கரையி லிரண்டுபலம் நன்னாரிவேர்
பந்தமுட னேர்பலங் கணக்காய்த்தானே
பலமொன்றே யதிமதுரம் கூவைகீரு
முந்தவொரு காசெடையிம் மருந்தையெலாம்
மொழிந்திடும்நற் சந்தனக்க ஷாயந்தன்னில்
சுந்தரமாம் அரைத்தெடுத்தோர் படியாம்நெய்யிற்
சுகமாக வும்கலந்து சொன்னவாறே. (69)

சொன்னபடி யேபதத்திற் காய்ச்சிக்கொண்டு
சொற்கூகை நீருஞ்சர்க் கரையும்போட்டு
கின்னயமாய் பிசறிசின்னக் கரண்டியாலே
நயந்துதின மிருபொழுது உண்டேவந்தால்

பின்னந்தப் பொல்லாத வறட்காமாலை
பீடிக்கும் மஞ்சளின்கா மாலையென்றும்
அன்னமிடும் புண்ணியவான் பிணியைப்போலு
மாதித்தன் முன்பனிபோ லகன்றுபோமே (70)

(இ-ள்.)

சந்தனத்தூள் 3 பலம் எடுத்துத் தண்ணீர்விட்டுக் கஷாயம்செய்து, நன்னாரிவேர் 1 பலமும், அதிமதுரம் 1 காசெடையும் எடுத்துச் சந்தனக்கஷாயம்விட்டு நன்றாக வரைத்து, ஒருபடி நெய்யுடன் கலந்து, அடுப்பிலேற்றிப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிச் சர்க்கரை 2 பலமும், கூகைநீர் ஒரு காசெடையும் போட்டுக் கலக்கிவைத்துக் கொள்ளவும்,

வறட்காமாலை, மஞ்சட்காமாலை முதலானவை தீரும்.

---

## 39. பயித்தியத்திற்குப் பேய்ப்புடல் மருந்து.

சொன்னபடி பேய்புடலும் மூசுமுசுக்கைச்
சுகப்பாசிப் பயறுபுதுச் சட்டிதன்னில்
நன்னயமா யரைப்படிதண் ணீரைவிட்டு
நாள்முழு துமூறவைத்து மறுநாள்நன்றாய்
அன்னதந்தச் சட்டியினி லுரைத்தேயப்பா
லதைக்கழுவித் தண்ணீரை யிறுத்துக்கொண்
இன்னமிரண் டெலுமிச்சம் பழத்தின்சாறு [டே
மெழிஞான சீரகமும் பொடிசெய்வாயே (71)

பொடியொருவ ராகனெடை போட்டிதெல்லாம்
பொருந்தவுந்தா னேகலந்து நாள்மூன்றிந்து
வடிவமுயர் எலிமிச்சம் பழச்சாறாத்தி
வயணமுட னேதலையைக் கீறித்தேய்த்துத்
துடியாம லொருநூறு பானைத்தண்ணீர்
தோயவிட்டம் மருந்தைவிடா மற்கொடுத்தால்
கொடிதான பயித்தியமேற் குணமதாகுங்
குபேரசர பேக்திரமால் கூறும்வாரே. (72)

(இ-ள்)

| | |
|---|---|
| பேய்ப்புடல் | மூசுமூசுக்கை |
| பாசிப்பயறு | |

இவைகளை வகைக்கு ஒருபலம் எடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு ½ படி சுத்த ஜலம்விட்டு ஒருநாள் முழுவதும் ஊறவைத்து, மறுநாள் பிசைந்து தெளிவை இறுத்து 2 எலுமிச்சம்பழத்தின் சாற்றைப் பிழிந்து, சீரகம் 1 வராகனெடையும்சேர்த்து, 3 நாட்கள்கழித்துப் பருகக் கொடுக்கவும்.

பைத்தியம், அதிகமிருந்தால் தலையைக்கீறி எலுமிச்சம்பழத்தைத் தேய்க்கவும். 100 பானை தண்ணீரைத் தலையில் விடவும்.

## 40. பித்தம், காமாலை, வாந்தி, மார்வலிக்குச் சிரிங்கிபேராதிச் சூரணம்.

துதிசெய்யிஞ்சி மேற்றோலைச் சீவிக்கொண்டு
துண்டுதுண் டாய்நறுக்கி நிழலுலர்த்தி

பதினாறு பலம்பசுவி நெய்யிலிஞ்சி
பக்குவமாய் வறுத்திடித்து மிளகுநன்றாய்
விதித்திடுவி ராகனெடை பனிரெண்டெட்டாம்
வேண்டியதிப் பிலிநிறைதிப் பிலியின்மூலம்
அதினன்கு காசெடைமேற் கொடியின்வேலி
யாகும்வ ராகனெடை பத்துந்தானே. (73)

பத்தெல்லா லேலமில வங்கப்பட்டை
பகர்மூங்கி லுப்போடு லவங்கப்பத்திரி
யுத்தமமாம் சந்தனம்வி லாமிச்சம்வேர்
வுயர்சாதிக் காயெழில்சீ ரகங்கிராம்பே
யித்தனையும் வகைக்கொருப லந்தான்கூட்டி
யிடித்துவடிக் கட்டியிஞ்சி முதற்றூட்கெல்லாம்
புத்தநற்சீ னியுமிரண்டு பாங்காய்ச்சேர்த்து
பொருந்தவுந்தா னேகலந்து கொண்டிடாயே. (74)

கொண்டிடுவ ராகனெடை யிரண்டுபோதும்
குணமான தேனில்நித்த முண்டேவந்தால்
பண்டிருந்த சுரம்மார்பில் வலிகிராணி
பகராம்பற் பித்தங்கா மாலைவாந்தி
துண்டரிக்கப் பீனிசமும் வாசியாகும்
தோகையிடப் பாகர்பதப் பூசையாலே
எண்டிசையுங் கீர்த்திபெற்ற தருமமூர்த்தி
யெங்கள்சர பேந்திரமா லியம்பும்வாரே. (75)

(இ-ள்)

இஞ்சியின் மேல்தோலைச் சீவிவிட்டுத் துண்டுதுண் டாக நறுக்கி, நிழலில் உலர்த்தவும். 16 பலம் நெய்யில்

இந்த இஞ்சியைப் பொன்வறுவலாக வறுத்து, இடித்து, அதனுடன்

| | | | |
|---|---|---|---|
| மிளகு | — | 12 | வராகனெடை |
| திப்பிலி | — | 8 | ,, |
| திப்பிலிமூலம் | — | 4 | ,, |
| கொடிவேலிவேர் | — | 10 | ,, |
| ஏலம் | — | 1 | பலம் |
| லவங்கப்பட்டை | — | | ,, |
| மூங்கிலுப்பு | — | | ,, |
| லவங்கப்பத்திரி | — | | ,, |
| சந்தனத்தூள் | — | | ,, |
| விளாமிச்சம்வேர் | — | | ,, |
| சாதிக்காய் | — | | ,, |
| சீரகம் | — | | ,, |
| கிராம்பு | — | | ,, |

இவைகளை இடித்து, வஸ்திரகாயஞ்செய்த தூளுக்கு 2 மடங்கு சீனி சேர்த்துக் கலந்துவைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் 1 வராகனெடையெடுத்து, இருபோது தேனில் உட்கொள்ளவும்.

சுரம், மார்வலி, கிராணி, நீராம்பல்கட்டி, பித்தம், காமாலை, வாந்தி, பீனிசம் முதலானவை நீங்கும்.

## 41. வாந்திக்கு ஏலாதிச் சூரணம்.

ஏலமில வங்கநெல்லுப் பொரியிலந்தை
மிலகுபட்டை நாணற்பூ முத்தக்காசு
கோலமுள்ள சந்தனபச் சைக்கர்ப்பூரம்
குளிர்ந்ததண்ணீ ரிலரைத்துக் கொடுப்பாய்வேது

மேலந்த மாங்கொட்டைப் பருப்பரைத்தே
 மேன்மைகஞ்சித் தண்ணீரி லீவாயின்னம்
சீலமுயர் குளவியின்கூ டரைத்துநன்றாய்ச்
 சேர்த்துதவு தயிரிலப்பால வாந்திபோமே (76)

(இ-ள்)

| | |
|---|---|
| (1) ஏலக்காய் | கிராம்பு |
| நெற்பொரி | இலந்தைப்பட்டை |
| நாணற்பூ | கோரைக்கிழங்கு |
| சந்தனத்தூள் | பச்சைக்கர்ப்பூரம் |

இவைகளைச் சரியளவெடுத்துத் தண்ணீர்விட்டரைத்து உட்கொள்ளவும்.

(2) மாங்கொட்டைப் பருப்பைக் கஞ்சித் தண்ணீருடன் அரைத்துக் கொடுக்கவும்.

(3) குளவிக் கூட்டைத் தயிரில் குழப்பியும் உட்கொள்ளவும்.

## 42. வாந்தி, விக்கலுக்கு வில்வாதி லேகியம்.

செப்பும்வில்வ வேரிலிரு பதுபலந்தான்
 சீவியதி லேபதக்குத் தண்ணீர்வார்த்தே
ஒப்புடனே நாநாழி யாகக்காய்ச்சி
 வோதுபதி னைந்துபலம் பழவெல்லம்போட்
டப்படியே கரைத்தெரிந்து வடித்துக்கொண்டே
 யந்தவிலா மிச்சையின்வேர் நன்னாகப்பூ

தப்பின்றி யேகோஷ்ட மிளகுசுக்கு
தாளீசபத் திரிசெவ்விய மின்னந்தானே. (77)

இன்னமுந்தான் திப்பிலிதிப் பிலியின்மூல
மேலயில வங்கம்நற் கடகசிங்கி
வன்னமுள்ள கொடிவேலி யிவைகளெல்லாம்
வகைக்கொருப லங்கூட்டி யிடித்துக்கொண்டு
சொன்னபடி மென்பொடியாய்க் குழம்பிற்போட்
சூடாற விட்டெடுத்துத் தேனிலுண்டால் [டுச்
பின்னந்தம் பொல்லாத வாந்திவிக்கல்
பிணியிரண்டுஞ் சட்டமதாய் வாசியாமே. (78)

(இ-ள்)

வில்வவேர் 20 பலம் எடுத்து நறுக்கி, 2 மரக்கால் சுத்த ஜலம்விட்டு, 2 படியாக வற்றக்காய்ச்சி, 15 பலம் பழய வெல்லம்போட்டுக் கரைத்துப் பாகுசெய்து,

| | |
|---|---|
| விலாமிச்சைவேர் | சிறுநாகப்பூ |
| கோஷ்டம் | மிளகு |
| சுக்கு | தாளீசபத்திரி |
| செவ்வியம் | திப்பிலி |
| திப்பிலிமூலம் | ஏலக்காய் |
| கிராம்பு | கற்கடசிங்கி |
| கொடிவேலிவேர் | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து, குழம்பிலிட்டுக் கிளறி, சூடாறும் வரை வைத்துத் தேன்விட்டு உட்கொண்டுவர

வாந்தி, விக்கல் இவைதீரும்.

## 43. அரோசகத்திற்குச் சந்தனாதிச் சூரணம்.

சந்தனங்கர்ப் பூரமில வங்கப்பத்திரி
சன்னநாகே சங்கோரைக் கிழங்குநல்ல
கந்தமிகுந் தேயிலங்கு மேலஞ்சீர
கம்பருத்தி விதைப்பருப்பி தல்லாமற்றுன்
சுந்தரநெற் பொரியொடுதிப் பிலியுமொப்பாய்ச்
சூரணித்த நிறைப்படிசர்க் கரையைக்கூட்டிப்
பந்தமுட னிருபொழுது தேனிற்சேர்த்து
பண்பாயோர் காசெடையின் திட்டந்
தானே. (79)

திட்டமது பிசகாமற் கொடுத்தேவந்தால்
தீர்ந்துவிடு மருசியரு வெறுப்புக்கேளாய்
சட்டமொடு முன்புரைத்த கர்ப்பூரந்தான்
சரியரைவி ராகனெடை தானானும்
யிட்டவிழ்தத் திற்கலந்து கொள்வாய்நன்றாய்
யீசர்பத பூசையினல் மறையோர்க்கெல்லா
மட்டடங்கா கொடைகொடுக்கும் போசன்கீர்த்தி
மருவுசர பேந்திரன்சொல் மார்க்கந்
தானே. (80)

(இ-ள்.)

| | |
|---|---|
| சந்தனத்தூள் | கர்ப்பூரம் |
| லவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |
| கோரைக்கிழங்கு | ஏலக்காய் |
| சீரகம் | பருத்திவிதைப்பருப்பு |
| நெற்பொரி | திப்பிலி |

இவைகளைச் சமனெடுத்து இடித்து, வஸ்திரகாயஞ் செய்து, இதற்குச் சரியெடை சீனிசேர்த்து இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும். பச்சைக் கர்ப்பூரம் ½ வராகனெடை கூட்டவும்.

அருசி, அன்னத்துவேஷம் முதலானவை தீரும்.

## 44. சுவாசகாசம், ரத்த பித்தத்திற்கு ஆடாதோடை நெய்.

சட்டமுள்ள பசுவின்பால் படியிரண்டே
சார்ந்திடும்நெய் யப்படியே யாடாதோடை
திட்டமந்தச் சாறுபடி நான்கேயல்லாற்
தேர்ந்தநில வேம்புகொடி வேலிகொத்தான்
மட்டர்நல் லிலுப்பையின்பூ குடசப்பாலை
மருக்கொழுந்து சந்தனங்கோ ரைக்கிழங்கு
வெட்டிவேர் அருகொடுநன் னாரியிந்த
வேருதாம ரைக்கிழங்கோ டியம்புவேனே (81)

இயம்பியநீர்ப் புங்கினுட பட்டையன்றி
இலங்கிடுசெங் கழுநீரின் கிழங்கிதெல்லாம்
முயங்காம லிந்தவகை யொவ்வொன்றுக்கே
மூன்றரை வராகனெடை சேர்த்திடித்தே
நயந்துபசு வின்பாலி லரைத்துமுன்சொல்
நல்லாடா தோடையிலைச் சாறும்நெய்யும்
வயணமுடன் கூடவிட்டுப் பதமாய்க்காய்ச்சி
வடித்தெடுத்தே யாறினபின் னிதமாய்க்கேளே. (82)

பேசச்கேள் சர்க்கரையும் பலயமோரைந்து
பிசகாபற் செந்தேனும் நிறையவ்வாறு
கேசமதா கக்கலந்து மருந்தையுண்டால்
நீளிரத்த பித்தமச் சுவாசகாசம்
க்ாசஞ்செய் வாந்திசயம் வாசியாகும்
கௌரிபங்கர் பூசையினல் தழைத்தேதஞ்சை
போசமகா ராஜனெனத் தேசமெங்கும்
புகழ்செய்சர பேந்திரமால் புகன்றவாறே (83)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| பசுவின் பால் | — | 2 | படி |
| ,, நெய் | — | 2 | ,, |
| ஆடாதோடைச்சாறு | — | 4 | ,, |

இவற்றை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| நிலவேம்பு | கொடிவேலிவேர் |
| கொத்தான் | சிறுநாகப்பூ |
| குடசப்பாலை | மருக்கொழுந்து |
| சந்தனத்தூள் | கோரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | அருகம்வேர் |
| நன்னாரிவேர் | தாமரைக்கிழங்கு |
| நீர்ப்புங்கம்பட்டை | செங்கழுநீர்க்கிழங்கு |

இவைகளை வகைக்கு 3½ வராகனெடை வீதமெடுத்து இடித்துப் பசுவின்பால் விட்டரைத்துச் சாறுகூட்டிய நெய்யுடன் கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டவும் நெய் ஆறியபின் 5 பலமும் சர்க்கரை கூட்டி, நெய் 5 பலமும் விட்டுக்கலந்து வைத்துக்கொள்ளவும்.

இந்த மருந்தில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம்

2 வேளை உட்கொள்ளவும். இரத்த பித்தம், சுவாச காசம், வாந்தி, க்ஷயம் முதலானவை நீங்கும்.

## 45. வாந்திக்குக் குங்கிலியப் புகை (ஆக்ராணம்).

அந்தமிகுங் குக்கிலில வங்கப்பட்டை
யகிற்கட்டை மயிற்றேகைக் கொத்தமல்லி
கந்தவிலா மிச்சையின்வேர் வெட்டிவேருங்
கனத்தகருங் குங்கிலிய மல்லாலின்னம்
நந்தலிலா நெற்பொரியி தெல்லாங்கூட்டி
நயந்துபொடி யாக்கிவத்தி செய்தேநெய்யில்
சுந்தரமாய் நனைத்தெரித்து நாசிதன்னில்
சொன்னபடி புகைகாட்ட வாந்திபோமே (84)

(இ-ள்.)

| | |
|---|---|
| குங்கிலியம் | லவங்கப்பட்டை |
| அகில்கட்டை | மயிற்றேகை |
| கொத்தமல்லிவிதை | இலாமிச்சைவேர் |
| வெட்டிவேர் | கருங்குங்கிலியம் |
| நெற்பொரி | |

இவைகளைபிடித்துத் தூளாக்கி ஒரு வெள்ளைத் துணியில் ஒரே சீராகப் பரப்பித் திரியாகச்செய்து வைத்துக்கொள்ளவும். இத்திரியில் கொஞ்சம் நறுக்கி நெய்யில் நனைத்துக் கொளுத்தி அணைத்துவிட அதிலிருந்து புகை எழும். அதனை மூக்கில் உறுஞ்சவும்.

வாந்தி நிற்கும்.

## 46. வாந்தி, விக்கலுக்கு ஏலாதிச் சூரணம்.

ஏலமுத்தக் காசுகருஞ் சீரகங்காட்
டெருமைப்பால் திப்பிலிகி ராம்புசுக்கு
கோலமுந்தி ரிகைப்பழநா கப்பூகோஷ்டங்
கூடைநீர் சீரகஞ்சந் தனஞ்சாதிக்காய்
சீலமுயர் இலுப்பையின்பூ கீழ்க்காய்நெல்லி
சிறந்ததிலைப் பனைவேர்நெய்ச் சட்டிபூண்டு
மேலணிசேர் பேரீச்சம் பழம்நெருஞ்சில்
மென்சாறு டமுக்கிராவி ளம்பக்கேளே (85)

விளம்புசடா மாஞ்சிநல்ல கொத்துமல்லி
வேளைவேர் சர்க்கரைசொல் லிவைகளெல்லாந்
தளம்பாமல் வகைக்கொருகா செடையைக்கூட்டித்
தானிடித்துக் கொண்டுவடி கட்டியப்பால்
உளமகிழ்ந்தோர் வெருகடிமண் டலத்திற்பாதி
உண்டிடுபத் தியம்புளிப்பு கைப்பாகாது
வளம்பெறுசா ணுக்கியெண்ணெய் செய்துபூசில்
வாந்திவிக்க லுடலும்நன்றாய் வாசியாமே (86)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | கோரைக்கிழங்கு |
| கருஞ்சீரகம் | காட்டெருமைப்பால் |
| திப்பிலி | (கூடைநீர்) |
| சுக்கு | திராக்ஷைப்பழம் |
| சிறுநாகப்பூ | கோஷ்டம் |
| கூடைநீர் | சீரகம் |
| சந்தனத்தூள் | சாதிக்காய் |

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | கீழாநெல்லி |
| நிலப்பனைவேர் | நெய்ச்சட்டிப்பூண்டு |
| பேரீச்சம்பழம் | நெருஞ்சில் |
| அமுக்கிராக்கிழங்கு | சடாமாஞ்சில் |
| கொத்தமல்லிவிதை | வேளைவேர் |
| சர்க்கரை | கிராம்பு |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ்செய்து, வேளைக்கு 3 விரல் கொள்ளுமளவெடுத்து 20 நாட்கள் உட்கொள்ளவும்.

பத்தியம் :

புளிப்பு, கைப்பு ஆகாது. சாணுக்கிக் கீரைச்சாறு கூட்டிக் காய்ச்சிய எண்ணெயினால் முழுகவும்

வாந்தி விக்கல் தீரும். உடலும் நன்றாகும்.

## 47. வாந்தி, வயிற்றுப் போக்கிற்கு மல்லிக் குடிநீர்.

கொத்துமல்லி மாந்தளிர்மாம் பட்டைவாசந்
குலவுவிலா மிச்சையின்வேர் கழஞ்சிரெண்டே
வைத்தரைத்தே யிருநாழி தண்ணீர்விட்டு
வடித்துழக்கா யாழாக்குத் தேன்சேர்த்துண்
சத்திவயிற் றுப்போக்கு மூர்ச்சைவெப்புச் ]டால்
சார்ந்ததிமிர் வாயூரல் வாசியாமே
பத்தியங்கைப் புப்புளிப்போ டுப்பாகாது
பண்பாய்க்கே ளிருபொழுதுண் ணேழு
நாளே. (87)

(இ-ள்)

| | |
|---|---|
| கொத்துமல்லிவிதை | மாந்தளிர் |

மாம்பட்டை. இலாமிச்சைவேர்

இவைகளை வகைக்கு 80 குன்றிநிறை வீதமெடுத்து இடித்து, 2 படி தண்ணீர் விட்டு, அடுப்பின்மேலேற்றி, ஒரு உழக்காகும்வரை வற்றவைக்கவும். இதனுடன் தேன் சேர்த்து உட்கொள்ளவும்.

வாந்தி, வயிற்றுப்போக்கு, மூர்ச்சை, உஷ்ணம் வாயில் நீரூரல் முதலியவை தீரும்.

பத்தியம் :-

கைப்பு, புளிப்பு, உப்பு, இவைகளை நீக்கவும். 7 நாட்கள் இவ்வாறு தினம் 2 வேளைகள் வீதம் பருகவும்.

## 48 விக்கலுக்குக் கற்கடசிங்கிச் சூரணம்.

சீரான கற்கடக சிங்கிநல்ல
சிறுதேக்கு சித்திரமூ லந்தப்பாமல்
யேராக வேயுலர்த்திப் பொடியாய்ச் செய்தே
யிட்டரைவ ராகனெடை வகையொன்றுக்கே
தாராள மாய்க்கூட்டி வாழைச்சாற்றிற்
தான்கொடுத்தால் விக்கலெல்லாம் வாசியாமே
ஓராறு முகக்கடவுள் கிருபையாலே
யுயர்ந்தசர பேந்திரமா லோதும்வாறே. 88)

(இ-ள்)

கற்கடசிங்கி சிறுதேக்கு
சித்திரமூலம்

இச்சரக்குகளைச் சரியெடையெடுத்து, உலர்த்திப்

பொடிசெய்து, வேளைக்கு ½ வராகனெடைத்தூளெடுத்து வாழைக்கிழங்குச் சாற்றில் கொடுக்கவும்.

விக்கல் தீரும்.

## 49. க்ஷயம், இருமலுக்கு வாஸாகண்டகாரி லேகியம்.

சட்டமா யாடாதோ டைச்சமூலஞ்
சங்கவமு தலைநற்கண்டங் கத்திரிவேர்
திட்டது நூறுபலம் நறுக்கிப்போட்டு
திகழ்சலத்தி லிருதூணி விட்டுக்காய்ச்சி
மட்டமொரு நான்கிலொன்றாய் வடித்துக்கொண்டு
மறுபடிநெய் நாநாழி பால்நாநாழி
பிட்டமொடு திப்பிலிகற் கடகசிங்கி
யிலங்குமத்தித் திப்பிலியோ டோது
வேனே. (89)

ஓதுசடா மாஞ்சில்கடுக் காய்தான்றிக்கா
யுயர்மிளகிந் துப்புசுக்கு சங்கம்வேரு
தூதுவளை வேரிலங்கு மிம்புராவேர்
துய்யவெட்பா லையினரிசி செவியங்கோஷ்டம்
மீதுசிறு மூலகமிவ் வகையொன்றுக்கே
மிதமாக நாற்கழஞ்சு சேர்த்தரைத்தே
கோதுவரா மற்சொலுங்க டாயந்தன்னில்
கூட்டியொன்றாய் கரைத்தெடுத்துப் பத
மாய்த்தானே. (90)

பதமாக வேயெரித்து வடித்துக்கொண்டு
பண்புடனே யுண்டிடிற்கா சச்சுவாசம்

மிதமில்லாக் கயரோக மிருமலீளை
மேலிரத்தப் பித்தமுமந் தாரகாசம்
யிதமிலா துளமாந்தை வாசியாமே
யெத்தகைக்கெல் லாங்கொடுக்குங் கீர்த்திபோ
சதகோடி மன்னர்மெச்சு மன்னர்தாதா [சன்
சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே. (91)

(இ-ள்.)

ஆடாதோடைச்சமூலம் சிறுவழுதலை
கண்டங்கத்திரிவேர் (சிறுகத்தரிவேர்)

இவைகள் தனித்தனியே 100 பலம் வீதமெடுத்து நறுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து நான்கிலொன் ருகும்வரை வற்றவைத்து வடிக்கட்டவும். இதனுடன்

| | | |
|---|---|---|
| பசுவின்பால் | — | 4 படியும் |
| பசுவின் நெய் | — | ,, கூட்டி, |

| | |
|---|---|
| திப்பிலி | கற்கடசிங்கி |
| யானைத்திப்பிலி | சடாமாஞ்சில் |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| மிளகு | இந்துப்பு |
| சுக்கு | சங்கம்வேர் |
| தூதுவேளைவேர் | இம்புராவேர் |
| வெட்பாலையரிசி | செவ்வியம் |
| கோஷ்டம் | திப்பிலி |

இவைகளை வகைக்கு 4 கழஞ்சு (160 குன்றிநிறை) வீதமெடுத்து இடித்துக் கஷாயம்விட்டரைத்து நெய் யுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப், பதத்தில் இறக்கவும். இதில் தினம் ஒரு ஸ்பூனளவெடுத்து உட் கொள்ளவும்.

காசம், சுவாசம், க்ஷயம், இருமல், ஈளை, ரத்த பித்தம், மந்தாரகாசம், உளமாந்தை முதலானவை தீரும்.

## 50. விக்கலுக்கு பெருங்காயக் கல்கம்.

கந்தமிகும் பெருங்காயம் தும்பராட்ட
கஞ்சுக்குத் திப்பிலியு மரத்தைநன்றாய்
அந்தவகைக் கொவ்வொருகா செடைகள்கூட்டி
யதைக்கறண்டி தனிற்போட்டு வெதுப்பிக்கொண்டு
சந்தணம்போ லரைத்தெடுத்துத் தேனிலுண்ணில்
சட்டமாதர யீனுதப்பசுக் கிடாரி
சுந்தரக்கோ சலமொருகை யளவேயுண்டால்
சூழ்ந்தவிக்கல் போம்புளிப்பு கைப்பாகாதே (92)

(இ-ள்.)

| | |
|---|---|
| பெருங்காயம் | பேரரத்தை |
| சுக்கு | திப்பிலி |
| சிற்றரத்தை | |

இவைகளை வகைக்கு 1 காசெடை வீதமெடுத்து அரைத்து, கரண்டியில் போட்டு வெதுப்பிக்கொண்டு பின்னர், சந்தனம்போல் அரைத்துத் தேன்கலந்து உட்கொள்ளவும்.

கன்றுபோடாத பசுவின் மூத்திரம் ஒரு கையளவு உட்கொள்ளவும். விக்கல்போம்.

புளிப்பு, கைப்பு இவை கூடாது.

## 51. பாண்டு, பித்தத்திற்கு அயஜம்பீர வடகம்.

செப்புகருஞ் சீரகங்கற் கடகசிங்கி
சீரகந்திப் பிலிமிளகு சுக்கோடின்னம்
தப்புவரா திரும்பினரப் பொடியிதெல்லாந்
தான்சமதை கூட்டிநன்றாய்ப் பொடிகள்செய்தே
ஒப்புறுமென் கலசமதிற் போட்டேயப்பால்
ஓதெலுமிச் சம்பழத்தின் சாற்றைவார்த்தே
அப்படியோ ரெட்டுநா ளூறவைத்தே
யதையெடுத்துக் கொண்டுபின்ன மியம்பக்
கேளே. (93)

இயம்புகின்ற நல்லகையாந் தகரைச்சாற்றில்
லியல்பாக வேயரைத்து வழித்துக்கொண்டு
நயம்பெறும்பொற் கழற்கொடிக்காய் நிகராயுண்டை
நயந்துசெய்து தின்றுவரிற் பத்தியந்தான்
வியங்கள்கசப் புப்புளிப்பு கூட்டொண்ணாது
விட்டோடும் பயித்தியமும் பாண்டுந்தானே
புயலையொப்பாய் புவிமுழுதுங் காக்கும்மன்னர்
புகழ்செய்சர பேந்திரமால் புகன்றவாறே. (94)

(இ-ள்)

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | கற்கடசிங்கி |
| சீரகம் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| சுத்திசெய்த அரப்பொடி | |

இவைகளை இடித்து ஒரு கலசத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 8 நாட்கள் ஊறவைக்கவும். பின்னர்

கையாந்தகரைச்சாறுவிட்டு நன்றாகவரைத்துக் கழற்சிக் காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக்கொள்ளவும்.

காலை, மாலை உட்கொண்டுவரப் பித்தம், பாண்டு, முதலானவை ரோகங்கள் தீரும்.

**பத்தியம்:**

கசப்புச் சுவையுள்ள பண்டங்களையும், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கவும்

## 52. வாந்தி, விக்கலுக்கு வில்வாதி லேகியம்.

பன்னிரண்டு பலஞ்சரியாய் வில்வவேரும்
பகரிருக மூஞ்சுசுக்கு மிடித்துக்கொண்டு
சொன்னதிரு நாழிதண்ணீர் விட்டுக்காய்ச்சிச்
சுண்டியபின் னுருழக்காய் வடித்திராவில்
நன்னயம தாய்க்கொடுத்தால் வெள்ளோக்காளம்
நடுக்கமுறு சக்திவிக்கல் வாசியாமே
பொன்னணியு மணிமார்பன் அன்னதாதா
புகழ்செய்சர பேந்திரமால் புகன்றவாறே. (95)

(இ-ள்)

வில்வவேர் 12 பலம் எடுத்து, சுக்கு 80 குன்றி எடையும் சேர்த்து இடித்து 2 படி சுத்த ஜலம்விட்டு, ஒரு உழக்காகும்வரை வற்றவைக்கவும். இதனை உட்கொள்ளவும்.

வெள்ளோக்காளம், வாந்தி, விக்கல் முதலானவை தீரும்.

## 53. வாந்தி, விக்கலுக்கு வில்வாதிச் சூரணம்.

கந்தவில்வப் பழமிலங்குந் தேத்தாங்கொட்டை
காளமயி லிறகுகலைக் கொம்பின்சீவல்
சுந்தரமாம் நெற்பொரியோ ரைந்துங்கூட்டிச்
சொன்னபடி யேயரைத்துப் பொடியாய்ச் [செய்து
பந்தமுள்ள செந்தேனி லல்லாநல்ல
பசுவினுட நெய்யினில் புசித்தால்முந்த
வந்தடுத்த பொல்லாக்கொ டூரமான
வாந்திவிக்க லோய்ந்துநன்றாய்த் தீர்ந்து
போமே. (96)

(இ-ள்)

| | |
|---|---|
| வில்வப்பழம் (காய்ந்தது) | தேத்தாங்கொட்டை |
| | மான்கொம்புச்சீவல் |
| மயிலிறகு (பொசுக்கியது) | நெற்பொரி |

இவைகளையிடித்துப் பொடியாக்கி வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவும். இந்த பொடியைத் தேனில் குழைத்தோ அல்லது நெய்யில் குழைத்தோ உட்கொண்டால்

கொடூரமான வாந்தி, விக்கல் முதலானவை தீரும்,

## 54. வாந்தி, ஓக்காளத்திற்குப் பருத்தி விதைச் சூரணமும், கஷாயமும்.

பருத்திவிரை நெற்பொரியும் வறுத்துக்கொண்டு
பகர்ந்திடுதிப் பிலியேலந் தம்பராட்டம்
திருத்தியசித் திரமூல மணக்கிராம்பு
திட்டமொவ்வோர் வகைக்குக்கால் பலமேகூ
குத்துடனி செல்லாஞ்சேர்த் திடித்துவத்திர [ட்டி
காயமிட்டுக் கொண்டுநித்தம் தேனிலுண்டால்
வருத்தமிடு மோக்காளம் வாந்திதீரும்
வண்மையிராத் திரிக்குநன்றாய் வயணங்
கேளே. (97)

வயணங்கேள் மாதளம்பூ பருத்திக்கொட்டை
வாசமிகுஞ் சீரகம்பா வட்டைதல்லு
நயம்பெறுசுக் கிந்தவகை யொவ்வொன்றுக்கே
நன்றொருவ ராகனெடை வில்வவேரில்
இயல்பாகச் சீவியதூள் சட்டமாய்த்தா
னிட்டிருவ ராகனெடை கூட்டிக்காய்ச்சி
பயனுருநல் லன்னமுண்டு குடித்தாலப்பாற்
பத்தியங்க விச்சுபுளி கூட்டொண்ணாதே. (98)

(இ-ள்.)

பருத்திக்கொட்டை நெற்பொரி

இவ்விரண்டையும் வறுத்தரைத்துவைத்து, அத
னுடன்

| | |
|---|---|
| திப்பிலி | ஏலக்காய் |
| பேராத்தை | சித்திரமூலவேர் |
| கிராம்பு | |

இவைகளையும் வகைக்கு ¼ பலம் கூட்டிக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமள வெடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொள்ள வாந்தி, ஓக்காளம் முதலியன தீரும்.

இரவில்

| | |
|---|---|
| மாதுளம்பூ | பருத்திக்கொட்டை |
| சீரகம் | பாவட்டைவிரை |
| சுக்கு | |

இவைகள் வகைக்கு — 1 வராகனெடை

சீவிய வில்வவேர் தூள் 2 ,,

இவைகளைக் கஷாயமிட்டுச் சாதம் சாப்பிட்டபின் குடிக்கவும்.

**பத்தியம்:**

மாம்ஸ பதார்த்தங்கள், புளி இவைகளை நீக்கவும்.

## 55. வாந்தி, விக்கலுக்கு ஏலாதிக் கல்கம்.

ஏலமொடு பருத்திவிரைப் பொடியிந்துப்பு
மிலங்கும்வில்வ விரைசீர கம்வேப்பம்பூ
மேலணியாம் நெற்பொரி விளாவிலுற்ற
மெல்லிலைநற் றிருகடுகுஞ் சமதைகூட்டி

கோலமிகும் மாதளம்ப ழத்தின்சாற்றைக்
கொண்டரைத்துச் சர்க்கரைதேன் கலந்துண்
சாலவிக்க லருவருப்ப ரோசிகந்தான் [டாக்கால்
சகியாத வாந்தியெல்லாந் தீர்ந்துபோமே. (99)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | பருத்திவிதைப்பொடி |
| இந்துப்பு | வில்வவிதை |
| சீரகம் | வேப்பம்பூ |
| நெற்பொரி | விளாக்கொழுந்து |

இவைகளை இடித்துச் சூரணம்செய்து, மாதளம்பழச் சாறுவிட்டு அரைத்துத் தேன், சர்க்கரை இவைகளைக் கூட்டி உட்கொள்ளவும்.

விக்கல், அருவருப்பு, அருசி, வாந்தி இவை தீரும்.

## 56. விக்கலுக்குட் டங்கனுதிச் சூரணம்.

செப்பியதேத் தாம்விரையி னளவுதானே
சீரான வெங்காரம் பொரித்துக்கொண்டு
வெப்பிலகு திப்பிலியைம் பொடியாய்ச்செய்து
விளங்குமயி லிறகுசுட் டுத்தூளாக்கித்
தப்பின்றி யிந்தவகை மூன்றுங்கூட்டித்
தானதைசெந் தேனிநன்ருய்க் குழைத்துண்
ஒப்பில்லாப் பொல்லாத விக்கலெல்லாம் [டாக்கால்
மொதுங்கிப்போஞ் சூரியன்முன் பனியைப்
போலே. (100)

பொரித்த வெங்காரம் தேத்தான்கொட்டைப் பிரமாணம் எடுத்துக்கொண்டு, இதற்குச்சரிகிறை திப்பிலிச் சூரணமும், மயிலிறகுசுட்டசாம்பலும் சேர்த்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

விக்கல் தீரும்,

## 57. இரத்த பித்தத்திற்குச் சந்தனுதிச் சூரணம்.

சந்தணம்பற் பாடகப்பா லாடாதோடை
தண்ணீர்விட்டான் கிழங்கிலுப்பைப் பூதான்றிக்
கந்தவிலா மிச்சையெரு முட்டைபொன்னுங் [காய்
காணியறு கதிமதுரந் தென்னம்பாளை
அந்தமுள்ள பேரீச்சம் பழங்கடுக்கா
யாலமுகி மூவ்விழுது நெல்லிமுள்ளி
பந்தமிகுஞ் சிறுகீரை சிறுகல்லூரி
பசுவினெய்கோ ரைக்கிழங்கோ டின்னங்
கேளே. (101)

இன்னமுங்கேள் முந்திரிகைப் பழம்நறுப்பாலை
யிலவிலுற்ற பிசினெடுமா தளம்பழம்பின்
நன்னயமா மிந்தவகைச் சமஎடைகூட்டி
நயந்திடித்து சர்க்கரைசேர்த் துண்டேவந்தால்
சொன்னபடி யிரத்தபித்தம் வாசியாகும்
சுந்தரர்க்குத் தூதுசென்ற கௌரிபாகர்
வன்னமலற் பாதபூசை மகிமையாலே
வாழிசர பேந்திரமால் வழுத்தும்வாறே. (102)

| | |
|---|---|
| சந்தனத்தூள் | பற்பாடகம் |
| ஆடாதோடைவேர் | தண்ணீர்விட்டான் கிழங்கு |
| இலுப்பைப்பூ | |
| இலாமிச்சைவேர் | தான்றிக்காய் |
| பொன்னாங்காணி | எருமுட்டை |
| அதிமதுரம் | அறுகு |
| பேரீச்சம்பழம் | தென்னம்பாளை |
| ஆலமொட்டு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | ஆலவிழுது |
| சிறுகல்லூரி (சிறுபீளை) | சிறுகீரைவேர் |
| திராக்ஷைப்பழம் | கோரைக்கிழங்கு |
| இலவம்பிசின் | நற்பாலைவேர் |
| | மாதளம்பழம் |

இவைகளை உலர்த்தி, இடித்துச் சூரணம்செய்து (சரி எடை எடுத்து) சிறிது நெய்விட்டுப் பிசறிவைத்துக் கொள்ளவும். வேண்டும்போது இதில் மூவிரல் கொள்ளு மளவெடுத்துச் சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவும்.

இரத்த பித்தங்கள் நீங்கும்

## 58. இரத்த பித்தம், எலும்புருக்கிக்கு நெய்.

கருப்பஞ்சா றறுகம்வேர்ச் சாறுசீந்திற்
 கனத்தகொடிச் சாறுநெல்லிக் காயின்சாறு
நெருஞ்சில்சிறு பூளையின்வே ரிளநீராவின்
 நெய்யுமொரு படியினுக்குஞ் சாற்றிநன்றாய்
ஒருமையுட னிவ்வளவு சேர்க்கலாமென்
 றுரைத்தபடி யேகூட்டிப் பசுவின்பாலில்

திருப்பவும்நன் னாரியொண்வேர் சிறுநாகப்பூ
 தேறும்விலா மிச்சையின்வேர் வெட்டிவேரே (103)

வெட்டிவே ரிலவங்கப் பட்டையெல்லாம்
 வியங்கொளில வங்கப்பத்திரி வாசம்வீசும்
சட்டமுள்ள சந்தனமு மரைத்தெடுத்தே
 சார்ந்தமுன்னெய் யிற்கலந்து காய்ச்சியப்பால்
திட்டமதாய் வடித்துக்கொண்டே யுண்டாலன்றே
 மயக்கமுறு மிரத்தபித்த மெலும்புருக்கி
மட்டில்லாப் பெரும்பாடு பின்னேயெல்லாம்
 மார்த்தாண்டன் காண்பனிப்போல் வாங்கிப்
 போமே. (104)

(இ-ள்.)

| | |
|---|---|
| கருப்பஞ்சாறு | அறுகம்வேர் |
| சீந்திற்கொடிச்சாறு | நெல்லிக்காய்ச்சாறு |
| நெருஞ்சில்வேர்ச்சாறு | சிறுபூளைவேர்ச்சாறு |
| இளநீர் | பசுவின் நெய் |

இவைகளை வகைக்கு 1 படிவீதமெடுத்து அடுப்பின் மேலேற்றி,

| | |
|---|---|
| நன்னாரிவேர் | சிறுநாகப்பூ |
| விலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| இலவங்கப்பட்டை | லவங்கப்பத்திரி |
| சந்தனத்தூள் | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடைவீதமெடுத்து, இடித்துப் பசுவின்பால் விட்டரைத்து, நெய்யுடன் கலந்து எரித்துப் பதத்தில் இறக்கவும் இதனையுட் கொண்டுவர

இரத்த பித்தம், எலும்புருக்கி, பெரும்பாடு முதலானவை தீரும்.

## 59. பித்தம், சீதஜ்வரம், உன்மாதத்திற்குச் சந்தனாதி லேகியம்.

சந்தனப்நெய் தற்கிழங்கு சிறுகீரைவேர்
 சார்ந்திடதி மதுரம்வரட் சுண்டிவேரு
முந்திரிகைப் பழம்சீர்வள் ளிக்கிழங்கு
 மொழிந்திடுங்கோ ரோசனைநன் ஞாரியின்வேர்
தொந்தமதா யிருவேலி யெல்லாமாடா
 தோடையிலைச் சாற்றினிலே யரைத்துக்கொ
பந்தமுள பசுவினுட பாலோர்நாழி [ண்டு
 பண்பான தேனுமினிப் பகரக்கேளே (105)

பகரக்கேள் சர்க்கரையு மூழக்குக்கூட்டிப்
 பக்குவமாய் லேகியஞ்செய் துண்டேவந்தால்
அகலாதச் சீதசுரம் வாதபித்தம்
 அகலாமற் சர்வபயித் தியமும்வாதம்
இகலான விஷமசுர மெல்லாந்தீரும்
 ஏற்றவர்க்கெல் லாங்கொடுக்கும் கீர்த்திசொல்
மகாமேரு நிகர்தீர னருளுமூர்த்தி [லி
 மாட்சிசர பேந்திரமால் வழுத்தும்வாரே. (106)

(இ-ள்)

| | |
|---|---|
| சந்தனத்தூள் | நெய்தற்கிழங்கு |
| சிறுகீரைவேர் | அதிமதுரம் |

வரட்சுண்டிவேர் திராக்ஷைப்பழம்
தண்ணீர்விட்டான்கிழங்கு கோரோசனை
நன்னாரிவேர்

இவைகளை ஆடாதோடையிலைச்சாறுவிட்டரைத்து, பசுவின்பால் 1 படியும்விட்டு, தேன் ஒருநாழி, சர்க்கரை ஒரு உழக்கும்போட்டு, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனை உட்கொண்டுவரச் சீதசுரம், வாதபித்தம், பயித்தியம், உன்மாதம், விஷமஜ்வரம் முதலானவை நீங்கும்

வரட்சுண்டி = ஆடுதீண்டாப்பாளை

## 60. இரத்த பித்தத்திற்குக் காவிக்கல் கற்கம்.

சுந்தரமாய்ச் சிவந்திலங்குங் காவிக்கல்லும்
சுகமாக வளர்ந்திடும் நாவற்கொழுந்தும்
சந்தமிகுஞ் செங்கழுநீர்க் கிழங்கும்மூன்றுஞ்
சமபாகம் பச்சரிசி கழுவும்நீரில்
பந்தமொடு சந்தனம்போ லரைத்தெடுத்துப்
பகரிருவ ராகனெடை செந்தேன்விட்டே
யிந்தவிலந் தப்பாமற் கொடுத்தேவந்தால்
லிடர்கள்செய்யும் ரத்தபித்தம் வாசி
யாமே. (107)

(இ-ள்.)

காவிக்கல் நாவற்கொழுந்து
செங்கழுநீர்க்கிழங்கு

இவைகளைச் சமனெடையெடுத்து பச்சரிசிக் கழுநீர் விட்டு நன்றாயரைத்துத் தேன் 2 வராகனெடை சேர்த்து உட்கொள்ளவும்.

இரத்த பித்தங்கள் தீரும்.

---

## 61. இரத்த பித்தம், பெரும்பாட்டிற்கு ஏலாதிச் சூரணம்.

ஏலமில வங்கந்தா மரைநற்பூவி
னிதழிலந்தைக் கொட்டையுட பருப்புநல்ல
கோலமுய ரல்லிமல ரிதழும்வாசங்
குலவுபச்சைக் கர்ப்பூர முத்தக்காசு
சீலநெல்லின் பொரியுமதி மதுரமொப்பாய்ச்
செய்துபொடி நாட்கொருக ழஞ்சுதேனில்
மேலதனைக் கூட்டியுண்டா லிரத்தபித்த
மிகமில்லாப் பெரும்பாடும் வாசியாமே. (108)

(இ-ள்.)

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| தாமரைப்பூவிதழ் | இலந்தைக்கொட்டைப் பருப்பு |
| அல்லிப்பூ | |
| கோரைக்கிழங்கு | பச்சைக்கர்ப்பூரம் |
| அதிமதுரம் | நெற்பொரி |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, வேளைக்கு 40 குன்றி நிறையெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும்.

இரத்த பித்தம், பெரும்பாடு முதலானவை தீரும்.

## 62. இரத்த பித்தத்திற்குத் தாடிமாதி கஷாயம்.

மாதளையின் மொட்டுமுசு முசுக்கைசுக்கு
மணக்குமிலா மிச்சையொடு வெட்டிவேரும்
ஏதமில்கோ ரைக்கிழங்கு மல்லால்மூங்கி
லிலையிந்த வகைமுழுதுஞ் சமதைகூட்டி
நீதமுட னிடித்ததைக்க ஷாயமிட்டே
நீமூன்று சேர்வடித்துக் குடித்தேவந்தால்
வேதனைசெய் யிரத்தபித் தம்நன்றாகும்
விஞ்சைசர பேந்திரமால் விளம்பும்வாரே (109)

(இ-ள்.)

| | |
|---|---|
| மாதளைமொட்டு | முசுமுசுக்கை |
| சுக்கு | இலாமிச்சைவேர் |
| வெட்டிவேர் | கோரைக்கிழங்கு |
| மூங்கிலிலை | |

இவைகளைச் சமனெடுத்து இடித்துச் சூரணம்செய்து கொள்ளவும். 8 மடங்கு சுத்தஜலம்விட்டுக் கஷாயஞ் செய்து, உட்கொண்டுவர இரத்த பித்தம் தீரும்.

## 63. இரத்த பித்தத்திற்குத் தேற்றங்கொட்டை மருந்து முதலானவைகள்.

அந்தநற் றேற்றங்கொட் டையைப்பால்விட்டே
யரைத்திடுவா யின்னமுங்கே ளிலுப்பைப்பூவைச்
சுந்தரமாய்ப் பாலிலரைத் தேகொடுப்பாய்ச்
சொல்லுகிறேன் வேறுமிள கரணைவேரைப்

பந்தமுடன் தண்ணீரி லேயரைத்துப்
பக்குவமா கத்தருவாய் நெல்லிவேரைச்
சந்தமுள்ள கழுநீரி லரைத்தேதந்தால்
சட்டமா யிரத்தபித்தம் வாசியாமே. (110)

(இ-ள்)

(1) தேற்றாங்கொட்டையைப் பால்விட்டரைத்துக் குடிக்கவும்.

(2) இலுப்பைப்பூவைப் பாலில் அரைத்துப் பருகவும்.

(3) மிளகரணை வேரைத் தண்ணீர்விட்டரைத்து உட்கொள்ளவும்.

(4) நெல்லிவேரை அரிசி கழுவிய நீரில் அரைத்துச் சாப்பிடவும்.

இவைகள் இரத்த பித்த நோயைத் தீர்க்கக்கூடிய மருந்துகளாகும்.

## 64. இரத்த பித்தம் குணமாக மருந்துகள்.

செப்புமந்தப் பச்சரிசிக் கழுநீர்விட்டே
சிறுகீரை வேரரைத்துக் கழுநீர்தன்னில்
துப்புடனே கொடுத்திடுவாய் நெல்லிமுங்கிற்
சுட்டதிருச் சாம்பலைமோ ரினிலேயீவாய்

கைப்புலவு தாமரைப்பூக் கடுக்காய்தன்னைக்
கழுநீரி லேயரைத்துக் கொடுப்பாயப்பால்
வெப்புயரு மிரத்தபித்தம் வாசியாமே
விஞ்சைசர பேந்திரமால் விளம்புவாரே (111)

(இ-ள்)

சிறுகீரை வேரைப் பச்சரிசிக்கழுநீர்விட்டு அரைத்து, அக்கழுநீரிலேயே குழப்பி அருந்தவும்

(2) நெல்லிமுள்ளி, மூங்கில்சுட்டசாம்பல் இவைகளைச் சமமெடுத்துச் சூரணித்து மோரில் கொடுக்கவும்.

(3) தாமரைப்பூ, கடுக்காய் இவ்விரண்டையும் அரிசி கழுவிய கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும்.

ஷை முறைகளால் இரத்த பித்தம் தீரும்.

## 65. அரோசகத்திற்கு ஏலாதிச் சூரணம்.

ஏலமும் வராகனெடை யிரண்டேயப்பா
லிலங்கியதிப் பிலியும்வரா கனெடைமூன்றே
கோலமுயர் பருத்திவிரைப் பருப்போர்நான்காங்
கூறியவ்வ ராகனெடை யாறேயாகுஞ்
சீலநிறை நெற்பொரிசர்க் கரையுந்தானே
செப்புவரா கனெடைபதி னைந்தேகூட்டிச்
சாலவுமி டித்ததிற்சர்க் கரையைப்போட்டுச்
சாப்பிடில ரோசகமும் வாசியாமே. (112)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| ஏலக்காய் | — 2 | வராகனெடை |
| திப்பிலி | — 3 | ,, |
| பருத்திவிதைப்பருப்பு | — 4 | ,, |
| நெற்பொரி | — 6 | ,, |
| சர்க்கரை | — 15 | ,, |

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ்செய்து, உட்கொள்ள அரோசகம் நீங்கும்.

## 66. அரோசிகம், வாந்திக்குச் சீரகாதிச் சூரணம்.

சுந்தரநற் சீரகங்கோ ரைக்கிழங்கு
சுக்கேலம் நெற்பொரிநெல் லிப்பருப்புக்
கந்தவிலா மிச்சையின்வேர் வில்வவேருங்
கனந்திடுமென் னிலவங்கப் பட்டையல்லால்
பந்தமுள்ள நன்னாரி வேருங்கூட்டிப்
பக்குவமா யிடித்ததிற்சர்க் கரையும்போட்டே
அந்தமிகு சூரணமு விரற்கொண்டுண்டால்
அடுத்திடும ரோசிகமும் வாசியாமே. (113)

(இ-ள்.)

| | |
|---|---|
| சீரகம் | சுக்கு |
| கோரைக்கிழங்கு | ஏலக்காய் |
| நெல்லிக்கொட்டைப் பருப்பு | இலாமிச்சைவேர் |
| | லவங்கப்பட்டை |
| வில்வவேர் | நன்னாரிவேர் |

இவைகளைச் சமனெடுத்து இடித்து, வஸ்திரகாயஞ் செய்து சரியளவு, சர்க்கரைகூட்டிவைத்துக்கொள்ளவும். வேளைக்கு மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொண்டால் அரோசகங்கள் தீரும்.

## 67. இரத்த பித்தத்திற்குக் கஷாயமும், மருந்தும்.

தாமரையின் கிழங்கோடதி மதுரம்நற்சந்
தனமிலங்குஞ் சிறுகீரை வேர்சீந்தித்தண்
டாமதைக்க ஷாயமிட்டுச் செந்தேன்விட்டே
யினிதான சர்க்கரைபோட் டுண்டேவந்தால்
போமடல்செய் யிரத்தபித்தங் கேளாய்வேறு
பொருந்துதென்னம் பாளையைக்கொண் டிடித்தசா
நேமமொடு சர்க்கரைதேன் கலந்தேயுண்டால் [ற்றில்
நீங்கிடுவிடு மிரத்தபித்தம் நிசம்கண்டாயே. (114)

(இ-ள்)

| | |
|---|---|
| தாமரைக்கிழங்கு | அதிமதுரம் |
| சந்தனத்தூள் | சீந்தில்தண்டு |
| சிறுகீரைவேர் | |

இவைகளை வகைச்கு 1 வராகனெடையெடுத்து, இடித்து 8 மடங்கு தண்ணீர்விட்டு $\frac{1}{8}$ ஆக வற்றவைத்து, இடித்துத் தேன்விட்டுச் சர்க்கரையும் சேர்த்து உட்கொள்ளவும்.

இரத்த பித்தம் நீங்கும்.

(2) தென்னம்பாளையை இடித்துப் பிழிந்த சாற்றில் தேன், சர்க்கரை இவைகளைக்கூட்டி உட்கொண்டாலும் இரத்த பித்தம் தீரும்.

## 68. பித்தம், காசத்திற்குக் கூஷ்மாண்டக் கிருதம்.

பூசினிக்காய் நெல்லிக்கா யிலவங்கப்பட்டை
பொருத்தமுக்கி ராக்கிழங்கு தண்ணீர்மிட்டா
நேசமுள்ள கிழங்குமிந்த வகையொன்றுக்கே [ன்
நிசமான சாறுபடி யிரண்டேயல்லால்
வாசமுள பசுவின்பால் நெய்யுந்தானே
வகைக்கிரண்டு படிசரியா யெல்லாங்கூட்டிச்
சூசனையாய்க் காய்ச்சியதிற் தேவதாரஞ்
சுக்கமுக்கி ராக்கிழங்கோ டேலந்தானே. (115)

ஏலம்நெல்லிப் பருப்புகடுக் காய்தான்றிக்காய்
யிலவங்கப் பத்திரிகோ ரைக்கிழங்கு
கோலமிள கதிமதுரம் வெட்டிவேருங்
கொத்தமல்லி சந்தனங்கற் கடகசிங்கிச்
சீலமுடன் வகைக்கோர்ப லந்தான்கூட்டிச்
சிந்தாம லிடித்தெடுத்த சூரணத்தை
மேலந்த நெய்ச்சாற்றில் கலந்துகொண்டு
மெழுகுபத மாய்க்கிளறி பகரக்கேளே, (116)

பகரக்கேள் நாற்பத்து நாலுநாளே
பண்புடனே தப்பாம லுண்டேவந்தால்

மிகலான மேகமூத்தி ரக்கிரிச்ச
மேருகின்ற பயித்தியவி காரம்பாண்டு
மிகவருத்தஞ் செய்திடுஞ் சுவாசகாச
மேல்வாசி யாமுடலும் நன்றாய்த்தேறும்
ஜகமுழுதும் வாழ்த்தும்நல்ல புண்யமூர்த்தி
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாறே. (117)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பூசனிக்காய்ச்சாறு | — | 2 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | | ,, |
| இலவம்பட்டைச்சாறு | | ,, |
| அமுக்கிராக்கிழங்குச்சாறு | | ,, |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | | ,, |
| பசுவின்பால் | | ,, |
| ,, நெய் | | ,, |

இவைகளையொன்றுகலந்து,

| | |
|---|---|
| தேவதாரம் | சுக்கு |
| அமுக்கிராக்கிழங்கு | ஏலக்காய் |
| நெல்லிப்பருப்பு | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | இலவங்கபத்திரி |
| கோரைக்கிழங்கு | மிளகு |
| அதிமதுரம் | வெட்டிவேர் |
| கொத்தமல்லிவிதை | சந்தனத்தூள் |
| கற்கடசிங்கி | |

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து இடித்துச் சூரணம் செய்து, சாறுகூட்டிய நெய்யுடனே கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளை காய்ச்சிய பாலுடனே 44 நாட்கள் உட்கொள்ளவும். மேகம், மூத்திர கிருச்சிரம், பித்தவிகாரங்கள், பாண்டு, சுவாசகாசம் முதலான நோய்கள் தீரும்.

## 69. மருட்கொண்ட பித்தத்திற்குப் பொன்னுங்காணி யெண்ணெய்.

சீதளப்பொன் னுங்காணி கோவைத்தண்டு
சிறுகீரை சிற்றாமுட்டி வேர்கஷாயம்
ஓதந்தத் தண்ணீர்விட் டான்கொழுந்து
முயர்ந்திடும்நன் னாரியின்வேர் சீந்திற்றண்டு
காதலுறு மமுதவல்லிக் கிழங்குநெல்லிக்
காய்தாழம் விழுதாலம் விழுதுமல்லால்
நீதமுசு முசுக்கைகுன் றி யிலையிதன் றி
நிலப்பனையின் கிழங்குமின்ன மியம்பக்கேளே (118)

இயம்பக்கே ளெலுமிச்சம் பழமும்நன்று
யிடித்திடுபல் வகைச்சாறு மெடுத்துக்கொண்டே
யுயராம லொருகுறுணி பசுவின்பால்விட்
டுடன்வேண்டும் நல்லெண்ணெயுஞ் சேர்த்தேயப் [பால்
சுபமேவு மதிமதுரங் கலைமான்கொம்பு
சுகந்தருஞ்செண் பகம்பூசெங் கழுநீர்கோஷ்டம்
வியனிலங்கு மிலவங்கம் வகையொன்றுக்கே
விளம்பரைப்ப லங்கடையின் மருந்துதானே (119)

மருந்திந்தப் படிகூட்டி யரைத்துத்தானே
மற்றந்தச் சாருடுபா லெண்ணெய்மூன்றும்
திருந்தவுஞ்சொல் மருந்தையெல்லாங் கலந்துகொண்
திடமாயி ளங்கொதிக வீட்டேபின்னல் [டே
பொருந்துவன்ன மெழுகுபதத் தினில்வடித்துப்
புகன்றபடி தலைமுழுகி வந்தால்முந்த
வருத்திடச்செய் மருட்கொண்ட பொல்லாப்பித்தம்
வாடியப்பா லோடிப்போம் வாசியாமே (120)

(இ-ள்.)

| | |
|---|---|
| பொன்னுங்காணிச்சாறு | கோவைக்கிழங்குச்சாறு |
| சிறுகீரைச்சாறு | சிற்றாமுட்டிவேர்க் |
| தண்ணீர்விட்டான் | கஷாயம் |
| கொழுந்துச்சாறு | நன்னாரிவேர்ச்சாறு |
| சீந்தில்கொடிச்சாறு | சீந்தில்கிழங்குச்சாறு |
| நெல்லிக்காய்ச்சாறு | தாழம்விழுதுச்சாறு |
| ஆலம்விழுதுச்சாறு | முசுமுசுக்கைச்சாறு |
| குன்றியிலைச்சாறு | நிலப்பனங்கிழங்குச் |
| எலிமிச்சம்பழச்சாறு | சாறு |

இச்சாறுவகைகளைச் சமன் (1 படி) எடுத்து, ஒன்று கலந்து பசுவின்பால் 1 மரக்காலும் விட்டுச் சுத்தமான நல்லெண்ணெய் 10 படி சேர்த்துக்கொள்ளவும். பின்னர்

| | |
|---|---|
| அதிமதுரம் | மான்கொம்பு |
| செண்பகப்பூ | செங்கழுநீர்க்கிழங்கு |
| கோஷ்டம் | கிராம்பு |

இவைகள் வகைக்கு ½ பலம் எடுத்து, ஷை சாற்றில் ஏதேனும் ஒன்றுவிட்டு நன்றாகவரைத்துக் குழப்பிக் கொஞ்சம் கொஞ்சமாக எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தினுல் தலைமுழுகிவரப் பித்த நோய்கள் தீரும்.

## 70. அரோசகத்திற்குக் கோவைப் பொடி.

சுந்தரக்கோ வைக்காயை நாலாய்க்கீறி
சுக்குநற்றிப் பிலிமிளகும் பொடியாய்ச்செய்து
பந்தமுட னத்துளைக் காய்க்குள்ளிட்டுப்
பகர்மூன்று சீலையின்மண் செய்தேயப்பால்
செந்தழலி லேகருகச் சுட்டேநன்றாய்
செய்பொடியைக் கொண்டுபல்லும் நாக்குத்தேய்த்
வந்தடுத்த பொல்லாத ரோசிகந்தான் [தால்
வாசியதா மிம்முறைகை கண்டதாமே. (121)

(இ-ள்.)

கோவைக்காளைக் கொண்டுவந்து நான்காகப் பிளந்து அதற்குள் சுக்கு, திப்பிலி, மிளகு இம்மூன்றின் சூரணத்தையும் அடைத்து ஒவ்வொரு காய்க்கும் 3 தடவைச் சேலைமண் செய்யவும். பின்னர் இவைகளை அடுப்பிலிட்டுக் கருகச்சுட்டு எடுத்து மண்ணை நீக்கிப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். இத்தூளினுல் பற்களையும் துலக்கி, நாக்கையும் வழித்துக்கொண்டால் மிக்க வேதனைதரும் அரோசகம் தீரும். கைகண்டது.

## 71. பித்தம், துர்பித்தத்திற்கு முசுமுசுக்கைக் கஷாயம்.

வன்னமுசு முசுக்கையொடு வில்வவேரு
வளர்காட்டி லூற்றிடுப யற்றம்வேருஞ்

சொன்னநற்பேய்ப் புடல்பாசிப் பயறிதெல்லாஞ்
சூழ்வகைக்கொவ் வோர்பலஞ்சீ ரகந்தான்கேளா
யன்னதுவ ராகனெடை யொன்றேகூட்டி
யதனையொரு துணிதனிலே முடிந்துபோட்டே
யின்னமுன்நல் தண்ணீரை விட்டேயப்பா
லெட்டிலொன்றாய்க் காய்ச்சியதை யெடுத்துத்
தானே. (122)

எடுத்ததனைப் பதத்துடனே வடித்தேநன்றா
யிறுத்திடுங்க ஷாயமதிற் சீரகத்தை
தொடுத்தபடி யேயரைத்துக் கரைத்துக்கொண்டு
துதித்துமி ராத்திரிச்சோ றுண்டபின்னால்
கொடுத்துவந்தால் பிதற்றுகின்ற பயித்தியந்தான்
குணமாகுஞ் சிவபூஜை மகிமையாலே
அடுத்தவற்கெல் லாம்பாலன் னந்தாணீய்ந்தே
யருள்செய்சர பேந்திரமா லுரைத்தவாறே. (123)

(இ-ள்).

| | |
|---|---|
| முசுமுசுக்கைச் சமூலம் | வில்வவேர் |
| காட்டுப்பயற்றம்வேர் | பேய்ப்புடல் |
| பாசிப்பயறு | |

இவைகள் வகைக்கு ஒருபலம் எடுத்து, இடித்துச் சீரகம் ஒரு வராகனெடையும் எடுத்து, ஒரு வெள்ளைத் துணியில் முடிந்துகொண்டு, எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு (5 சேர்) சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகவற்றவைத்துக் கஷாயத்தை இறுத்துக்கொண்டு, அதில் வெந்த சீரக மூட்டையை

யவிழ்த்து, அரைத்துக் குழப்பி, இரவு சாப்பாட்டிற்கு மேல் உட்கொள்ளவும்.

தானுகவே உளறும் பைத்தியங்களும் தீரும்.

## 72. மயக்கம், வெட்டைக்குப் பேரீச்சம்பழ நெய்.

பாரிலங்கும் பேரீச்சம் பழத்தின்வித்தைப்
பகர்ந்தபடி நீக்கியதிற் சேர்தானென்று
வீரியமாஞ் சுக்கினில ரைச்சேர்கூட்டி
வேண்டுமொரு சேர்பசுவின் நெய்யிற்போட்டுச்
சூரியபு டத்தினிலோர் மூன்றுநாளே
சொன்னபடி வைத்தெடுத்துக் காலமேதான்
சீரியல்பா யுண்டுவந்தால் பொல்லாவெட்டை
சிறக்குமுடல் மயக்கமெல்லாம் பறக்குந்
தானே. (124)

(இ-ள்)

கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம் ஒரு சேரும், சுக்கு ½ சேரும் எடுத்து, நன்ருக அரைத்து 1 சேர் பசுவின் நெய்யுடன் குழப்பி, 3 நாட்கள் சூரிய புடமாக வைக்கவும். [அதாவது 3 நாட்கள் கடும் வெயிலில் வைக்கவும்] பின்னர் இதில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் காலையில் உட்கொண்டுவர வெட்டை, மயக்கம் முதலானவை நீங்கும்.

## 73. கைகாலெரிவு, பிரமேகத்திற்கு நாககேஸராதிச் சூரணம்.

சன்னநா கேசரங்கோ ரைக்கிழங்கு
சந்தனங்கோ ரோசனைநெல் லிப்பருப்புப்
பொன்னணியுஞ் செங்கழுநீர்க் கிழங்கிலுப்பைப்
பூவிலா மிச்சையதி மதுரங்கோட்டம்
வன்னமுந்தி ரிகைப்பழம்பே ரீச்சிலுற்ற
வண்பழமிவ் வகைமுழுதுஞ் சமதைகூடிச்
சொன்னபடி யிடித்தெடுத்துக் கொண்டேயந்தச்
சூரணத்தி னிறைசரியா யியம்பக்
கேளே. (125)

இயம்புகின்ற சீனிநற்சர்க் கரையுஞ்சேர்த்தே
யிஷ்டமொடு கேளுதய வேளைதன்னில்
நயம்பெறவு மூவிரற்கொண் டுண்டேவந்தால்
நண்ணுகைகா லுடம்பெரிவு பயித்தியம்பின்
சுயமான பிரமேக மத்திச்சூடுஞ்
சூழ்ந்தபல ரோகமெல்லாம் வாசியாமே
செயமிலங்குந் தஞ்சையில்வா ழன்னதாதா
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாறே. (126)

(இ-ள்)

| | |
|---|---|
| சிறுநாகப்பூ | கோரைக்கிழங்கு |
| சந்தனத்தூள் | கோரோசனை |
| நெல்லிப்பருப்பு | செங்கழுநீர்க்கிழங்கு |
| இலுப்பைப்பூ | இலாமிச்சைவேர் |

அதிமதுரம் கோஷ்டம்
திராக்ஷைப்பழம் கொட்டைநீங்கிய
பேரீச்சம்பழம்

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதற்குச் சமனளவு சர்க்கரை சேர்த்துக் கலந்து வைத்துக்கொள்ளவும். காலை வேளையில் மூவிரல்கொள்ளுமளவு சூரணம் எடுத்து உட்கொள்ளவும்.

கைகாலெரிவு, உடம்பு எரிச்சல், பித்த உபரி, பிரமேகம், அஸ்திச்சூடு முதலான ரோகங்கள் நீங்கும்.

---

## 74. அரோசகத்திற்கு ஏலாதிச் சூரணம்.

ஏலமிலங் கிலவங்கம் பருத்திக்கொட்டை
யேர்பருப்பி லங்கையின்கொட் டைப்பருப்பு
கோலநற்கற் பூரமிவை பொடியாய்ச்செய்து
கொண்டதைத்தே னிற்குழைத்து நாவிற்தேய்ப்
சிலமுட னின்னவசம் பைத்தூட்பண்ணிச் [பாய்
செங்தேனி லேகலந்து கொடுத்தேவந்தால்
சாலவும்வாய் நீர்சுவறி வாசியாகுஞ்
சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே. (127)

(இ-ள்)

ஏலக்காய் கிராம்பு
பருத்திக்கொட்டைப் பருப்பு இலந்தைக்கொட்டை பருப்பு
பச்சைக்கற்பூரம்

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து, தேனில் குழைத்து நாக்கில் தேய்க்கவும்.

[2] வசம்பையும் சூரணித்துத் தேனுடன் குழப்பி உட்கொள்ளவும்.

வாயில் நீர் ஊறி, அரோசகம் நீங்கும்.

## 75. இரத்த பித்தத்திற்குச் சாதீபலாதிச் சூரணம்.

சாதிக்காய் சாதிபத்திரி காசுக்கட்டி
சட்டமதா யிம்மூன்றும் பொடிகள்செய்து
கோதில்லா யெருமையுட தயிரிற்கூட்டிக்
குழைத்தெடுத்துக் கொண்டதனை யுண்பாயின்னம்
ஓதியதோர் சீரகத்தைத் தூளாய்ப்பண்ணி
உற்றசெருப் படியினிலைச் சாற்றிற்சேர்த்து
நீதிதவ ராமலிந்தப் படியேயுண்டால்
நீங்கிப்போ மிரத்தபித்தம் நிசஞ்சொன்
னேனே. (128)

(இ-ள்)

சாதிக்காய் சாதிப்பத்திரி
காசுக்கட்டி

இம்மூன்றையும் சரியெடையெடுத்துச் சூரணித்துக் கொள்ளவும். இதில் 3 விரல் கொள்ளுமளவெடுத்து எருமைத் தயிருடன் குழப்பி உட்கொள்ளவும்.

இரத்தபித்தம் தீரும்.

[2] சீரகத்தைச் சூரணித்து செருப்படியிலைச்சாற்றில் உட்கொண்டால் ரத்தபித்தம் நீங்கும்.

## 76. காமாலை, மூர்ச்சைச் சுரத்திற்குத் திராக்ஷாதிக் கஷாயம்.

மன்னமிகு முந்திரிகைப் பழங்கர்ச்சூரம்
வன்மிளகு சந்தனங்கோ ரைக்கிழங்கு
பொன்னனிவி லாமிச்சை வேரிலுப்பைப்
பூவோடதி மதுரம்நற்றிப் பிலியிதெல்லாம்
நன்னயக ஷாயமிட்டுத் தேன்விட்டுண்டால்
நண்ணுமத மூர்ச்சைகா மாலைமேகம்
யின்னமுங்கே ளொன்றுபயித் தியச்சுரந்தான்
யித்தனையுஞ் சுத்தமதாய் வாசியாமே. (129)

(இ-ள்.)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | பேரீச்சங்காய் |
| மிளகு | சந்தனத்தூள் |
| கோரைக்கிழங்கு | இலாமிச்சைவேர் |
| இலுப்பைப்பூ | அதிமதுரம் |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, எட்டு மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி, $\frac{1}{8}$ பாகமாகும் வரை காய்ச்சி, வடிகட்டித் தேன் சேர்த்துப் பருகவும்.

மூர்ச்சை, பிரமம், காமாலை, மேகச்சுரம், பித்த ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

## 77. வாந்தி, அரோசகத்திற்கு மரிசாதி லேகியம்.

இட்டமுள மிளகுகருங் காலிப்பட்டை
யிலவங்கப் பத்திரிகோ ரைக்கிழங்கு
மட்டடங்காச் சீரகம்நா கப்பூசுக்கு
மருவுசடா மாஞ்சில்கடுக் காயிதெல்லாந்
திட்டமொவ்வோர் வகைக்கொரு கழஞ்சுகூட்டித்
திடமான சூரணத்தைச் செய்துகொண்டு
முட்டவும்மந் தாக்கினியா யெரித்தெடுத்து
முறையுடனே லேகியத்தை நயமாய்ச்
செய்தே (130)

நயமான நெய்க்கலசந் தனிலேவைத்து
நாளுமொரு கழஞ்சுநிறை லேகியத்திற்
சுயமேவு திரிபலையின் பொடியைப்போட்டுச்
சொன்னபடி தேனிலுண்டா லுழலைவாந்தி
அயர்வுதரும் நெஞ்சடைப்புப் பொல்லாமூர்ச்சை
அருசியிந்த ரோகமெல்லாம் வாசியாமே
புயலையொப்பா யுலகமெங்கும் கார்க்குமன்னர்
புகழ்செய்சர பேந்திரமால் புகன்ற
வாறே. (131)

(இ-ள்)

| | |
|---|---|
| மிளகு | கருங்காலிப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | கோரைக்கிழங்கு |

சீரகம் சிறுநாகப்பூ
சுக்கு சடாமாஞ்சில்
கடுக்காய்த்தோல்

இவைகளை வகைக்கு 40 குன்றிமிறையெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவும். வெல்லம் ½ வீசையைப் பாகாக்கி அதிலிட்டு லேகியமாகச் செய்து ஒரு நெய்க் கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

இதில் தினம் கொட்டைப்பாக்களவெடுத்துத் திரிபலாச் சூரணம் சேர்த்துத் தேன்விட்டுக் குழைத்து உட்கொள்ளவும்.

உழலை, வாந்தி, நெஞ்சடைப்பு, மூர்ச்சை, அரோசகம் முதலான நோய்கள் தீரும்.

## 78. கபவாத பித்தத்திற்குத் திரிபலாதி லேகியம்.

சுக்குகருஞ் சீரகஞ்சீ ரகமிந்துப்புச்
சுகமிளகு திப்பிலிநற் பெருங்காயம்பின்
முக்கியமா மோமமிந்த வகையொன்றுக்கு
மொழிந்திடொவ்வோர் பலங்காந்தம் பலமிரண்டே
தக்கதரப் பொடிநான்கு பலமிதல்லாற்
தான்றிக்காய் நெல்லிமுள்ளி யொடுகடுக்காய்
பக்குவமாய்க் கேள்வகைக்கைம் பதுகாய்கூட்டிப்
பஞ்சுபோ லிடித்தெடுத்துப் பண்பாய்த்
தானே. (132)

பண்பாய்த்தா னிலங்குகையாந் தகரைச்சாறு
பகராடா தோடைச் யிலைச்சாறுமின்னம்
நண்பான கோசலமிவ் வகையொன்றுக்கு
நண்ணுமரைப் படிசேர்த்துப் பனைவெல்லம்போட்
டொண்பாக மாய்க்காய்ச்சிக் கொண்டேயுண்டா
லுயர்ந்தகபம் வாதபித்தம் வாசியாமே
இண்பார்க்குள் பூசுரர்சூழ் போசன்கீர்த்தி
திகழ்செய்சர பேந்திரமால் செப்பும்வாறே. (133)

(இ ள்)

| | |
|---|---|
| சுக்கு | கருஞ்சீரகம் |
| சீரகம் | இந்துப்பு |
| மிளகு | திப்பிலி |
| பெருங்காயம் | ஓமம் |

இவைகள் வகைக்கு 1 பலம்,

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த காந்தம் | — | 2 பலம் |
| ,, அரப்பொடி | — | 4 ,, |
| தான்றிக்காய் | — | 50 எண்ணிக்கையில் |
| நெல்லிக்காய் | — | ,, |
| கடுக்காய் | — | ,, |

எடுத்துக் கொட்டைகளை நீக்கி, எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டுப் பஞ்சுபோலிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்,

| | | |
|---|---|---|
| கையாந்தகரைச்சாறு | – | ½ படி |
| ஆடாதோடைச்சாறு | – | ,, |
| பசுவின் மூத்திரம் | – | ,, |

இவைகளையொன்ருக்கிப் பனைவெல்லம் வேண்டிய அளவு சேர்த்துப் பாகுசெய்து, அதனுடன் முன் தூளை யிட்டு லேகியமாகச்செய்து வைத்துக்கொள்ளவும்.

இதனைத் தினம் 2 வேளை சுண்டைக்காயளவு உட்கொண்டுவரக் கபரோகங்கள், வாத ரோகங்கள், பித்த நோய்கள் முதலானவை நீங்கும்.

## 79. சீத பித்தத்திற்குச் சந்தனாதிக்கிருதம்.

சந்தனம்பேய்ப் புடல்வேப்பம் பட்டைசீந்திற்
சார்ந்தகொடி யோர்வகைக்கோர் பலந்தான் [பத்தே
நந்தலில்லா நான்குமரக் கானீர்விட்டு
நான்கிலொன்றாய்ச் சுண்டினபின் படிநெய்வார்
முந்தரைத்துச் சந்தனம்பேய்ப் புடலும்போட்டு [த்து
மூன்றுநாட் சிறுகொதியிட் டிரண்டுபோதும்
பந்தமொவ்வோர் காசெடைநெய் யுண்டேவந்தால்
பகர்நசியஞ் செயிற்சீதப் பித்தம்போமே. (134)

(இ-ள்)

| | |
|---|---|
| சந்தனத்தூள் | பேய்ப்புடல் |
| வேப்பம்பட்டை | சீந்திற்கொடி |

இவைகளை வகைக்கு 10 பலம் வீதமெடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி நான்கிலொன்றாக வற்றவைக்கவும். இதனுடன் சரியளவு பசுவின் நெய் சேர்த்து

சந்தனத்தூள், பேய்ப்புடல் இவ்விரண்டையும் வகைக்கு 1 பலம் வீதமெடுத்து நன்றாக அரைத்து யதனுடன் குழப்பி 3 நாட்களுக்குச் சிறுகச் சிறுக எரித்து நான்காவது நாளன்று பக்குவப்படுத்தவும்.

இந்நெய்யில் ஒரு காசெடை யெடுத்து உட்கொண்டு, மூக்கிலும் 2 துளிகள் நஸ்யமாக இடவும்.

பித்த நோய்கள் தீரும்.

## 80. சேத்தும, வாத பித்தத்திற்குச் செந்தூரம்.

சாதிலிங்கம் காந்தமனோ சிலைவெங்காரஞ்
சார்ந்திடரி தாரமரப் பொடிகிராம்பு
கோதில்லாதோர் வகைக்குக்காற் பலந்தான் கூட்
குலவுகற்றா முஞ்சாற்றில் நான்குசாமம் [டிக்
ஓதியவ்வா ரரைத்துவில்லை செய்துராவி
லுள்ளமட்டும் வைத்தெடுசெந் தூரமாகும்
நீதியிச்சா பத்தியமாய் மருந்தேயுண்டால்
நீங்கிடுஞ்சேட் டுமவாத பித்தந்தானே. (135)

(இ-ள்.)

சுத்திசெய்த சாதிலிங்கம்
,, மனோசிலை
,, அரப்பொடி
,, காந்தம்
,, அரிதாரம்
பொரித்த வெங்காரம்
கிராம்புத்தூள்

இவைகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்துக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச்சாறுவிட்டு, 4 சாமங்கள் விடாமல் அரைத்து வில்லை தட்டிப் புடம்போடவும். செந்தூரமாகும்.

இந்தச் செந்தூரத்தை இச்சா பத்தியத்துடனே உட்கொண்டுவரக் கபம், வாதம், பித்தம் முதலான தோஷங்களினுலேற்பட்ட நோய்கள் நீங்கும்.

## 81. வாந்தி, கிறுகிறுப்பிற்கு முன்னையிலைக் கஷாயம்.

முன்னையிலை சீரகம்நற் சுக்குநெல்லி
முள்ளிவில்வப் பத்திரிநெற் பொரியிதன்றிச்
சொன்னபச்சைப் பயறுடுக ஷாயமிட்டுச்
சுகமாக வேகொடுத்தா லுழலைசத்தி
யின்னமந்த கிறுகிறுப்பு சுரம்வல்பித்த
மிடரான பெருமூச்சும் வாசியாமே. (136)

(இ-ள்)

| | |
|---|---|
| முன்னையிலை | சீரகம் |
| சுக்கு | நெல்லிமுள்ளி |
| வில்வப்பத்திரி | நெற்பொரி |
| பச்சைப்பயறு | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து, 8 மடங்கு தண்ணீர்விட்டு ⅛ ஆக வற்றவைத்துப் பருகிவரவும்.

உழலை (எரிச்சல்), வாந்தி, கிறுகிறுப்பு, சுரம், பித்தம், பெருமூச்சு முதலானவை நீங்கும்.

* இச்செய்யுளில் ஒரு அடி காணப்படவில்லை.

## 82. அரோசகத்திற்குச் சீரகாதிக் கஷாயம்.

பண்பான சீரகமும் வேப்பினீர்க்கும்
  பதனமொடு பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு
நண்பாய்க்கே ளரைப்படிதண் ணீரைவிட்டு
  நான்கிலொரு பங்காகக் காய்ச்சியப்பால்
கண்பார்த்துப் பக்குவமாய் வடித்தெடுத்தே
  கணக்குடனோர் காசெடைசர்க் கரையும்போட்டே
உண்பாய்நாள் மூன்ருறு பொழுதுமுண்பா
  யுற்றிடரோ சகமுழுதும் வாசியாமே. (137)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சீரகம் | — | 1 பலம் |
| வேம்பின் ஈர்க்கு | — | ,, |

இவ்விரண்டையும் ஒரு சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்துக்கொண்டு, ½ படி சுத்த தண்ணீர் விட்டு நான்கிலொன்ருக வற்றவைத்து, வடிக்கட்டிச் சர்க்கரை 1 விராகனெடை சேர்த்து 3 நாட்கள் 6 வேளை கள் உட்கொள்ளவும்.

அரோசகம் நீங்கும்.

## 83. சிகதாமேகத்திற்கு உதும்பராதிக் கஷாயம்.

அத்திமரப் பட்டைகருங் காலிப்பட்டை
  யணிநாவற் பட்டையொடு தேங்காய்ப்பூவும்

சுத்த கரு வாழையின் கிழங்கிதெல்லாம்
சொன்னபடி யிடித்ததைக் கஷாயமிட்டுப்
புத்தநல்ல கொம்பரக்கைப் பொடியாய்ச்செய்து
போட்டதில்செந் தேனைவிட்டுக் கொடுத்தேவந்
வுத்தமமா மிரத்தபித்தம் பெரும்பாடெல்லா [தால்
லுயர்ந்தசிக தாமேகம் பறந்துபோமே. (138)

(இ-ள்)

அத்திமரப்பட்டை கருங்காலிப்பட்டை
நாகப்பட்டை தேங்காய்த்திருகல்
கருவாழைக்கிழங்கு

இவைகளைச் சமனெடுத்து இடித்து, 8 மடங்கு சுத்த ஜலம் சேர்த்து, எட்டில் ஒன்றாக வற்றவைத்து வடிக் கட்டிக் கொம்பரக்கைத் தூள்செய்து போட்டுத் தேன் விட்டுப்பருகவும்.

இரத்தபித்தம், ஸ்திரீகளுக்கு ஏற்படும் பெரும்பாடு சிறுநீர் மணல்போல் இறங்குதல் முதலான ரோகங்கள் நீங்கும்.

## 84. இரத்த பித்தந்தீர ஆடாதோடை நெய்.

நந்தலில்லா நல்லாடா தோடைநெய்பால்
நண்ணுமிந்த வகைமூன்றுஞ் சமதைகூட்டிச்
சந்தனம்நெய் தற்கிழங்கு குடசப்பாலை
சார்ந்திடரு கின்கொழுந்து முத்தக்காசு
கந்தவிலா மிச்சைபெருங் குறும்பைத்தேற்றான்
கம்பந்தி ராயிலுப்பைப் பூநன்னாரி

சுந்தரவே ரதிமதுரம் கிலவேம்பெல்லாஞ்
 சொல்லுமொரு நாழிநெய்க்குத் திட்டங்
 கேளே. (139)

திட்டமுன்சொல் மருந்தில்நன்ருய் வகையொன்றுக்கே
 தேறுமொவ்வோர் கழஞ்சுநிறை சரியாய்ப்போட்
சட்டமுட னரைத்தெடுத்துக் கரைத்துக்கொண்டு [டுச்
 சாந்தமதா யெரித்துவடி யிட்டபின்னல்
தொட்டளவாய்ச் சர்க்கரைதேன் கலந்தேயுண்டாற்
 றுடர்ந்துவரு மிரத்தபித்தம் வாசியாமே
மட்டலர்பொன் னிட்டமொரு புயத்தென்னுளு
 மருவுசர பேந்திரஞ்சொல் மார்க்கந்தானே. (140)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஆடாதோடைச்சாறு | — | 1 படி |
| பசுவின் நெய் | — | ,, |
| ,, பால் | — | ,, |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| சந்தனத்தூள் | நெய்தற்கிழங்கு |
| குடசப்பாலை | அருகங்கொழுந்து |
| கோரைக்கிழக்கு | இலாமிச்சைவேர் |
| மருளங்கிழங்கு | தேற்றுங்கொட்டை |
| கம்பந்திராய் | இலுப்பைப்பூ |
| நன்னரிவேர் | அதிமதுரம் |
| கிலவேம்பு | |

இவைகளை வகைக்கு 40 குன்றிநிறை எடுத்து, முன் சாறுவிட்டு நன்ருக வரைத்து நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி,

வடிக்கட்டிக்கொண்டு சர்க்கரை, தேன் இவைகளையும் கலந்துவைத்துக்கொள்ளவும்.

தினம் 2 வேளை இந்த நெய்யையுட்கொண்டுவர இரத்தபித்தம் தீரும்

## 85. இரத்த பித்தத்திற்கு முக்கூட்டு நெய்.

செப்புக்குட் டிப்பிலாவி னுடவேர்ப்பட்டை
சிறுகுமிழ்வேர்ப் பட்டையிவை யிடித்துக்கொண்டு
யப்பாசுவி னெய்யுமல்லா லிலுப்பையெண்ணெ
யாமணக்கி னெண்ணெயெள்ளி னெண்ணெய்கூட்
யொப்பு ன்முன் னிடித்தமருந் தெல்லாம்போட்டே [டி
யுள்ளபடி யேபதமாய்க் காய்ச்சியுண்டால்
வெப்புலவு மிரத்தபித்தந் தனக்குத்தானே
வெயிலவன்முன் பனியதுபோல் விட்டுப்
போமே. (141)

(இ-ள்)

குட்டிப்பிலாவேர்ப்பட்டை
சிறுகுமிழ்வேர்ப்பட்டை

இவ்விரண்டையும் வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்து, இடித்து, அதனுடன்

| | |
|---|---|
| பசுவின் நெய் | ஆமணக்கெண்ணெய் |
| நல்லெண்ணெய் | இலுப்பையெண்ணெய் |

இவைகளை வகைக்கு ½ சேர் வீதமெடுத்து ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில்

இறக்கவும். இதனைத் தினம் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன் இருவேளை யுட்கொள்ளவும்.

இரத்த பித்தம் தீரும்.

## 86. பித்தத்திற்கு, மயக்கத்திற்குப் பேயன்பழப் பொங்கல்.

சொல்லந்தப் பசுவின்பால் துணிவிட்டுச்
சூட்டமுட னேர்குறுணி யாகக்காய்ச்சி
நல்லகுன்றி யிலைச்சாறு நாழிவார்த்து
நாற்பதுவே வட்டுவெல்ல மிடித்துப்போட்டே
யல்லதுபே யன்வாழைப் பழமும்நாற்ப
தரிசியிரு நாழியுரி முசுருமுட்டை
ஒல்லவுமே லிந்தவகை யெல்லாங்கூட்டி
யுடன்சமைத்துக் கொண்டபின்ன லோதக்
கேளே. (142)

ஓதக்கேள் நாள்மூன்றுந் தப்பாமற்ற
னுண்டுவந்தா லறியமயல் வாசியாகும்
நீதமொடு பத்தியமுஞ் சொல்வேனின்னம்
நிசமாய்க்கைப் புப்புளிப்புக் கறிகாய்தள்ளு
வேதநவில் பூசுரர்சங் கீதர்நல்லோர்
வித்தைநிறை யுத்தமர்கள் சங்கஞ்சூழுஞ்
சீதளக்கஞ் சத்திருவாழ் நாகரீகன்
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாரே. (143)

(இ-ள்.)

பசுவின் பால் 4 மரக்காலையடுப்பின்மேலேற்றி ஒரு மரக்காலாகும்வரை வற்றவைத்துக் குன்றியிலைச் சாறு 1 படி சேர்த்து, கருப்பொட்டி (பனைவெல்லம்) 40 கட்டிகளை இடித்து அதனுடன் சேர்த்து, 40 பேயன் வாழைப்பழங்களையும் உரித்துப்போடவும். இதனுடன் 2 படி அரிசியும், முசுறுமுட்டை ½ படியும் சேர்த்துப் பொங்கலாகச் செய்யவும்.

இதனை 3 நாட்களுக்கு உட்கொள்ளப் பித்த மயக்கம் தீரும்.

கைப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும் நீக்கவும்.

## 87. வெள்ளோக்காளம், விக்கலுக்கு விளாவேர்க் கஷாயம்.

பொன்னணிவி ளாவேர்மாங் கொழுந்துநெல்லுப்
பொரிகிளா வேரும்வில்வ வேரிதல்லால்
வண்ணமிகுந் திலங்குமதி மதுரமிந்த
வகைக்கிருவ ராகனெடை யிடித்துப்போட்டுச்
சொன்னஇரு படிநீர்விட் டுழக்காய்க்காய்ச்சிச்
சுகமாகச் செந்தேன்விட் டுண்டேவந்தால்
முன்னமுறுஞ் சத்திவிக்கல் வெள்ளோக்காள
மூன்றுரோ கங்களிவை வாசியாமே. (144)

(இ-ள்.)

விளாவேர் மாங்கொழுந்து

நெற்பொரி | இளாவேர்
வில்வவேர் | அதிமதுரம்

இவைகளை வகைக்கு 2 வரானெடை வீதமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, 2 படி சுத்தஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்ற வைக்கவும். இதனுடன் தேன்விட்டு உட்கொள்ளவும்.

வாந்தி, விக்கல், வெள்ளோக்காளம் முதலான நோய்கள் நீங்கும்

## 88. இரத்த பித்தத்திற்குச் சீதகஷாயம்.

நன்னயமாய் நாழிதண்ணீர் தனிலேமூன்று
நறும்பயற்றை மீனையொரு மூன்றுநாளும்
சொன்னபடி யூறவைத் திருந்தேயப்பால்
சுகந்தருங்கன் றுப்பூக்கான் வேர்க்கிழங்கில்
அன்னதொரு பிடியரைத்தோர் வெல்லவட்டு
மம்மருந்தை யுங்கரைத்து மூன்றுநாளும்
இன்னவகை தப்பாமல் கொடுத்தேவந்தா
லிடர்கள்செய்யு மிரத்தபித்தம் வாசி
யாமே. (145)

(இ-ள்.)

ஒருபடி சுத்தஜலத்தில் 3 பயற்று மீனை (இறந்தது) மூன்று நாட்கள் ஊறவைக்கவும். பின்னர், கன்னிப் பூக்கான் வேர்க்கிழங்கு ஒரு பிடியெடுத்து நன்றாக வரைத்துப் பனைவெல்லம் சேர்த்து அந்த மீன் தண்ணீருடன் கரைத்து 3 நாட்கள் உட்கொள்ளவும்.

இரத்தபித்தங்கள் தீரும்.

## 89. பித்தத்திற்குத் தேற்றான் கல்கம்.

மெல்லியதேத் தான்கொட்டை யைத்தான்சீவி
மேலதைமை போலரைத்துக் கொண்டேயப்பால்
சொல்லியநல் லெலுமிச்சம் பழத்தின்சாற்றிற்
சுகமாகப் புடத்தினில்வைத் தெடுத்தேபின்னும்
புல்லியதோ ரனுபானம் நன்றாய்க்கேளு
பொருந்தெலுமிச் சம்பழச்சாற்றி னிலேயுண்டால்
சல்லியஞ்செய் பார்பித்த மெல்லாந்தானே
சட்டமாய் விட்டகன்றே வாசியாமே. (146)

(இ-ள்)

தேத்தாங்கொட்டையைச் சீவி, எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக வரைத்து ஒரு கரண்டியிலிட்டு வெதுப்பி, எலுமிச்சம்பழச் சாற்றுடனே உட்கொள்ளவும். பித்தங்கள் தீரும்.

## 90. அரோசகங்கள் தீரத் திப்பிலிக் கல்கம்.

காரமிகுந் திலங்கியதிப் பிலியுஞ்சுக்குங்
கந்தநற்பச் சைக்கருவேப் பிலைவேப்பீர்க்கு
சாரமுய ருப்புமல்லா மினீர்க்குஞ்
சாத்துமிந்த வகைமுழுதுஞ் சட்டமாய்வெந்

நீரதிலே யரைத்தெடுத்து வாயும்பல்லும்
நித்தமுந்தா னேவிளக்கிக் கொப்புளித்தால்
சாரரோ சகங்களெல்லாம் வாசியாகுங்
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாறே. (147)

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| கருவேப்பிலை | உப்பு |
| யிர்க்கு புதியது | வேப்பம் ஈர்க்கு |

இவைகளைச் சமனெடுத்து வெந்நீர்விட்டு அரைத்துப் பற்களை விளக்கி, வாய்க்கொப்பளிக்கவும்.

அரோசகங்கள் தீரும்.

## 91. இரத்த பித்தத்திற்குச் சங்கம்வேர்க் கல்கம்.

சங்கம்வே ரதனிலொரு விளாங்காயொப்பே
சட்டமா யரைத்தெருமைத் தயிரவ்வெண்ணெ
பாங்குடனோர் வெல்லவட்டும் பேயன்வாழைப் [ய்
பழத்தினிஸ்நான் கேகூட்டி நான்குநாளீ
அங்கமுறு முரத்தபித்தந் தீருமப்பா
ஸ்ணியுமுசு முசுக்கையிலை யரைத்துவெண்ணெ
யுங்கலந்து சொன்னபடி கொடுத்தேவந்தா
லுள்ளபடி யிரத்தபித்தம் வாசியாமே (148)

(இ-ள்.)

சங்கம்வேர் விழுது - ஒரு விளாங்காயளவு எடுத்து எருமைத் தயிர், அதன் வெண்ணெய், வெல்லம்

இவைகள் ஒரு விளாங்காய்ப் பிரமாணமும், பேயன் வாழைப்பழம் 4ம் சேர்த்து, 4 நாட்களுக்குக் கொடுத்து வரவும்.

இரத்த பித்தங்கள் தீரும்.

(2) முசுமுசுக்கையிலை விழுது (ஒரு விளாங்காயளவு) எடுத்து வெண்ணெயுடன் கலந்துகொடுத்தாலும் இரத்த பித்தம் நீங்கும்.

## 92. வாய்க்கசப்பு, தலைக் கிறுகிறுப்பிற்குச் சீரகாதி கஷாயம்.

நல்லசீர கத்தினிலோர் வகையேகொண்டு
நயந்ததைக் கஷாயமிட்டுக் கொடுத்தேவந்தால்
சொல்லணியாம் வாய்க்கசப்புந் தலைதான்மெத்தச்
சுழலுகின்ற கிறுகிறுப்பு வாங்குமின்னம்
புல்லந்தச் சீரகத்தை யாய்ந்தேநித்தம்
பொடியாய்ச்செய் துதையமதிற் புசித்திட்டாக்கால்
வல்லமைசேர் தலைகிறுகி றுப்புஞ்செய்யும்
வாய்க்கசப்பு மயக்கமிவை வாசியாமே. (149)

(இ-ள்)

சீரகத்தைக் கஷாயம் வைத்துப் பருகினாலும், சீரகத்தை இடித்துச் சூரணம் செய்துக் காலை நேரங்களில் சாப்பிட்டாலும் வாய்க்கசப்பு, தலைக்கிறுகிறுப்பு, மயக்கம் இவைகள் தீரும்.

## 93. திரிசுரம், உள்வெட்டை, தாது நஷ்டம். மூத்திரச்சுருக்கு இவைகளுக்குக் கூஷ்மாண்ட ரஸாயனம்.

நன்னயமாம் பூசினிக்காய் தோற்சீவிக்
குடனீக்கி நறுக்கிக் கொண்டு
சொன்னதொரு சீலையிற்கட் டித்தூக்கி
வீரமெல்லாஞ் சுவறுமப்பால்
அன்னதைத்தான் வெய்யினில்நன் றுயுலர்த்திப்
பின்பெடுத்தே யகலச்சட்டி
தன்னதிலோ ருரிபசுவின் நெய்யைவிட்டுக்
காயவைத்துத் தன்மைகேளே. (150)

தன்மையுட னேசிவக்கக் காய்முழுதும்
வறுத்திடித்துத் தான்மஞ்சிட்டி
வன்மைநற்சீ ரகமேலஞ் செங்கழுநீர்க்
கோட்டமில வங்கஞ்சுக்கோ
டுண்மைமணச் செண்பகப்பூ கொத்தமல்லி
யதிமதுர மொதுங்கா தின்னந்
திண்மையுயர் திப்பிலிசேர்த் துப்பொடியாய்ச்
செய்ததிலே திட்டந்தானே. (151)

திட்டமொடு தேனிலுரி விட்டொருமித்
துக்கலந்து தித்திப்பாகச்
சட்டமுள்ள சர்க்கரையுங் கூட்டிநித்த
மொருகழஞ்சு சரியாயுண்டால்
தொட்டதிரி சுரமுள்வேட்கை தாதுநட்ட
முடலெரிவு துயர்செய் யண்டங்

கட்டதக்கி னியின்மாந்த மூத்திரப்பா
விவைக ளெல்லாங் கடந்துபோமே. (152)

(இ-ள்).

நன்கு முற்றிய பூசினிக்காயைக் கொண்டுவந்து, அதன் மேல்தோலைச் சீவி நறுக்கி உள்ளிருக்கும் குடல், விதை இவைகளை நீக்கிவிடவும். பின்னர் காயைச் சிறுக வரிந்து ஒரு வெள்ளைத் துணியில் கட்டிவைக்க அதி லிருந்து சாறெல்லாம் வடிந்துவிடும். பூசினித்துண்டு களை வெய்யிலில் உலரவைக்கவும். ஒரு வாயகன்ற சட்டியில் காய்ந்த பூசினிக்காய்த் துண்டுகளைப்போட்டுப் பசுவின் நெய்விட்டுச் சிவக்க வறுக்கவும்.

இதனுடன்,

| | |
|---|---|
| மஞ்சிட்டி | சீரகம் |
| ஏலக்காய் | செங்கழுநீர்க்கிழங்கு |
| கோஷ்டம் | கிராம்பு |
| சுக்கு | செண்பகமொட்டு |
| கொத்தமல்லி | அதிமதுரம் |
| திப்பிலி | |

இவைகளை சமனெடை யெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, கலந்து சரியளவு சர்க்கரையும் சேர்த்துத் தேன் ½ படியும் விட்டு, ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும். தினம் 40 குன்றியளவெடுத்து 2 வேளை உட்கொண்டுவர

**தீரும் நோய்கள் :**

திரிதோஷச் சுரம், தேககாங்கை, தாது நஷ்டம், உடல் எரிச்சல், அக்கினி மாந்தம், விரைவீக்கம், நீர்ச் சுருக்கு முதலானவை நீங்கும்.

## 94. மூத்திர கிரிச்சனத்திற்குக் கொன்றைவேராதிக் கஷாயம்.

சொன்னகொன்றைக் கொழுந்துசிறு காஞ்சொறி
நெருஞ்சில்வேர் சூழ்கடுக்காய் [வேர்
இன்னுமந்தப் பூளையின்வே ரிவ்வகைக்க
ஷாயமிட்டே யிறுத்துக்கொண்டு
வன்னறுவெங் காரமதைப் பொரித்திட்டுச்
சர்க்கரையும் வளமாய்க்கூட்டி
நன்னயத்தோ டுண்டுவந்தால் மூத்திரக்கி
ரிச்சமெல்லாம் நலிந்துபோமே. (153)

(இ-ள்)

கொன்றைக்கொழுந்து சிறுகாஞ்சோறிவேர்
நெருஞ்சில்வேர் கடுக்காய்த்தோல்
பூளைவேர் (சிறு பூளை)

இவ்வகைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மடங்கு சுத்தஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து வடிக்கட்டி வெங்காரம் [1 வராகனெடை] பொடிசெய்து, போட்டுச் சர்க்கரைகூட்டி உட்கொள்ளவும்.

மூத்திர கிரிச்சிரம் [நீர்ச்சுருக்கு] நீங்கும்.

## 95. நீர்ப்பாய்ச்சல், மூத்திரப்பாழ் இவைகளுக்குக் கருப்புட்டி மருந்து.

பகரக்கேள் வெண்ணெயைப்போ லரைத்தெடுத்
திட்டமோடு பண்பாமந்தச் [துத்

சுகமான பனங்கருப்புக் கட்டியுமிட்
டப்படியே சொன்னவாறே
அகலாம லிளநீர்விட் டுக்கரைத்து
மூன்றுநா ளன்பா யுண்டால்
முகமிலங்கு மூக்கிலுற்ற நீர்ப்பாய்ச்சல்
மூத்திரப்பாழ் முறிந்து போமே. (154)

(இ-ள்)

பனைவெல்லத்தை வெண்ணெயைப்போல் நன்றாக வரைத்து, இளநீருடன் கரைத்து 3 நாட்கள் குடிக்கவும்.

**தீரும் நோய்கள்:**

நீர்ப்பாய்ச்சல், நீர்ச்சுறுக்கு முதலியவை நன் நீங்கும்.

## 96. கைகாலெரிச்சல், மேகநோய், மூத்ரகிரிச்சிரம், சுக்கிலப்பிரமேகங்களுக்குச் சதாவரி கிருதம்

கிழர்தருவா ழைக்கிழங்கு பூசினிக்காய்
தண்ணீர்விட்டான் கிழங்கின்சாறும்
இளம்பசுவின் பாலிளநீர் வகையினுக்கோர்
நான்குபடி யிலங்குஞ்சீந்தில்
வளம்பெறுக ஷாயமது நாழி
நெரிஞ்சிலுட வண்கஷாயம்
தளம்பாம லிருநாழி கருப்பஞ்சா
றிருநாழி தயவாய்க்கேளே. (155)

தயவாய்க்கேள் நீர்முள்ளிச்சா றிருநாழி
யோரிதழின் தாமரைச்சாற்
றியல்பாய்ச்சே ரொருநாழி பொன்னுங்கா
ணிச்சாற்றி லிரண்டே நாழி
வியன்மேவு பசுவினெய்யி லொருநாழி
சிறுபூளை வேரெள்ளேலஞ்
சுயமான கன்மதங்கன் னுருபொன்னுங்
காணியின்வேர் சொன்னதாமே. (156)

சொன்னசென்ன யுருவியவ்வேர் பொன்னூமத்
தம்விரைமேற் சுகநீர்முள்ளி
நன்னயஞ்சேர் விரைகூகை நீரெடுத்தேத்
தாமரைத்தின் னண்ணனுங் கொட்டை
அன்னதொவ்வோர் வகையினுக்கு மூன்றதுவ
ராகனெடை யனைத்துந்தானே
வன்னமுட னரைத்தெடுத்துப் பக்குவம
தாய்க்காய்ச்சி வடித்துப்பாலே. (157)

அப்பாற்கேள் வெண்சீனிச் சர்க்கரையு
மொருநாழி யதுவல்லாமல்
வொப்பான தேனிலுரி விட்டதெல்லாங்
கலந்தெடுத்தே யுதையகாலந்
தப்பான முக்கழஞ்சே யுண்டிடிற்கை
காலெரிவு தாங்காமேகம்
வேப்பார்மூத் திரகிரிச்சஞ் சுக்கிலத்தின்
பிரமியமும் விலகிப்போமே. (158)

(இ-ள்.)

வாழைக்கிழங்குச்சாறு பூசனிக்காய்ச்சாறு

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | இளங்கன்றையுடைய பசுவின்பால் |
| இளநீர் | |

இவைகள் வகைக்கு — 4 படி

| | | |
|---|---|---|
| சிந்தில் கஷாயம் | — | 4 படி |
| நெருஞ்சிக் கஷாயம் | — | 2 படி |
| கருப்பஞ்சாறு | — | 2 படி |
| நீர்முள்ளிக் கஷாயம் | — | 2 படி |
| ஓரிதழ்த்தாமரைச்சாறு | — | 1 நாழி |
| பொன்னாங்காணிச்சாறு | — | 2 நாழி |
| பசுவின் நெய் | — | 1 நாழி |

இவைகளை ஒன்றுகலந்து,

| | |
|---|---|
| சிறுபூளைவேர் | எள் |
| ஏலக்காய் | கன்மதம் |
| பொன்னாங்காணிவேர் | சென்னையுருவிவேர் |
| பொன்னூமத்தம்விரை | நீர்முள்ளிவிரை |
| கூகைநீர் | தேற்றாங்கொட்டை |

இவைகள் வகைக்கு 3 வராகனெடை விதமெடுத்து இடித்து, ஏதேனும் ஒரு சாறுவிட்டரைத்து, சாறு கூட்டிய நெய்யுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக்கொண்டு, வெள்ளைச் சீனிச்சர்க்கரை 1 நாழியும், தேன் ½ படியும் சேர்த்துக் கலந்துவைத்துக்கொள்ளவும்.

காலையில் 3 கழஞ்சு எடுத்து உட்கொண்டால் கை காலெரிச்சல், மேகநோய், மூத்திரகிரிச்சம், சுக்கிலப் பிரமியங்கள் தீரும்.

## 97. மூத்திர கிரிச்சத்திற்குச் சந்தனாதி கிருதம்.

சந்தனந்தா மரைவளையம் நெல்லிமுள்ளி
வெள்ளரிக்காய் தயிர்நாணற்பூ
முந்திரிகைப் பழஞ்சீந்தில் கொடித்திராய்
நேரில்பிரா முட்டியேலம்
அந்தமர மஞ்சள்செப்பு நெரிஞ்சில்தேத்
தாங்கொட்டை யணிநீர்முள்ளி
சுந்தரமாந் தண்ணீர்விட்டான் கிழங்கோடதி
மதுரமல்லாற் சொல்லக்கேளே, (159)

சொல்லக்கேள் பூசினிக்காய்ச் சாறுகருப்
பஞ்சாறு சுக்கஞ்சப்புல்
யெல்லணிப்பொன் னாங்காணி பிரமியப்பூண்
டொடுகழுநீரி ளநீரின்னம்
நல்லமுடி மேல்முடிசர்க் கரையுமிந்தப்
பலமருந்தும் நாளுமெத்த
வல்லமையாய் மூத்திரகி ரிச்சமதற்
கீவகையாய் வாசியாமே. (160)

(இ-ள்)

| | |
|---|---|
| சந்தனத்தூள் | தாமரைவளையம் |
| நெல்லிமுள்ளி | வெள்ளரிக்காய் |
| தயிர் | நாணற்பூ |
| முந்திரிகைப்பழம் | சீந்தில்கொடி |
| திராய் | பிராமுட்டி |
| ஏலக்காய் | மரமஞ்சள் |
| செப்புநெரிஞ்சில் | தேத்தாங்கொட்டை |

நீர்முள்ளி — தண்ணீர்விட்டான்
அதிமதுரம் — கிழங்கு

இவைகள் வகைக்கு ½ பலம் எடுத்து இடித்துப்

பூசினிக்காய்ச்சாறு — கருப்பஞ்சாறு
சுக்குநாறிப்புல்லின் சாறு — பொன்னாங்காணிச் [சாறு
பிரமிச்சாறு — கமுநீர்
இளநீர்

இவைகள் வகைக்கு — 1 சேர்

பசுவின் நெய் — 5 சேர்

இவைகளை யொன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கி வடிக்கட்டிக்கொண்டு வேண்டிய அளவு சர்க்கரை கூட்டிப் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளைகள் காய்ச்சிய பாலுடன் உட்கொள்ளவும்.

மூத்திரக்கிரிச்சங்கள் தீரும்.

## 98. கல்லடைப்பு, மூத்திர கிரிச்சத்திற்குத் தாமிர பஸ்பம்.

செந்தகந்தாம் பிரமிரத மிவைமூன்றுஞ்
சரிகூட்டிக் கேளோர்நாளும்
அந்தநொச்சி யிலைச்சாறு விட்டரைத்தே
யுலைமூடி யதனிலிட்டுப்
பிந்தவுமோ ருலைமூடி யால்மூடிச்
சந்துவாய் பிதிர்ந்திடாமல்

பந்தமுட னேசீலை மண்கள்செய்த
பின்பதனைப் பண்பாய்த்தானே. (161)

பண்பாய்த்தான் சலம்பதக்குப் பொருந்துபெருஞ்
சட்டிதனிற் பகர்ந்தவாறே
நண்பாமோர் குறுணிமண லிட்டதன்மே
லுலைமூடி நாட்டிவைத்துக்
கண்பார்த்துச் சட்டியின்வாய் நிறையமட்டு
மணல்போட்டுக் கனலைமூட்டி
யெண்பாகந் தப்பாம லொருசாமந்
தானெரித்தே யோதக்கேளே. (162)

ஓதக்கே ளுலைமூடி யெடுத்தாற்றிப்
பொடியாக்கி யுண்மையாக
மாதளைவேர்ப் பட்டையுட தூளொருவ
ரானெடை மருந்துதன்னில்
நீதமிகு குன்றியெடை மாதளம்ப
ழச்சாற்றில் நேர்ந்தேயுண்டால்
வேதனைசெய் கல்லடைப்பு மூத்திரகி
ரிச்சமெல்லாம் விட்டுப்போமே. (163)

(இ-ள்.)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | கெந்தகம் | — | 1 வராகனெடை |
| ,, | பாதரஸம் | — | ,, |
| ,, | தாம்பிரம் | — | ,, |

முதலில் ரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்தி லிட்டு நன்ருக வரைத்துக் கஜ்ஜலியாகச்செய்து பின்னர் தாம்பிரப் பொடியைச்சேர்த்து, நொச்சியிலைச் சாற்றை

விட்டு, நன்ருக (3 நாட்கள்) அரைத்துக்கொள்ளவும். பின்பு, இதனைச் சிறுசிறு வில்லைகளாகத் தட்டிக் காய வைத்து ஒரு அகலில்வைத்து மற்றொரு அகலினல் மூடிச் சீலைமண் செய்யவும்.

2 மரக்கால் ஜலம் கொள்ளத்தக்க ஒரு சட்டியை யெடுத்து, அதில் ஒரு மரக்கால் மணல்போட்டு மத்தியில் முன்சொன்ன அகலைவைத்து மேலும் ஒரு மரக்கால் மணல் இட்டு அடுப்பின்மேலேற்றி 1 ஜாமம் எரிக்கவும். பின்னர் இதனைப் பிரித்து ஆறவைத்து பொடியாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

மூத்திர கிரிச்சம், கல்லடைப்பு முதலானவை களுக்கு மாதுளைவேர்ப்பட்டைத்தூள் ஒரு வராகனெடை யுடன், இந்த மருந்து ஒரு குன்றியெடையும் கூட்டி மாதளம்பழச் சாற்றுடன் அருந்தவும். குண முண்டாகும்.

## 99. பாண்டு, எரிவு, மேகத்திற்கு வாழைக்கிழங்கு நெய்.

பக்குவம்வா ழைக்கிழங்கின் சாறுபடி
    நான்கதுப்புப் பலந்தானூறும்
இகழாம லிரண்டுபடி யாய்க்காய்ச்சிப்
    பூசனிக்கா யெழிலாஞ்சாற்றில்
அகலாம லிரண்டுபடி பசுவின்பா
    லிரண்டுபடி யந்தநெய்தான்
உகந்தன்னி லிரண்டுபடி தண்ணீர்விட்டான்
    கிழங்கின்சா ரேறுதக்கேளே. (164)

ஓதக்கே ளிரண்டுபடி சர்க்கரையம்
பதுபலமு முடனேபோட்டுக்
கோதறும்வி ளாம்பழம்வி லாமிச்சை
வேர்க்கடுக்காய் கொத்தமல்லி
நீதமில வங்கப்பத் திரிதான்றிக்காய்
மூங்கிலுப்பு நெல்லிமுள்ளி
ஏதமில கிராம்புவெட்டி வேரோடதி
மதுரமல்லா லியம்புவேனே. (165)

இயம்பிடுநீ லோத்பலக்கி ழங்குஇவை
சமபாக மெல்லாங் கூட்டி
நயம்பெறவு மிடித்துவடிக் கட்டிநெய்யி
லேகலந்து நன்றாய்க் காய்ச்சித்
தயங்காம லுண்டிடிரு பதுவிதமே
கங்களுமங் தரதாகம்மெய்
வயங்கெரிவு சிரஞ்செரிவு மூத்திரக்கி
ரிச்சமுதல் வாசியாமே. (166)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| வாழைக்கிழங்குச்சாறு | — | 4 படி |
| உப்பு | — | 100 பலம் |

இவைகளையொன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி 2 படியாக வற்றவைத்து அதனுடன்

| | | |
|---|---|---|
| பூசினிக்காய்ச்சாறு | — | 2 படி |
| பசுவின்பால் | — | ,, |
| பசுவின் நெய் | — | ,, |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | — | ,, |

இவைகளையும் ஒன்றுகலந்து வைத்துக்கொள்ளவும்

| | |
|---|---|
| விளாம்பழம் | விலாமிச்சைவேர் |
| கடுக்காய் | கொத்தமல்லி |
| லவங்கப்பத்திரி | தான்றிக்காய் |
| மூங்கிலுப்பு | நெல்லிமுள்ளி |
| கிராம்பு | வெட்டிவேர் |
| அதிமதுரம் | நீலோத்பலக் கிழங்கு |

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து இடித்து சூரணித்து, சாறு சேர்ந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். ஆறியபின்னர், சர்க்கரை 50 பலமும் கூட்டி வைத்துக் கொள்ளவும். இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன் உட்கொள்ள 20 வித மேகங்களும், உடல் எரிச்சல், தலை எரிச்சல், மூத்திர கிரிச்ரம் முத லானவை தீரும்.

குறிப்பு :

இந்த முறைக்குப்பின் 6 ஏடுகள் மூலச்சுவடியில் காணப்படவில்லை.

## 100. மூத்திர கிரிச்சத்திற்கு மொச்சைக் கொழுந்து எண்ணெய்.

வன்னமொச்சைக் கொழுந்தொரு நிலவாரைக்
கொழுந்திரண்டாம் வழுத்தும்வாறே

நன்னயமா மன்னிழலி லேயுலர்த்திக்
கொண்டிடித்து நறுந்தூளாக்கிப்
பின்னணிகோ ராமணக்கி னெண்ணெயுட
னேகலந்து பிசகிடாமல்
யின்னபடி கொடுத்துவந்தால் மூத்திரகி
ரிச்சமெல்லா மிறங்கிப்போமே. (167)

(இ-ள்)

மொச்சைக் கொழுந்து
நிலவாரைக் கொழுந்து

இவ்விரண்டையும் நிழலில் உலர்த்தி இடித்துத் தூள்செய்து, ஆமணக்கெண்ணெயுடனே கலந்து உட்கொண்டுவந்தால் மூத்திர கிரிச்சிரங்கள் தீரும்.

## 101. நீரடைப்பிற்குக் கல்லடைப்பிற்கும் ஆட்டுப்பால் மருந்துகள்.

சுகமான பசுவின்பால் சமதைதண்ணீர்
விட்டதனைச் சுண்டக்காய்ச்சி
பகர்செய்கொட்டைப் பாக்களவு வெங்காரம்
பொரித்திட்டுப் பண்பாயுண்பாய்
யிகழாம லின்னமுங்கேள் கனத்திடும்பூ
ளையின்வேரோ டெலுமிச்சங்காய்
நிகரரைத்து வெள்ளாட்டுப் பாலினிலீக்
கல்லடைப்பு நீங்கிப்போமே. (168)

(இ-ள்)

பசுவின் பால் ஒருசேருடன், தண்ணீர் ஒருசேர் விட்டு அடுப்பின் மேலேற்றிச் சுண்டக்காய்ச்சி, வெங்காரம் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்துப் பொடித்துப் போட்டு உட்கொள்ளவும்.

[2] பூனைக்காலி வேர் அரைத்த விழுது ஒரு எலிமிச்சங்காய் அளவரைத்து வெள்ளாட்டுப் பாலுடன் கரைத்து உட்கொண்டால் கல்லடைப்புகள் நீங்கும்.

## 102. மூத்திரக் கல்லிற்கு ஆட்டுப்பால் மருந்துகள்.

வன்னமுள்ள சிற்றமட்டி யிலைதனைவெள்
 ளாட்டுப்பால் வார்த்தரைத்தே
அன்னமருந் தைக்கொடுப்பாய் கருஞ்சீர
 கத்துடனே யடரும்பின்னை
நன்னயவே ரிலையிவைவெள் ளாட்டுப்பா
 லினிலரைத்து நன்றாயீந்தால்
சொன்னபடி சிறுநீரை யடைத்திடுங்கற்
 றெரித்துவிழுஞ் சுருக்கிற்றானே. (169)

(இ-ள்.)

சிற்றாமுட்டி யிலையை வெள்ளாட்டுப்பால் விட்டரைத்து, உட்கொண்டாலும், கருஞ்சீரகம், பின்னை வேர், இலை இவைகளையும் அரைத்து வெள்ளாட்டுப் பாலுடன் குழப்பி உட்கொண்டாலும் மூத்திரத்தி லுள்ள கற்கள் வீழும்.

## 103. கல்லடைப்புக்கு வெள்ளரிச்சாறு மருந்து.

சீதளவெள் ளரிக்காய்சா றொருநாழி
பூளையின்வேர் சிகத்தேராய
காதலுய ரெலுமிச்சங் காயினள
வரைத்தெடுத்துக் கரைத்துக்கொண்டு
நீதமுட னிப்படியே மூன்றுநாள்
கொடுத்துவந்தால் நீர்விழாமல்
வாதனைசெய் பொல்லாத கல்லடைப்பு
மெல்லாந்தான் வாசியாமே. (170)

(இ-ள்)
வெள்ளரிக்காய்ச்சாறு — ஒருநாழி

பூளைவேர் அரைத்தவிழுது ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்துக் கரைத்து, 3 நாட்கள் உட்கொண்டால் கல்லடைப்புகள் தீர்ந்து, சிறுநீர் நன்றாக இறங்கும்.

## 104. நீரடைப்பிற்கு, கல்லடைப்பிற்கு இளநீர் மருந்து.

நல்லபுதுச் சட்டிதனைக் காயவைத்துச்
செவ்விளநீர் நயந்தேவிட்டுச்
சொல்லந்தக் குன்றிநிறை வெங்காரத்
தைப்பொரித்துச் சுகமாய்ப்போட்டே
அல்லதுகே ளாத்திக்கர்ப் பூரமவ்வ
ளவெய்து சேர்ந்துண்டால்
வல்லடையாப் பொல்லாத சல்லையஞ்செய்
கல்லடைப்பும் விட்டுப்போமே. (171)

(இ-ள்.)

ஒரு புதுச் சட்டியை அடுப்பின்மேல்வைத்து, அதில் செவ்விளநீர்விட்டு, ஒரு குன்றியளவு வெங்காரம் பொரித்துப்போட்டு, அதனுடன் ஆலத்திக்கப்பூரமும் ஒரு குன்றியளவு சேர்த்து உட்கொள்ளவும்.

கல்லடைப்புகள் தீரும்.

## 105 கல்லடைப்புக்கு வாழைச்சாம்பல் குடிநீர்.

மொந்தன்வா ழையின்மரத்துப் பட்டையிலை
 தண்டுசுட்டு மொழிதப்பாமல்
அந்தநற்சாம் பலில்சரியாய் யொருபடியில்
 வெந்நீரைப் படிவிட்டிந்த
இந்தவித மாய்க்கரைத்து தேனில்வைத்
 திருந்துபண வெடைவெங்காரந்
தொந்தமதாய்ப் பொரித்திட்டே கொடுத்தாநீர்க்
 கல்லடைப்புந் துலைந்துபோமே. (172)

(இ-ள்)

மொந்தன் வாழைமரப் பட்டை, சரகு, அதன் தண்டு இவைகளைச் சுட்ட சாம்பல் ஒருபடி எடுத்து, வெந்நீர் ஒருபடியும் விட்டுக் கரைத்துங்கொண்டு, ஒரு பணவெடை வெங்காரத்தைப் பொரித்துத் தேனில் குழைத்து உட்கொண்டு, சாம்பல் நீரையும் பருகவும்.

கல்லடைப்புகள் தீரும்.

## 106. மூத்திர கிருசத்திற்கு மருந்து.

செப்புசிறு பூளையிலை பிண்ணாக்கி
  னுடன்புழுக்கிச் சீரடுப்பில்
ஒப்புடன்வைத் திருந்துதயந் தன்னிலெண்ணெ
  யுங்கலந்தே யுண்பாய்வேறு
தப்புவரா நல்லெண்ணெயோர் படியுமொரு
  படியெருமைத் தயிரீதல்லால்
கொப்பெலுமிச் சம்பழச்சா றுடுங்கொடுத்தால்
  மிகுஞ்சிறுநீர் குறைந்துபோமே. (173)

(இ-ள்)
சிறுபூளையிலை எள்ளுப்புண்ணாக்கு

இவைகளை நசுக்கி ஒருபானையில் தண்ணீர்விட்டு வேடுகட்டி, அதிலிட்டு வேறொரு பானையினால் மூடி, அடுப்பின்மேலேற்றி எரிக்கவும். ஆவி வெளியேறாமல் சிறிதுநேரம் வைத்திருக்கவும். இதனை நல்லெண்ணெயுடன் கலந்துக் காலை நேரங்களில் உட்கொள்ளவும்.

[2] நல்லெண்ணெய் ஒருபடியுடன், எருமைத்தயிர் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறுஞ் சேர்த்து உட்கொண்டால் சிறுநீர் குறையும்.

## 107. மூத்திர கிரிச்சத்திற்குச் சிலாசத்துப் பற்பம்.

செப்புநல்ல பொட்டிலுப்போ டிந்துப்பு
  வெங்காரம் சீனக்காரம்

ஒப்பும்வகை நான்கிளிறை கர்ப்பூர
சிலாசத்து மொன்றாய்க்கூட்டிக்
கைப்புலமா யரைத்ததைப் புடத்திலிட்டுக்
கொண்டுவரா கனெடைதேனில்
தப்புவரா மற்கொடுத்தால் மூத்திரக்கி
ரிச்சமெல்லாந் தானேபோமே (174)

(இ-ள்)

| | |
|---|---|
| பொட்டிலுப்பு | இந்துப்பு |
| வெங்காரம் | படிக்காரம் |

இவைகள் வகைக்கு 1 வராகனெடையுடன், கர்ப்பூர சிலாசத்து 4 வராகனெடை கூட்டிப் பொடித்து, ஒரு ஓட்டிலிட்டுச் சீலைமண்செய்து புடமிடவும். இதில் ஒரு வராகனெடை தூளெடுத்துத் தேனில் குழைத்து உட் கொள்ளவும்.

மூத்திர கிரிச்சங்கள் தீரும்.

## 108. நீர்ச்சுறுக்குக்கு முருங்கைத்தண்டு கஷாயம்.

கன்னயஞ்சேர் முருங்கையுட தண்டதனைத்
துண்டுதுண்டாய் நறுக்கிக்கொண்டு
சொன்னடி மூன்றுபடி தண்ணீரை
விட்டுழக்காய்ச் சுண்டக்காய்ச்சிப்
பின்னரைவ ராகனெடை வெங்காரத்
தைப்பொரித்துப் பிசகாதிட்டே

முன்னமதை யீந்துவந்தால் பொல்லாத
நீரடைப்பு முறிந்துபோமே. (175)

(இ-ள்.)

முருங்கைத் தண்டை (குச்சி) யெடுத்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு 3 படி சுத்தஜலம் விட்டு, ஒரு உழக்காகும்வரை வற்றவைத்து, அதனுடன் ஒரு வராகனெடை வெங்காரத்தை பொரித்துச் சேர்த்து உட்கொள்ளவும்.

நீர்ச்சுருக்குத் தீரும்.

## 109. சிறுநீரில் இரத்தம் விழுவது நீங்க மான்கொம்புச் சூரணம்.

சீதளமாங் கலைமானின் கொம்பதனை
பொடியாகச் செய்துகொண்டு
மீதந்தச் சர்க்கரையு மொன்றாக
வுங்கலந்து மிதமாயுண்பாய்
மாதளம்பூத் தனையரைத்துத் தண்ணீரி
லேகரைத்து மகிழ்ந்தே யுண்டால்
நீதமுடன் சிறுநீரி லிரத்தம்விழு
கிறதுநன்றாய் நீங்கிப்போமே. (176)

(இ-ள்)

கலைமான் கொம்பை இடித்துச் சூரணித்துச் சரியளவு சர்க்கரையும் சேர்த்துக் கலந்து தினம் 2 வேளை மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும்.

மாதளம்பூவை யரைத்துத் தண்ணீரில் குழப்பி உட்கொள்ளவும். மூத்திரத்தில் இரத்தம் விழுதல் நிற்கும்.

## 110. மயக்கம், விக்கலுக்கு ஏலாதிச் சூரணம்.

ஏலம்நிலப் பனைக்கிழங்கு கொத்தமல்லி
யதிமதுர மெழிற்கிராம்பு
கோலயிந்தி ரிகைப்பழந்தா மரைத்தாது
செங்கழுநீர் கோட்டஞ்சுக்கு
சீலமென்வெற் றிலைக்கொடிபி ரேங்கணங்கோ
ரைக்கிழங்கு சிறுநாகப்பூ
சாலவுங்கற் பூரசிலா சித்துவெள்ளைச்
சாரணைவேர் சாதிக்காயே. (177)

சாதிக்காய் திப்பிலிபே ரீச்சங்காய்
நெருஞ்சிக்காய் சந்தனப்பின்
நீதிசடா மாஞ்சிலுடன் கருஞ்சீர
கங்கூகை நீரிதெல்லாம்
ஓதியதொவ் வோர்வகைக்க ரைப்பலஞ்சேர்த்
திடித்தேயுள்ள தூட்கொப்பாய்
தீதில்லா வெண்சீனி சர்க்கரையன்
னிறைகூட்டி திருத்தக்கேளே. (178)

திருந்தவும்நெய் யிற்கலந்து சாப்பிட்டாற்
தலைமயக்கந் தியக்கம்விக்கல்
பொருந்துசயங் காமாலை பாண்டுபயித்
தியங்களெல்லாம் பொறுக்கவொண்ணு

வருந்திடச்செய் பொல்லாத மூத்திரக்
கிரிச்சமுதல் வாசியாகும்
அருந்துதண்ணீ ரினிற்பசுவின் பாலிலுண்டால்
வாந்தியுமே யதுநன்றாமே. (179)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | நிலப்பனைக்கிழங்கு |
| கொத்தமல்லிவிதை | அதிமதுரம் |
| கிராம்பு | திராக்ஷைப்பழம் |
| தாமரைத் தாது | செங்கழுநீர்க்கிழங்கு |
| கோஷ்டம் | சுக்கு |
| வெற்றிலைக்கொடி | பிரேங்கணம் |
| கோரைக்கிழங்கு | சிறுநாகப்பூ |
| கற்பூரசிலாசித்து | வெள்ளைச்சாரணைவேர் |
| சாதிக்காய் | திப்பிலி |
| பேரீச்சங்காய் | நெரிஞ்சிக்காய் |
| சந்தனத்தூள் | சடாமாஞ்சில் |
| கருஞ்சீரகம் | கூடைகநீர் |

இவைகள் வகைக்கு ½ பலம் சேர்த்து இடித்துச் சரியளவு வெள்ளைச் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரஸ்கொள்ளுமளவெடுத்து நெய்யில் குழைத்து உட்கொள்ளவும்.

தலைமயக்கம், விக்கல், சயம், காமாலை, பாண்டு, பயித்தியம், தாங்கமுடியாத வலியையும், எரிச்சலையும் கொடுக்கும் மூத்திர கிரிச்ரம் முதலானவைகள் தீரும்.

தண்ணீரிலோ அல்லது பசுவின் பாலிலோ சாப்பிட்டால் வாந்திகள் தீரும்.

## 111. நீரடைப்பிற்கு மருந்துகள்.

கோலமிகுங் கற்பூர வள்ளியின்சாற்
றினிற்சீனி கூட்டியீவாய்
சீலநற்குப் பையின்மேனி வேரொருகொட்
டைப்பாக்கின் சீரரைத்தே
மேலதையுண் ணக்கொடுப்பாய் முடக்கொத்தான்
ஞேர்நெல்லிக்காய் மிதமவ்வாறே
சாலவுமே பசுவெண்ணெய் தனிற்தருவாய்
நீரடைப்புச் சார்ந்திடாதே (180)

(இ-ள்)

கற்பூரவல்லிச் சாற்றுடன் சீனிசேர்த்து உட்கொள்ளவும்.

[2] குப்பைமேனி வேரையொரு கொட்டைப்பாக்களவெடுத்து அரைத்து உட்கொள்ளக் கொடுக்கவும்.

[3] முடக்கொத்தான் விழுது ஒரு நெல்லிக்காயளவு எடுத்துப் பசுவின் வெண்ணெயுடன் குழைத்துக் கொடுக்கவும்.

ஷை முறைகளினல் நீரடைப்புகள் தீரும்.

## 112. நீரடைப்புக்கு முன்னைவேர் மருந்தும், இளநீரும்.

சட்டமாய் முன்னைமரத் தின்வடபால்
வேரைவெட்டிச் சார்ந்தமேற்றேல்

யிட்டமொடு சீவியெடுத் துள்ளளுரும்பட்
டையையரைத்தோர் எலுமிச்சங்காய்
திட்டமின்னத் தும்பையிலைச் சாறுமிர
தமுங்கூட்டித் திடமாயீந்தால்
மட்டமதாய் நீரிறங்கு மல்லாம
லோர்மொழிதான் மனதாய்க்கேளே. (181)

மனதாய்க்கேள் பின்னையந்நீர் தானதிக
மாய்விழுந்தால் மலத்திடாமல்
அனலாகு முமிக்காந்த லுட்சொருகு
யோரிளநீ ரன்னீரீந்தால்
புனலடங்கா மற்சொறிந்தால் திரும்பவுமோர்
இளநீரைப் புகட்ட நன்றாய்
கனமான பொல்லாத நீரடைப்பு
மக்கணத்திற் கழன்றுபோமே. (182)

(இ-ள்)

முன்னை மரத்தின் வடக்கேபோகும் வேரை வெட்டிக்கொண்டுவந்து மேல்தோலைச் சீவிவிட்டு உள்ளிருக்கும் பட்டையை எடுத்து, ஒரு எலுமிச்சம் பழளவு அரைத்துக்கொள்ளவும். இதனுடன் தும்பையிலைச் சாற்றில் அரைத்த சுத்திசெய்த பாதரஸம் (ஒரு குன்றியளவு) சேர்த்து உட்கொள்ளவும். நன்றாக நீர் இறங்கும். இன்னும் அதிகமாக நீர் போகவேண்டுமெனில் உமிக்காந்தலில் ஒரு இளநீரைச் சொருகி, மட்டை கருகும்போது அதையெடுத்து இளநீரைப் பருகவும். இவ்வாறு 2 இளநீர் சாப்பிட்டால் நீரடைப்புகள் உடனே தீரும்

## 113. நீரடைப்பிற்கு அம்மான் பச்சரிசிக் கல்கம்.

அம்மான்பச் சரிசியினை யொருமாங்கா
யளவரைத்தே யதனையுண்டு
விம்மாதோர் நாழித்தண்ணீ ரைக்குடிப்பாய்
வெள்ளெரியின் விரையரைத்தே
சும்மாவெங் காரம்வெடி யுப்பிரண்டும்
பொரித்தரைத்துச் சுகமாய்ப்போட்டே
யிம்மாத்தி ரம்பசுவின் பாலிலுண்டால்
நீரடைப்பு மிறங்கிப்போமே. (183)

(இ-ள்.)

அம்மான் பச்சரிசியிலை ஒரு மாங்காயளவெடுத்து, அரைத்து உட்கொண்டு ஒரு ஆழாக்குத் தண்ணீர் உட்கொள்ளவும்.

[2] வெள்ளெரி விரையுடன் வெங்காரம், வெடியுப்பு இவ்விரண்டையும் பொரித்துச் சேர்த்து உட்கொண்டு பசுவின்பால் உட்கொள்ளவும்.

நீரடைப்புகள் நீங்கும்.

## 114. நீரடைப்புக்குத் தேற்றான் கல்கம்.

ஒப்பாம்நல் விளநீரை முகிள்சீவித்
தேத்துவித்தை யுள்ளேபோட்டு
வெப்பாக வேகவைத்துச் சட்டமாய்க்
கொட்டையெல்லாம் வெந்தபுன்னல்

தப்பாமற் வெண்ணெயைப் போலரைத்தொன்
றுய்க்கரைத்துத் தானேயுண்டால்
அப்பாற்கேள் சங்கடஞ்செய் வெங்கடுப்பும்
நீரடைப்பு மகன்றுபோமே. (184)

(இ-ள்)

இளநீரின் கண்ணைச்சீவி அதனுள் தேத்தாங் கொட்டைகளைப்பேட்டு, அடுப்பின் மேலேற்றி வேக வைக்கவும். தேத்தாங்கொட்டைகள் வெந்தபின், அவைகளை வெண்ணெய்போல் அரைத்து, அந்த இள நீருடனே குழப்பி உட்கொள்ளவும்

வெங்கடுப்பு (நீர்க்கடுப்பு, நீரடைப்பு) முதலான வைகள் தீரும்.

## 115. நீரடைப்பிற்குப் பொன்னுங்காணிக் கல்கம்.

வியங்கொள்பொன்னுங் காணியின்வே ரெலுமிச்
பழச்சாறு விட்டரைத்தே [சம்
இயம்புகின்ற தேனையரி சிக்கழுநீரில்
பிசகாம லிரண்டாம்நீரில்
நயந்துண்டால் னீரடைப்பும் வாசியதாஞ்
தஞ்சையில்வாழ் நாகரீகன்
சுயஞ்சொல்லுங் கவிங்கர்சிந்தா மணிசரபேந்
திரவிசையன் சொன்னவாரே. (185)

(இ-ள்.)

பொன்னாங்காணி வேரை எலுமிச்சம்பழஞ்சாறு விட்டரைத்து உட்கொள்ளவும்.

[2] தேனை அரிசி கழுவிய கழுநீரில் விட்டுப் பருகவும்.

நீரடைப்புகள் தீரும்.

## 116. நீரடைப்பிற்குச் சாரணையாதிக் கஷாயம்.

பண்பான சாரணைவேர் முருங்கைவேர்
மாவிலங்கைப் பட்டையேலம்
நண்பாந்திப் பிலிபிராவ டிப்பூண்டு
நாயுருவி நறுமநெருஞ்சில்
ஒண்பாவும் வேர்பூளை வேரிதைக
ஷாயமிட்டே யுண்டேவந்தால்
திண்பார்க்குட் பொல்லாத சல்லியஞ்செய்
ர்ரடைப்புத் தீர்ந்துபோமே. (186)

(இ-ள்)

| | |
|---|---|
| சாரணைவேர் | முருங்கைவேர் |
| மாவிலங்கைப்பட்டை | ஏலக்காய் |
| திப்பிலி | பிராவடிப்பூண்டு* |
| நாயுருவி | நெருஞ்சில்வேர் |
| சிறுபீளைவேர் | |

*முடக்கித்தானுக்குப் பராவதபாதி என்றுபேர்.

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து வடிக்கட்டி உட்கொள்ளவும். நீரடைப்புகள் தீரும்.

## 117. பித்தாதிக்கத்தாலேற்பட்ட மூத்திரகிரிச்சத்திற்குக் கொன்றைக் கஷாயம்.

வன்னமலற் கொன்றையின் கொழுந்துசிறு
காஞ்சோறிவேர் வளர்கடுக்காய்
யின்னமும்நற் பூளையின்வேர் நெரிஞ்சில்வே
ரிவைகூட்டி யிடுகஷாயஞ்
சொன்னசிறு பயறுமுசு முசுக்கைச்சமூ
லஞ்சேர்த்தாச் சுண்டக்காய்ச்சி
அன்னதுண்டாற் பயித்தியஞ்சேர் மூத்திரக்கி
ரிச்சம்நன்ரு யகன்றுபோமே. (187)

(இ-ள்)

செழுமலர்க்கொன்றைக் கொழுந்து
சிறுகாஞ்சோறிவேர்
கடுக்காய்த்தோல்
நற்பூளைவேர்
நெருஞ்சில்வேர்

இவைகளைச் சரிஎடை யெடுத்து இடித்து, 8 மடங்கு சுத்தஜலம்விட்டு எட்டிலொன்ருக வற்றவைத்து உட்கொள்ளவும்.

[2] சிறுபயறு, முசுமுசுக்கைச்சமூலம் இவைகளையும் இடித்து 8 மடங்கு தண்ணீர் சேர்த்து, எட்டிலொன்ருக வற்றவைத்து உட்கொள்ளவும்.

பித்தாதிக்கத்தாலேற்படும் மூத்திர கிரிச்சங்கள் தீரும்.

## 118. நீரடைப்புக்கு வெள்ளரிக்காய்ச்சாறு மருத்து.

சீதளவெள் ளரிக்காய்குட் பொரித்தகாரத்
　　தைப்பொதித்துச் செப்பும்வாறே
நீகமுமிக் காந்தலிலே செருகியெடுத்
　　துப்பிழிந்து நேராயீவாய்
காதலுயர் நாயுருவி யெள்ளினுட
　　சக்கையெல்லாங் கனகீரைத்தண்
டோததனைச் சுட்டிடுஞ்சாம் பலிற்கொடுநீர்க்
　　கல்லடைப்பு மோடிப்போமே (188)

(இ-ள்)

ஒரு முற்றிய வெள்ளரிக்காய்க்குள் பொரித்த வெங்காரம் (சுமார் 1 வராகனெடை) வைத்து, உமிக் காந்தலில் செருகி வேகவைத்து இடித்துப் பிழிந்து உட்கொள்ளவும்.

[2] நாயுருவி எள்ளுச்சக்கை
கீரைத்தண்டு

இவைகளைக் கொளுத்திய சாம்பலுடன் முன்கூறிய

வெள்ளெரிக்காய்ச் சாற்றையும் கொடுக்கலாம்.

நீரடைப்புகள் தீரும்.

## 119. நீரடைப்பு, கல்லடைப்புக்கு வாழைக்கிழங்குச்சாறு மருந்து.

வடிவாம்வா ழைக்கிழங்கைத் துவைத்துச்சா
றெடுத்ததனை வடித்துக்கொண்டு
பொடியாய்ச்செய் தேலமதி லிரண்டுகா
செடைசரியாய்ப் போட்டேயீவாய்
கடியாரும் பசுவின்மோர் தண்ணீர்வி
டாமலதைக் கடைந்தெடுத்தே
துடியாம லிரண்டுகா செடையேலத்
தூள்படுத்தித் துதிக்கும்வாறே. (189)

துதிக்குமொழி தப்பாமல் மோர்தனிலே
கரைத்துத்தான் துய்த்தேவந்தால்
உதிக்குமந்தப் பொல்லாத நீரடைப்புங்
கல்லடைப்பு முடனேநன்றும்
விதிக்குமறை யோர்கள்சங்கம் பிரியாத
புண்ணியவான் வேந்தர்பலபேர்
மதிக்கும்நல்ல கீர்த்திபெறு சரபேந்திர
பூபதிசொல் மார்க்கந்தானே. (190)

(இ-ள்.)

வாழைக்கிழங்கை இடித்துப் பிழிந்த சாற்றில் ஏலக்காய்த்தூள் 2 காசெடையிட்டு உட்கொள்ளவும்.

[2] தண்ணீர்விடாமல் கடைந்த பசுவின் மோரில் 2 காசெடை ஏலக்காய்த்தூளிட்டு உட்கொள்ளவும்,

நீரடைப்பு, கல்லடைப்பு, முதலானவைகள் உடனே தீரும்.

## 120. நீர்கட்டுக்கு நீர்முள்ளி விழுதும், கொத்தமல்லிக் கஷாயமும்.

வன்னயநீர் முள்ளியிலை மணலிபொன்னாங்
காணியிவை வளர்சமூலஞ்
சொன்னவகைக் கொருபிடிவைத் தரைத்தெலு
சங்காய்நேர் சுகமாய்க்கூட்டி [மிச்
அன்னைநல் லெண்ணெயிற்சேர்த் துண்டுவந்
கல்லுவிழு மல்லற்ாகேளாய் [தால்
பின்னந்தி யாவட்டை வேரொடுபாக்
கருந்திவரி லியல்பதாமே (191)

கொத்தமல்லி யறுகின்வேர் சீரகக்க
ஷாயம்வைத்துக் கொண்டேகூட்டில்
உத்தமமாம் வெண்ணெயிட்டுக் கற்கண்டு
பனைவெல்ல முடனேகூட்டிச்
சித்தமகிழ்ந் துண்டுவந்தால் நீர்க்கட்டு
வாசியதாஞ் சிவனார்பூஜை
நித்தமுஞ்செய் புண்ணியவான் சரபேந்திர
பூபதிசொல் நேமந்தானே. (192)

(இ-ள்)

நீர்முள்ளியிலை மணலி
பொன்னாங்காணி

இவைகள் சமூலமாக ஒவ்வொரு பிடி யெடுத்து, அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்து நல்லெண்ணெயுடன் உட்கொள்ளவும்.

நீரில் உண்டாகும் கற்கள் வீழும்.

[2] நந்தியாவட்டை வேருடன் பாக்கும் சேர்த்து உட்கொள்ளவும்.

[3] கொத்தமல்லி அருகின்வேர்
சீரகம்

இம்மூன்றையும் இடித்துக் கஷாயம் வைத்து, வெண்ணெய், கற்கண்டு, பனைவெல்லம் இவைகளைச் சேர்த்துப் பருகவும்.

நீர்க்கட்டுகள் நீங்கும்.

## 121. மூத்திர கிரிச்சத்திற்கு அவுரி நெய்.

கோலமுயர் பசுவினெய்யு மவுரியிலைச்
சாறிரண்டுங் கூட்டிக்காய்ச்சிச்
சீலமொடு பதத்தில்வடித் தந்திசந்தி
யுங்கொடுத்தால் சேர்த்திடந்த
சாலவுமூத் திரகிருச்சம் நீர்ச்சுருக்கும்
வாசியதாம் சம்புபார்வாழ்

பாலசவுந் தரிகிருபை நிறைசரபேந்
திரவிசயன் பகரும்வாரே. (193)

(இ-ள்.)

பசுவின் நெய்யும், அவுரியிலைச் சாறும் சரியள வெடுத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் காலையிலும் மாலையிலும் கொடுக்கவும்.

மூத்திரகிரிச்சம், நீர்ச்சுருக்கும் தீரும்.

## 122. நீர்க்கடுப்பிற்குக் கற்றாழைச்சோறு மருந்து.

திடமான கற்றாழ மடல்சோற்றை
யெடுத்ததனைத் திகழ்நீர்விட்டே
உடனாலு தரங்கழுவித் துளசிவிதை
சர்க்கரைபோட் டுண்டேவந்தால்
இடரான நீர்க்கடுப்பு வாசியதாஞ்
சங்கரனா ரிலங்குபாதம் (194)

(இ-ள்)

கற்றாழை மடலிலுள்ள சோற்றைத் தனியாகச் சீவி யெடுத்துக்கொண்டு நாலுதடவை சுத்தநீர்விட்டுக் கழுவி துளசி விதை, சர்க்கரை இவ்விரண்டும் சேர்த்துச் சாப்பிடவும்.

நீர்க்கடுப்புகள் தீரும்,

---

*இச்செய்வுளில் ஒரு அடி காணப்படவில்லை.

## 123 கல்லடைப்பு, நீர்க்கடுப்பிற்கு வெங்கார மருந்து முதலியவை.

வெண்மைதரும் வெங்காரம் பலமொன்றே
யுழக்கிளெண்ணெய் விட்டேயப்பால்
வண்மையுழக் கெலுமிச்சம் பழச்சாறுங்
கூட்டியுண்பாய் வளஞ்சேரந்தத்
தண்மையுள்ள தவசுமுருங் கையினிலையைப்
பாலினிலே தான்சேர்த்துண்டால்
யுண்மையுட னுண்டுவந்தால் கல்லடைப்பும்
நீர்க்கடுப்பும் ஓடிப்போமே. (195)

(இ-ள்)

வெங்காரம் ஒரு பலத்துடன் நல்லெண்ணெய் ஒரு உழக்கும், எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து உட்கொள்ளவும்.

[2] தவசுமுருங்கையிலையை யரைத்துப் பாலுடன் குழப்பி உட்கொண்டாலும்

கல்லடைப்பு, நீர்க்கடுப்பு முதலானவை நீங்கும்.

## 124. நீர்க்கடுப்பிற்கு நல்லெண்ணெய் மருந்தும், பொன்னுங்காணி மருந்தும்.

சொன்னசெருப் படிச்சாறும் நல்லெண்ணெய்பா
வகைக்குரிதான் சுகமாய்க்கூட்டி [ல்

அன்னதஞ்சு நாட்கொடுப்பாய் வேறுபொன்னாங்
காணியெழி லாங்கொழுந்து
நன்னயமா மெலுமிச்சங் காயளவு
தின்றுதண்ணீர் நறுஞ்சிரங்கா
யின்னபடி குடித்துவந்தால் பொல்லாத
நீர்க்கடுப்பு மிழிந்துபோமே. (196)

(இ-ள்)

செருப்படிச்சாறு, நல்லெண்ணெய், பசுவின்பால் இவைகளை வகைக்கு ½ படி எடுத்து 5 நாட்கள் கொடுக்கவும்.

(2) பொன்னாங்காணிக் கொழுந்து, எலுமிச்சங்காயள வெடுத்து உட்கொண்டு ஒரு சிரங்கை தண்ணீர் குடிக்கவும்.

நீர்க்கடுப்புகள் தீரும்.

## 125. நீர்க்கடுப்பிற்கு வெங்கார மருந்து.

*கைப்புலமாய்ச் சாணியில்வெங் காரமதை
யிருபதுநாள் கழுவிக்கொண்டு
செப்பும்வண்ண மதிலரைவ ராகனெடை
வெந்நீர்நாழி ...........
ஒப்புடன்கூட் டிக்கரைத்துக் கொடுத்துவந்தால்
நீர்க்கடுப்பு மோடிப்போமே. (197)

* இச்செய்யுளில் ஒரு அடி காணப்படவில்லை.

(இ-ள்)

வெங்காரத்தை சாணிப்பால்விட்டு 20 நாட்கள் கழுவவும். அதில் ½ வராகனெடை யெடுத்து வெந் நீருடன் கொடுக்கவும்.

நீர்க்கடுப்புகள் தீரும்.

## 126. நீர்க்கடுப்பிற்குச் கீழாநெல்லிக் கஷாயம்.

இயம்புகீழ் காய்நெல்லிச் சமூலம்வே
விப்பருத்தி யேர்பாவட்டை
நயம்பெறுசா ரணைமுருங்கை கழற்கொடியி
னிலையுமன்றி நண்ணுஞ்சுக்கு
சுயம்புளவெள் ளைப்பூண்டு கருவேப்பி
னிலையிர்க்குச் சொல்லிதெல்லாம்
வியம்பரவச் சட்டமதாய்ச் சமன்கூட்டிக்
கொண்டெடுத்து விளம்பக்கேளே. (198)

விளம்பக்கேள் சொன்னபடி நல்லதண்ணீ
ரோர்பதக்கு விட்டுக்காய்ச்சி
வளம்பெறவு மொருநாழி யாயிறுத்து
மூன்றுநாள் வரிசையாய்த்தான்
உளப்பதரா மல்கொடுத்தால் நீர்க்கடுப்பு
வாசிதரு மொளிரும்வெள்ளை
யிளம்பிறையார் சிவனருள்பெற் றிடுசரபேந்
திரவிசயன் இயம்பும்மாறே. (199)

(இ-ள்.)

கீழாநெல்லிச்சமூலம் வேலிப்பருத்தி
பாவட்டை சாறணை
முருங்கை கழற்சிக்கொடியிலை
சுக்கு வெள்ளைப்பூண்டு
கருவேப்பிலையீர்க்கு

இவைகளை யொரு வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு. சுத்த ஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு நாழியாகும்வரை வற்றவைத்து 3 நாட்களுக்குக் கொடுக்கவும்.

நீர்க்கடுப்புகள் தீரும்.

## 127. கல்லடைப்புக்கு புன்னைவேர் மருந்துகள்.

புன்னையின்வே ரிலைகருஞ்சீ ரகமரைத்து
வெள்ளாட்டுப் பொற்பாம்பாலில்
சொன்னபடி யேகொடுப்பாய் வேறுசிற்று
முட்டியிலைச் சொல்வெள்ளாட்டு
நன்னயப்பா லினிலரைத்துத் திட்டமதா
யீந்துவந்தால் நறுந்தேகத்தை
வன்னடுக்கஞ் செய்யுமந்தப் பொல்லாத
கல்லடைப்பும் வாங்கிப்பேமே. (200)

(இ-ள்.)

புன்னையின்வேர் புன்னையிலை
கருஞ்சீரகம்

இம்மூன்றையும் அம்மியில்வைத்தரைத்து வெள்ளாட்டுப்பாலில் குழப்பிக் கொடுக்கவும்.

[2] சிற்றுமுட்டி யிலையை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கொடுத்தாலும் கல்லடைப்புகள் தீரும்.

## 128. நீர்க் கடுப்புக்கு, கல்லுக்கு வெள்ளெரிக்காய்ச் சாறு மருந்து.

ஓதும்வெள் ளரிக்காய்ச்சா றொருநாழி
பூனையின்வே ருடனேகொண்டு
கோதுவரா தரைத்தெலுமிச் சங்காய்நேர்
மூன்றேநாள் கொடுப்பாய்வேறு
சூதுசெய்யா மற்பசுவின் பால்சலமுஞ்
சரிகூட்டிச் சுண்டக்காய்ச்சி
மீதுபாக் களவுவெங்கா ரம்பொரித்திட்
டேகொடுக்கல் விழுந்துபோமே. (201)

(இ-ள்)

வெள்ளெரிக்காய்ச் சாறு 1 நாழியுடன், பூனைக்காலி வேரை ஒரு எலுமிச்சங்காயளவரைத்து 3 நாட்களுக்குக் கொடுக்கவும்.

[2] பசுவின் பாலுடன் சரியளவு ஜலம்விட்டு சுண்டக்காய்ச்சி ஒரு பாக்களவு வெங்காரம்போட்டுக் கொண்டு உட்கொள்ளவும். நீரிலுள்ள கற்கள் வீழும்.

## 129. கல்லடைப்பிற்குத் தாளியிலை வெண்ணெய் முதலானவை.

பகரெருமை வெண்ணெயோடு தாளியிலை
வகைக்கிரண்டு பாக்குக்கொப்பே
உகந்தரைத்து மூன்றுநா ளுங்கொடுப்பா
யின்னமும்வே றொருநாட்கொவ்வோர்
திகழ்கொமட்டிப் பழச்சாற்றில் நாற்கழஞ்சு
சர்க்கரையுந் திடமாய்க்கூட்டி
அகலாமல் மூன்றேநா ளுண்டில்நீர்
கல்லடைப்பு மகன்றுபோமே, (202)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| எருமை வெண்ணெய் | — | 2 பாக்களவு |
| தாளியிலை விழுது | — | ,, |

இவ்விரண்டையும் 3 நாட்கள் காலையில் கொடுக்கவும். (2) 3 நாட்களுக்குக் கொம்மட்டிப் பழச்சாற்றில் 4 கழஞ்சு சர்க்கரை கூட்டி, ஒவ்வொருவேளை காலையில் உட்கொள்ளக் கல்லடைப்புகள் தீரும்.

## 130. கல்லடைப்பிற்கு வில்வாதி மருந்துகள்.

மெல்லவில்வ வேரரைத்துப் பசுவின்பா
லினிற்கொடுப்பாய் மேற்கேளின்னம்

சொல்லந்த வெங்கார மொட்டடையும்
சேர்த்துநெய்யில் சுகமாயீவாய்
அல்லதுபத் துப்பலக ரைப்பொடியைப்
பாலினிலீ யத்திப்பட்டை
நல்லவெல்லம் பசுவின்பா லினிலத்தீக்
கல்லடைப்பு நழுவிப்போமே. (203)

(இ-ள்.)

வில்வவேரை அரைத்துப் பசுவின்பாலில் குழப்பிக் கொடுக்கவும்.

(2) வெங்காரத்தை ஒட்டடையுடன் அரைத்துப் பசுவின் நெய்யுடனே குழப்பிக்கொடுக்கவும்.

(3) சோழி 10 எடுத்துப் பொரித்து பசுவின்பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

(4) அத்திப்பட்டையை பசுவின் பாலில் அரைத்துக் குழப்பி, நல்லவெல்லம் சேர்த்துக் கொடுக்கவும்.

கல்லடைப்புகள் தீரும்.

## 131. மூத்திர கிரிச்சத்திற்கு ஆவாரைப் பஞ்சாங்கச் சூரணம்.

சொன்னதாவ ரையின்வேோ ரிலேகாயும்பூப்
பட்டையிவை சூழ்சமஞ்சேர்த்

தன்னதிடித் தெடுத்தபின்பு மஞ்சளரைத்
தோர்துணியி லதனைப்பூசி
நன்னயமாய்க் காயவைத்துத் துணியின்முன்
சூரணத்தை நன்றாய்க்கட்டி [சொற்
பின்னதன்மேல் சீலமண்செய் தெரிந்திடுவாய்
பக்குவமாய்ப் பேசக்கேளே. (204)

பேசக்கேள் சீவல்கரு காமலெடுத்
தேநல்லெண்ணெய் பிசகிடாம
லேசரியாய் விட்டரைத்துக் கொட்டைப்பாக்
கவ்வளவே யிருபோதுந்தான்
நேசமொடு நித்தமுண்டால் வெகுமூத்தி
ரக்கிரிச்சம் நீங்கும்நன்றாய்த்
தேசமெங்கும் வாழ்ந்துதஞ்சை சரபேந்திர
பூபதிசொல் திட்டந்தானே. (205)

(இ-ள்)

ஆவாரையின் வேர், இலை, காய், பூ, பட்டை இவைகளை ஒவ்வொன்றும் தனித்தனியே சமநிறையாக எடுத்து இடித்துச் சூரணஞ்செய்து வைத்துக்கொள்ளவும்.

மஞ்சளை விழுதாக்கி, ஒரு வெள்ளைத் துணியில் தடவிக் காயவைத்து, முன்சொல் சூரணத்தை அதில் வைத்துச் சுருட்டிச் சீலமண்செய்து, ஒரு ஓட்டின்மேல் வைத்து எரிக்கவும். பதமாக எரித்து, உள்ளிருக்கும் சீவல் கருவதற்கு முன்னர் தீயை அணைத்துச் சீலமண்ணை நீக்கி, ஆவாரைச் சூரணத்தை எடுத்துக் கொண்டு நல்லெண்ணெய் விட்டரைத்துத் தினம்

2 வேளைகள் காலையிலும், மாலையிலும் கொட்டைப்பாக் களவு உட்கொள்ளவும்.

மூத்திரக்கிரிச்சங்கள் நீங்கும்.

---

## 132. நீரடைப்பிற்குத் திராக்ஷாதி மருந்துகள்.

நல்லமுந்தி ரிகைப்பழத்தி லரைப்பலம்போட்
டேகுளிர்ந்த நறுநீர்வார்த்து
புல்லவரைத் தீந்திடுவாய் வேறுபொன்னுங்
காணியிலைப் பொருந்துஞ்சாற்றை
சொல்லந்த வுதையமதி லீந்திடுவா
யின்னமொன்று சுகமாய்க்கேளே
ஒல்லவும்நீ ராகாரம் நாய்வேளைச்
சாறிரண்டு முதவுவாயே (206)

உதவினல் நீரடைப்புத் தீர்ந்துவிடு
மல்லாம லுரைப்பேனன்பாய்
மிதமாக வேயாடா தோடையிலை
கொண்டுவந்து மேலோங்கும்
யிதைப்னேவெல் லத்துடனே யரைத்தெண்ணெ
யிலேகூட்டி யீந்தேவந்தால்
.... .... .... .... .... .... .... ....
நீர்கட்டு மலக்கட்டுந் தீர்ந்துபோமே. (207)

(இ-ள்.)

திராக்ஷைப்பழத்தில் ½ பலம் எடுத்து ஒரு பாத்

திரத்திலிட்டுக் குளிர்ந்த ஜலம்விட்டு அரைத்துக் கொடுக்கவும்.

[2] பொன்னுங்காணி யிலைச்சாற்றை சூரியோதய காலத்தில் உட்கொள்ளவும்.

[3] நீராகாரம் (சாதத்தின்மேல் நிற்கும் தெளிவுநீர்) நாய்வேளைச் சாறு இவ்விரண்டையும் சேர்த்து உட்கொள்ளவும்.

[4] ஆடாதோடையிலையைப் பனைவெல்லத்துடன் அரைத்து நல்லெண்ணெயுடன் குழப்பி உட்கொள்ளவும்.

நீர்க்கட்டு, மலக்கட்டு, நீரடைப்பு முதலான நோய்கள் தீரும்.

## 133. நீர்க்கட்டுக்குத் துத்திவேர் முதலான மருந்துகள்.

பெருந்துத்தி வேருமுசு முசுக்கைசமு
லங்களிவை பிசகிடாமல்
பொருந்தவுந்தா நேநறுக்கிப் பசுவின்பா
லொருசிரங்கைப் பொழிந்தபின்பு
திருந்தவும்பி சைந்துநல்ல வெல்லமொரு
பாக்களவு திடமாய்ப் போட்டே
அருந்திடே லாதியுண்டை யுங்கூட்டிச்
சட்டமதா யப்பாற்கேளே. (208)

அப்பாற்கேள் பிரமியமும் நீர்கட்டும்
வாசியதா மதுதானன்றி
வெப்பாஞ்சங் கங்கொழுந்தி லொருபின்னைக்
காயளவு வேண்டிவைத்தே
ஒப்பாக வேயரைத்துப் பசுவின்பா
லொருசிரங்கை யுடன்குழப்பிக்
கைப்பாக மாய்க்கொடுவே ரிளநீர்வெந்
னீரிலதைக் கனதையாமே. (209)

கனதையுள்ள பந்தியந்தான் பசுவின்பா
லுஞ்சோறுங் கலந்தேயீவாய்
தனதாய்க்கே ளின்னமொன்று திப்பிலிவெங்
காரமிது தானல்லாமல்
புனலிலகு வெள்ளரியின் விரைகூட்டி
யரைத்தெடுத்துப் பொருந்தும்வெந்நீர்
மனதுடனே யாறினபின் னதிற்கொடுத்தால்
நீர்க்கட்டு மாறிப்போமே. (210)

(இ-ள்)

பெருந்துத்திவேர் முசுமுசுக்கைச் சமூலம்

இவ்விரண்டையும் வகைக்கு ஒரு பிடியெடுத்து யளவுடன் பிசைந்து, நல்லவெல்லம் ஒரு பாக்களவும் நசுக்கிப் பசுவின்பால் ஒரு கைகூடச்சேர்த்து ஏலாதி யுருண்டையுடன் சாப்பிடவும்.

பிரமேகம், நீர்க்கட்டு இவைநீங்கும்.

[2] சங்கங் கொழுந்து ஒரு புன்னைக்காயளவு

அரைத்து பசுவின் பால் ஒரு சிரங்கையுடன் குழப்பி, மிதமான சூடுள்ள வெந்நீருடன் கொடுக்கவும்.

பசுவின்பால் சாதஞ் சாப்பிடவும்.

[3] திப்பிலி, வெங்காரம், வெள்ளெரிவிதை இவைகளை அரைத்து, ஆறின வெந்நீருடன் உட்கொள்ளவும்.

நீர்க்கட்டுகள் தீரும்.

## 134. நீர்க்கட்டுக்கு ஏலாதிச் சூரணம்.

ஏலநற்கற் பூரசிலா சத்துடனே
    பூனையின்வே ரெழிலாமந்தக்
கோலமிகுந் திப்பிலியுஞ் சமன்கூட்டிச்
    சூரணித்துக் கொண்டேயப்பால்
சாலவுந்தான் பச்சரிசி தனிலிரண்டாங்
    கழுநீரிற் சாற்றும்வாறே
சீலமுள்ள வெல்லமிட்டுக் கரைத்தீந்தால்
    நீர்கட்டுச் சிதறிப்போமே. (211)

(இ-ள்)

ஏலக்காய் கற்பூரசிலாஜித்
பூனைக்காலிவேர்

இவைகளை சமன் எடுத்து, இதற்குச் சரியளவு திப்பிலி கூட்டிச் சூரணம் செய்துகொண்டு, 2 தடவை கழுவிய பச்சரிசிக் கழுநீருடன் வெல்லமும் சேர்த்து உட்கொள்ளவும். நீர்க்கட்டுகள் தீரும்.

## 135. நீர்க்கட்டுக்கு வெள்ளியச் செந்தூரம்.

பகருகின்ற வெள்ளீய மைம்பது
வராகனெடை பண்பாய்க்கொண்டு
தகடடித்துத் துண்டுதுண்டாய் கத்தரித்து
யெடுத்தபின்பு தரையில்தானே
அகலஞ்சாண் முழநீளங் குழிசெய்து
நிறையவுமி யதனிற்கொட்டி
யிகழாமல் வரளியிட்டு மோபுளியம்
பட்டைதனை யியம்பக்கேளே. (212)

இயம்புமந்தப் பட்டையிடித் திடுதூளை
வரளியின்மே லியல்பதாக
நயம்பெறமு விரற்கடைபோட் டதன்மீதில்
வெள்ளீய நறுந்துண்டெல்லாம்
வயணமுட னென்றேடொன் றொட்டாம
லேபரப்பி வைத்தேயப்பால்
சுயமான பட்டையின்றூ ளைப்போட்டுத்
திட்டமோடு சொன்னவாறே. (213)

சொன்னபடி வறளியுமே லடுக்கிகச
புடம்போட்டுச் சூடுதாழ்ந்தால்
பின்னதனை யெடுத்துப்பால் விட்டரைத்துப்
புடத்திலிட்டால் பிசகாவண்ணம்
வன்னயசெந் தூரமுமா முண்டுவந்தால்
நீர்க்கட்டும் வாசியாகும்

தென்னவனெப் பாய்க்கீர்த்தி சரபேந்திர
பூபதிசொல் திறமைதானே. (214)

(இ·ள்)

வெள்ளீயம் 50 வராகனெடையெடுத்துத் தகடாகத் தட்டி, துண்டுதுண்டாகக் கத்தரித்து யெடுத்துக் கொள்ளவும். பூமியில் ஒரு சாண் அகலம், ஒரு முழ நீளம், ஒரு முழ ஆழமுள்ள குழியை வெட்டவும். அதில் நிறைய உமியைக் கொட்டவும். புளியம் பட்டையையிடித்த தூளை அதன்மேல் ஒரு வாளிவைத்து அதில் 3 விரற்கெடைபோட்டு, வெள்ளீயத் துண்டுகளை எல்லாம் ஒன்றேடொன்று ஒட்டாமல் தனித்தனியாக வைக்கவும். முன்போல் மறுபடியும் புளியம் பட்டைத் தூளைப் பரப்பவும். அதன்மேல் மறுபடியும் வாளியை அடுக்கிப்புடம் போடவும். சூடாறியபின், அந்த துண்டுகளை எடுத்துப் பசுவின்பால் விட்டு அரைத்து வில்லைகளாகத் தட்டிச் சீலைமண் செய்து, புடம்போடவும். செந்தூரமாகும். தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

நீர்க்கட்டுகள் தீரும்.

## 136. சலக்கட்டிற்குச் சந்தனுதி உருண்டை.

சந்தனந்தேத் தாம்விரையோ டிவையிரண்டும்
முதனளே சலத்திற்போட்டு
பிந்தமறு நாளுதயத் தினிலரைத்துக்
கொடுத்திடுவாய் பிறகொன்றேகேள்
அந்தமர மஞ்சளதி மதுரம்வெள்ள
ரியின்விரைபச் சரிசிதன்னில்

பந்தமதாங் கழுநீரி லரைத்தீந்தால்
　　சலக்கட்டுப் பறந்துபோமே. (215)

(இ-ள்)

சந்தனத்தூள் 　　 தேத்தாங்கொட்டை

இவ்விரண்டையும் தண்ணீர்விட்டு முதல்நாள் இரவே ஊறவைக்கவும். மறுநாள் காலையில் அரைத்து உட்கொள்ளவும்.

[2] மரமஞ்சள் 　　 அதிமதுரம்
வெள்ளரிவிதை

இவைகளைச் சமனெடுத்துப் பச்சரிசிக் கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும்.

சலக்கட்டுகள் தீரும்.

## 137. நீர்க்கட்டிற்கு ஓரிதழ்தாமரைக் கல்கம்.

ஓரிதட்டா மரைக்கோரைக் கிழங்குமிவை
　　சமன்கூட்டி யுடனரைத்து
மோரினிலீ வாய்வேறு தேங்காயைத்
　　திருகியப்பால் மொழிதப்பாமல்
சீரிலங்கப் பிழிந்திரண்டு வெள்ளைப்பூண்
　　டிட்டரைத்துச் சேர்த்தேயீந்தால்
நீரிறங்குஞ் சுகமுண்டாம் பத்தியங்கே
　　ளன்மிளகி நீரோடுண்ணே. (216)

(இ-ள்)

ஓரிதழ்த்தாமரைவேர் கோரைக்கிழங்கு

இவ்விரண்டையும் சமன் எடுத்தரைத்து மோரில் குழப்பிக் கொடுக்கவும்.

[2] தேங்காய்பாலைப் பிழிந்துகொண்டு, வெள்ளைப் பூண்டை அரைத்துக் கொடுக்கவும். நீர் இறங்கும். சௌக்யமுண்டாகும்.

மிளகு ரஸம் சாப்பிடவும்.

## 138. நீர்க்கடுப்பிக்கு பேய்ப்புடல் கஷாயம்.

ஒருபிடிபேய்ப் புடல்பாசிப் பயறுமொரு
பிடியுமிவை யொன்ருய்க்கூட்டி
பருகுநல்ல தண்ணீரும் நாழிவிட்டே
யெட்டிலொன்ருய்ப் பதமாய்க்காய்ச்சி
மருவுமெழி லந்திசந்தி மூன்றுநா
ளுங்கொடுத்தால் மலமுகங்கால்
பெருகுவய றுடலகைநெஞ்சி னெரிவுபொல்லா
நீர்க்கடுப்புப் பேசக்கேளே. (217)

பேசக்கேள் மோர்போலே விழும்நீரு
மடிக்கடிக்கிப் பெய்யும்நீரும்
காசல்செய்யும் வயிற்றுப்பொ ருமலெல்லாம்
வாசியதாங் கௌரிபாகர்

நேசமொடு கத்திலங்குஞ் செஞ்சடையிற்
 பிறையணிந்த நீலகண்டர்
பூசைதனி லாசைநிறை சரபேந்திர
 பூபதிதான் புகன்றவாறே. (218)

(இ-ள்)

பேய்ப்புடல் — ஓர் பிடி
பாசிப்பயறு ,,

இவ்விரண்டையும் இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு நல்ல தண்ணீர் ஒரு படிவிட்டு எட்டிலொன்றாக வற்ற வைத்துக் காலையிலும் மாலையிலும் 3 நாட்கள் உட்கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :**

வயறுகழிச்சல், நெஞ்செரிச்சல், நீர்க்கடுப்பு, மோர் போல் சிறுநீர் விழுதல், அடிக்கடி நீர்விழுதல், வயிற்றுப் பொருமல் முதலான வியாதிகள் நீங்கும்.

## 139. நீர்க்கடுப்பிற்கு முட்டையோட்டுச் சூரணம்.

செக்கதிரோ னுதையமது கண்டுகூப்பி
 டுங்கோழிச் சீரூர்முட்டை
யிங்கிதமே லோடுகொண்டு வந்துநற்சூ
 ரணப்படுத்தி யெலுமிச்சங்காய்
தங்களவு புட்டிவெல்லங் கூட்டியுண்டால்
 லப்பொழுதிற் றூனேகேளாய்
அங்கந்த நீர்க்கடுப்புஞ் சட்டமதாய்
 நீங்கியப்பா லகன்றுபோமே. (219)

(இ-ள்)

கோழியின் முட்டையோட்டைக் கொண்டுவந்து சூரணஞ்செய்து, எலுமிச்சங்காயளவு பனைவெல்லத்துடன் உட்கொள்ளவும்

நீர்க்கடுப்புகள் தீரும்.

## 140. நீரடைப்பிற்கு நெல்லிப்பருப்புச் சூரணம்.

நெல்லியின்ப ருப்புமிள கும்பொடியாய்ச்
செய்துநன்றாய் நேர்ந்துகூட்டிங்
சொல்லியவா றுண்டிடின்னங் கொட்டைப்பாக்
கவ்வளவு சுண்ணாம்புந்தான்
வல்லியகா சுக்கட்டி யுங்கூட்டிச்
சொன்னபடி வளமாயுண்டால்
புல்லியமுன் பொல்லாத வேதனைசெய்
நீரடைப்புப் போகுந்தானே. (220)

(இ-ள்.)

நெல்லிப்பருப்பு மிளகு

இவ்விரண்டையும் சரியளவெடுத்து இடித்துச் சூரணஞ் செய்துகொள்ளவும்.

[2] கொட்டைப்பாக்களவு சுண்ணாம்பு
,, காசுக்கட்டி

இவ்விரண்டையும் சேர்த்து உட்கொள்ளவும். நீரடைப்புகள் தீரும்.

## 141. நீர்கட்டிற்குக் கடுக்காய் பால்.

ஓது நடுக் காய்நாலு கொண்டுவந்து
பசுவின்பா லுடனரைத்து
மீதுரைத்த பாலினிலே தான்கலந்து
சர்க்கரையின்மீ தன் தான்கேளு
கோதுவரா தரைப்பலம்போட் டுண்டாநீர்க்
கட்டுநன்றாய்க் குணமேயாகும்
மாதுபங்கர் கிருபைபெற்று சரபேந்திர
பூபதிசொல் மார்க்கந்தானே. (221)

(இ-ள்)

கடுக்காய் 4 (எண்ணிக்கையில்) கொண்டுவந்து பசுவின் பாலுடன் நன்றாக வரைத்து அப்பாலிலேயே கரைத்து, சர்க்கரை ½ பலம் சேர்த்து உட்கொள்ளவும்.

நீர்க்கட்டுகள் நீங்கும்.

## 142. நீரடைப்பிற்கு முசுமுசுக்கைக் கஷாயம்.

சொன்னமுசு முசுக்கைகஷா யங்கள்செய்து
திப்பிலியும் சூட்சமமாய்த்தான்

அன்னதொரு பணவெடையு மேலமரைப்
பணவெடையு மரைத்துக்கொண்டே
யின்னமும்வெங் காரமொரு சிறுபய
றளவுபொரித் திட்டேயீந்தால்
அன்னயமா யன்னவரா வினைபோல
நீரடைப்பு வாசியாமே. (222)

(இ-ள்.)

மூசுமூசுக்கையைச் சமூலமாக எடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டி லொன்ருக வற்றவைத்து வடிக்கட்டித் திப்பிலிச்சூரணம் $3\frac{1}{3}$ குன்றியும், ஏலக்காய் $3\frac{1}{3}$ குன்றியும், வெங்காரம் சிறுபயறளவும் பொரித்துப்போட்டு உட்கொள்ளவும்.

நீரடைப்புகள் தீரும்.

## 143. நீரடைப்பிற்கு வெள்ளரிக் கஷாயம்.

சீதளவெள் ளரிவிரையும் மேலமுற்ற
சீரகமுஞ் சிறந்தவெள்ளை
யோதந்தக் கோழியுடக் கல்லும்நெல்லு
மிதுவெல்லாம் ஒன்ருய்க்கூட்டி
மீதரைத்துப் பசுவின்பா லிற்கரைத்து
மூன்றேநாள் மிதமாயீந்தால்
வாதனையாய் நீரடைக்கும் கல்தெரித்து
விழுந்துநன்ருய் வாசியாமே. (223)

(இ-ள்.)

வெள்ளெரிவிதை ஏலக்காய்
சீரகம் வெள்ளைக்கோழியின்
குடலிலுள்ள கல்நெல்

இவைகளைச் சமனெடுத்து பசுவின் பால்விட்டு, நன்றாகவரைத்து, 3 நாள் காலையில் பாலுடன் உட்கொள்ளவும்.

நீரடைப்பு, கல் முதலானவை தெறிக்கும்.

## 144. நீரடைப்பிற்கு முடக்கித்தான் எண்ணெய்

ஆமணக்கி னெண்ணெயுரி முடக்கொத்தான்
சாற்றினுரி அறிஞோர்சொன்ன
நேமமொரு பிடியீர வெங்காய
முரித்தெடுத்து நேர்ந்துகூட்டி
வாமமொடு கருகாம லீரவெங்கா
யஞ்சிவந்தால் வடித்தேயந்தச்
சேமமுயர் எண்ணெய்தனி லரைக்கழஞ்சு
பொரிக்காரம் செப்பும்வாறே. (224)

செப்பும்வண்ணம் பிசகாமல் பொரிக்கார
மதைச்சுட்டுச் சீராய்ப்போட்டுக்
கைப்புலமாய் நித்தமொரு கரண்டியெண்ணெய்
கொடுத்துவந்தால் கனதையாக

வெப்புலநீ ரடைப்புந்துர் மாமிசங்க
ளும்போம்வேந் தர்பலபேர்
ஒப்புரையாச் சோழனிகர் சரபேந்திர
பூபதிசொல் லுண்டைதானே. (225)

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய் — ½ படி
முடக்கொத்தான்சாறு — ,,

இவ்விரண்டையும் ஒன்றுகலந்து, உரித்த ஈர வெங்காயம் ஒரு பிடி போட்டு, அடுப்பின்மேலேற்றி வெங்காயம் சிவக்கும்படி எரித்து, எண்ணெயை வடிக் கட்டி அதனுடன் பொரிக்காரம் 20 குன்றியெடை பொரித்துப்போடவும். இந்த எண்ணெயில் தினம் ஒரு கரண்டியளவு (ஸ்பூனளவு) எடுத்து உட்கொண்டு வர நீரடைப்பு, துர் மாமிசங்கள் முதலானவை போம்.

## 145. துர்மாமிஸம், வயிற்றுப் புண்கள், நீரடைப்பிற்கு நீர்வள்ளிக் கஷாயம்.

உண்மையதாய் நீர்வள்ளிக் கிழங்கிலுற்ற
நாரையெல்லா முறித்துத்தள்ளி
வண்மையுட னிடித்திடுஞ்சா றம்பாலுந்
தண்ணீரும் வகைக்கோர்நாழி
தண்மையோடு கூட்டிக்காய்ச் சிப்பாதி
சுண்டினபின் தான்வடித்தே
வெண்மையுடர் பொரிக்கார மொருகழஞ்சு
திட்டநிறை விளம்பக்கேளே. (226)

விளம்பக்கே ளதைச்சுட்டு முன்பிடுக
ஷாயமதில் வேண்டும்வாறே
தளம்பாமற் கூட்டியுண்டால் வயிற்றிலே
யிருந்தபுண்ணுந் தானல்லாமல்
உளம்பொறுந்தா னீரடைப்புந் துன்மாமி
சங்களிவை யுடனன்றாகும்
வளம்பெறுநற் றஞ்சையில்வாழ் சரபேந்திர
பூபதிசொல் வண்ணமாமே. (227)

(இ-ள்).

தண்ணீர்விட்டான் கிழங்கிலுள்ள மேல்தோலையும், நாரையும் நீக்கி இடித்துப்பிழிந்த சாறு ஒரு நாழி.

| | | |
|---|---|---|
| பசுவின் பால் | — | ஒரு நாழி |
| தண்ணீர் | — | ,, |

இவைகளை அடுப்பிலேற்றிப் பாதியாகச் சுண்டின பின் 40 குன்றிநிறை பொரிக்காரம் எடுத்துப் பொரித்து மருந்தில் கலந்து உட்கொள்ளவும்.

வயிற்றிலுள்ள புண்கள், நீரடைப்புகள், துர்மாமிஸங்கள் முதலான நோய்கள் தீரும்.

## 146. வெண்கடுப்பிற்குக் கருப்பஞ்சாறெண்ணெய்.

செப்புகருப் பஞ்சாறு வெள்ளரிக்காய்
பூசினிக்காய் சீந்திற்றண்டோ
டொப்புலவு முச்சாறு குன்றிமுசு
முசுக்கையிலை யுற்றசாறு

மப்புறுநல் லிளநீரில் வகையினுக்கோர்
நாறுழி யாகக்கூட்டி
வெப்புயருந் தண்ணீர்விட்டான் கிழங்கின்சா
றொருநாழி வீதங்கேளே (228)

வீதமொடு சேர்த்தரைத்துச் சாதிக்காய்
தக்கோலம் வெள்ளிந்துப்புச்
சீதளசந் தனம்பேரா முட்டிக்கோட்டம்
பச்சையிலை சீர்மஞ்சிட்டி
சாதமாஞ் செங்கழுநீர்க் கிழங்குதா
மரைவளையஞ் சங்கங்குப்பி
பேதமில்லா முந்திரிகைப் பழம்கண்ட
சர்க்கரையும் பின்சொல்வேனே. (229)

பின்னந்த வோர்வகைக் கிரண்டுகழஞ்
சதிமதுரம் பிசகில்லாமல்
அங்கதனை யெட்டிலோர் பங்காக
வேகாய்ச்சி யப்பாலந்தப்
பங்கமில்லா நல்லெண்ணெயோர் படிகூட்டி
யுண்டுவந்தால் பகரும்பொல்லா
வெங்கடுப்பாய் சங்கடஞ் செய்தேவிழுந்
துன்பமெலாம் விலகிப்போமே. (230)

(இ-ள்.)

| | |
|---|---|
| கருப்பஞ்சாறு | வெள்ளரிக்காய்ச்சாறு |
| பூசினிக்காய்ச்சாறு | சீந்தில்கொடிச்சாறு |
| குன்றியிலைச்சாறு | முசுமுசுக்கையிலைச்சாறு. |
| இளநீர் | |

இவைகள் வகைக்கு 4 படியும், தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 1 படியும் சேர்த்து,

| | |
|---|---|
| சாதிக்காய் | தக்கோலம் |
| இந்துப்பு | சந்தனத்தூள் |
| பேராமுட்டி | கோஷ்டம் |
| பச்சிலை | மஞ்சிஷ்டா |
| செங்கழுநீர்க்கிழங்கு | தாமரையிலைச்சுருள் |
| சங்கங்குப்பி | திராக்ஷைப்பழம் |
| கல்கண்டு | அதிமதுரம் |

இச்சரக்குகளை வகைக்கு 2 கழஞ்சு (80 குன்றி) யளவு எடுத்து இடித்துச் சாறுடன் கலந்து, நல்லெண்ணெய் ஒரு படியும்விட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும்.

கடுகுடனே (கசண்டு) இம்மருந்தை உட்கொண்டுவர வெங்கடுப்புகள் தீரும்.

## 147. கல்லடைப்பிற்கு இளநீர் மருந்து.

சொன்னபுதுச் சட்டிதனைக் காயவைத்துச்
செவ்விளநீர் சுகமாய்விட்டே
நன்னயஞ்சே ராலாத்திக் கர்ப்பூரங்
குன்றிநிறை நறும்வெங்காரம்
அன்னநிறை யேபொரித்திட் டேகரைத்துப்
பிசகாம லவ்வாறீந்தால்
முன்னமுற்ற பொல்லாத கல்லடைப்புஞ்
சொல்லாமல் முறிந்துபோமே. (231)

(இ-ள்)

ஒரு புதுச்சட்டியை அடுப்பின்மேல் வைத்துச் சூடாக்கி, அதில் செவ்விளநீரைவிட்டு, ஆரத்திக் கர்ப்பூரம் ஒரு குன்றி நிறையும், வெங்காரம் ஒரு குன்றி நிறையும் பொரித்துப்போடவும்.

இதனை உட்கொண்டுவரக் கல்லடைப்புகள் தீரும்.

## 148. கல்லடைப்பிற்கு பூனைக்காலிவேர் மருந்து.

சட்டமுள்ள பூனையின்வேர் பெருவேராய்
யரைத்தெலுமிச் சங்காய்க்கொப்பாய்
திட்டமோடு வெள்ளாட்டுப் பாலிற்க
ரைத்துதவு திரும்பக்கேளு
மட்டமொரு கழஞ்சுபொரிக் காரமதை
பொரித்திளநீர் மருவநன்றாய்
விட்டதனைக் கலந்துகொடு வேதனைசெய்
கல்லடைப்பு விட்டுப்போமே. (232)

(இ-ள்)

பூனைக்காலிவேர் முற்றியதாகக் கொண்டுவந்து அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவும். வெள்ளாட்டுப் பாலுடன் இதனைக் குழப்பி உட்கொள்ளவும் பொரிக்காரம் 40 குன்றிநிறை பொரித்து இளநீருடன் கூட்டி உட்கொள்ளவும்.

கல்லடைப்பு தீரும்.

## 149. நீரடைப்பிற்கு வெள்ளறுகாதிக் கஷாயம்.

பேதமில்லா வெள்ளறுகி லொருமுதற்கோ
    ரைக்கிழங்கோர் பிடியுமல்லால்
நீதமுள்ள நாணலொரு பிடிகூட்டி
    யேயிடித்து நீரில்நாழி
மீதந்த மருந்தினில்விட் டுரியாக
    வுங்காய்ச்சி மேலாங்கன்னல்
ஏதமற்ற சர்க்கரையோர் பிடிபோட்டுண்
    ணீரடைப்பு மிறங்கிப்போமே. (233)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| வெள்ளறுகு | — | ஒரு பிடி |
| கோரைக்கிழங்கு | — | ,, |
| நாணல் | — | ,, |

இவைகளை இடித்து ஒரு படி சலத்திில்போட்டு ½ படியாக வற்றவைத்துக்கொண்டு, ஒரு பிடி சர்க்கரையுஞ் சேர்த்து உட்கொண்டால் நீரடைப்புகள் தீரும்.

## 150. நீரடைப்பிற்குப் பொரிக்கார மருந்துகள்.

பொரிக்கார மொருகழஞ்சு பொரித்திளநீ
    ரிற்கொடுப்பாய் பொருந்தும்நல்வெள்
ளரிக்காய்குட் பொரிக்கார மதனைவைத்தே
    யுமிக்காந்த லதிலேநாட்டித்

தெரிக்காம லேயெடுத்துப் பிழிந்துகொடு
நீரடைப்புத் தீரும்நன்ருய்
பரிக்காமன் குலனெங்கள் சரபேந்திர
பூபதிசொல் பண்புதானே. (234)

(இ-ள்.)

பொரிக்காரம் 40 குன்றிநிறையெடுத்துப் பொரித்து இளநீருடன் கொடுக்கவும்.

[2] ஒரு வெள்ளரிக்காயைக் குடைந்து, அதனுள் பொரிக்காரம் 40 குன்றியளவு வைத்து உமிக்காந்தலில் சுட்டு எடுத்து நசுக்கிப் பிழிந்து அந்த சாற்றைப் பிழிந்து கொடுக்கவும்.

நீரடைப்புகள் தீரும்.

பித்த ரோக சிகித்ஸை முற்றும்.



# மருந்துகளின் அகராதி அட்டவணை

பிறைக்குறிகளுள் காணப்படும் பெயர்கள்

தனியே கொடுக்கப்பட்டவை.

★

## சூலை ரோகத்திற்கான மருந்துகள்

பக்கம்


1. அடப்பம் வேது (சூலைகளுக்கு) .... 60
2. அரிதாரச் செந்தூரம் (சூலைக்கு) .... 10
3. அரிதாரப் புகை
(கபாலச்சூலை, பிடரிகணத்திற்கு) 49
4. அவிபத்திச் சூரணம் (சூலைக்கு) .... 13
5. இங்குவாதி உருண்டை ,, .... 11
6. இங்குவாதிச் சூரணம் (ஸர்வ சூலைக்கும்) 9
7. இடி மருந்து (சூலைக்கு) ... 36
8. இரஸ பற்பம் (சூலைக்கு) ... 22
9. இரஸவங்கப் புகை (சூலைக்கட்டிற்கு) .... 29
10. இரஸாதிப் புகை (வாத சூலைக்கு) ... 59
11. ஈருள்ளி நஸ்யம் ... 51
12. உளுத்தமாவு மருந்து (சூலைக்கட்டிற்கு) 73

(சூலை ரோகத்திற்கான மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

13. உள்ளிக் கடுகு (சூலைக்கு) ... 66
14. உள்ளியாமணக்கெண்ணெய்
(குன்மச் சூலைக்கு) 43
15. (ஓமக்) கல்கம் (பக்கச் சூலைக்கு) .... 65
16 கபோத எச்ச மருந்து
(சிரச்சூலை, தலைகனப்புவலி, பிடரிவலி, சளி, நீர்விழுதல் முதலானவைகளுக்கு) .... 50
17. கலங்கொம்பாதிக் கஷாயம் (சூலைக்கு) ... 4
18. காய மருந்து (கபச் சூலைக்கு) .... 69
19. குக்கில் நெய் (சூலைக்கு) .... 78
20. கெந்தகச் சூரணம் ,, .... 63
21. கெந்தகாதித் தைலம் (சூலை, கடுப்பிற்கு) 41
22. கெந்தகாதி யுப்பு (பக்கச் சூலைக்கு) .... 68
23. கெந்தித் தைலம் (சூலை, கடுப்பிற்கு) ... 32
24. கொம்மட்டி லேகியம் (சூலைக்கு) .... 18
25. கொன்றை மருந்து (கபச்சூலைக்கு) .... 70
26. கோவைக் கஷாயம்
(வாத, சூலை, ஆறாப்புண், கட்டி, பிளவைகளுக்கு) ... 62
27. சவுட்டுமண் எண்ணெய் (ருதுச் சூலைக்கு) 81
28 சாதிலிங்கக் குளிகை (சூலைக்கு) ... 21
29. சாதிலிங்க பற்பம் (சூலைக்கட்டிற்கு) .... 25
30. சிஞ்சாக்ஷார வடகம் (சூலைக்கு) .... 25
31. நாபிப் புகை (வெண்குஷ்டம், புண்ணுக்கு) 55
32. நிம்பபஞ்சகச் சூரணம் (முடக்குச் சூலைக்கு) 75

(சூலை ரோகத்திற்கான மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

33. நெரிஞ்சில் நெய் (சூலைக்கு) .... 38

34. பச்சிலைவேர் மருந்து ,, .... 20

35. பஞ்சாக்கினிச் சூரணம் ,, .... 38

36. பலாகுடுசித் தைலம் (கர்ண சூலை, முகவாதத்திற்கு) 53

37. பறங்கிப்பட்டைச் சூரணம் (சூலை கடுப்பு, இடுப்பு வலிக்கு) 82

38. பற்படி (சூலை வாயுவிற்கு) .... 74

39. பாதரஸ நெய் (ருதுச் சூலைக்கு) ... 80

40. பாவட்டை யெண்ணெய் (மூலம், குன்மத்திற்கு) 47

41. பாஷாணதிப் புகை (சூலைக்கட்டிற்கு) .... 2

42. புங்கெண்ணெய்த் தைலம் (சூலைக்கு) ... 16

43. (பொடுதலையாதிச்) சூரணம் (சூலைக்கடுப்பிற்கு) 41

44. (மிளகு) மருந்து (யோனிச்சூலை, மகோதரத்திற்கு) 71

45. முடக்கொத்தான் நெய் (நிதம்ப சூலைக்கு) 71

46. (முடிகொண்டான்) எண்ணெய் (ஸர்வ சூலைக்கும்) 23

47. ரஸப்பொடி (சூலைக்கு) .... 30

48. ரஸ மாவு ,, .... 33

49. லசுனபிஷ்டி லேகியம் (சூலை முதலியவைகளுக்கு) 5

50. லசுனாதிக் கஷாயம் (சூலை, கடுப்பிற்கு) .... 12

(சூலை ரோகத்திற்கான மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

51. லசுன ஏரண்டத் தைலம் (சூலைக்கு) .... 14
52. வீழித் தைலம் ,, ... 18
53 வெண்பொடி
(நயனத்தில் 18 வித காசம், நசல் பலவகைகளுக்கும்) 83
54. வேப்பம் நெய் (சூலை, அரிப்புக்கு) .... 76
55. ஹரீதகிச் சூரணம்
(சூலை, குன்மம், யோனிச்சூலைக்கு) 72
56 ஹிங்க்வாதிச் சூரணம் (குன்மம், சூலைக்கு) 48

## மூல ரோக சிகித்ஸை முறைகள்

1. அதிமதுரக் குடிநீர் (இரத்த மூலத்திற்கு) 138
2. அம்மான் பச்சரிசி எண்ணெய் (மூலத்திற்கு) 86
3 அரீதகிக் கஷாயம் (மூல வியாதிக்கு) .... 108
4. அரீதகிக் கஷாயம் முதலியன .... 109
5 (அரீதக்யாதி) கஷாயம் (மூல வியாதிக்கு) 136
6. அஜமாம்ஸ ரஸாயனம் (மூலக்கடுப்பிற்கு) 131
7. ஆட்டெருப் புகை (மூலத்திற்கு) ... 90
8. இடிவல்லாதிச் சூரணம்
(அஸாத்ய மூலத்திற்கு) 91

(மூல ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

9. இலந்தையிலை பேதிமருந்து (மூலத்திற்கு) 101
10. இலவங்கப்பட்டைக் குடிநீர் (இரத்த மூலத்திற்கு) 133
11. எட்டியிலை வேது (மூல நோய்க்கு) .... 121
12. எருக்கம்பழுப்புப் பிட்டு (மூலம், வலி, கடுப்பிற்கு) 101
13. ஏலாதிச் சூரணம் (மூலவாயு, உஷ்ணவாயு, வெட்டைக்கு) 146
14. கருங்கோழி மருந்து (மூலத்திற்கு) ... 98
15. கருங்கோழிக் கடுகு ,, ... 124
16. கருஞ்செம்பை வேது (புதுமூலத்திற்கு) 133
17. கருணைக்கிழங்குச் சூரணம் (மூலத்திற்கு) 120
18. கருணைக்கிழங்கு வடகம் (மூல ரோகத்திற்கு) 128
19. கருணைச் சூரணம் (மூல நோய்க்கு) ... 104
20, கல்யாண லவணம் (மூலத்திற்கு) .... 97
21. கவிழ்தும்பை அடை ,, .... 150
22. களி மூலநோய்க்கு .... 99
23. காங்காயனக் குளிகை .... 113
24. காட்டுக் கறணைக் கிழங்குப் பிட்டு (மூலத்திற்கு) 105
25. காட்டுக் கறணை வடகம் ,, .... 111
26. காட்டுக் கறணை வடகம் (உள்மூலம், பிறமூலத்திற்கு) 139
27. (குருந்தை)யிலை மருந்துகள் (உள்மூலத்திற்கு) 150

(மூல ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

28. (குலுத்தாதி) நெய் (உள்மூலத்திற்கு) ... 110
29. கொடிவேலிச் சூரணம்
(உள்மூலம், புறமூலம் இவைகளுக்கு) 94
30. கொட்டைச்சாறு மருந்து (உள்மூலத்திற்கு) 96
31. சாதிக்காய் மருந்து (இரத்த மூலத்திற்கு) 135
32. சாத்தியா சாத்தியம் (மூலத்திற்கு) ... 122
33. சாரடை மோர் ,, .... 87
34. சிலாஜித் பற்பம் (மூல ரோகத்திற்கு) .... 89
35. சிறுவழுதுணைக் களி (மூலத்திற்கு) .... 145
36. சீந்தில் கல்கம் (சீழ் மூலத்திற்கு) .... 152
37. சுக்காதிப் பூச்சு மருந்து (மூலத்திற்கு) ... 123
38. சுண்ட்யாதிச் சூரணம் (மூல வியாதிக்கு) 119
39. செந்நாயுருவி நெய் (மூலத்திற்கு) .... 142
40. திரிகடுகாதிப் பழுதயம் (தீபனத்திற்கு) 88
41. (திரிகடுச் சூரணம்) முதலியன
(மூலக் கடுப்பிற்கு) 151
42. திரிகடு நெய் (மூலத்திற்கு) .... 92
43. (நாகப்பட்டை) மருந்துகள் முதலியன
(புறப்பட்ட மூலம் செத்துவிழ) 130
44. நாகமல்லிகை வேர் மருந்து
(வெளி மூலத்திற்கு) 127
45. நாயுருவிச் சூரணம் (மூல வியாதிக்கு) ... 126
46. நாயுருவி நெய்
(இரத்த மூலம், சீழ் மூலத்திற்கு) 136
47. நொச்சிக் கடுகு (மூல வியாதிக்கு) ... 145

(மூல ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்


48. பல்லாதகீ லேகியம் (மூல ரோகத்திற்கு) 107

49. பற்பம் (மூல நோய்க்கு) .... 102

50. பிராய் எண்ணெய் (மூலத்திற்கு) ... 128

51. புளிநரளைக் கிழங்குச் சூரணமும், பூச்சு மருந்தும் (மூலத்திற்கு) 100

52. மருளங் கிழங்கு அடை ,, .... 149

53. மாணிபத்ர வடகம் .... 112

54. மாதளைப்பிஞ்சு மருந்துகள் (மூல எரிச்சலுக்கு) 132

55. (மிளகறணை) எண்ணெய் முதலியன (மூலத்திற்கு) 95

56. முருங்கைப் பட்டையாதிக் கஷாயம் (மூலத்திற்கு) 104

57. மூலத்தின் குணமும், மருந்தும் .... 141

58. மோர் தீபனம் (மூலத்திற்கு) .... 8

59 யோகராஜகுக்குளுச் சூரணம் .... 115

60. ராஜலேகியம் .... 106

61. வன்னியிலைப் புகை (மூலரோகத்திற்கு) 111

62. வெங்காய வதக்கல் (மூல வாயுவிற்கு) .... 85

63. வெள்ளைச்சாறனை உருண்டை (மூலத்திற்கு) 115

64. வேப்பம் பட்டைக் கடுகு (மூலக் கிராணிக்கு) 148

பக்கம்

## குஷ்ட ரோக சிகிச்சை முறைகள்


1. (ஊமத்தை) எண்ணெய்
(பெருநோய்க்குப் பூச) 153
2. (கடலைக்) கல்கம் (குஷ்டத்திற்கு) .... 171
3, குக்குலு கிருதம்
(குஷ்டம், பவுத்திரமுட்பட பல வியாதிகட்கு) 165
4. குழித்தைலம் (குஷ்டத்திற்கு) ... 160
5. கெந்தகப் பற்பம் .... 168
6. கெந்தக மருந்து (குஷ்டத்திற்கு) ... 156
7. கெந்தக ரஸாயனம் ,, .... 163
8. தகரை லேபம் ,, .... 159
9. தேத்தான் மருந்து
(கருங்குஷ்டம், வெண்குஷ்டம்,
முதலானவைகளுக்கு) 171
10. நாகபற்பம் (குஷ்டம் முதலானதற்கு) .... 156
11. புங்கம் நெய் (குஷ்டங்களுக்கு) .... 168
12. வல்லாதகீ ரஸாயனம் .... 158
13. (வேப்பம்பட்டைக்) கல்கம்
(விப்புருதி, பெருவியாதி, புண், கிரந்திக்கு) 154

# பித்த ரோக சிகித்ஸைக்கான மருந்துகள்


1. அச்வகந்தாதி லேகியம் (பித்தத்திற்கு) 180
2. அம்மான் பச்சரிசிக் கல்கம் (நீரடைப்பிற்கு) 307
3, அயஜம்பீர வடகம் (பாண்டு, பித்தத்திற்கு) 240
4 அவுரி நெய் (மூத்திரக் கிரிச்சத்திற்கு) .. 314
5. ஆடாதோடை நெய் (சுவாசகாசம், ரத்த பித்தத்திற்கு) 231
6. ஆடாதோடை நெய் (இரத்த பித்தம் தீர) 275
7. ஆட்டுப்பால் மருந்துகள் (நீரடைப்பிற்கும், கல்லடைப்பிற்கும்) 296
8. ஆட்டுப்பால் மருந்துகள் (மூத்திரக் கல்லுக்கு) 297
9. ஆட்டுப்புழுக்கை மருந்து (பித்தம் தீர)... 207
10. ஆதண்டைத் தைலம் (பித்தத்திற்கு) .... 206
11. ஆமலகத் தைலம் (பித்தம் தீர) .... 197
12. ஆவாரைப் பஞ்சாங்கச் சூரணம் .... 322
13. இரஸக் குளிகை (பித்தத்திற்கு) .... 190
14. இளநீர்த் தைலம் (காசம், பித்தம், தலைவலிக்கு) 218
15. இளநீர் மருந்து (கல்லடைப்பிற்கு) .... 340
16. இளநீர் மருந்து (நீரடைப்பிற்கும், கல்லடைப்பிற்கும்) 298
17. உதும்பராதிக் கஷாயம் (சிகதாமேகத்திற்கு) 274

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்


18. எலும்புருக்கிக்கு நெய்
(இரத்த பித்தத்திற்கும்) 247

19. ஏலாதிக் கல்கம் (வாந்தி, விக்கலுக்கு) .... 244

20. ஏலாதிக் கிருதம் (பித்தத்திற்கு) .... 209

21, ஏலாதிச் சூரணம் (வாந்திக்கு) .... 222

22. ஏலாதிச் சூரணம் ,, .... 227

23. ஏலாதிச் சூரணம்
(இரத்தபித்தம், பெரும்பாடுக்கு) 251

24. ஏலாதிச் சூரணம் (அரோசகத்திற்கு) ... 254

25. ஏலாதிச் சூரணம் ,, ... 265

26. ஏலாதிச் சூரணம் (மயக்கம், விக்கலுக்கு) 303

27. ஏலாதிச் சூரணம் (நீர்கட்டுக்கு) ... 327

28. ஏலாதிச் சூரணம் (வாந்தி, விக்கலுக்கு) 234

29. ஏலாதி லேகியம் (பித்தத்திற்கு) ... 175

30. ஏலாதி லேகியம்
(மயக்கம், பித்தத்திற்கும், தேகபுஷ்டிக்கும்) 193

31. ஓரிலைத் தாமரைக் கல்கம் (நீர்க்கட்டுக்கு) 330

32. கடுக்காய்ப் பால் ,, .... 334

33. கரணைச் சூரணம்
(பித்தம், வாயு இவைகளுக்கு) 215

34. கருப்பஞ்சாறெண்ணெய்
(வெண்கடுப்பிற்கு) 338

35. கருப்புட்டி மருந்து
(நீர்பாய்ச்சல், மூத்திரப்பாழ் இவைகளுக்கு) 286

36. கற்கடசிங்கிச் சூரணம் (விக்கலுக்கு) .... 236

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

37. (கற்பூரவல்லிச்) சாறு மருந்துகள் (நீரடைப்பிற்கு) 305

38. கற்றாழைச் சோறு மருந்து (நீர் கடுப்பிற்கு) 315

39. கஸ்தூர்யாதி மாத்திரை (பித்தத்திற்கு) 183

40. காவிக்கல் கற்கம் (இரத்த பித்தத்திற்கு) 250

41. கீழாநெல்லிக் கஷாயம் (நீர்க் கடுப்பிற்கு) 318

42. குங்கிலியப் புகை ஆக்ராணம் (வாந்திக்கு) 233

43. கூஷ்மாண்டக் கிருதம் (பித்தம், காசத்திற்கு) 257

44 கூஷ்மாண்ட ரஸாயனம் (திரிசுரம், உள்வெட்டை, தாது நஷ்டம், மூத்திரச்சுருக்கு இவைகளுக்கு) 284

45. கொன்றைக் கஷாயம் (பித்தாதிக்கத்தாலேற்பட்ட மூத்திரக் கிரிசத்திற்கு) 310

46. கொன்றை வேராதிக் கஷாயம் (மூத்திர கிரிச்சத்திற்கு) 286

47. கோவைப்பொடி (அரோசகத்திற்கு) .... 261

48. கோவைக் கல்கம் (பித்தம், எரிச்சலுக்கு) 210

49. சங்கம் வேர் கல்கம் (இரத்த பித்தத்திற்கு) 282

50. சதாவரிக் கிருதம் (பித்தத்திற்கு) .... 178

51. சதாவரிக் கிருதம் (மயக்கம், பித்தம், காசத்திற்கு) 185

52. சதாவரிக் கிருதம் (பித்தம், வாந்திக்கு) 191

53. சதாவரிக் கிருதம் (கைகாலெரிச்சல், மேகநோய், மூத்திர கிரிச்சம், சுக்லபிரமேகங்களுக்கு) 287

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

54. சந்தனாதி உருண்டை (சலக்கட்டிற்கு) .... 329
55. சந்தனாதிக் கிருதம் (மூத்திரகிரிச்சத்திற்கு 290
56. சந்தனாதிக் கிருதம் (சீத பித்தத்திற்கு) 271
57. சந்தனாதிக் கிருதம் (காமாலைக்கு) .... 223
58. சந்தனாதிச் சூரணம் (அரோசகத்திற்கு) 230
59. சந்தனாதிச் சூரணம் (இரத்த பித்தத்திற்கு) 246
60. சந்தனாதித் தைலம் (பித்தத்திற்கு மூழ்க) 177
61. சந்தனாதித் தைலம் (பித்தத்திற்கு) .... 204
62. சந்தனாதி லேகியம்
(பித்தம், சீத ஜ்வரம், உன்மாதத்திற்கு) 249
63. சாதீபலாதிச் சூரணம்
(இரத்த பித்தத்திற்கு) 266
64. சாரணையாதிக் கஷாயம் (நீரடைப்பிற்கு) 309
65. சிரிங்கிபேராதிச் சூரணம்
(பித்தம், காமாலை, வாந்தி, மார் வலிக்கு) 225
66. சிலாசத்துப் பற்பம் (மூத்திர கிரிச்சத்திற்கு) 300
67. (சிறுபூளையிலைப்) பிட்டு
(மூத்திரக் கிரிச்சத்திற்கு) 300
68 சிறுகீரைவேர்க்கல்கம் முதலான மருந்துகள்
(இரத்த பித்தம் குணமாக) 253
69. சீதக் கஷாயம் (இரத்த பித்தத்திற்கு) .... 280
70. சீரகக் கறுக்கு (பித்தத்திற்கு) .... 206
71. சீரகாதிக் கஷாயம்
(வாய்க்கசப்பு, தலைக்கிறுகிறுப்பு) 283
72. சீரகாதிக் கஷாயம் (அரோசகத்திற்கு) 274

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

73. சீரகாதிச் சூரணம் (அரோசகம், வாந்திக்கு) 255
74. சுண்டிச் சூரணம் (பித்தத்திற்கு) ... 211
75. செந்தூரம் (சேத்தும வாத, பித்தத்திற்கு) 272
76. டங்கணுதிச் சூரணம் (விக்கலுக்கு) .... 245
77. தாடிமாதிக் கஷாயம் (இரத்த பித்தத்திற்கு) 252
78. தாமரைக் கிழங்காதிக் கஷாயமும், மருந்தும் 256
79. தாமிர பற்பம்
(கல்லடைப்பு, மூத்திர கிரிச்சத்திற்கு) 291
80. நாளியிலை வெண்ணெய் முதலியன
(கல்லடைப்பிற்கு) 321
81 திப்பிலிக் கல்கம் (அரோசகங்கள் தீர) 281
82. திராக்ஷாதிக் கஷாயம்
(காமாலை, மூர்ச்சை, சுரத்திற்கு) 267
83. திராக்ஷாதிச் சூரணம்
(க்ஷயம், தாகம், காமாலைக்கு) 198
84. திராக்ஷாதிச் சூரணம் (பித்தம், பிரமேகம்,
சயம் முதலானவைகளுக்கு) .... 212
85. திராக்ஷாதி மருந்துகள் (நீரடைப்பிற்கு) 324
86. திரிபலாதி லேகியம் (கப, வாத, பித்தத்திற்கு) 269
87. திரிகடுகாதிச் சூரணம்
பித்தம், உளமாந்தைக்கு) 199
88. துத்திவேர் மருந்துகள் (நீர்க்கட்டிற்கு) .... 325
89. தேவதாரு லேகியம்
(சுவாசகாசம், சயம் முதலானவைகளுக்கு) 189
90. தேற்றுங்கொட்டை மருந்துகள்
(இரத்த பித்தத்திற்கு) 252
91. தேற்றுன் கல்கம் (பித்தத்திற்கு) .... 281
82. தேற்றுன் கல்கம் (நீரடைப்பிற்கு) ... 307

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்

93. நல்லெண்ணெய் மருந்தும், பொன்னாங்காணி மருந்தும் ... 316
94. நாககேஸராதிச் சூரணம் (கைகாலெரிவு, பிரமேகத்திற்கு) 264
95. நீர்முள்ளி விழுதும், கொத்தமல்லிக் கஷாயமும் (நீர்கட்டுக்கு) 313
96 நீர்வள்ளிக் கஷாயம் (துர்மாமிஸம், வயிற்றுப் புண்கள், நீரடைப்பிற்கு) 337
97. நெல்லிப்பருப்புச் சூரணம் (நீரடைப்பிற்கு) 333
98. பருத்திவிதைச் சூரணமும், கஷாயமும் (வாந்தி, ஓக்காளத்திற்கு) 243
99 பாவனஹரீதகி ... 214
100. பிருங்காமலகத் தைலம் (பித்தர்சூட்டிற்கு) 174
101. பிருங்காமலகத் தைலம் (பித்தத்திற்கு) 217
102. பிருங்காமலகத் தைலம் ,, .... 218
103. புன்னைவேர் மருந்துகள் (கல்லடைப்பிற்கு) 319
104. பூனைக்காலி வேர்மருந்து ,, .... 344
105. பெருங்காயக் கல்கம் (விக்கலுக்கு) .... 239
106. பேயம்பழப் பொங்கல் (பித்தத்திற்கு, மயக்கத்திற்கு) 278
107. பேய்ப் புடல் மருந்து (பயித்தியத்திற்கு) 224
108. பேய்ப்புடல் கஷாயம் (நீர்க்கடுப்பிற்கு) 331
109. பேரீச்சம்பழ நெய் (மயக்கம், வெட்டைக்கு) 263
110. பொரிக்கார மருந்துகள் (நீரடைப்பிற்கு) 342
111. பொன்னாங்காணிக் கல்கம் ,, ... 308
112. பொன்னாங்காணி எண்ணெய் ... (மருட்கொண்ட பித்தத்திற்கு) 259
113. மரிசாதி லேகியம் (வாந்தி அரோசகத்திற்கு) 268

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்


114. மல்லிக்குடிநீர் (வாந்தி, வயிற்றுப்போக்கிற்கு) 235
115. மஹாவில்வாதி லேகியம் .... 187
116. மான்கொம்புச் சூரணம்
(சிறுநீரில் இரத்தம் விழுவது நிற்க) ... 302
117. முக்கூட்டு நெய் (இரத்த பித்தத்திற்கு) 277
118. முசுமுசுக்கைக் கஷாயம்
(பித்தம், துர்பித்தத்திற்கு) 261
119. முசுமுசுக்கைக் கஷாயம் (நீரடைப்பிற்கு) 334
120. முசுமுசுக்கைத் தைலம்
(தலைச்சுற்றல், பித்தத்திற்கு) 203
121. முசுமுசுக்கை நெய் (பித்தத்திற்கு) ... 208
122. முடக்கித்தான் எண்ணெய் (நீரடைப்பிற்கு) 336
123. முட்டையோட்டுச் சூரணம் (நீர்க்கடுப்பிற்கு) 332
124. முருங்கைத்தண்டுக் கஷாயம் (நீர்சுருக்குக்கு) 301
125. முன்னையிலைக் கஷாயம்
(வாந்தி, கிறுகிறுப்பிற்கு) 273
126. முன்னைவேர் மருந்தும், இளநீரும்
(நீரடைப்பிற்கு) 305
127. மொச்சைக் கொழுந்து எண்ணெய்
(மூத்திரக் கிரிச்சத்திற்கு) 295
128. வாழைக் கிழங்குச் சாறு மருந்து
(நீரடைப்பு, கல்லடைப்பிற்கு) 312
129. வாழைக் கிழங்கு நெய்
(பாண்டு, எரிவு, மேகத்திற்கு) 293
130. வாழைச் சாம்பல் குடிநீர் (கல்லடைப்பிற்கு) 299
131. வாஸாகண்டகாரி லேகியம்
(க்ஷயம், இருமலுக்கு) 237
132. வில்வாதிச் சீதகஷாயம் (பித்தத்திற்கு) 173

(பித்த ரோக மருந்துகளின் தொடர்ச்சி) பக்கம்


133. வில்வாதிச் சூரணம் (வாந்தி, விக்கலுக்கு) 242
134 வில்வாதி மருந்துகள் (கல்லடைப்பிற்கு) 321
135. வில்வாதி லேகியம் (பித்தத்திற்கு) .... 181
136. வில்வாதி லேகியம்
(சத்தி குன்மம், அசீரணம், வாந்திக்கு) 195
137 வில்வாதி லேகியம் (பித்தத்திற்கு) .... 201
138. வில்வாதி லேகியம்
(குன்மம், பாண்டு, வயிற்றுவலிக்கு) 220
139. வில்வாதி லேகியம் (வாந்தி, விக்கலுக்கு) 228
140. வில்வாதி லேகியம் ,, .... 241
141. விளாவேர்க் கஷாயம்
(வெள்ளோக்காளம், விக்கலுக்கு) 279
142. வெங்கார மருந்து முதலியன
(கல்லடைப்பு, நீர்க்கடுப்பிற்கு) .... 316
143. வெங்கார மருந்து (நீர்க்கடுப்பிற்கு) .... 317
144. வெள்ளெரிக்காய்ச் சாறு மருந்து
(நீர்க்கடுப்பு, கல்லுக்கு) 320
145. வெள்ளெரிக் கஷாயம் (நீரடைப்பிற்கு) 335
146. வெள்ளறுகாதிக் கஷாயம் ,, .... 342
147. வெள்ளீயச் செந்தூரம் (நீர்க்கட்டிற்கு) 328
148. வெள்ளெரிக்காய்ச் சாறு மருந்து
(நீரடைப்பிற்கு) 311
149. வெள்ளெரிச் சாறு மருந்து
(கல்லடைப்பிற்கு) 298
150. வெற்றிலை மோர்
(வெள்ளோக்காளம், விக்கலுக்கு) 212